SEXUAL PHILOSOPHY

மணவாழ்க்கையின் மர்மங்கள்

(பல விசித்திரப் படங்களுடன்)

"மரணம் பிந்து பாதேன
ஜீவனம் பிந்து தாரணாத்."

BY

SAGALAKALAVALLI PUBLISHERS

திருத்திப் புதுப்பித்த இரண்டாம் பதிப்

PRINTED AT
THE GUARDIAN PRESS, MADRAS.

1926

இரு [illegible] லை] [ரூ. 2-4-0.

கிடைக்குமிடம்:—

மனோஹரம் கம்பெனி

தபாற்பெட்டி நெ. 248,

சென்னை.

சென்னை-600 008.
171288

அறிவுள்ள மாதா பிதாக்களுக்கு

அர்ப்பணம்

All Rights Reserved.

முதற் பதிப்பு அக்டோபர்மீ 1925—1000

இரண்டாம் பதிப்பு பிப்ரவரிமீ 1926

(2-வது ஆயிரம்)

விஷய சூசிகை

நூன்முகம் ... ... பக்கம். V

(முன்னுரை) இந்நூலின் அவசியம் ... ,, 1

அத். 1. மதனும் ரதியும் ... ... ,, 21

,, 2. விவாகத்துக்குப்பின் ... ,, 34

,, 3. பெண்களின் பிணக்கு ... ,, 49

,, 4. பெண்களின் பிரியகாலம் ... ,, 70

,, 5. காதலின் வெற்றி ... ... ,, 85

,, 6. காதலின் வெற்றி (முன் தொடர்). ,, 103

,, 7. ஸ்திரீ புருஷ மணவாழ்க்கை ... ,, 116

,, 8. கருக்கூடுவதும் கர்ப்பமாதரும்... ,, 133

,, 9. சந்தான விருத்தி ... ... ,, 155

,, 10. திடமான சூல் கொள்ளல் ... ,, 173

,, 11. சில தகாத முறைகள் ... ,, 190

,, 12. சில தவறான ஒழுக்கங்கள் ... ,, 200

,, 13. விவாக விளக்கம் ... ... ,, 219

அனுபந்தம் ... ... ,, 243

சித்திரப் படங்கள்

1. மெய்க்காதலர் (ஆப்டோன் படம்) ,, 1

2. ஓர் உற்சாகக் குழந்தை ,, ,, 4

3. அந்தப்புர அழகி ,, ,, 130

4. மனிதச் சினையின் உட்புறம் ,, ,, 136

5. ஒரு பரிசுபெற்ற குழந்தை ,, ,, 173

6. உத்தமப் பத்மனி ,, ,, 219

7. கர்ப்பக் கிருமிகள் ... ,, 91

8. கர்ப்பாசயம் ... ... ,, 135

9. நாற்பது நாள் பிண்டம் ... ,, 138

10. எட்டுவாரப் பிண்டம் ... ... ,, 152

11. ரப்பர் கருவி ... ... ,, 198

வீரிய விர்த்தி மாத்திரை

இது அயச்சத்து, காந்தச்சத்து முதலிய இரத்த விர்த்தி மருந்துகள் சேர்ந்தது. உஷ்ணத்தினுலும், பித்தத்தினுலும், அதிகபோகத்தினுலும் இரத்தங் கெட்டு, சரீரம் வெளுத்து, கைகாலோய்ந்து நடப்பதற்கு என்ன செய்வோமென்று ஏங்கியிருப்பவர்களே, அவர்களுக்கு இரத்தத்தை விர்த்திசெய்து முககாந்தி முதலியன உண்டாக்கி ஆண்புலிபோன்று உலாவச்செய்வது இதுவே. சாப்பிட்ட பின் ஒருமணி நேரத்தில் எவ்வித அஜீர்ணத்தையும் நீக்கிப் பசியை உண்டுபண்ணிக் குணத்தைத் தருவதில் இது சிறந்தது. இதைப் பாலர் முதல் விருத்தரீருக ஸ்திரீ புருஷர்கள் யாவரும் உபயோகிக்கலாம். இதைச் சிறிது காலம் நீடித்து உபயோகப்படுத்தி வந்தால் துரிதஸ்கலிதத்தையும் நித்திரையிலுண்டாகும் இந்திரிய ஸ்கலிதத்தையும் நிறுத்தி விந்துவைக் கட்டும். இதன் குணத்தை விசேஷித்து எழுத இங்கே இடம் போதாது. "இளைத்தவன் இரும்பைத் தின்" என்னும் பழமொழியே இதன் குணங்களை நன்குயறிவிக்கின்றது. இதில் ஒன்று இரண்டு மாத்திரைகள் காலை மாலைகளில் சாப்பிடவேண்டும். இரவில் பால் சாப்பிட வேண்டும். சோகை காமாலை முதலியனவும் தீரும். பத்தியமில்லை. இது ஏழைகளுக்குப் பயன்பட வேண்டுமென்று மிகக் குறைந்தவிலை ஏற்படுத்தியிருக்கிறேம்.

25 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு விலை ரூ. 2.

வி. பி. பி. வேறு.

மனேஹரம் கம்பெனி,

தபாற் பெட்டி 248, சென்னை.

நூன்முகம்

"மணவாழ்க்கையின் மர்மம்" என்பதைக் கேட்டவுடன் அஃது, ஏதோ ஆபாசமானதும் ஆச்சரியமானதும் அபூர்வமானதும் ஆகிய பல சிற்றின்ப லீலைகளை யுணர்த்துகின்ற படங்களையுடைய ஒரு புதையல் என்று பலர் நினைத்தல் கூடும். அவ்வாறு நினைப்பதற்குக் காரணம் மணவாழ்க்கை, மர்மம் ஆகிய இரு சொற்களின் புணர்ச்சி யென்பதை இந்நூன்முகத்தின் முடிவில் காட்டுவாம். ஆனால் மண வாழ்க்கையின் மர்மம் என்பது மணவாழ்க்கையின் **இன்பம்** அல்லது "இல்லறம்" என்று சாதாரண ஜனங்கள் அறிந்துகொள்ளு மாறு இந்நூல் வரையப்பட் டிருக்கின்றது என்று முதலிலேயே கூறு கின்றோம்.

இன்பம் என்பது சிற்றின்பம் என்றும் பேரின்பம் என்றும் இரு பாகுபா டுடைத்து: இன்பத்தை மிருகத் தன்மையாய்ப் பெறு வது **சிற்றின்பம்** ஆகும்; அதன் உண்மைக் கருத்தை யுணர்ந்து **மானிடத்தன்மையாய்ப்** பெறுவது பேரின்பமாகும். சிற்றின்பந் தான் **காமம்;** பேரின்பமோ காதல். காமமுற்றவர் நரகத்தில் வீழ் வார்; காதலுற்றவர் சுவர்க்க மெய்துவார். இல்லற வாழ்க்கையை ஒழுங்காய் நடத்துவதனால் கிடைக்கும் ஆனந்தம் **வீடு** எனப்படும். அதை அடைவதற்குச் சாதனமானது இந்நூல். இதுதான் வட மொழியிலுள்ள வாத்ஸாயன சூத்திரத்தின் உட்கருத்தாகும்.

இது நவீன சாஸ்திர ஆராய்ச்சி முறைக்கிணங்க, சரீர சாஸ்தி ரத்தின் தத்துவங்களை யுணர்த்தி, தேகாரோக்கியத்தைப் பெற்று மேலே குறிப்பிடப்பட்ட மணவாழ்க்கை இன்பத்தைப் பெறவேண்டி, யார் யார் எந்த எந்தக் காலத்தில் எத்துணை முன்னெச்சரிக்கையுடன் இன்பம் நுகரவேண்டு மென்பதைக் காட்டுகின்றதே யல்லாமல், நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர்களுடைய மனத்தையும் சரீரத்தையும் காமத்துக்கு அர்ப்பணம் செய்வதற்காக அன்று. ஆதலாலன்றோ "அறிவுள்ள மாதா பிதாக்களுக்கு அர்ப்பணம்" செய்யப்பட்டிருக் கிறது; அஃதாவது நம் நாட்டினர் காலாகாலத்தை யறிந்து இனப் பெருக்க இச்சையை நிறைவேற்றி நல்ல மக்களைப் பெறவேண்டு மென்பதே.

இந்நூல் ஓர் இயற்றமிழ் வகுப்பைச் சார்ந்தது என்று ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளலாம். தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவரின் குறள்களும் அவற்றின் கருத்துக்களும் பல பக்கங்களில் பரந்துகிடக்கின்றன. நாலடியாரின் மேற்கோளும் வேறு ஆதாரங்களும் பொருத்தமாய் எடுத்துரைக்கப்பட் டிருக்கின்றன. தமிழ் நடையின் வகையும், சொற்களின் அமைப்பும், கருத்துக்களின் சுவையும் படிப்போரின் மனத்தைக் கவரத்தக்கவையாகும். ஆனால் நமது பரதகண்டத்தை இந்தியா என்றே பெரும்பாலும் வியவகரித்திருப்பதைக் கண்டு யாம் மனம் வருந்துகின்றோம்; இனி மூன்றாவது பதிப்பில் இந்தியா என்கிற பெயர் மறைந்துவிடு மென்பதற்கையமில்லை.

இனி இந் நூன்முகத்தின் முதலில் கூறப்பட்ட மொழிகளின் ஆராய்ச்சியை ஒருவாறு கூறுகின்றோம்: மானிடரால் பேசப்படும் பாஷைகளில் சில மொழிகள் பல பொருள்களை யுடையன. மணவாழ்க்கை யென்பது மனிதருக்கு மட்டில் உரிய தெய்விக சம்பந்தமான இனப்பெருக்க முறையாகும். மர்மம் என்கிற வடமொழிச் சொல் பல அர்த்தங்களை விளக்கக்கூடியது ஆகும்: அவற்றுள் "மறைந்து கிடக்கும் வஸ்து" என்பது முதல் அர்த்தமாகும்; மறைந்து நிற்பது ரகஸ்யம் என்பதாயிற்று; ரகஸ்யம் என்பது தனியே நடக்கும் கிரியை ஆகும். அத்தகைய அலுவல் பிராணாதாரமானது; அந்தப் பிராணாதாரமான செயலுக்குக் காரணமாயிருப்பது மானிடர் சரீரத்தில் உள்ள லிங்கம், அதாவது ஆண் குறியும் பெண்குறியுமாம். ஆதலால் இக்குறிகள் மர்மஸ்தானங்களாயின.

ஆனால் விலங்குகளுக்குள்ள ஆண்குறியும் பெண்குறியும் ஏன் மர்மஸ்தானங்களாக இல்லை? என்கிற வினா தோன்றுவது இயல்பு. அதற்கு விடை மானிடருக்குப் பகுத்தறிவு என்கிற பேரறிவு ஒன்றுண்டு, அது விலங்கினங்களுக்கில்லை யென்பதே. இப் பகுத்தறிவினால் இடம், பொருள், ஏவல் (தேசம், பாத்திரம், காலம்) ஆகிய மூன்றினையும் உபயோகப்படுத்த வேண்டியதுதான் மணவாழ்க்கையின் மர்மம் என்று இந்நூல் ஸ்தாபிக்கின்றது.

திருவல்லிக்கேணி,
சென்னை.
1—2—'26.

வை. சூ. சாஸ்திரி,
M.A., L.T.

மணவாழ்க்கையின் மர்மங்கள்

முன்னுரை

இந்நூலின் அவசியம்

மலரினும் மெல்லிது காமம் *சிலரதன்
† செவ்வி தலைப்படு வார்.—(குறள்)

கல்யாணமென்பது கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் பற்பலவிதமான பொறுப்புக்களை யெல்லாம் ஏற்படுத்திவிடக்கூடியதா யிருக்கிறது. ஸ்திரீ புருஷர் இருவரும் ஈருடலும் ஒருயிருமா யிருந்து இவ்வுலகில் அனுபவிக்க வேண்டிய இகபர சாதனங்களுக்குரிய இன்பங்களும் அனந்தமுண்டு; ஸ்திரீ புருஷ மணவாழ்க்கையினால் அவர்களிருவரும் அடையும் ஐம்புல ஆசைகளாகிய விவாக சுகத்தோடும் அவர்கள் தங்களுடைய ஆன்ம சம்மந்தமாக

---

* சிலரதன் - சிலர் அதன்

† செவ்வி தலைப்படுவார் - செம்மையைப் பெற்றுக்கொள்வார்.

அடையவேண்டிய பேரின்பமும், அந்த அழகிய கல்யாணத்தில் நிரம்பத் ததும்பிக் கிடக்கின்றன. ஆடுமாடுகளைப்போல் கேவலம் சிற்றின்ப நுகர்ச்சியினிமித்தம் மகிழ்வதற்காக மட்டுந்தான் ஸ்திரீ புருஷர் ஒருவரை யொருவர் திருமண முடித்துக் கொள்ளுகிறார்க ளென்று கருதவேண்டாம். மனிதனல்லாத மற்ற மிருகங்களெல்லாம் தங்களுடைய காமாந்தகாரமான சிற்றின்ப வேட்கையைத் தணித்துக் கொள்ளும் பொருட்டே ஆணும் பெண்ணும் ஒன்றோ டொன்று நெருங்கிக் குலாவுகின்றன; அப்படிப்பட்ட கூட்டுறவின் பயனாகக் கன்றுகளும் காலிகளும் உற்பத்தியாகின்றன. பசியெடுத்தால் புல்லைத் தின்பதும், தாகமெடுத்தால் தண்ணீரைக் குடிப்பதும் அம்மிருகங்களுக்கு எவ்வளவு சர்வசாதாரணமாயிருக்கின்றனவோ, அஃதேபோல் மோகமெடுத்தால் போகம் நினைப்பதும் அந்த ஆவலைத் தணித்துகொள்வ தற்காகத்தான். ஆனால் மனிதர்களோ, கேவலம் ரதிசுகத்துக்காக மட்டுமேதான் ஆணும் பெண்ணும் ஆதரவு பூண்டு அவர்களுக்குள் அரியவிவாகம் புரிந்து கொள்ளுகிறார்க ளென்று அணுவளவும் அனுமானிக்க வேண்டாம். காதலொருமித்த கணவனும் மனைவியும் தத்தம்முடைய வைதிக சம்மந்தமான காரியங்களில் ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டிய அம் முக்கியமான வேலையை அப்பால் ஒதுக்கிவைத்துவிட்டு அவர்களுடைய லௌகிகக் கடமைகளை மட்டுமேனும் கவனிக்கப் புகுவோமாயினும், அங்கேயும் அவர்களுடைய சிற்றின்பத்தைக் காட்டினும் மற்றொரு விஷயந்தான் மகா முக்கியமானதாய்க் காணப்படுகின்றது. மிருகங்களைப்போலல்லாமல் மனிதர்கள் தங்களுடைய ஸ்திரீ புருஷ சம்மந்தத்தில் தத்தம்முடைய பஞ்சேந்திரிய இன்பங்களையும் நுகர்வதோடு நில்லாமல் அப்ப

டிப்பட்ட இனிய இன்பத்தை அனுபவிக்கிறேமென்னும் ஆனந்த பரவசமான ஆத்மதிருப்தி யுண்டாவதையும் தம்முடைய பகுத்தறிவென்னும் பழகிய உணர்ச்சியால் பழுதில்லாமல் பார்த்துக் கொள்ளுகின்றனர். காதலிருவர் கருத்தொருமித்துக் கல்யாணத்தில் ஈடுபடுவதில் மட்டும் அன்னவருக்கு எல்லாவிதமான இன்பசுகமும் உண்டாய் விடுவதில்லை. ஆனால் நாம் நம்முடைய இல்லறவாழ்க்கையின்போது இன்னவிதமான இன்ப நுகர்ச்சியை அனுபவிக்கிறேமென்னும் அந்த உணர்ச்சி ஒன்றுதான் அந்தக் காதற்காரணங்களைக் காட்டினும் ஆயிரமாயிரம் பங்கில் அதிகமான இன்பத்தைத் தருகின்றது. இப்படிப்பட்ட உணர்ச்சி மிருகங்களுக்கு எள்ளளவுமில்லை; இன்னும் ஏனைப் பிராணிகளுக்கும் இவ்வகை யுணர்ச்சி இல்லை யென்றே அறிவுநூல் வல்லார் முடிவுகட்டி யிருக்கின்றனர்.

ஆதலின் இல்லற இன்பத்திற்குரிய ஆனந்தத்தை மட்டும் அனுபவிப்பதில்தான் ஸ்திரீ புருஷ மணவாழ்க்கையின் முழுப் பலனும் உண்டாய்விடுகிறதென் றெண்ணவேண்டாம். ஆனால் அந்த ஆனந்தத்தை அனுபவிக்கிறேமென்னும் ஆன்ம உணர்ச்சியே அதனினும் பதின்மடங்கான பல்லாயிரம் பங்கில் அதிக சிலாக்கியமாய்க் காணப்படுகின்றது. மணமகனும் மணமகளுமாகிய உங்களுக்கெல்லாம் மங்கள முண்டாகுக! விவாகத்தினலடையக்கூடிய லௌகிகப்பயன் இவ்வளவுதானென்று, ஏ சோதர சோதரிகாள்! நீங்கள் எட்டுணையும் எண்ணிவிட வேண்டாம். மேற்கூறிய இரண்டுவிதமான ஆனந்தத்துடன் மக்களைப்பெறுதலென்பதும் மற்றொரு விதமான முக்கிய நோக்கமாகும். சந்தான உற்பத்தி உண்டாகாதமட்டில் ஸ்திரீ புருஷர்களின் ஸம்ஸார வாழ்க்கையானது நாளடைவில் நல்ல சுகத்

ந்தைத் தரமாட்டாது. நல்ல பிள்ளைகளைப் பெற்று அவர்களை நல்ல வழிக்குக் கொண்டுவந்தால்மட்டுமே நம்முடைய இல்லற வாழ்க்கையானது மிக்க நல்லற வாழ்க்கையாய் முடியும். குலம் விளங்குவதற்கே குழந்தைகள் வேண்டும்; குழந்தைகளின்றேல் கோத்திரம் பழுதாம். "மங்கலமென்ப மனைமாட்சி மற்றதன், நன்கலம் நன்மக்கட்பேறு*," என்றூர் குறளுடையாரும். ஆதலின், என்னருமைத் தோழர்காள்! விவாகமென்பது விளையாட்டென் றெண்ணி நீங்கள் வெறுமையாய் ஏமாந்து போகவேண்டாம். இவ்வுலக சம்மந்தமான எல்லாவகைப் பொறுப்பிலும் மகா முக்கியமான பொறுப்பாயிருப்பது குடும்பவாழ்க்கை ஒன்றுதான். இப்படிப்பட்ட மாபெரும் உத்தரவாதமுள்ள உத்தமமான பொறுப்பையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாததனுலேயே பலர் இந்த இல்லறமாகிய நல்லறத்தை மாகொடிய தொல்லைகள் நிறைந்த புல்லறமென்று மிகவும் கேவலமாக இழிவுசெய்து கூறியிருக்கின்றனர்.

மணமகனும் மணமகளுமாகிய நூதன ஸ்திரீ புருஷர்காள்! உங்களுக்கு மங்கள முண்டாகுக!! நீங்கள் இப்பொழுது அழகிய விவாகம் செய்துகொண்டு அரிய குடும்பம் நடத்தப் போகின்றீர்களே, அக் குடும்ப வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத இரகசியமெல்லாம் இன்ன இன்னவையென்று எள்ளளவேனும் தெரிந்துகொண்டீர்களா? ஸ்திரீ புருஷ மணவாழ்க்கையினுல் அடையக்கூடிய எல்லா விதமான இன்ப நுகர்ச்சிகளையும் எவ்வாறு எய்துதல் கூடுமென்று அதற்கு வேண்டிய சட்டதிட்டங்களைச் சற்றேனும்

* ஒருவனுக்கு நன்மையென்று சொல்லுவர் (அறிந்தோர்)மனையாளின் நற்குண நற்செய்கைகளை; அவை தமக்கு நல்ல அணிகலமென்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலை.

7

CE OF THE REGISTRAR OF BO
31 MAR 192

கற்றுக்கொண்டீர்களா? குலத்துக்கேற்ற குழந்தைகளைப் பெறவேண்டுமென்றுமட்டும் நீங்கள் ஆசிக்கின்றீர்களே, அப்படிப்பட்ட அழகும் குணமுமுள்ள மக்களைப் பெறுவது எப்படியென்று இம்மியளவும் தெரிந்துகொண்டீர்களா? ஸ்திரீ புருஷர்களின் மணவாழ்க்கையானது கேவலம் பிரஜா உற்பத்திக்காக மட்டும் அன்றே! அவ்வாறிருக்கும்போது அடிக்கடியுண்டாகும் சவலைப்பிள்ளைகளால் முதலில் பிறந்த முத்துப்பிள்ளையின் சுகாதாரமும், அக் குழந்தைகளின் அரிய தாயின் பெரிய சுகமும் கெடாமல் மதனும் ரதியுமாகிய நீங்களிருவரும் உங்களுடைய இல்லறஇன்பத்துக்குரிய காரியங்களென்னும் குடும்ப ஒழுக்கங்களைமட்டும் நடாத்துவதெப்படியென்னும் இரகசியத்தையும் தெரிந்துகொண்டீர்களா? தொட்டால் ஒட்டிக்கொள்ளு மென்று பயந்து பயந்துகொண்டு எத்தனை ஸ்திரீ புருஷர்கள் தங்களுடைய வாழ்நாளில் அடையக்கூடிய இன்ப சுகங்களையெல்லாம் சினத்துடன் வெறுத்துவிட்டுக் "கல்யாணம் பண்ணியும் சன்யாசி" என்று தம்முள் கூறிக்கொண்டு மனோ வேதனையால் இவ்விகலோக வாழ்க்கையை மிகமிக வெறுப்புடனும் சலிப்புடனும் நடத்திவருகிறார்களென்பது உங்களுக்குத் தெரியுமா? இன்னும் இவ்வுலகில் "மகளுக்கு மருமகன் வந்துவிட்டான்; மகனுக்கும் மருமகள் வந்துவிட்டாள்; பேரர் பேர்த்தியும் எடுத்துவிட்டோம்; இனி நாம் குழந்தை பெறுவது கூடாது," என்று எத்தனைக் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் சமீபிக்காமல் ஒரே வீட்டில் உற்றுநோக்கிக்கொண்டு பலவருஷங்கள் வரையில் தனித்தனியே மனப்புழுக்கத்தால் ஒருவரைப் பார்த்து ஒருவர் உறுமிக்கொண்டு நாயும் பூனையும் போல் நல்ல பொழுதையெல்லாம் பொல்லாப் பிணியா

கச் செய்துகொண்டுவருகிறார்க ளென்பதும் உங்களுக்குத் தெரியுமா? ஸ்திரீபுருஷ வாழ்க்கையின் இரகசியம் இன்ன தெனத் தெரிந்துகொள்ளா ததனாலன்றோ அவர்களெல் லாம் அப்படிப்பட்ட சகிக்கமுடியா மனோவேதனைக் கெல் லாம் உள்ளாகி உழல்கின்றனர்? ஆனால் நீங்களிருவரும் இப்பொழுது இரதியும் மதனும்போல் ஒன்றுசேர்ந் திருக் கிறீர்களே, நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? குடும்ப வாழ்க்கைக் குரிய குணதோஷங்க ளெல்லாம் இன்ன இன்னவையென்று நன்குணர்ந்து கொண்டீர்களா? கல்யாணத்தா லடையக்கூடிய கரைகடந்த இன்ப முழு தையும் களிகூரக் கவருவ தெப்படி யென்றும் கற்றுக் கொண்டீர்களா?

'மீன் குஞ்சுக்கு நீச்சுப்பழக்கிக் கொடுக்கவேண்டுவது என்ன அவசியம்?' என்னும் பழமொழி யொன்றைக்கூறிக் கொண்டு, 'புதுமாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் இக் கலி காலத்தில் நாம் கற்றுக்கொடுக்க வேண்டுவது இவ்வுலகில் என்ன இருக்கிறது? எல்லாம் இயற்கையாகவே அவரவ ருக்கும் தானே வந்துவிடும்,' என்று பலர் அறியாத்தனத் தால்தெரியாத வம்பெல்லாம் செய்துவருகின்றனர். மீன் குஞ்சுக்கு நீஞ்சக் கற்றுக்கொடுக்க வேண்டுவது அவசிய மில்லைதான்; ஆனால் மனிதன் அம் மீன் குஞ்சைக் காட்டி னும் எத்தனையோ மடங்கு உயர்ந்தவனாயினும் நீஞ்சப் பழகாமல் நீரில் குதிப்பானாயின் அவனுக்கு அபாயமானது எப்பொழுதும் அதிகமாகவே காத்துக்கொண் டிருக்கும். ஒரு சிறு பூனையானது குட்டிபோட்டு விடுமாயின் தானே சுயமாக அதன் குட்டிகளைப் பாதுகாக்க அந்தப் பூனைக்கு இயற்கையாகவே எவ்வளவு சாமர்த்திய மிருக்கிறதோ, அப்படிப் பட்ட சாமர்த்தியத்தில் பத்திலொருபங்கேனும்

பதினாறுவயதையுடைய ஒரு பால்யப்பெண்ணுக்குத்தான் பெற்ற குழந்தையைத் தானே பாதுகாக்கச் சாமர்த்திய முண்டாவதில்லை. ஒரு பெண் தன் குழந்தையை வளர்க்க வேண்டுமாயின் அப்பெண்ணுக்கு எத்தனையோ "ஆய்ச்சி மார்கள்" அவசியமாகக் காணப்படுகிறார்கள். பழம் பிள்ளைத் தாய்ச்சிகள் புதுப்பிள்ளை பெற்றவளுக்குத் தினம் தினம் புத்தி கற்றுக்கொடுக்க வேண்டியதிருக்கிறது. மருத்துவிச்சியின் துணை யில்லாமல் மனிதப் பெண்கள் மக்களைப் பெறுதல் ஒருபோதும் முடியாத காரியமேயாகும்.

மனிதனுடைய இகலோக பரலோக சம்மந்தமான ஒவ்வொரு காரியத்துக்கும் ஆசான் வேண்டியது அவசியமா யிருக்கிறது; 'குட்டுப்படாத வித்தையானது சொட்டுப் போட்டாலும் வருவதில்லை.' வியாபாரமாகட்டும், வியவசாய மாகட்டும், வேறெவ்விதமான கைத்தொழிலாகட்டும் குருவினிடத்தில் கற்றுக்கொள்ளாமல் ஒன்றும் பயன் தருவதில்லை. இவ்வாறே உண்பதும் உடுத்துவதுங்கூடப் பிறரைப் பார்த்துப் படித்துக்கொண்டா லொழிய அவை நமக்கு வருவதில்லை. இவ்வுலக சம்மந்தமான எல்லாக் காரியங்களின் இயற்கைத் தன்மையும் இவ்வாறு இருக்கும் போது, இவ்வுலக வாழ்க்கைக்கே முதற்காரணமாயிருக்கக் கூடிய ஸ்திரீபுருஷ இல்வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத கல்வி இத்தன்மைத்தென்று தெரிந்துகொள்ளாமுன்னம் மணமகனும் மணமகளுமாகிய நீங்கள் குடும்ப யாத்திரை செய்ய முயல்வதே ஓர் அபாயகரமான காரியமென்பது உங்களுக்குப் புலப்படவில்லையா? புயல்கொண்ட வாரியில் பாயகன்ற கப்பலைப் பழக்கமில்லா மாலுமி பாதுகாப்ப தெப்படி? ஸ்திரீ புருஷர்கள் ஸதா இன்புற்றிருக்க வேண்டு மென்பதும், அவர்கள் திடதேகியான குழந்தை

களைப் பெறவேண்டுமென்பதும், இந்திய நாட்டுக்கும் இந்நாட்டிலுள்ள மனிதகோடிகளுக்கும் இத்தருணத்தில் அத்தியாவசியமான காரியமாய்ப் புலப்படவில்லையா?

இல்லற இன்பத்தையடைவதற்கும் நல்ல பிள்ளைகளைப் பெறுவதற்கும் வேண்டிய முறைகள் இன்ன இன்னவையென்றுணர்ந்துகொள்ளாமல் யானையைக்கண்ட குருடர்களைப்போல் ஆடவரும் பெண்டிரும் அஞ்ஞான அந்தகாரத்தில் அலைவதால் யாது பயன் விளைதல் கூடும்? நம்முடைய உண்டி விஷயத்திலும் உடை விஷயத்திலும் இன்னும்மற்றுமுள்ள சுகாதார விஷயத்திலும் நாம் எவ்வளவோ ஜாக்ரதையாயிருந்துகொள்கிறோம். ஆனால் இவ்வுலக இன்பங்களுக்கெல்லாம் மூலகாரணமாகிய ஸ்திரீபுருஷ இல்வாழ்வில் மட்டும் நாம் மிகமிக அலக்ஷியமாயிருந்துவிட்டதல்லாமல் நம்முடைய சந்ததியாரையும் அந்த அந்தகாரத்திலேயே அலைய விட்டுவிடுகின்றோம். அந்தோ பரிதாபம்! என்ன கேவலம்!! ஸ்திரீபுருஷ வாழ்க்கைக்குரிய இலக்ஷணம் இன்னதெனத் தாம் தெரிந்துகொள்ளாமலிருப்பதோடு அவ்வாறு தெரிந்துகொள்ளப்பிரயத்தனப்படுவதும் பாபமான காரியமென்று பலர் கருதுகின்றனர். வெளியில் ஒருவரோடொருவர் சம்பாஷிக்கவாவது, அல்லது புத்தகங்களில் எழுதவாவது கூடாத அவ்வளவு மர்மமான இரகசியமென அவர்கள் அந்தக் காமசாஸ்திரத்தை மதித்திருக்கிறார்கள்; இவ்விஷயங்களைப்பற்றி எவ்வளவுக்கெவ்வளவு மறைத்து வைக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நன்மை விளையுமெனத் தப்பபிப்பிராயங் கொண்டிருக்கின்றனர். ஆனால் அப்பொழுது சாம்பலின்கீழ்த் தணிந்திருக்கும் நெருப்பைப்போல் பற்பல விதமான கேடுகள் மறைந்திருந்தே ஜனங்களைக் கெடுத்துவிடுகின்றன; இப்படிப்பட்ட

அறியாமையால்தான் அனேகம் ஸ்திரீ புருஷர்கள் தங்களுடைய இல்லற இன்பத்தைப் பூர்த்திசெய்துகொள்ள நல்ல வழி தெரியாமல் தயங்கித் திரிகின்றனர். இதனுல்தான் பல மாப்பிள்ளைமார்கள் பரத்தையர் வீதியைப் பார்த்தவண்ணமாய் அங்குச் சென்று ஆனந்தமுறலாமெனக் கருதித் தகாத துறைக்குள்ளெல்லாம் தடுமாறி விழுகின்றனர்.

ஆடவருக்கும் பெண்டிருக்கும் இடையில் நிகழக் கூடிய இன்ப சுகத்துக்குரிய இரகசியமெல்லாம் எல்லோருக்கும் சுயமே வந்துவிடுமென்று எதிர்பார்ப்பதானது ஒருபோதும் முடியாத காரியமாகும். இல்லற இன்பத்தின் இரகசியத்தை உணர்ந்துகொள்ளமுடியாமல் எத்தனையோ ஸ்திரீபுருஷர்கள் தங்களுடைய வாணுளையெல்லாம் வீணுளாக்கி யிருக்கின்றனர். இன்னும், எத்தனையோ ஆடவரும் பெண்டிரும் ஸ்திரீபுருஷ வாழ்க்கையின் இரகசியம் இன்னதெனத் தெரிந்துகொண் டிருப்பாராயின் இதுவரையில் தாங்கள் அனுபவித்த இன்பத்தைக் காட்டினும் இன்னும் எத்தனையோ மடங்கு அதிகமான ஆனந்தத்தை அனுபவித்திருக்கலாமென்று கருதிக் கைசேதப் படுகின்றனர். இவர்களுக்கெல்லாம் இன்ப சாஸ்திரத்துக்குரிய இலக்ஷண முழுதும் நன்கு தெரிந்திருக்குமாயின் இவர்களுடைய ஆயுட்காலம் இன்னும் எவ்வளவு அதிக அழகாகக் கழிந்திருக்குமென்று எண்ணுகின்றீர்கள்? அந்தோ பரிதாபம்! இன்பசாகரத்துக்குரிய இரகசிய வித்தையானது இயற்கையாகவே ஸ்திரீ புருஷர்களுக்கு வந்துவிடுமென்று ஒருபோதும் எண்ணி ஏமாந்துபோக வேண்டாம். சமையலறையுள் சென்று சாதாரணமான ஒரு சோறும் கறியும் சமைப்பதற்கும் எவ்வளவோ படிப்பு வேண்டியிருக்கிறது! இவ்வாறிருக்கும்போது உலகமென்பதே இன்னதென் றறியாத

ஒரு பெண்ணும் மாப்பிள்ளையும் இளம்பிராயத்தில் தனித்த ஓரிடத்தில் சந்தித்தவுடன் எல்லா விஷயங்களையும் இனி இல்லாவண்ணமாய்த் தாமே தெரிந்துகொள்வார்களென்பது எவ்வாறு பொருந்தும்? இவ்வுலகிலுள்ள எல்லா வித்தைகளுள்ளும் இன்ப சாஸ்திரத்துக்குரிய இரகசிய வித்தை தான் தானே வருவதில் தடுமாற்றம் மிக்கதாய்க் காணப்படுகின்றது. இதுமட்டுமல்லாமல் இன்னும் சந்தான விருத்தி முறையையும் கவனிக்குமளவில் அவ் விஷயத்திலும் நாம் அதிக அலக்ஷிய புத்தியுள்ளவராகவே இருந்து வருகிறோமென்பது சற்று உற்றுநோக்குவோமாயின் பட்டம்பகல்போல் திட்டமாய் விளங்கும். நுமது வீட்டிலிருக்கும் உம்முடைய ஒரு குதிரையேனும், ஒரு பசுமாடேனும், அல்லது அஃதோர் எருமை மாடாயிருப்பினும் அது சூல்கொள்ளவேண்டியிருந்தால் அதன் விஷயத்தில் நீங்கள் எவ்வளவு அதிகமான கவலை எடுத்துக்கொள்ளுகிறீர்களென்று சற்றே நிதானித்துப் பாருங்கள். உங்களுக்குச் சொந்தமான மிருகத்தின் வயிற்றில் நல்ல விதமான ஆண்மைத்தனமுள்ள கன்றுகளும் காலிகளும் உதிக்க வேண்டுமென்னும் கவலையுடன் எங்கெங்கெல்லாம் அலைந்து திரிந்து அதற்கேற்ற ஆண் மிருகத்தைக் கண்டுபிடிக்கிறீர்கள்? உங்களிடம் ஓர் அழகிய நாயொன்றிருக்குமாயினும் அதற்கேற்ற ஜோடிநாய் வேறு எங்கேயிருக்கிறதென்று தேடித் திரிகின்றீர்கள். ஆனால் அந்தோ பரிதாபம்! உங்களுடைய உதரத்திலும் உங்களுடைய பிள்ளைகளின் உதரத்திலும் ஆண்மைத்தனமுள்ள அடிமைத்தனமில்லாத அழகிய குழந்தைகள் அவதரிக்கவேண்டுமென்பதற்கு நீங்கள் என்ன ஏற்பாடு செய்கின்றீர்களென யாம் கேட்கின்றோம்.

மூசுக்கட்டைப் பூச்சிகளைப்போல் முன்பின் யோசியாமல் மூடக்குழந்தைகளைப் பெறுவதைக் காட்டினும் சும்மா இருப்பது சுகமன்றோ? நோய்க்கும் நுண்ணிய தாரித்திரியத்துக்கும் காலமெல்லாம் ஆளா யிருக்கக்கூடிய அடிமைப் பிள்ளைகளை அனந்தம் பெறுவானேன்? ஆனால் பாபம்! என் செய்வீர்கள்!! பிள்ளைவேண்டுமென்னும் எண்ணத்துடனோ, அல்லது இன்ப மனுபவிக்க வேண்டுமென்னும் இச்சையுடனோ ஸ்திரீ புருஷர்களாகிய நீங்கள் உங்கள் மணவாழ்க்கையில் இன்புற்றுக் குலாவுகின்றீர்கள்; அப்பொழுது அதனால் தானே உண்டாகும் சந்தான சம்பத்தைப் பல பெற்றுக்கொள்ளுகிறீர்கள். ஆனால் பிள்ளையைப் பெறுவதற்கு வேண்டிய சாஸ்திரத்தை யுணர்ந்து அதற்கேற்றவாறு நீங்கள் குழந்தைகளைப் பெறுவதில்லை. அந்தகாரத்தில் கண் மூடித்தனமாய்க் கரணங்களைப் புரிந்து அவற்றா லுண்டாகும் அணிற்பிள்ளைகளை அங்கீகரித்துக் கொள்ளுகின்றீர்கள். சிலவேலைகளில் முதற் பிள்ளை பிறந்து சிலதினங்களுக்குள் கணவனும் மனைவியும் வேறுபிள்ளை வேண்டுமென்னும்எண்ணம் சிறிதுமில்லாமலே, (ஆனால்அதற்குமாறாகப் பிள்ளையே வேண்டா மென்னும் நல்லெண்ணத்துடனே) விவாக சுகத்தின் நிமித்தமாக மட்டும் ஒன்றுசேர்ந்து உறவாடும் போதுஅதனாலொரு கர்ப்பமுண்டாகி முதற்பிள்ளையும்மறு பிள்ளையும் சவலைகளாய்ப் பலஹீனப்படுவதுடன் தாயின் தேக சுகமும் அதிகமாகப் பாதிக்கப்படுவதை நாம் இவ்வுலகில் அடிக்கடி கண்ணுற் காண்கின்றோம். இப்படி யெல்லாம் துன்ப மனுபவிக்கவேண்டுமே யென்னும் திகிலினால் எத்தனை ஸ்திரீ புருஷர்கள் ஒரு குழந்தை பிரசவமான பின் பல வருஷங்கள் வரையில் வீடு கூடும் பழக்க மில்லாமலே கடுங்காலங் கழித்துக் கொடிய நோன்பு நோற்று வருகின்

றன ரென்பது உங்களுக்குத் தெரியுமா? நமது மிருகங் களின் விஷயத்திலிருக்கும் அத்துணைக் கவலைகூட நமக்கு நல்ல பிள்ளைகள் பிறக்கவேண்டுமே யென்னும் விஷயத் தில் இல்லாமற் போகின்றது. அடிமைத்தனமுள்ள மனி தர்கள் அடிமைப் பிள்ளைகளையும், நோயடைந்த மனிதர் கள் நோயுற்ற பிள்ளைகளையும் பெறுகிறார்க ளென்பது சாஸ்திர உண்மையன்றோ? உண்மை இவ்வாறிருக்கும் போது நல்ல பிள்ளைகளைப் பெறுதற்குரிய நன்மையான செவ்விய பல முறைகளைத் தெரிந்துகொண்டு ஏன் நீங் களெல்லாம் நல்லவிதமான சற்புத்திரர்களையும் சற்புத்திரி களையும் பெறக்கூடாதென்று யாம் ஆச்சரியமடைகின் றோம்.

ஆனால் நல்ல பிள்ளைகளைப் பெறுதற்குரிய நன்மை யான முறைகள் எங்கே கிடைக்கக் கூடுமென்பதுதான் ஒரு விதமான விசாரமா யிருந்துவருகிறது. புதிதாக விவா கம் செய்து கொண்டவர்களும், இனிச் செய்துகொள்ளப் போகிறவர்களும் தாங்கள் நிர்வகிக்க வேண்டிய காரியம் இன்னதென்றும் அதற்குவேண்டிய அனுஷ்டானமுறை இன்னதென்றும் தெரிந்துகொள்ளாமலும் தெரிந்து கொள்ள மார்க்கமில்லாமலும் அந்தகாரத்தில் அலைந்து திரியும் அந்தகரைப்போல் விழிக்கின்றனர். மனிதர்கள் இவ்வுலகில் செய்யக்கூடிய காரியங்களுக்குள் ளெல்லாம் மிகவும் முக்கியமான காரியமாகிய இல்வாழ்க்கை தர்மங் களை மட்டும் ஒருவர் மற்றொருவருக்குக் கற்றுக்கொடுப்ப தென்பது வழக்கத்திலில்லை. கடவுளால் லோகரம்யத்திற் கென்று அருளப்பட்ட மிகப் பரிசுத்தமும் புண்ணியகர முமான இந்த மங்கள மனோகரச் செயலை வெளியில் வாய் விட்டுப் பேசக்கூடாத அவ்வளவு அருவருப்பான விஷய

மெனக் கருதிவிடுகின்றனர். இப்படிப்பட்ட மடமைத் தனத்தினுல் விளேயக்கூடிய தீமைகள் அனந்தம். இன்பச் சுவையைச் சரியானவழியில் உபயோகப்படுத்த வேண்டிய விஷயத்தைப்பற்றி நாகரிகமடைந்த நாடுகளிலெல்லாம் நல்ல சாஸ்திரோக்தமான நூல்களெல்லாம் எழுதப்பட் டிருக்கின்றன. ஆனுல் இந்தியாவில் மட்டும் குடும்பவாழ்க் கையின் இன்பச்சுவை இன்னதெனத் தெரியாமல் இல்லற விஷயத்தில் துரதிருஷ்ட சாலிகளாய்த் துன்புற்றவர்கள் ஒருபுற மிருக்கட்டும். ஸ்திரீபுருஷ மணவாழ்க்கையில் அதிகமான ஆனந்தத்தை யடைந்தவர்களும் அவ்வாழ்க் கைக்குரிய செவ்விய முறைகள்மட்டும் தெரிந்து அவற் றின்படி அவர்கள் ஒழுகி யிருப்பார்களாயின் இன்னும் எத்தனையோ மடங்கு அதிகமான ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்திருப்பார்கள். அந்தோ பரிதாபம்!

இன்னமும், அனேக குடும்பங்களில் ஸ்திரீபுருஷர் களின் இன்ப சாகரமெல்லாம் துன்ப சாகரமாகவும் துயர சாகரமாகவும் மாறுபட் டிருப்பதற்கெல்லாம் காரணம் அவர்களுக்கு அந்த வாழ்க்கைக்குரிய முறைகள் இன்ன இன்னவையென்று தெரியாததேயன்ருே? மேலும் பல ஹீனமான பாவைப் பிள்ளேகளேப் பெறுவதற்கும் மற்றும் பலவிதமான தீய நோய்களுக்கு ஆளாவதற்கும் இந்த அறியாமையே முக்கிய காரணமாம். இக்காரணத்தா லன்ருே நம் இந்திய நாட்டுச் சிறுவருள் பலர் தமது காளேப் பருவமுள்ள கட்டழகை யிழந்து வேசையரின் வியாதியினுல் வேப்பிலேயுங் கையுமாய் அல்லும் பகலும் ஆலிலேபோல் அலேந்து ஆருயிரன்ன ஆவியையும் அலறி விடுகின்றனர்? இன்னும், விவாகம் செய்துகொண்ட மனி தர்களின் கதி ஒரு புறம் இருக்கட்டும்; விவாக மாகாமல்

வெறுமையாய் இருக்கும் பால்யர்களுள்ளும் பலர் இப்ப டிப்பட்ட விஷய சம்மந்தமான உண்மையான உயரிய ஞான மில்லாமையால் எத்தனேயோ எண்ணத்தொலேயாத தீய நடத்தைகளுக் கெல்லாம் ஆளாகி அனேகமான அரு வருப்புள்ள செய்கைகளுக்கும் அடிமைகளாய்த் திரிகின் றனர்; ஆண் பெண் விவாக முறைமைக்குரிய அரிய சாஸ் திரம் இவர்களுக்குத் தெரியாமையால் தம்முடைய இரத்த புஷ்டியின் காரணமாக அதிபால்யத்தில் பல் வகைப்பட்ட தீத் தொழில்களுக் கெல்லாம் ஆளாகிப் பின்னர்க் குடும்ப வாழ்க்கை நடாத்தவேண்டிய காலப் பருவத்தில் கைசே தப்பட்டுக் கண்ணீர் வடித்து வருந்துகின்றனர். தங்க ளுடைய கடமை இன்னதென்றும் தாங்கள் நடந்து கொள்ளவேண்டிய முறைமை இன்னதென்றும் பால்யர் கள் தெரிந்துகொள்ளாததனுலேயே அவருள் பலர் பிஞ்சி லேயே பழுத்துப் பருவம் வருமுன் முதுமையடைந்து பல்லோர் சிரிக்கப் பரிதபிக்கின்றனர்.

இப்படிப்பட்ட பால்யர்களுக்குப் பெற்ருேராவது, அல்லது மற்றுமுள்ள சுற்றத்தாராவது ஸ்திரீபுருஷர்களின் இம் முக்கிய கடமை இன்னதென்றும், அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய ஒழுங்கு இன்னதென்றும் ஒருபோதும் கற்றுக்கொடுப்பதில்லை. இஃது எவருடனும் கலந்துபேசக் கூடாததும் தனியிடம் சென்றபின்னர்த் தாமாகவே தெரி ந்துகொள்ள வேண்டியதுமான அவ்வளவு அருவருப்பான கேவல சாஸ்திரமென்று பெரும்பான்மையோர் கருதுகின் றனர். இதைக்காட்டினும் மடத்தனம் இவ்வுலகில் வேறெ ன்ன வேண்டியிருக்கிறது; அது போகட்டும். அவர்களுக்கு அவ்விஷயத்துக்கு வேண்டிய அறிவைப் புகட்டுவதற்குரிய அரிய நூல்களேனும் இத்தமிழ் நாட்டில் சரியானவை

இருக்கின்றனவோ வென்று வினவப்புகின் அப்படிப்பட்ட தகுதிவாய்ந்த நூல் ஒன்றேனும் சாஸ்திரோக்தமானது இந் நாட்டில் இல்லை யென்றே கூறவேண்டியதிருக்கிறது. ஏழை மதியாளரை ஏமாற்றிப் பணம் பறிப்பதற்காகவும், ஏது மற்ற மருந்து முதலிய மாத்திரைகளை விற்பனை செய்வதற் காகவும் பலபேர் பலவிதமான தமிழ் நூல்களை எழுதிக் கிரயத்துக்கு விற்றும் இனமாகப் பரத்தியும் மனிதர்களைப் பாழாக்கிவருகின்றனர். ஆனால் மனிதர்களின் அங்கசாஸ் திர அமைப்புக்குரிய அரிய ஒழுங்கின் பிரகாரம் எழுதி வெளியிடப்பட்ட நூல் இத்தமிழ் நாட்டில் ஒன்றேனும் உளதோவெனின், எமது ஆராய்ச்சிக்கு எட்டிய மட்டில் அப்படிப்பட்ட நூல் ஒன்றேனும் காணக் கிடைக்கவில்லை யென்பதுதான்எமது தீர்மானமான அபிப்பிராயமாம்;பணம் பறிப்பதற்குரிய பற்பலவிதநூல்கள் அதிவின்யாசமான பெயர்களுடன் வெளிவந் துலாவுகின்றன; ஆனால் அவற்று லெல்லாம் ஆண் பெண்களுக்குச் சாஸ்திர சம்மந்தமான ஞானம் எவ்வளவு வருமென்பதுதான் கேள்வி. 'எந்த விடத்தில் எமக்குச் சந்தேகமோ, அந்தவிடத்தில்தான் அவருக்கும் சந்தேகம்' என்பதேபோல் எந்த இடத்தில் சாஸ்திர முறைமைக்குரிய சரியான ஞானம் வேண்டுமோ அந்தவிடத்தில்தான் அந்நூலாசிரியர்க ளெல்லாரும் மழுப்பி விடுகின்றனர்.

ஆதலின் காதலர் தம்முள் கருத்தொருமித்து ஆதரவு பூண்டு அடையவேண்டிய இன்பங்களையெல்லாம் எவ் வாறு முழுதும் எய்தக்கூடுமென்னும் எளிய முறையை நமது மணமகனுக்கும் மணமகளுக்கும் அறிவிக்கவேண்டு மென்பதுதான் இக்காலத்தில் அத்தியாவசியமா யிருக் கிறது. வாலிபப்பருவத்தை யடைந்த யௌவனச் சிறுவர்

களுக்கும் சிறுமிகளுக்கும் இவ்வரிய சாஸ்திரத்தை ஒருவரும் கற்றுக் கொடுக்க முயல்வதில்லை; பெரியவரென்னப் படுபவருக்கு இவ்விஷய சம்மந்தமான ஞானம் இருந்தாலல்லவோ அவர்கள் தமக்குப் பின் வரும் சந்ததியாருக்கு அதை விளக்கிக் காட்டப்போகின்றனர்? இன்றேல் "வீழ்வார்க்கு வீழ்வார் துணை" என்பதேபோல் ஒருகுருடன் மற்றொரு குருடனுக்கு எவ்வாறு வழிகாட்டுதல் கூடும்? இன்பச் சுவையைப்பற்றிக் கூறத் தொடங்கும்போதே அதைக்கேட்டுக் "கன்னலன்றி வேம்புநுகர் காமத் துரோகிகள் போல் பின்னையொரு" விஷயத்தை மிகவும் அருவருப்புடன் பேசுகிற சாதாரண மக்கள் இக்காலத்திலுங்கூட அதிக அறிவீனர்களா யிருப்பதுதான் மிக்க வியசனிக்கத் தக்க விஷயமாகும். எழுதப்படிக்கத் தெரியாதவரும் கல்வி வாசனையைக் கற்றுணர்ந்த பெரியாரும் ஒருமித்து இதைக் கண்டால் வெறுக்கின்றனர். இதனால்தான் இல்லறச் சுவையைப்பற்றி எவரும் எழுதிப் பொதுஜனங்களால் பரிகாசிக்கப்படும்படி வெளிவருவதில்லை. இக்காரணத்தினலேயே இன்பக்கலையைப் படித்து இனிய முறையில் விருத்திசெய்பவர் நம் நாட்டில் இல்லாதொழிகின்றனர். இவ்வாறு சரியான இன்பநூல் இந்நாட்டில் நிலவாமற்போகவே மாந்தரனைவரும் இன்பசுகத்தை அஃது இல்லாத விடங்களிலெல்லாம் தேடித்திரிந்து இடர்ப்படுகின்றனர். உண்மையை உரைக்குங்கால் இன்பநூல் என்பது தீய ஒழுக்கமுள்ள மனிதர்களே பார்த்துப்படிப்பதற்குத் தகுதிவாய்ந்ததென எண்ணுவோரெல்லாம் முழுதும் தப்பான வெறும் எண்ணம் குடிகொண்டவராகவே காணப்படுகின்றனர். ஐயறிவுள்ள தாழ்ந்த ஜீவப்பிராணிகளுக்கும் ஆறறிவுள்ள உயர்ந்த மக்களுக்கும் உண்பதிலும் உறங்குவதிலும் ஒன்று கூடு

வதிலும் வேற்றுமை தோன்றுவதில்லை. ஆனால் மற்றைப் பிராணிகளைக் காட்டினும் மாந்தருக்குப் பகுத்தறிவென்பது ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பகுத்தறிவை உபயோகிக்காமல் அலக்ஷியம் செய்வோரை மிருகங்களுக்கே சமமாகச் சொல்லலாம்.

இன்பநூல் சம்மந்தமான இல்லற இன்பங்களுக்குரிய உண்மையான ஞானம் ஒவ்வோர் ஆண்பெண்ணுக்கும் இக்காலத்தில் இந்நாட்டில் இருக்கவேண்டுவது அத்தியாவசியமா யிருப்பதாலும், அதற்குரிய ஆசிரியரேனும் அழகிய தமிழ் நூலேனும் இல்லாமையாலும் யாம் இதை இப்பொழுது எழுதத் துணிந்தோம்; இச் சிறு புத்தகத்தினால் நமது சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் மெத்த பயனுண்டாகுமென்பதே எமது துணிபு. ஆனால் சிற்றின்பத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கும் துஷ்டர்களுக்கும் துன்மார்க்கர்களுக்கும் இந்நூலால் அடையப்படவேண்டுவது ஒன்றுமின்று. ஆனால் கசடறக் கற்ற விசால புத்தியையுடைய ஸ்திரீபுருஷர்களுக்கு மாத்திரமே ஏற்பட்டதுதான் இந்நூலாகும். ஆகாரம் அருந்துவதும் தண்ணீர் குடிப்பதும் ஒவ்வோர் ஆண் பெண்ணுக்கும் எவ்வளவு அத்தியாவசியமா யிருக்கிறதோ அவ்வளவு அத்தியாவசியமாகத்தா னிருக்கிறது இந்தச் சாஸ்திரத்தின் கலைஞானமும். அங்க சாஸ்திர அமைப்பின் சம்மந்தமான அரிய கலையின் ஆழிய ஞானத்தையுடைய அருமைச் சோதரர்களுக்கு வேண்டிய அதி நுட்பமான ஆழ்ந்த விஷயம் ஒன்றும் இந்நூலில் அதிகமா யில்லாவிடினும் சாதாரணமான மண மகனுக்கும் மணமகளுக்கும் வேண்டிய எல்லா முக்கிய விஷயங்களும் இதில் நுண்ணிதாய்க் காணப்படும். இதில் கூறியபடி நீங்கள் நடந்துவருவீர்களேல், ஏ எம்

அருமைச் சோதர சோதரிகாள்! உங்களுடைய குடும்ப வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாவிதமான இகபர சாதனங்களுக்குரிய இன்பங்களையும் முற்றமுற்ற முழுதும் அனுபவிப்பீர்களென்றே யாம் கூறத்துணிவோம்.

ஆனால் இப்படிப்பட்ட இன்ப நூலினால் விவாகமடைந்துள்ள பெண் மாப்பிள்ளைகளுக்கு அதிகமான நன்மை விளைந்தபோதிலும் விவாகமடையாத சிறுவர்களுக்கு இவ் விஷய ஞானம் அவர்களுடைய கல்யாணப் பிராயத்திற்கு முன்னரே தெரிந்துவிடுமாயின் அதனால் பற்பல விதமான துன்பங்களெல்லாம் விளைதல் கூடுமென்று ஒருசிலர் ஆக்ஷேபிப்பார்களாயின் அவர்களுக்கும் யாம் சமாதானம் கூறுவோம்: இந் நூலை யாரேனுமொருவர் கவனத்துடன் ஊன்றிப் படிப்பாராயின் அவர் தம்முடைய அறியாத்தனமான தவறுகளையெல்லாம் நீக்கிக்கொண்டு பரிசுத்த மனமுடையவராகவே ஆய்விடுதல் கூடும். மிதமிஞ்சிய இல்வாழ்க்கையாலும், ஜனனேந்திரியங்களை இயற்கைக்கு மாறான துறைகளில் பிரவேசிக்கச் செய்வதனாலும் உண்டாகும் தீமைகள் கணக்கிலடங்கா. இப்படிப்பட்ட கொடிய பழக்கவழக்கங்களை அப்பியசிக்கும் ஒருவன் இந்நூலைப் பார்த்தமாத்திரத்தில் நடுநடுங்கும்படியான விதத்தில் இஃது எழுதப்பட்டிருக்கிறது. வீணான எண்ணங்களினால் நேரான காலத்தைப் போக்கித் தாறுமாறான வழிகளில் நுழைந்து சுயக்கேடுகளை விளைவித்துக்கொள்ளும் அறியாத வாலிபனை அவ் வழியில் செல்லவொட்டாமல் தடுப்பதற்கு இந்நூலை ஒருமுறை ஊன்றிப் படிப்பதே போதுமென்று யாம் கூறுவோம். இப்படிப்பட்ட விஷய ஞானம் தெரியாமையால் இப்பொழுது எத்தனை பால்யர்கள் தீய ஒழுக்கத்தில் செல்லாமலிருக்கிறார்களென்று யாம் கேட்கின்றோம். இக்காலத்

தில் பரத்தையர் வீதிகளில் காணப்படும் கடைக்கண் நோக்கும் கைச்சரஸ வாய்ச் சரஸங்களும் நம் இந்தியச் சிறுவர்களை எவ்வளவோ கெடுத்துவருகின்றன. இப்படிப்பட்ட விலைமகளிரன்றி, நாடகமேடைகளில் நடிக்கப்படும் நாகரிகமற்ற வெகு டிராமாக்களும், ஸினிமா வென்னும் நகரும் படக்காட்சியில் காட்டப்படும் சீரற்ற பல ஊரும் படங்களும், சென்னையில் விருத்தியாகும் செம்மையற்ற அனேகம் நாவல்களும் நம் சிறுவர் சிறுமிகளின் புத்தியைக் கெடுப்பதற்குப் போதியதற்கு மேற்பட்ட அதிகமான காரணங்களாகவே யிருந்துவருகின்றன. இப்படிப்பட்ட யௌவன ஸ்திரீ புருஷர்க ளனைவரும் "மணவாழ்க்கை மர்மத்தின்" உண்மையான இன்பம் இன்னதெனத் தெரிந்து கொள்வார்களாயின், அவர்கள் ஒருபோதும் தவறான வழியில் பிரவர்த்திக்க மாட்டாரென்பதே எமது தீரமான துணிபு. ஆதலின் ஒவ்வொரு தாய்தந்தையரும் தம்முடைய மக்களுக்கு "மணவாழ்க்கை மர்ம" சம்மந்தமான இனவாழ்க்கை முறைகளைத் தாமே நேரில் கற்றுக்கொடுக்க முற்படாமற்போயினும் அவர்களுடைய கையில் இந்நூலேனும் தானே சென்று சேரும்படி உதவிபுரிவார்களாயின் அதனால் தமக்கும் தமது சந்ததியாருக்கும் ஓர் இணையற்ற பேருபகாரம் செய்தவராகவே ஆவாரென்பதில் அணுவளவும் ஐயமில்லை. ஏனெனின் இதை ஒருமுறை ஊன்றிப் படிக்கும் ஒவ்வொருவரும் சொல்லொணாத நன்மையையெல்லாம் எய்துவர் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. வாலிபர்கள் அப்பொழுதுதான் முள்வழி இன்னதெனக் கண்டு அதை விட்டொழிப்பார்கள். துன்மார்க்கர்களும் தங்களுடைய தீய நடத்தையால் விளைந்த தீங்கின் பிரமாணம் இன்னதென அறிந்துகொள்வார்கள்; அதன்பின்

ஸன்மார்க்கத்தின் குணத்தை நன்குணர்வார்கள். விவாக மாகாதவ ரெல்லோரும் வேசித்தொழிலின் வீணை கெடு தல்களைக் கண்டுணர்வார்; விவாகமானவரும் நன்னெறி யொழுகுவார். இறுதியாக ஒவ்வொருவரும் அளவுக்கு மீறிய அனுபவத்தினுல் தேகாரோக்கியத்தை இழத்தலை யும் பலக்குறைவு, தேகச் சோர்வு, மனத்தடுமாற்றம் போன்ற எண்ணிறந்த தீமைகள் வந்தணுகுவதையும் அறி ந்துகொள்வார். மேலும் இயற்கைக்கு ஒத்தவாறு காமந் துய்த்தலினுல் நீண்ட ஆயுளும், நெடிய திடதேகமும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், பலமுற்ற சேயும், பரமசந்தோஷமான மனஉற்சாகமும், மற்றுமுள்ள எல்லா இன்பங்களும் உண்டாகுமென்பதையும் அறிவார். தீய எண்ணமும் அடக்கமற்ற இல்வாழ்க்கையும் அகால மரணம், அருவருப்பான மனநோய் முதலியவற்றை உண் டாக்கு மென்பதையும் அறிவார். எனவே இந்நூலைப் பயிலக்கூடாதென்று எவரேனும் கூறுவாராயின் அஃது இவ்வுலகில் ஒருவரும் விவாகமே செய்துகொள்ளக் கூடா தென்று கூறுவதையே ஒக்கும்.

இத்தமிழ் நாட்டு மக்களிடம் மலிந்துகிடக்கும் ஸ்திரீ புருஷ சம்மந்தமான ஸம்ஸார அஞ்ஞானத்தில் ஆயிரத்தி லொரு பங்கையேனும் போக்குவதற்கு இப்புத்தகமானது காரணபூதமா யிருக்குமாயினும் அப்பொழுதும் இந்நூலா னது விருதாவாக எழுதப்பட்டதென்று யாதோர் அறி வாளியாலும் கருதப்பட மாட்டா தென்றே துணிந்து இதன் பின்னுள்ள பல அத்தியாயங்களையும் யாம் எழுதத் துணிகின்ருேம். ஓ உன்னத ஸ்திரீ புருஷர்காள்! உங்க ளுக்கு மங்கள முண்டாகுக.

அத்தியாயம்—1

மதனும் ரதியும்

* உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.—(குறள்)

பூவுலகிலுள்ள புருஷர்களெல்லாம் ஸ்திரீகளை விரும்புகின்றனர்; இவ்வாறே எல்லா ஸ்திரீகளும் புருஷர்களை விழைகின்றனர். புருஷர்களாகட்டும், ஸ்திரீகளாகட்டும் ஒருவரும் தம்மளவில் சுயமே சம்பூரணமானவராய்க் காணப்படவில்லை. இயற்கையாகவே நாம், புருஷர்களெல்லாம் ஸ்திரீகளை விழையும்படியாயும், ஸ்திரீகளெல்லாம் புருஷர்களை விழையும்படியாயும் இறைவனால் இப் பிரபஞ்சத்தில் அமைக்கப்பட்டிருக்கிறோம். எவரொருவருடைய ஆத்மாவும் தனக்கொரு துணையான இணையைத் தேடிக்கொள்ளாமல் தன்னந்தனியேயிருந்து தனக்குள் திருப்தியடையவதில்லை. இஃது இறைவனது சிருஷ்டி ரஹஸ்ய மாகும். மேலும் இவ்வுலகில் நடைபெறவேண்டிய மானிட விருத்தி முதலிய லௌகிக வைதிக காரியங்களைப் பூர்த்திசெய்வதற்கும் மானிடவர்க்கத்தார் ஆணும் பெண்ணுமான குடித்தன முறையாகவே அமையவேண்டியது அத்தியாவசியமாய்க் காணப்படுகின்றது; ஆணும் பெண்ணும் தனித்தனியே யிருந்துகொண்டு அப்படிப்பட்ட அரிய காரியமொன்றையும் செய்து முடிப்

* உள்ளக் களித்தல் - நினைத்த மாத்திரத்தில் களிப்பெய்தல்.

பது அறவே முடியாத விஷயமாகும். எத்தனைக் காலம் வரையில் ஆடவருள் ஒருவர் அறத்தின் வழி நின்றபோதிலும், பெண்டிருள் ஒருவரும் அக் கொழுநன் வழி நில்லாமற் போவாராயின் இவ்வுலகில் யாதோர் ஆணையேனும் பெண்ணையேனும் எவராலும் உண்டுபண்ணுவது எள்ளத்தனையும் முடியாது. இக் காரணத்தாலேயே கணவனுடைய மறுபாதி மனைவியென்று சொல்லப்படுவதுடன் அவனுடைய "நல்ல மேலான பாதி" யென்றும் அவள் கூறப்படுகிறாள். ஆணும் பெண்ணும் தத்தம்முடைய அங்க அமைப்பில் முற்றிலும் வெவ்வேருகக் காணப்பட்டபோதிலும் அவர்களுடைய இருவகை வேறுபாடும் ஒருவகைப்பட்டால்தான் யாதொரு மனிதப் பிண்டத்தையும் உற்பத்திசெய்தல் கூடும்; காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பூண்ட ஆழிய ரம்மியத்திலிருந்துதான் சகல இன்பத்துக்கும் காரணமாகிய சந்தானவிருத்தியென்பது உண்டாகின்றது. இதன் இரகசியத்தில்தான் இவ்வுலக இன்ப முழுமைக்கும் உரிய மாயையானது நிறைக்கப்பட்டிருக்கிறது. ஆண் பெண்களுடைய அந்தரங்க எண்ணத்தில் நின்று ஊசலாடும் உயரிய நோக்க முழுதும் அவரவருக்குரிய அரிய துணையை அடையவேண்டுமென்னும் ஆவலேயொழிய அதைக்காட்டினும் பிறிதொன்றுமில்லை. இவ்வுலகத்தில் நாம் செய்துவரும் பிரயத்தனம் முழுதும் நமக்குரிய நல்ல துணையைத் தேடி அதனாலடையக்கூடிய அளவற்ற ஆத்ம இன்பத்தையும் அடியோடு பெறவேண்டுமென்பதுதானே!

நபுஞ்சகராகவும் நோயாளியாகவும் இல்லாத எல்லாச் சிறுவர்களும் சிறுமிகளும் தத்தமக்குரிய கட்டழகுள்ள காளைப்பருவத்தை யடைந்தவுடன் தத்தமக்குரிய நாயகி

யையும் நாயகனையும் இயற்கையாகவே நாட ஆரம்பிக்கின்றனர். காந்தர்வ விவாகமானது இக்காலத்தில் இந்தியாவில் அனுஷ்டானத்தில் இல்லாமற் போயினும் ஒவ்வொரு மன்மதனுடைய ஹிருதயத்திலும் ஒவ்வொரு ரதியை அடையவேண்டுமென்னும் ஆவல் தீயும், இவ்வாறே ஒவ்வொரு ரதியினுடைய ஹிருதயத்திலும் தனக்கேற்ற ஒரு மன்மதனை யடையவேண்டுமென்னும் வேட்கைத் தீயும் கனிந்துகொண்டே யிருப்பது சகஜம்தானே. இதிலொன்றும் தோஷமில்லை; அவரவரும் தத்தம்முடைய பருவகாலத்தை யடைந்தவுடன் இப்படிப்பட்ட எண்ணமானது அவர்களுடைய ஹிருதயத்தில் இயற்கையாகவே உதிக்கின்றது. இஃது இறைவன் திருவருள். இப்படிப்பட்ட காளைப்பருவத்தில் ஒவ்வொரு மன்மதாகாரமான பால்யனும் தன்னுடைய ரூபலாவண்யத்தைக் காட்டினும் அங்க அமைப்பில் முழுதும் வேறுபட்டிருக்கும் மற்றொரு ரதியைத் தேடி வருந்துகிறான்; இப்படியே ஒவ்வொரு நங்கையும் தன்னுடைய சௌந்தரியமும் சாமுத்திரிகா லக்ஷணமும் எவ்வளவு மேன்மைப்பட்டிருந்தபோதிலும் தன்னினும் வேறான மற்றொரு மன்மதனையே தேடி வருந்துகிறாள். ஆண்பால் தனக்குரிய பெண்பாலுடன் மனோரம்மியப்பட்டால்தான் தன்னுடைய இஷ்டபூர்த்தி நிறைவேறுவதாக எண்ணுகின்றது; இவ்வாறே பெண்ணும் தனக்குரிய ஆணுடன் ஐக்கியமானால்தான் தனக்குள்ள ஆர்வம் பூர்த்தியானதாய்க் கருதுகின்றது. இப்படிப்பட்ட பரஸ்பர வேட்கையானது இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு ஜீவராசியிலும் காணப்படுகின்றது. ஆணும் பெண்ணுமாகிய அனைவரும் தத்தமக்குரிய அங்க வேறுபாட்டை யெல்லாம் ஒன்றாகத் திர

ட்டி அதனாலுண்டாகும் ஐக்கிய ஆனந்தத்தால் இவ்வுல குக்கும் இதற்கப்பாலுள்ள அவ்வுலகுக்கும் வேண்டிய ஆத் மார்த்த இன்பங்களையும் ஆழிய நன்மைகளையும் அளவு கடந்து அநுபவிக்கின்றனர். இவ்வுலகிலுள்ள எப்படிப் பட்ட இன்பமும் நம்முடைய பஞ்சேந்திரியங்களுக் கெல் லாம் ஒருங்கே ஆனந்த மளிப்பதில்லை; ஆனால் ஆண்பெண் கூட்டுறவினால் இப்படிப்பட்ட இன்பம் முழுதும் நமது எல்லா உறுப்புக்களுக்கும் ஏககாலத்தில் உண்டாகின்றது. இதனால்தான் திருவள்ளுவரும்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள,"

என்று கூறியுள்ளார். ஆண்களுக்கு மட்டுமே இப்படிப் பட்ட எல்லா இன்பமும் பெண்களால் உண்டாகின்றன வென்று கருதவேண்டாம். ஆடவரைப்போலவே பெண் டிருக்கும் ஆண்பாலுறவால் அளவற்ற ஐம்புல ஆனந்த முண்டாகின்றது.

காளையரும் கன்னியரும் தத்தம்முடைய யௌவன பருவத்தைக் கடந்தவுடன் ஒருவரை யொருவர் நேசத் துடன் ஆசிப்பது ஓர் இயற்கையான ஆர்வமாகக் காணப் படுகின்றது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் எவ் வளவுக் கெவ்வளவு அங்க அமைப்பில் பகிரங்கமான வேறு பாடு காணப்படுகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு ஒருவரை யொருவர் அந்தரங்கத்தில் அதிகமாக ஆசிக்க ஆரம்பிக்கி றார். ஆண்பார்வையில் பெண்ணின் தோற்றமும், பெண் பார்வையில் ஆணின் தோற்றமும் அவர்களுடைய கௌ மார தசையில் ஒருவிதமான பிரேமையுள்ள பிரியத்தை உண்டுபண்ணுகின்றன. இப்படிப்பட்ட பிரேமையுள்ள பாந்தவ்யத்தால்தான் ஸ்திரீயும் புருஷனும் தமக்கு நரை

யும் திரையும் வந்த மூப்பின் பின்னும் தம்முடைய ஆயுள் பரியந்தம் ஒருவரை யொருவர் நேசித்துக்கொண்டே யிருக்கிறார்கள்.

இவ்வுலகிலுள்ள சில மனிதர்கள் எவ்வளவுதூரம் தாங்கள் பெண்பாலாரை வெறுப்பதேபோல் நடித்துச் சன்னியாச கோலம் பூண்டபோதிலும் அவர்களுடைய காளைப்பருவத்தில் தமக்கேற்ற பெண்ணை அடைவதற் குரிய ஆவல்மட்டும் அவரது ஹிருதயத்தில் இல்லாமற் போகாது.

* நாணி யென்பதை நாரியென் றுரைத்திடும் நசையால்
வேணு வானது வளைந்துபோய்ப் புகுந்தது வென்றால்
காண லாயதோர் உருவமெய்ந் நாரியைக் கண்டால்
பூணு வார்மயல் காளைய ரென்பதும் புதிதோ ?

இயற்கையாகவே மனிதகோடிகளுக்குக் கொடுக்கப்பட் டிருக்கும் ஆர்வத்தை அடியோடு அழித்துவிடுவது ஒரு போதும் முடியாது. ஒவ்வொரு பிராணியும் தன் தன் னுடைய ஆத்மாவின் பரிபூரண அனுபவத்தை அடைய வேண்டுமாயின் அது தன்னுடைய இணையுடன் கலந்து தான்ஆதல்வேண்டும். அவரவருடைய ஆவியிலும் உதிக்கும் இப்படிப்பட்ட ஆர்வத்தினால்தான் எத்தனைக் கிழத்தனம் வந்தெய்தியபோதிலும் அவர்களுள்ளும் ஆண் பெண்கள்

---

* நாணி - வில்லின் கயிறு நாரி - பெண், வில்லின் கயிறு. வில்லின் நாணியை நாரி என்றுரைத்த மாத்திரத்தில், (பெண் ணென்னும்) வேட்கையால் மூங்கில் வில்லானது வளைந்துபோய்த் தன்னுடைய காதை அந்நாணியில் சுயமே மாட்டிக்கொள்ளும்போது பார்ப்பதற்கரிய உருவத்தையுடைய மெய்யான நாரியை (பெண் ணை)க் கண்டால் காளைப்பருவமுள்ளோர் மையல் கொள்வா ரென் பதில் என்ன ஆச்சரிய மிருக்கிறது, என்பது இதன் பொழிப்பு.

ஒருவரை யொருவர் விருப்பத்துடன் விழைந்துகொண்டே யிருக்கிறார்கள். ஸ்திரீ புருஷர்களுடைய மனமானது நல்ல நிலைமையில் இருக்குமட்டும் ஒருவரையொருவர் விரும்பாம லிருப்பது முடியாது. இஃதோர் இயற்கை நியதியாகும்.

மனிதர்களாய்ப் பிறந்தவர்களுள் விவாகம் செய்து கொள்ளாமல் வெறுப்புடன் பிரமசாரிக்கோலத்தில் இரு ந்துவிடக்கூடிய உண்மைச் சன்னியாசிகள் இவ்வுலகில் காணப்படுவது அரிதினுமரிதா யிருப்பதால் அப்படிப்பட் டவர்களைக் குறித்து நாமொன்றும் ஈண்டுக் கூறப்போவ தில்லை. நூதன விவாகம் செய்துகொண்ட புதுப்பெண் மாப்பிள்ளைகளின் மணவாழ்க்கைக்குரிய காரியத்தை ஒழுங்கு செய்ய வேண்டியதுமட்டும் நம்முடைய நோக்க மாதலின் அன்னாரின் குடும்ப வாழ்க்கையைப் பற்றித்தான் நாம் பெரிதும் இங்கே கவனித்தல் வேண்டும். இவ்வுலக மக்களுள் பெரும்பான்மையோர் தங்களுடைய கௌமார தசையில் ஆணும் பெண்ணுமாக ஒருவரை யொருவர் விவா கம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கையில் அமர்ந்துவிடு கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எவ்வாறு இன்பத்துடன் இவ்வுலக வாழ்க்கையை நடத்தவேண்டு மென்பதுதான் அவரவரும் கற்றுக்கொள்ள வேண்டிய ஓர் அத்தியாவசிய மான விஷயமாய்க் காணப்படுகின்றது. இவ்வுலகில் இன்ப மடையாமல் துன்பத்தை மட்டுமே அனுபவிக்க வேண்டு மென்னும் நோக்கத்துடன் ஒருவரும் விவாகம் செய்து கொள்வதில்லை. வெளி வேஷத்தில் சிலர் விவாகத்தை வெறுப்பதுபோல நடித்தபோதிலும் அவர்களுடைய உள்ளக்கருத்தை ஊன்றி நோக்குவோமாயின் அவரவரும் தத்தமக்குரிய ஓர் அழகிய அணங்கை ஆர்வத்துடன் விழைவதாகவே தெரிந்துகொள்வோம். ஏகாங்கியா யிருப்

போமென்று ஆஷாடபூதி வேஷம்போடும் சிற்சில ஸ்திரீ புருஷரிடத்து இல்லற இன்ப சுகத்தை இயற்கைக்கு மாறுன மார்க்கங்களால் தீர்த்துக்கொள்ளுதற்குரிய ஒருவகைத் தீயவழக்கம் ஏற்பட்டுவிடுகின்றது. மனமொத்த மனைவியின்மாசிலாமேனியுடன் நம்முடைய மேனியும் ஸ்பரிசமானவுடன் இருவருடைய உடம்பிலும் உள்ளத்திலும் மின்சார சக்திபோன்ற ஒருவகை மாயா உணர்ச்சியானது தோன்றி அளக்கமுடியாத ஆனந்த பரவசத்தை அள்ளிக்கொடுத்துவிடுகின்றது. மனைவியின் அதரத்தினின்றும் அன்பு கனிந்த ஓர் ஆழிய முத்தத்தைப் பெறும்போது மயிர்க்கூச்சைப்பெருத மணமகன் ஒருவனும் இவ்வுலகில் இரானென்பதே திண்ணம்; கௌசிக முனிவர்போன்ற கடுந்தவம்புரியும் பெருந்தபோதனர்களும் கன்னியரின் கண்வலையுள் கண்டவுடன் சிக்கியரென்பதை நாம் கண்டும் கேட்டும் இருக்கிருேமன்ருே? எனவே மணமகனும் மணமகளும் ஈருடலும் ஒருயிருமாய்த் தம்முள் இனமொத்து இணங்கி மனமொத் திருக்கும்போது இருவருடைய உள்ளமும் ஆழமறியாத ஆனந்தசாகரத்துள் ஆழ்ந்து கிடக்குமென்பதில் என்ன ஆச்சரிய மிருக்கிறது?

ஒருவர் எவ்வளவுக் கெவ்வளவு பரிசுத்தமான மனத்துடனும் பாபமற்ற நோக்கத்துடனும் தமக்கு வேண்டிய மனமொத்த மனைவியை நாடித் திரிகின்ருரோ அவ்வளவுக் கவ்வளவு அவருடைய மனமும் அப்படிப்பட்ட மனைவியின் பக்கம் நேர்முகமாகத் திரும்பிநிற்கும்.

* கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினுள்—உட்கி

---

* கண்ணுக்கு இனிய உருவமுடையவ ளாகியும், (தனது) கணவனது ஆசையின்படி தன்னை அலங்கரித்துக் கொள்பவளாகி

இடனறிந் தூடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்.—(நாலடி)

இவ்வாறே ஒரு யௌவனப்பெண்ணின் மனமும் தன்னுேடொத்த ஒரு தகுதிவாய்ந்த மணமகனை நாடியே ஊடாடிநிற்கும். கணவனும்மனைவியும் தம்முள்மனமொத்த மாட்சியைப் பெற்று இவ்விகலோக வாழ்க்கையை நடாத்தும்படியான பாக்கியத்தைப் பெருவிடின், அவர்களுடைய உயிர் வாழ்க்கையானது இவ்வுலகில் மற்ற விஷயங்களில் எவ்வளவு வெற்றிபெற்றதா யிருப்பினும், அவரது ஜீவிதமானது ஒரு பயனற்ற வெறுங் "கசப்பான" காரியமாகவே காணப்படும். மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தத்தம்முடைய அந்தரங்க அபிமானத்தை நிலைக்கச்செய்வதற்கு ஒரு பொருத்தமான இடம் வேண்டும்; அப்படிப்பட்ட இடத்தில்தான் மணமகனுடைய மர்ம மெல்லாம் மணமகளிடத்திலும், மணமகளுடைய அந்தரங்க மெல்லாம் மணமகனிடத்திலும் பரஸ்பரம் கலந்து நிற்கும்; அந்தவிடத்தில் கணவன் மனைவியருடைய உடலிரண்டும் வெவ்வேறு யிருப்பினும் உயிர்மட்டும் ஒன்ருகவே காணப்படும்.

"உடம்பொ டுயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு,"

என்ருர் குறளுடையாரும். இப்படிப்பட்ட உள்ளன்பான சேர்க்கையைத்தான் நகமும் சதையும் போலென்று அறிஞர் கூறுகின்றனர். மின்சாரக் கருவியிலிருந் துண்டாகும்

யும், அச்சமுடையவளாகியும், ஊரிலுள்ளார்க்கு நாணங்கொள்ளும் தன்மையுடையவளாகியும், (தனது கணவனிடத்து) அஞ்சி, சமயமறிந்து, (அவனேடு) பிணங்கி இன்பமுண்டாகும்படி உடனே அறிந்து ஊடல் தீருகின்ற கபடமில்லாத இன்சொற்களை யுடையவளாகியும் இருப்பவளே மனைவியாவாள்.

உடன்பாட்டு(Positive) மின்சாரமும், எதிர்மறை (Negative)மின்சாரமும் ஒன்றித்து ஒருவகை ஜோதிமயமானமின்னொளியைக்காட்டுவதேபோல் ஸ்திரீபுருஷர் இருவருடைய தேகமும் மனமும் ஒன்ருக லயித்து ஆத்மானந்த சாகரத்துள் ஆழத்தாழ்ந்து அங்கிருந்து ஒருவகையானஆத்ம மின்சார உணர்ச்சியை வெளிப்படுத்தும். இப்படிப்பட்ட இல்லத்தொழுக்கம் எப்படியிருக்குமென்பது விவாக மென்னும் வாரிதிக்குள் விழுந்து நீந்துபவர்க்கே நன்கு புலப்படும்.

ஆனுல் இத்தகைய ஆர்வங்களை யெல்லாம் ஓர் அரிய பொருளாயெண்ணுமல் இவ்வுலகிலுள்ள எல்லா ஜீவராசிகளையும் ஒருங்கே விசுவசிக்கவேண்டுமென்னும் நல்நோக்கத்துடன் ஒருசிலர் விவாக மில்லாமல் சன்னியாசத்திலேயே இருந்துவிட விரும்புகின்றனர். ஆரம்பத்தில் இப்படிப்பட்ட நல்லெண்ணத்துடன் விவாகத்தை வெறுப்பவர்கள் பிறகு காலம் செல்லச் செல்லக் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதேபோல் பலவிதமான துர்க்கிருத்தியங்களுக்கெல்லாம் ஆளாய்விடுகின்றனர். சன்னியாசிகளுள் சிலர் உண்மையில் துர்க்கிருத்தியத்தைச் செய்ய இடம் வாய்க்காமல் பரிதபித்தபோதிலும் அவர்களுள் பெரும்பான்மையோரின் மனமானது ஸ்திரீ சபலத்தால் சஞ்சலத்துடன் சலனமடைய ஆரம்பித்து விடுகின்றது. ஏனெனின் விவாகமென்பது இயற்கைக்கு மாருய் ஒழிக்கப்படுமாயின் ஸ்திரீ புருஷர்களிடத்திலுள்ள ஸ்வபாவமான இல்லற இச்சையானது இயற்கையாகவே அதிகரித்துவிடுகின்றது; இதனுல் அவர்கள் செய்யத் தகாதவற்றைச் செய்து அடையத்தகாத வியாதிகளை யடைந்து துன்பப்படுகிருர்கள். விவாக மானவரிடத்தில் இருப்பதைக்காட்டினும் விவாகமாகாதவரிடத்து ஜனனேந்திரி

யங்களைப்பற்றிய வியாதிகள் அதிகமாய்க் காணப்படு கின்றன. அவர்கள் இந்திரிய ஸ்கலிதம், மேகவிரணம் முதலிய கொடிய வியாதிகளால் துன்பப்படுவார்களென் பதற்குச் சந்தேகமில்லை. விவாகத்தை முற்றிலும் ஒழித் திருப்பது தேகா ரோக்கியத்துக்குக் கெடுதியை உண்டு பண்ணும். ஆதலின் ஸ்வபாவ விரோதமாக நடப்பவன் ஒரு வன் தெய்வக்கட்டளையை மீறியவனாதலால் கரை காண்ப தற்கரிய நரகக்குழியில் வீழக்கடவன். இக்காரணத்தால் தான் இஸ்லாம்போன்ற சில மதங்களில் சன்னியாச வாழ்க் கையைத் தகாத காரியமெனக் கண்டித்திருக்கிறார்கள். இவ்வகைச் சன்னியாசத்தால் பல்வகைச் சங்கடங்களெல் லாம் உண்டாவதுடன்உலகவிருத்திக்கும் அஃதொரு பெரு ந்தடையா யிருந்துவருகிறது. மனிதர்களாய்ப் பிறந்தவர் களுக்குப் பஞ்சேந்திரியங்களையுடைய இப்பூத சரீரமா னது இந்தவிதமான நிலைமையில் இருக்குமட்டும் நாம் ஒவ்வொருவரும் இப் பூத தேகத்துக்குரிய பௌதிக சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டே நடத்தல் வேண்டும். இதற்குள்ளிருந்துதான் நம்முடைய ஆத்மாவும் பேரா னந்த நிலைமையைப் பெறுதல்வேண்டும். இப் பூத உடம் புடன்நாம்கூடியிருக்குமட்டும் தேகசம்மந்தமான பஞ்சேந் திரிய நுகர்ச்சிகளைவிட்டும் விலகுவது இயற்கைக்கு மாற்ற மாகும். உரிய காலத்தில் மணம் செய்யப் பெறாவிட்டால் அதனாலுண்டாகும் துன்பங்கள் எண்ணிலவாம்; விவாக சுகமும் குறைந்துபோகின்றது; வீரியம் வியாதியால் தூர்ப் பலமடைந்து கெட்டுப் போகின்றது. நம்முடைய தேக சம்மந்தமான நுகர்ச்சிகளை யெல்லாம் இயற்கைக்கு மாற்ற மில்லாமல் இனிய முறையில் அனுபவித்துக் கொண்டு தான் ஆத்ம சம்மந்தமான அழகிய மேன்மையையும்

அடைதல் வேண்டும். ஆனால் இந்திரிய சம்மந்தமான இன்ப நுகர்ச்சிகளை யெல்லாம் இயற்கைக்கு மாற்றமாகத் தடைசெய்து அடக்கி யாள்வதால் எத்தனைத் தீமைகள் விளைதல் கூடுமோ அதைக்காட்டினும் அதிகமான அளவு கடந்த தீங்குக ளெல்லாம், நாம் நம்முடைய தேகக்கூறு பாட்டின் அமைப்பினுடைய அளவுக்கு அதிகமான நுகர்ச்சிகளை அனுபவிக்க முயல்வதால் விளைந்துவிடுதல் கூடும். சன்னியாசத்தால் விளையுந் தீமையைக் காட்டினும் அளவு கடந்த சுகாதி வைபவங்களால் அதிகமான கேடுகளெல்லாம் விளையுமென்பதை அங்காதிபாத அமைப்பின் அளவு நூலானது ஐயமகல எண்பித்திருக்கின்றது; வைத்திய சாஸ்திரமும் இதை வலியுறுத்திக் கூறுகின்றது. தெய்விக விவாக விஷயமானது பலநோக்கங்களையும் உடையதாயிருக்கிறது. ஈ எறும்பு புழு பறவை விலங்கு முதலியவைகளுள்ளும் ஆண் பெண் நேசமென்பது ஏற்படாமலில்லை. ஆதலின் மனிதனுக்கும் அவ்வகைக் கூட்டுறவு ஏற்படாமலிருப்பது இயற்கைக்கு மாற்றமாகும். ஸ்திரீ புருஷர்களுக்குள்ள பரஸ்பர அன்னியோன்னியமும் அன்பும் ஆதரவும் சுகானுபவமுமே விவாகத்தின் முக்கிய தாத்பரிய தருமங்களாகும். மணஞ் செய்து கொண்டவன் நீண்ட ஆயுளையுடையவனாக இருப்பான்; ஆனால் விவாகத்தின் நோக்கமும் பயனும் இடைவிடாமல் இல்லற இன்பம் நுகர்வது தானென் றெண்ணி அந்தப் பாதாளத்துள் ஆழ்ந்திருத்தல் முற்றிலும் தவறாகும். ஆதலின் அதி மிதமான உயிர் வாழ்க்கைக் காகவே அரிய மணம் முடித்துக்கொள்ளல் அத்தியாவசியமாய்க் காணப்படுகின்றது.

யௌவன பருவமடைந்த சில சிறுவர்களும் சிறுமிகளும் இயற்கைக்கு முரணான துறைகளில் இறங்கி இந்திரிய

(வீரிய) நாசத்தை அடைவதாலும், அல்லது அதை அடக்கும் திறமையின்றி அளவுகடந்த விவாகசாகரத்துள் ஆழ்ந்துவிடுவதாலும் அளவற்ற தீமைகளையெல்லாம் அடைந்து தங்களுடைய கட்டழகுள்ள காளைப்பருவத்தையும் கணிக்கமுடியாத கோலத்தையுடைய வெவ்வேறு விதமான வீரியவிரணம் முதலிய வியாதிகளுக்கு ஆளாக்கி விடுகின்றனர். இந்தியநாட்டில் இந்த இருபதாவது நூற்றாண்டிலும் நடைபெற்றுவரும் பால்ய விவாகத்தால் நம்தேசத்தினருக்கு உண்டாகும் தீமைகளுக்கோர் அளவில்லை. (இதைக் குறித்து மற்றோரிடத்தில் விவரித்து எழுதுவாம்.) இந்தியருள் ஒருசிலர் விவாக மில்லாமலே தம்முடைய வாணாளையெல்லாம் வீணாளாக்கி வருகின்றனர்; மற்றும் சிலரோ தகாதவழிகளால் தம்முடைய தேக சுகத்தை இழந்து விடுகின்றனர்; மிகுதியுள்ள மிகப் பெரும்பான்மையோரோ சுகபோகங்களின் அளவைத் தெரிந்துகொள்ளாமல் ஆழமறியாத பாழ்கடலுள் வீழ்ந்து ஆழ்ந்து போகின்றனர். ஆனால் உண்மையை உணருங்கால் தக்கபருவத்தில் விவாகம் செய்துகொண்டு மிக்க பதத்துடன் இன்ப நுகர்ச்சியைப் பெறுவதே நீண்ட ஆயுளையும் நிறைந்த சுகத்தையும் தக்க போகத்தையும் தகுந்த குழந்தைகளையும் தந்தருளும். எவ்வளவுக் கெவ்வளவு மிதத்துடனும் பதத்துடனும் நம்முடைய இன்பநுகர்ச்சியை அடக்கிக் கொள்ளுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு ஆனந்த வாழ்க்கையும் ஆயுளின் சுகமும் என்றென்றைக்கும் நம்மிடம் நிலைத்திருக்கும். இன்றேல் காய்ந்த சருகில் காட்டுத் தீ புகுந்ததேபோல் நம்முடைய தேகமும் மனமும் ஒருங்கே சாம்பலாய் நீற்றுப்போம். புதிதாக விவாகம் செய்து கொண்டு பள்ளியறை புகுந்த மணமகனும் மணமகளும்

எவ்வாறு தங்களுடைய சுகானந்த அனுபவங்களை மிதப் படுத்திக் கொள்ளல் வேண்டு மென்பதைப்பற்றி மேலே விவரித்து எழுதுவோம். விவாக சுகத்தை அடியோடு திரஸ் கரித்து விடாமலும் அதிகமாக அதில் ஆழ்ந்து விடாமலும் மிதமான அளவில் எதையும் அனுபவிப்பதுதான் ஆன்ம சுகத்தையும் அளவற்ற ஆனந்தத்தையும் திடகாத்திரமான சந்தான சம்பத்தையும் அளிக்கவல்லதா யிருக்கின்றது.

இல்லற வாழ்க்கையில் மிதமான இன்ப சுகத்தை யனுபவித்து அதன்மேல் பரலோக சம்மந்தமான பரமா னந்த சுகத்தையும் பெறுதல் வேண்டும். ஐம்புல சம்மந்த மான ஆசைகளை யெல்லாம் அளவுடன் அனுபவிப்பதனுல் ஆன்ம சம்மந்தமான ஞானமும் முதிர்ச்சி யடைதல் கூடும். தேக சம்மந்தமான ரம்மிய நுகர்ச்சியில் நாம் தடைசெய் யும்போது நம்முடைய மனமும், அதன் சார்பாக ஆத்மா வும் தம்முடைய முன்னேற்ற வளர்ச்சியில் விருத்தியடை யாமல் குன்று முட்டிய குருவிபோல் தடைப்பட்டுப் போம். ஐம்புல ஆசையின் அளவான நுகர்ச்சியால் தேக மும் மனமும் அபிவிருத்தி யடைந்துவரும்போது ஆத்மா வும் அதனுடன் வளர்ந்தோங்கியே வரும். ஆதலின் நாம் இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் கூறியதேபோல் இவ் வுலகிலுள்ள ஒவ்வொரு பிராணியும் தன் தனக்குரிய ஜதை யுடன் ரம்மியப்பட்டேதான் தன்னுடைய பரிபூர்ணத்தை அடைதல் முடியும். இதற்காகத்தான் இகலோக வாழ்வில் விவாகமென்பது ஓர் அத்தியாவசியமான காரியமாக ஏற் படுத்தப்பட்டு மிருக்கின்றது.

* தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்ருரே
காமத்துக் காழில் கனி.—(குறள்)

---

*தம்மால் காதலிக்கப்படும் கணவர் தம்மைக் காதலிக்கப்பெற்ற மக ளிர் பெற்ருரன்றே காமநுகர்ச்சி யென்னும் விதையில்லாத கனியை.

அத்தியாயம்—2

விவாகத்துக்குப் பின்

*வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னும் செருக்கு.—(குறள்)

நாம் முன் அத்தியாயத்தில் கூறியதுபோல் இவ்வுலகில் யாதோர் ஆணேனும் பெண்ணேனும் சுகமனுபவிக்காமல் சும்மா இருப்பதற்காக ஒருபோதும் விவாகம் பண்ணிக்கொள்வதில்லை. மற்றெல்லா மனிதர்களைக் காட்டினும் தாங்கள் மட்டுந்தாம் அளவற்ற சுகானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்னும் அழகிய எண்ணத்துடன்தான் அவரவரும் விவாகம் செய்துகொள்ளுகின்றனர். ஆனால் இப்படிப்பட்ட நல்லெண்ணத்துடன் திருமண எல்லைக்குள் நுழையும் எல்லா ஆண் பெண்களுடைய அனுபவங்களையும் ஆராய்ந்து பார்ப்போமாயின் அவர்களுக்குள் ஒரு சிலரே குடும்பசாகரத்துள் இன்ப சாகரத்தை எய்திய வராய்க் காணப்படுவார். நம் இந்திய நாட்டில் பெரும்பான்மையான குடும்பங்களில் ஸ்திரீ புருஷர்கள் விவாக சுகத்தை அனுபவிக்கும்படியான சௌகரியங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியாத பல அசௌகரியங்களுக்குள் அகப்

* காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து கடிதின் வருவர்; வந்தால் நாம் இன்புற்று வாழ்வோம், என்றிருக்கும் தருக்கு தாம் விழையும் கணவரால் விழையப்படும் மகளிர்க்கு ஏற்புடைத்து.

பட்டுக்கொள்வதுண்டு. விவாகம் பண்ணிக்கொண்ட மண மகளும் எதேச்சையாய் இன்பநல மனுபவிக்க முடியாமல் அவ்வளவு ஏழ்மைத் தனத்துடன் பலபேர் மத்தியில் ஒரு சிறு குடிலில் முடங்கக் கூடிய எளிய மக்கள் ஒருபுறம் இருக்கட்டும்; பெரும்பான்மையான பெருந் தனிகர்கள் வீட்டிலும் புதுக் கல்யாணமான பெண் மாப்பிள்ளைகள் சுகானந்த மனுபவிக்கும்படியான சௌகரியங்களை அக் குடும்பத்தினர் அதிகம் செய்துகொடுப்பதில்லை. மற்றும் பல குடும்பங்களில் பெண்ணின் மாமிமார் நாத்திமார் முத லிய பல சுற்றத்தார் அப் புதுப்பெண்ணை ஓர் அடிமைப் பெண்போல் நடத்துவதோடு திருப்தி யடையாமல் அம் மணமகனும் மணமகளும் இல்லற இன்பம் அனுபவிப்பதி லும் பொறாமையுடன் புழுக்கமும் கொள்வதுண்டு. சிற்சில குடும்பங்களில் மாமனார் மாமிமார் முதலியோர் தங்களு டைய மருமகளை "நாட்டுப் பெண்"போல் நடத்திவரு கின்றனர்; மற்றுஞ் சில குடும்பங்களில் அப் பெண்களை "மாட்டுப் பெண்ணாகவே" மாரடிக்கச் செய்கின்றனர். அவர்கள் குடும்பத்துக்குக் கூலிவேலை செய்யும் பொருட் டுச் சந்தையில் பிடித்துவரும் ஆடுமாடுகளைக் காட்டினும் தாழ்ந்தவர்களாக அந் நாட்டுப் பெண்களை நினைக்கிறார் களே ஒழிய மகனுக்காகத் தேடிய மருவும் மகளென்று ஒருசிறிதும் கருதுவதில்லை. இப்படிப்பட்ட குடும்பங்களில் இழிவுடன் வாழ்ந்துவரும் புதிய மாப்பிள்ளையும் பெண் ணும் தங்களுக்குள் திருட்டுத்தனமாகவே விவாகசுகத்தை அனுபவிக்க வேண்டியதிருக்கிற தல்லாமல் அவர்களுக்கு எவ்விதமான கௌரவமும் கொடுக்கப்படுவதில்லை; அவர்க ளுடைய மணவாழ்க்கையெல்லாம் ஒரு மகா லஜ்ஜையான காரியமாகவும் திருட்டுத்தனமான தொழிலாகவுமே

கருதப்பட்டு வருகின்றது. ஒரு பக்கத்தில் இன்ப நுகர்ச்சிக்குரிய விஷய ஞானம் இல்லாமலிருப்பதோடு மற்றொரு பக்கத்தில் இப்படிப்பட்ட லஜ்ஜையும் திருட்டுத்தனமும் அவர்களுடைய விவாக சுகத்தை யெல்லாம் கொள்ளை கொண்டு போய்விடுகின்றன.

வெளிப்படையான இடையூறுகள் எத்தனை யிருந்த போதிலும் மணமகனும் மணமகளும் முதன்முதலில் பள்ளி யறையுள் சந்திக்கும்போது தங்களுடைய சுகானந்தத்தை ஒரு சுவர்க்கானந்த மாகவே மதிக்கின்றனர். ஆரம்பத்தில் புருஷஸரஸம் இன்னதென்று பெண் அறியாமலும், ஸ்திரீஸரஸம் இன்னதென்று ஆண் அறியாமலும் இருந்து, பின் ஒருவரோடொருவர் உணர்வுகலந்து உடல் கலந்து உயிர்கலந்து உவகையினுள் மூழ்கிவிடும் முதல்நாள் சந்திப்பின்போது ஸ்திரீ புமான்கள் ஒரு பிரம்மானந்தம் போன்ற பரமானந்தத்தையே அடைகின்றனர். எவ்வளவுக் கெவ்வளவு ஆண் பெண்களுடைய சரீரக் கூறுபாடு முறையே இயற்கையில் வேறுபட் டிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுடைய மையலும் மயக்கமும், மோகமும் சோகமும் அளவுகடந்து பொங்கி யெழும். ஆண் பெண்களுக் கிடையிலுள்ள அங்க வேறுபாடுதான் அவர்களுடைய ஆத்ம ஒற்றுமைக்குக் காரணமாயிருக்கிறது. ஆனால் மணமகனும் மணமகளும் தாங்கள் எடுத்துக்கொண்ட கருமத்தின்கருத்து இன்னதென்றும், அவ் வில்லற நுகர்ச்சிக்கு வேண்டிய விதிமுறைகள் இன்னவை யென்றும் சற்றேனும் தெரிந்துகொள்ளாததனாலேயே இவ்வுலகில் விவாகமாகிச் சிறிது காலத்துக்குள் சில ஸ்திரீ புமான்கள் ஒருவரை யொருவர் வெறுக்கத் தலைப்படுகின்றனர். அவர்கள் குடும்ப வாழ்க்கையின் கௌரவமான காதலிரக

சியத்தின் கண்ணியமிக்க பெருமையை இன்னதென உணராமல் கேவலம் மிருகங்களைப்போல் ரதி சுகத்தை மட்டும் அனுபவிக்கப் பிரயத்தனப்படுவதனால்தான் சிறிது காலத்துக்குள் மேற்கூறிய பிளவு அவர்களுக்குள் உண்டாகின்றது. ஆனால் ஸ்திரீ புருஷர்கள் தங்களுடைய புத்தியை மட்டும் அவசரத்தினால் ஆத்திரப்படாமற் சிறிது நிதானப்படுத்திக் கொள்ளும் பக்ஷத்தில் அவர்களுக்குள் எவ்வகைப் பிளவும் ஏற்படக் காரணமிராதென்பது திண்ணம். லௌகிக சம்மந்தமான குடும்ப விஷயத்தில் அவர்களுக்குள் எவ்வளவு அபிப்பிராய பேதம் ஏற்பட்டபோதிலும் இருவரும் ஏகோபித்து ஒரே மனத்துடன் ஒன்றிக் கக்கூடிய ஓர் ஏகாந்தமான இடம் (அந்தப்புரம்) ஏற்பட்டிருப்பதனால் அந்த இடத்தில் எல்லாவிதமான வேற்றுமைகளும் ஒற்றுமைப் பட்டுப்போம். "ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம், கூடி முயங்கப் * பெறின்," என்றார் குறள் ஆசிரியரும். சிறு சிறு சாதாரண விஷயங்களில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு அதன்பின் பள்ளியறையுள் நடக்கும் தெய்வ சம்மத காரியத்தில் மனமொருமிக்கும் போது அந்த இன்பமானது சாதாரண காலங்களிலுண்டாகும் மனோரம்மியத்தைக்காட்டினும் மேம்பட்ட இன்பமாகவே யிருக்குமென்பது ஒவ்வொருவருக்கும் அனுபவ சித்தமான உண்மை யன்றோ ?

எப்படிப்பட்ட அங்க வேறுபாட்டினால் ஆரம்பத்தில் ஸ்திரீ புருஷர்கள் ஒருவரை யொருவர் அதிகம் நேசிக்க ஆரம்பிக்கிறார்களோ அப்படிப்பட்ட மன வேறுபாட்டினாலேயே பிறகு அவர்களிருவரும் அபிப்பிராய பேதங் கொண்டு பிளவுபட ஆரம்பிக்கின்றனர். ஈதெல்லாம் இன்ப

* முயங்குதல்—தழுவுதல்.

சுகத்தின் இல்லற இரகசியமுறைகளைச் செவ்வனே தெரிந்து கொள்ளாமையால்தான் விளைகின்றதென்று நாம் நிச்சயமாகக் கூறலாம். இவ் விஷயத்தில் மகா மேதாவிகளும் விஷய நுணுக்கம் தெரியாமல் விழிக்கின்றனர். ஒரு குடும்பத்திலுள்ள புருஷன் பெண்ஜாதிகளுக் கிடையில் மனஸ்தாபம் ஏற்பட்டு அதனால் அவர்களுடைய இன்ப வாழ்க்கையானது துன்ப வாழ்க்கையாக மாறிவிடும்போது அவர்கள் தங்களுக்கு மட்டுந்தாம் இப்படிப்பட்ட பொல்லாத விதி நேரிட்டதென்று நினைப்பது வழக்கம். ஆனால் அனேக குடும்பங்களில் இப்படிப்பட்ட பிரணய கலகமானது ஸ்திரீ புருஷர்களுக்கிடையில் அவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ இருந்துகொண்டே யிருக்கிறது. நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது குடும்பங்களில் கணவன் மனைவியருக் கிடையில் மணவாழ்க்கைக்கான இன்ப சுகத்துக்குரிய ஸௌஜன்யம் இல்லையென்றே உறுதியாகக்கூறலாம். குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு அவர்கள் குடும்பத்தை நடாத்துவதுபோல் வெளித் தோற்றத்தில் காணப்பட்ட போதிலும் அந்தரங்கத்தில் அவர்களுக்குள் மனஸ்தாபம் இருந்துகொண்டே யிருக்கும். அவர்களுடைய அந்தரங்க வாழ்க்கையைச் சிறிது ஆழ்ந்து நோக்குவோமாயின் அனேகம் அதிசயமான பிரணய கலகங்களெல்லாம் அதி ரஹஸ்யத்தில் காணப்படும்.

இல்வாழ்க்கை சம்மந்தமான இன்பசாஸ்திர நூலை ஆண்பிள்ளைகளும் அறியாமலிருப்பதோடு அவர்களைக்காட்டினும் அதிகமாகப் பெண்களுக்கே அவ் விஷயஞானம் சர்வசூன்யமா யிருக்கின்றது. பெண்கள் எவ்வளவு புத்திசாலிகளா யிருப்பினும், அவர்களுக்குக் கல்வி அறிவும் எவ்வளவு அதிகமா யிருந்தபோதிலும் அவர்கள் தங்களுடைய

சயனகிருகத்திற்குச் செல்லுங் காலையில் ஸ்திரீ புருஷ வாழ்க்கையின் சம்மந்தமான ஞானத்தில் மிகமிகக் குறைந்தவராகவே காணப்படுகின்றனர்; இதற்குக் காரணம் அவர்களுடைய மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு என்னும் பெண் தன்மையேயாகும். ஸ்திரீ புருஷ நிலைமையைப்பற்றித் தம் குழந்தைகளுக்கும் அறிவித்தல் அத்தியாவசியமென்னும் உண்மையை உணர்ந்துகொண்ட கற்றறிந்த பெற்றோரும் ஆண்பிள்ளைகளின் அவயவத் தொழிலைப்பற்றி அச்சிறுவர் சிறுமிகளுக்கு எத்துணை வயதில் எப்படிக் கற்றுக்கொடுப்பதென்று மயங்குகிறார்கள். அவர்களுக்குப் பெண்களின் தன்மையை அறிவிப்பதில் ஒன்றும் அபசாரமில்லையென்றும், ஆனால் ஆண்பாலின் புருஷத்தன்மையை அறிவிப்பது மட்டுமே அபசாரமுளதென்றும் அத் தாய் தந்தையர் ஐயுற்றுக் கிலேசமுறுகின்றனர். ஒரு புருஷனை மணந்து ஓர் ஆண் குழந்தையையும் ஈன்றெடுத்த தாயானவள் ஏன் தன்னுடைய சொந்தக் குமாரனுக்கு ஆண்பாலின் ஆண்மைத்தனம் இப்படிப்பட்டதென்பதை எடுத்துரைக்க நாணமுறுகிறாள்? ஆண்பாலின் அங்க அமைப்பில் ஏதோ அருவருக்கத்தக்க குணமிருக்கிறதென்றோ, அல்லது அதை அறிந்துகொள்வது முடியாதென்றோ அசங்கதங் கொள்ளுகிறாள்; அப்படிப்பட்ட அச்சத்தாலும் அசங்கதத்தாலும் அறியாமையாலுமே அவளுடைய குமாரனின் அந்தரங்கமான அபிலாஷை முழுதும் அதிகமாகத் தழைத்தோங்கத் தொடங்குகின்றது.

நாம் ஸ்திரீ புருஷ சம்மந்தமான சிற்சில பதங்களை நம்முடைய நிகண்டுகளினின்றும் சுரண்டிவிட்டதோடு திருப்தியடையாமல் நம்முடைய சிறுவர் சிறுமிகளின் பரிசுத்தமான பால்ய மனத்தினுள்ளும் அப்படிப்பட்ட அபரிசுத்த

மான பதங்கள் நுழையவே கூடாதென்று தடையுத்தரவு நம் அனைவோராலும் போடப்பட்டிருப்பதைக் காட்டினும் அச் சிறுவர் சிறுமிகளின் மனப்பரிசுத்தத்தைத் தூய்மையறச் செய்யக்கூடியது இவ்வுலகில் வேறொன்றும் இல்லையென்றே கூறலாம். இன்னமும் இல்வாழ்க்கை சம்மந்தமான அங்க அவயவங்களின் வைத்திய சாஸ்திரோக்தமான நாமங்களை அன்னையும் பிதாவும் அறிந்துகொள்ளாமலிருப்பதே அவர்களுடைய மக்களுக்கு இப்படிப்பட்ட இல்லறதர்மத்தை அறிவிக்க முடியாமல் அவர்களுக்குக் கஷ்டத்தை யுண்டுபண்ணுகின்றது. ஆனால் தமிழ் மொழியிலுள்ள சர்வ சாதாரணமான தீமையற்ற பதங்களை யெல்லாம் தூயனவல்லவென்று நாளடைவில் அவற்றிற்கு ஓர் அருவருப்பான தாத்பரியத்தைக் கற்பித்துவிட்டனர். ஆனால் சின்னஞ் சிறுவர்களுடைய மனத்தின்கண் அப்படிப்பட்ட பதங்களால் அசங்கதமான அருவருப்பொன்றும் இயற்கையாய்த் தோன்றுவதில்லை; பெரிய மனிதர்களென்னப்பட்டவர்கள் அப்படிப்பட்ட சொற்களுக்கெல்லாம் வேறுவிதமான ஒழுங்கீனமுள்ள வெறுக்கத்தக்க கருத்தை உண்டுபண்ணி விட்டதனால்தான் நம் பால்யர்களும் பால்யைகளும் அச் சொற்களுடன் ஒருவகை அருவருப்பான அர்த்தத்தையும் உட்கொள்ளுகின்றனர். ஆனால் இப்படிப்பட்ட துரபிப்பிராயமுள்ள எண்ணத்தை அவர்களுடைய பரிசுத்த மனத்தின்கண் நுழையவிடாமல் அவர்களுக்கு ஆண்பால் பெண்பாலரின் அங்காதிபாத அவயவ அமைப்பையும் அவற்றின் சார்பான தொழில்களையும் செவ்வனே வைத்திய சாஸ்திர முறைப்படி விளக்கிக் காட்டுவது இக்காலத்தில் இத்தமிழ்நாட்டில் ஓர் அத்தியாவசியமான கடமையாய்க் காணப்படுகின்றது.

*"கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது," [குப்

என்றார் திருவள்ளுவனாரும். இப்படிப்பட்ட இனிய குணமுள்ள இளங்கன்னிகைகளை அவருடைய கணவன்மார் தம்முடைய தன்மையையே இன்னதென் றுணர்ந்து கொள்ளாமல் இனிமையல்லாத முறைமையில் நெருங்க ஆரம்பிப்பதனால் அப்பெண்மணிகளின் மனத்தில் ஒருவித திகிலும் பர்த்தாவினிடம் பலவித வெறுப்பும் உண்டாய் விடுகின்றன. இப்படிப்பட்ட திகிலின் காரணத்தாலேயே இவ்வுலகில் சில கன்னிகைகள் தமது சயனத்துக்குச் சென்றபின் பல தினம் வரையில் தங்களுடைய கணவன் மாரை ஏறட்டுப்பார்க்க மனமில்லாமல் பிணங்கிக்கொண் டே யிருக்கின்றனர்; அப்படிப்பட்ட வேளைகளில் அக்கன் னிகைகளை நயமுடன் நல்ல விதத்தில் இன்புறச்செய்யத் தெரியாத பல புருஷர்கள் அப் பெண்களையும் கஷ்டப்படு த்தி அதனால் தாமும் நிஷ்டூரப்படுவதுமுண்டு. மணமகளுக்கு விவாக இன்பம் இன்னதென்பதே சாஸ்திர முகத்தானும் தெரியாம லிருக்கும்போது அப்பெண்ணை ஓர் அன்னிய புருஷனுடன் தன்னந்தனியே வசிக்கச்சொன்னால் அவளுக்கு இப்படிப்பட்ட திகிலுண்டாகாமல் வேறென்னதான் தோன்றக்கூடும்? இஃதல்லாமல் அவளுடைய தேகதிடமும் மிக மென்மையுற் றிருப்பதனாலும் அதற்கு முன் வரை அன்னியனாயிருந்து வந்த அயல் புருஷனொருவனைக் கண்டவுடன் அவள் மனத்தில் ஏதோ ஒருவிதமான குழப்பமும் திகிலும் தோன்ற ஆரம்பிக்கின்றன. இப்படிப்

* என் கண்ணிறைந்த அழகினையும் மூங்கிலையொத்த தோளினையுமுடைய நின்பேதைக்கு, பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அவ்வளவன்றி மிகுந்தது.

பட்ட வேளையில் அப்படிப்பட்ட மணமகளின் திகிலையும் குழப்பத்தையும் இன்னும் அதிகமாகச் செய்யும் முறைமையில் அம்மணமகன் ஒழுகத் துணிவானாயின் அவளுக்கு அளவு கடந்த ஆத்திரமும் மனவெறுப்பும் அதிசீக்கிரம் உற்பத்தியாய் விடுகின்றன. எவ்வளவுக் கெவ்வளவு ஒரு புருஷன் தன்னுடைய மனைவியைப் பாமரத்தனமான மிருகம்போல் நடத்திவருகிறானோ அவ்வளவுக் கவ்வளவு அவளுக்கும் அவன்மீது வெறுப்பும் திகிலும் ஸதா இருந்து கொண்டே யிருக்கும்.

ஆனால் ஆரம்பகாலத்தில் மணமகள்மீது மணமகன் தன்னுடைய ஆவிமுழுதையும் அர்ப்பணம் செய்ய ஆவலுறுகிறான்; அவளுடைய மனத்திருப்திக்காக அவன் அதிகம் பாடுபட இசைகிறான். தன்னுடைய உடல் பொருள் ஆவியை யெல்லாம் மனைவியின் பலிபீடத்தின்மீது தியாகம் செய்வதாகக் கூறும் கணவன் தன்னுடைய இல்லாளைக் கேவலம் ஒரு சின்றின்ப யந்திர மென்று மட்டும் கருதுவானாயின் அப்பொழுதே அவனுடைய தியாகமெல்லாம் எவ்வகைப் பயனுமற்ற வெறுங்காரியமாக மாறிவிடுகின்றன. கேவலம் தன்னுடைய சிற்றின்ப சம்மந்தமான இஷ்ட பூர்த்தியை நிறைவேற்றிக் கொடுப்பது மட்டுமே நம்முடைய மனைவிகளின் கடமையென்று தீர்மானித்து விடுவோமாயின், அப் பெண்மணிகள் நம்முடைய இஷ்டம்போல் நடக்க இணங்காத காலங்களிலெல்லாம் நமக்கு அவர்கள்மீது வெறுப்பும் கோபமுமே உண்டாதல் கூடும். இப்படிப்பட்ட காரணத்தினால்தான் சில புருஷன்மார் தங்களுடைய மனைவியர்மீது சீக்கிரம் வெறுப்படைந்து விடுகின்றனர். எவ்வளவுக் கெவ்வளவு ஒருவன் தன்னுடைய மனையாளைத் தனது மிருகத்தனமான சிற்றின்ப

நுகர்ச்சிக்காக வென்று மட்டும் கருத ஆரம்பிக்கின்ருனோ அவ்வளவுக் கவ்வளவு அவளுக்கும் அவன்மீது துவேஷமே யுண்டாகும். பெண் மாப்பிள்ளைகளுக்குள் பிரணய சம்மந்தமான கலகம் நேரும்போதெல்லாம் அதற்குக் காரணம் அனேகமாய்ப் புருஷன்மார்களாகவே யிருப்பார்கள். பெண்களிடத்தில் புருஷன்மார்களுக்கு எவ்வளவு சீக்கிரம் மனஸ்தாபம் உண்டாகிறதோ அவ்வளவு சீக்கிரமாகப் புருஷன்மார்களிடம் பெண்களுக்கு மனஸ்தாபம் உண்டாவதில்லை.

ஸ்திரீ புருஷர்களுக் கிடையிலுள்ள மனவோர்மையானது என்றென்றைக்கும் நீடித்திருக்க வேண்டுமாயின் பரஸ்பரம் அவர்களுக்குள் ளுள்ள ஆயிரக்கணக்கான சிறு சிறு நுண்ணிய விஷயங்களிலெல்லாம் கணவன்மார் மனைவியரிடம் கருணையுடன் நடந்துகொள்ளுதல் அத்தியாவசியமாகும். சாதாரணமான அஜாக்ரதையால் புருஷர்களால் செய்யப்படும் சிறு சிறு விஷயங்களே நாளடைவில் ஸ்திரீகளின் மனத்தில் வேதனையை யுண்டுபண்ணிக் குடும்பத்தில் கலகத்தை விளைவிக்கின்றன. ஆனுல் புருஷன்மார் தமது தகாத ஒழுக்கத்தால் மனைவியரைப் புடைத்து வருத்தி அனுசாரமான அவமானத்துக் குள்ளாக்கும் பல துஷ்டர்களின் துஷ்கிருத்தியங்களைப்பற்றி யாம் இங்கொன்றும் கூறத் தேவையில்லை. மதுபானப் பழக்கத்தாலும் பரநாரி நேசத்தாலும் இவ்விந்திய நாட்டுப் புருஷர்களுள் பலர் தமது குடும்பத்திலுள்ள பரமானந்தத்தைப் பாழாக்கி விடுகின்றனர். இப்படிப்பட்ட புருஷர்கள் தங்களுடைய மனைவியரை ஒழுங்காக நடத்திக்கொள்ள வழிதெரியாமலே விலைமாதரின் வலைக்குள் விழுந்துவிடுகின்றனர். (வியபிசாரம் செய்வதன் தீவினைப்

பயனை நாம் இங்கெடுத்துக் கூறவேண்டுவதில்லை.) இத்தகைய தவறான வழியில் கணவன்மார் செல்ல ஆரம்பிக்கும்போது சிற்சில மனைவியரும் தமது பொறுமையாலும் புத்திசாலித்தனத்தாலும்புருஷர்களைநல்வழிக்குக்கொண்டு வராமல் தம்முடைய அவசர புத்தியாலும் அறியாத் தனத்தாலும் அவர்களைப் பரத்தையர் வசமே ஒப்படைத்து விடுவதுமுண்டு. இப்படிப்பட்ட பரத்தையர் தோஷத்தால் புருஷர்கள் தங்களுடைய தேகசுகத்தை மட்டும் யிழந்துவிடுவ தல்லாமல் தமது மனைவியரின் ஆரோக்கியத்தையுங் கெடுத்து அவரது வயிற்றி லுதிக்கப் போகும் பிள்ளைகளையும் எண்ணத்தொலையாத வியாதிகளுக்கு இலக்காக்கி விடுகின்றனர். ஆதலின் அறிஞர்களாகிய அன்பர்களுக்கு வேசியர் ஆசையாலும் மதுபான மயக்கத்தாலும் உண்டாகும் தீமைகளைப் பற்றி நாம் அதிகமாக ஒன்றும் ஈண்டுக் கூறத் தேவையில்லை.

* உள்ளம் ஒருவன் உழையதா ஒண்ணுதலார்
கள்ளத்தால் செய்யும் கருத்தெல்லாம்—தெள்ளி
அறிந்த இடத்தும் அறியாராம் பாவம்
செறிந்த உடம்பி னவர்.—(நாலடி)

இவ்வுலகில் இறைவனால் அமைக்கப்பட் டிருக்கும் எவ்வகையான இயற்கை விதிகளையும் முறிப்பதனால் அது அதற்கேற்ற தண்டனையானது வந்து மூள்வதேபோல் இல்வாழ்க்கை விஷயத்தில் இழைக்கப்படும் ஒவ்வொரு

---

* (தமது) மனம் ஒருவனிடத்திலிருக்க விளக்கமான நெற்றியையுடைய பொதுமகளிர் கபடமாக (அன்புடையார் போன்று) செய்கின்ற கருத்து முழுதையும் தெளிவாக ஆராய்ந்தறிந்தபோதும் தீவினை மிகுதியையுடைய உடம்பை யுடையவர் (பாவிகள்) உண்மை யறிய மாட்டார்கள்.

துஷ்கிருத்தியத்துக்கும் அப்படிப்பட்ட சிக்ஷை அவசியம் கிடைப்பது சகஜமே யாகும். குடும்ப வாழ்க்கையில் கணவனும் மனைவியும் இழைக்கும் ஒவ்வொரு தவறுதலுக்கும் அது அதற்கேற்ற தண்டனை வந்தே தீரும். முற்பகலில் மதுபானம், பரத்தையர் நேசம் முதலிய தகாத காரியங்களில் ஒருவன் ஈடுபட்டு விடுவானாயின் பிற்பகலில் அவற்றாலாய தீமைகளை அவன் ஒருபோதும் அடையாமற் போகமாட்டான். இப்படிப்பட்ட துர்வழக்கங்களெல்லாம் தன்னுடைய கணவனிடத்தி லிருப்பதைக் கண்ட மனைவி தன் மனப்புழுக்கத்தால் வேதனையடையுங் காலத்தில் அதையொரு காரியமாகப் பொருட்படுத்தாமல் அக் கணவன் அலக்ஷிய புத்தியுடன் தன்மனம் போனவழியே ஒழுகி வருவானாயின் அக் குடும்பத்தில் நாளுக்குநாள் பிளவு அதிகப்படுமே யல்லாமல் அவர்களுக்குள் ஒருபோதும் ஒற்றுமை யென்பது ஏற்பட மாட்டாது.

மனிதர்களுடைய தேகமும், மனமும், ஆவியும் எவ்வாறு அமைக்கப்பட் டிருக்கின்றன வென்று ஆராய்ச்சி செய்யப் புகுவோமாயின், அப்பொழுது ஸ்திரீ புருஷர்கள் தங்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஏதேனுமொரு குற்றத்தைச் செய்துவிடுவார்களாயின் அதன் பலாபலனை அவர்கள் அடையாமல் ஒருசிறிதும் தப்பிப்போவது முடியாத காரியமா யிருக்கு மென்பதை நாம் செவ்வனே தெரிந்துகொள்வோம். வினை யிட்டவன் வினையறுப்பதும் தினையிட்டவன் தினை யறுப்பதும் இந்த ஸ்திரீ புருஷர்களுக் கிடையிலும் ஒக்கும். மனைவியின் விஷயத்தில் கணவனாலும், கணவன் விஷயத்தில் மனைவியாலும் செய்யப்படும் ஒவ்வொரு சிறு சிறு தவறும் காலக்கிரமத்தில் அவர்களுக்கிடையில் ஒற்றுமைக் குறைவை அதிகப்படுத்திக்

கொண்டே போகும். புருஷர்கள் தங்களுடைய தகாத கிரியைகளை எவ்வளவு தூரம் மனைவியருக்குத் தெரியாமல் மறைத்துவைத்த போதிலும் அவர்களிடத்தில் அந்தப் புருஷர்கள் நடந்துகொள்ளும் நடக்கையைக் கொண்டே அந்த ஸ்திரீகள் ஆடவரின் அயோக்கியத் தன்மையை நன்கு தெரிந்து கொள்ளுவார்கள்.

விவாகமென்பது வெறும் இல்லின்ப நுகர்ச்சியாக மட்டும் இருக்குமாயின் கணவன்மாரின் அயோக்கிய நடையைக்குறித்து மனைவியர் மனவருத்தங்கொள்ளமாட்டார். உண்மைக் காதலென்பது உயிரோடு உயிர் ஒட்டிய ஓர் அன்புத் தளையாகும்; கேவலம் சிற்றின்ப நுகர்ச்சிமட்டும் ஒருபோதும் மெய்யன்பாக மாட்டாது. உடம்போடு உடம்பு ஒட்டும்படியாக முயங்குவதால் மட்டும் எல்லாக் காதலும் முற்றுப்பெற்று விட்டதென்று எண்ணிவிட வேண்டாம். ஸ்திரீ புருஷர்களுக் கிடையில் உண்டாகும் ஒவ்வொரு நடிப்பும், ஒவ்வொரு சம்பாஷணையும், ஒவ்வொரு கடைக்கண் நோக்கும், ஒவ்வொரு கண்ணிமைப்பும், ஒவ்வொரு புன்சிரிப்பும், இன்னும் சுருங்கச் சொல்லுமிடத்து, ஒவ்வோர் அந்தரங்க எண்ணமும் அவர்களுடைய ஆர்வத்தை அதிகப்படுத்திக்கொண்டேயிருக்கும்.

* நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு.—(குறள்)

ஆதலின் இப்படிப்பட்ட எல்லாக் காரியங்களிலும் ஒவ்வொரு ஸ்திரீ புருஷரும் அதி ஜாக்ரதையாக நடந்து கொள்ள வேண்டும். கணவனும் மனைவியும் கருத்தொரு

---

* என்னால் நேசிக்கப்பட்ட காதலர் என்மாட்டு அன்பிலரேயாயினும் அவர் திறத்து யாதானுமோர் சொல்லும் என் செவிக்கு இனியதாம்.

மித்து அதிக கவனத்துடன் ஒருவரோ டொருவர் நடந்து கொள்வதனுல்தான் அவர்களுடைய காதலானது வளர் பிறைபோல் நாள்தோறும் வளர்ந்துகொண்டே வரும்.

ஆனுல் இக்காலத்தில் மனிதர்களுக்குத் தங்களுடைய தினசரி வாழ்க்கையில் அதிகமான அவசரம் ஏற்பட்டிருப் பதனுல் ஸ்திரீ புருஷர்கள் சாவகாசமாய்த் தங்களுடைய மணவாழ்க்கை விஷயத்தைக் கவனிப்பது அரிதினும் அரி தாகி விட்டது. சில புருஷர்கள் தங்களுடைய பலவகைப் பட்ட தொல்லைகளால் ஸ்திரீகளையே மிக வெறுக்க ஆரம் பித்து விடுகின்றனர். பணப்பித்துக் கொண்டு பேயாய்த் திரியும்போது, பெண்களின் ஞாபகமே அவர்களுடைய மன த்தின்கண் நுழைவதில்லை; இவர்களுடைய மனைவியர் வலு வில் வந்து மேவியபோதிலும் அதையொரு சனியனென்று அந்தக் கணவன்மார் கருதுவது வழக்கம். இதற்கெல்லாம் அவர்களது பணப்பித்தே காரணம். மற்றுஞ் சிலரோ தமது அவசரக் கோலத்தால் ஊண் உடை முதலிய விஷ யங்களில் பராமுகமா யிருப்பது போலவே குடும்ப வாழ்க் கையிலுள்ள காதல் விஷயத்திலும் கவனம் செலுத்தாமல், ஏதோ ஸ்திரீகளின் தொந்தரவுக்காகத் திருட்டுத்தனமாக இருட்டறையில் கார்த்திகைப் பிறைபோல் கலந்துகொள் ளுகின்றனர். இன்னும் சிலரோ தமது மனைவியரைத் தனியே விட்டுவிட்டுப் பல வருஷங்கள் வரையில் அயல் நாடு சென்று அரும்பாடுபட்டுப் பொருள் தேடுகின்றனர். இப்படிப்பட்ட புருஷர்களெல்லாம் பொருள் தேடுவதை மட்டுமே தமது புருஷார்த்தமெனக் கருதியிருக்கின்றனர் போலும். இகலோக வாழ்க்கையிலுண்டாகும் இடையூறு களை விலக்கிக்கொள்ள மட்டும் போதுமான திரவியத்தைச் சம்பாதிக்க வேண்டியதை விட்டுப் பொருள் தேடுவதை

யே பலர் தம்முடைய நித்தியத் தொழிலாகக் கொண்டு பித்தாய்த் திரிகின்றனர். பொருளால் சுகந்தேடுவதை விடுத்துத் தம்முடைய தேக சுகத்தையும் இழந்துகொண்டு பொருள் தேடுவதையே அன்னூர் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளார். இப்படிப்பட்ட பொருளாசை யென்னும் பேய் பிடித்தவருக்குக் குடும்ப வாழ்க்கையின் இன்பத்தை அனுபவிப்பதற்கு அவகாசம் கிடைப்பதெங்கே? இவர்களெல்லாம் செல்வத்தின் பின்னே சென்றுகொண்டிருக்க, இவர்களுடைய மனைவிமார் மாரன் வேதனையால் மையல்கொண்டு இரவும் பகலும் ஊண் உறக்க மில்லாமல் உடல் மெலிந்து உயிர் நலிந்து உழன்று திரிகின்றனர்.

*"புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு,"

என்றார் குறளாசிரியரும். இக்காரணத்தாலேயே பெரும்பான்மையான தனிகர்களின் குடும்பங்களில் சுகவாழ்க்கை யென்பதே சிறிது மில்லாமல் ஸ்திரீ புமான்க ளெல்லாம் இன்பமற்ற துன்பசாகரத்துக்குள்ளே மூழ்கிக் கிடக்கின்றனர். வெளித் தோற்றத்தில் மட்டும் பணக்காரர்களைப் போல் காணப்பட்ட போதிலும் உள்ளுக்குள் அவர் ஒரு வகைச் சுகமுமில்லாமலே தமது இல்லற வாழ்க்கையை முடித்துக் கொள்ளுகின்றனர். ஆதலின் பொருள் தேடுவதையே ஒருபெரிய நோக்கமாகக் கொள்ளாமல் இல்லறம் நடத்துவதற்குப் போதுமானதை மட்டும் தேடிக் கொண்டு இன்ப சுகத்தை மனைவிமக்களுடன் இடைவிடாது அனுபவிக்க முயல்வதே அறிவுடையோரால் சிலா

* முன்னொரு சமயம் காதலரைத் தழுவிக்கிடந்த யான் அறியாது அப்பாற் சென்றேன்; அவ்வளவில் பசப்பு அள்ளிக்கொள்வதுபோல் வந்து செறிந்தது.

இக்கத்தக்க செய்கையாகும். "அறனீனும் இன்பமு மீனும் திறனறிந்து, தீதின்றி வந்த பொருள்," என்னும் குறளுக் கிணங்க நல்வழியில் தேடிய பொருளைக்கொண்டு இல்லறம் நடத்துவதே இன்பமான சற்கரும மாகும். இதுதான் இழிவில்லா வாழ்க்கை. இஃதே இறைவனுக்கும் உவந்த தாகும்.

அத்தியாயம்—3

பெண்களின் பிணக்கு

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்.—(குறள்)

கட்டழகுள்ள காமக்காளைபோன்ற மன்மதாகாரமான மணமகனொருவன் தனக்கு மனமொத்த மன்மதன் தேவிபோன்ற மணமகளொருத்தியை மணந்துகொண்டு மங்களகரமாக வாழ்ந்துவருங் காலையில் அவன் தன் ஆயுள் முழுதும் ஒரே தன்மையதாகிய ஓயாத ஒய்யாரத்தையே அனுபவிக்க வேண்டுமென்று அதிகமாக ஆவல்கொள்ளுகிறான். தான் கணவனாயிருப்பதன் கருத்தை உணர்ந்துகொண்டவனைப் போல் தன் மனைவியினிடம் மேன்மையுடன் நடந்து கொள்ள வேண்டுமென்றே விரும்புகிறான். தன்னுடைய மனையாளுக்கும் தனக்கும் இடையில் கலகங்களுண்டாய் அதன் காரணமாகத் தமக்குள் மனஸ்தாபம் நேரிட

வேண்டுமென்று எப்படிப்பட்ட மனிதனும் எண்ணுவ தில்லை. என்றென்றைக்கும் குறைவில்லாச் சுகானந்தத்தை அடையவேண்டுமென்றே அவரவரும் மனப்பூர்வமாக எண்ணுகின்றனர். புதிதாக விவாகம் செய்துகொண்ட தன்னுடைய மனைவியைத் திருப்திசெய்யும் பொருட்டு ஒவ்வொரு மணமகனும் வாஸ்தவத்தில் எவ்வளவோ சிரமம் எடுத்துக்கொள்ளுகின்றான். ஆரம்பத்தில் பெண் மாப் பிள்ளைகள் இருவரும் தமக்குள் மனமொத்து எல்லாக் காரியங்களையும் இனிது நிறைவேற்றுகின்றனர். ஆனால் பெரும்பான்மையான குடும்பங்களில் பெண்ணுடை மயக்கம் ஒன்றரை வருடத்துடன் ஒழிந்துபோகின்றது; ஆனால் மற்றுஞ் சில குடும்பங்களில் சில மாதங்களுக்குள் ஸ்திரீ புருஷர்களின் காதற் கனிவானது கரைந்துபோகின் றது. அனேகம் புருஷன்மார் சில காலத்துக்குள் தங்கள் மனைவியர்மீது வெறுப்புக்காட்டத் தலைப்பட்டு விடுகின் றனர். ஆனால் பலர் தங்களுடைய குடும்ப இரகசியம் வெ ளியில் தெரியாமல் மறைத்துவைப்பது வழக்கம். தங்களு டைய அந்தரங்க நண்பரிடமும் விஷயத்தை வெளியிடத் துணியார். எனினும் அவரவருடைய குடும்ப இரகசியம் அவரவருக்குத் தெரியாமற் போகாது.

இப்படிப்பட்ட "இளைப்புக்குக்" காரணம் யாது? புரு ஷன்மார்களுக்குப் பெண்களிடத்தில் உண்டாகும் மனஸ் தாபத்துக்கெல்லாம் காரணம் அப் பெண்களின் பிணக்குத் தானென்று பலர் அபிப்பிராயப் படுவதுண்டு. சாதாரண மனஸ்தாபங்களை யெல்லாம் கணவன்மார் ஒரு சிறு ஊட லென்று கருதுவதுண்டு; ஆனால் அனேகவித மனக்கோண லுக்கெல்லாம் மனைவிமாரின் பிணக்கே காரணமென்று எல் லோரும் கூசாமல் கூறிவருகின்றனர். தான் எவ்விதமான

மனஸ்தாபத்துக்கு முரிய ஒருவிதமான செய்கையையும் செய்யாம லிருக்கும்பொழுதே தன்னுடைய மனைவியான வள் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் மனக்கிலேசமுற் றிருப்பதை அடிக்கடி அக் கணவன் காண்பதுண்டு. ஆனால் அவளுடைய மனப்பிணியின் காரணம் இன்னதென்பதை மட்டும் உணர்ந்துகொள்ளாமல் அக்கணவன் தன்னுடைய சாதுர்யங்களையெல்லாம் உபயோகப்படுத்தி அவளைச் சமா தானம் செய்யப் பார்க்கிறான். தன்னுடைய புன்சிரிப்பா லும் முகமலர்ச்சியாலும் அன்பென்னும் ஆதரவாலும் அவ ளைச் சந்தோஷப்படுத்துகிறான். ஆனால் அவள் மறுபடியும் பிணங்கிக்கொள்ளுகிறாள்; இதன் காரணம் என்னவாயிருக் குமோவென்று அஞ்சி அவன் தன் மனைவியின் நடத்தை யைக் கவனிக்க ஆரம்பிக்கிறான். தன் மனைவியானவள் தன் னைத்தவிர வேறு யாரேனும் அயல் புருஷன்மீது ஒருகால் ஆர்வங் கொண்டுவிட்டாளோ வென்ற சந்தேகத்துடன் அவளுடைய செய்கையை யெல்லாம் இரகசியமாக நோட்டமிடத் துணிகின்றான். தன்னிடத்திலுள்ள அன் பின் குறைவால் அவள் தன்னைவிட்டு வேறொரு சோர நாயகனிடம் பாய்ந்துவிடுவளோ வென்றும் அஞ்சுகிறான்.

தான்மட்டும் தன்னுடைய மனைவியின்மீது வைத்த காதலில் சிறிதும் குறையவில்லை யென்று தன் மனத்துக் குள் தைரியம் செய்துகொள்ளுகிறான். மனைவியின் மீது தான் கொண்ட அபிமானம் மட்டும் எள்ளளவும் குறை யாமலிருக்கும்போது அவளுடைய மனத்தில் ஏன் இவ் வளவு பிணக்கு வந்துவிட்டதென்று அவன் மனவேதனை யால் அவஸ்தைப் படுகிறான். ஒருசமயம் தன்னிடத்தில் ஏதேனும் தவறுண்டோவென்று சிந்திக்கிறான்; மற்றொரு சமயம் தன்னுடைய மனைவியின் ஒழுக்கத்தில் ஏதேனும்

தவறுண்டோவென்று சந்தேகிக்கிறான். இவ்வாறு அவன் சிறிதும் பொறுமையில்லாமல் அனலில் விழுந்த புழுவைப் போல் துடிதுடிக்கிறான். ஆனால் தன்னுடைய மனைவியின் பிணக்கின் காரணம் இன்னதென அவன் உண்மையை உணர்ந்து கொள்வதில்லை. தன்னுடைய அவசர புத்தியால் அவன் தன் மனைவியின் பிணக்கை அதிகப்படுத்தி விடுகிறான். ஸ்திரீ புருஷ மணவாழ்க்கை சம்மந்தமான மானிட முறைகளை அவன் தெரிந்து கொள்ளாததால் அவளுடைய பிணக்கின் காரணம் இன்னதென அவனுக்கொன்றும் விளங்குவதில்லை. ஒருகால் அவளுக்குத் தான் ஏதேனும் காசுபணம் தூசுமணி முதலியவற்றால் சன்மானம் செய்தேனும் அவளைத் திருப்தி செய்யலாமென்று எண்ணுகிறான். இப்படிப்பட்ட சன்மானத்தினலெல்லாம் அவள் சிறிது சமாதானம் அடைந்தவள்போல் காணப்படுகிறாள். இத்தகைய உபசாந்தியான உபயதானங்களால் அப்பெண்ணின் பிணக்கானது அடியோடு ஒழிவதில்லை. சன்மானம் செய்து சமாதானம் பண்ணின சில தினங்களுக்குள் அவளுடைய பிணக்கானது மறுபடியும் மூண்டுவிடுகின்றது.

மறுபடியும் அவன் தன்னுடைய நிலைமையை உணர்ந்து கொள்ளாமல் பலவிதத்திலும் பதட்டப்படுகிறான். ஒருகால் தான் அடிக்கடி அவளை மணவாழ்க்கைக்கு விழைந்ததன் பயனாக அவளுக்கு மன வருத்தம் உண்டாயிருத்தல் கூடுமோ வென்று யூகித்துக்கொண்டு அதற்கென்ன உபாயமெனத் தேடித்திரிகிறான். தன்னுடைய அந்தரங்க நண்பர்களைக்கண்டு கேட்கிறான்; சிற்றின்ப சம்மந்தமான பல நூல்களையும் ஆராய்ச்சிசெய்ய முற்படுகிறான். இப்படியெல்லாம் அவன் அலைந்ததன் பயனாகக் கடைசியில் தனக்

குள் ஒருவிதமாகத் தீர்மானம் செய்துகொள்ளுகிறான் : இனிமேல் தான் அடிக்கடி தன் மனைவியை அந்தப்புரத்துக்கு அழைப்பதில்லையென்று முடிவுகட்டிக் கொள்ளுகிறான். அடிக்கடி மணவாழ்க்கைக்காக நிர்ப்பந்தம் செய்வதால்தான் தன் மனைவிக்குப் பிணக்கு உண்டாய்விடுகிறதென ஊகித்துணர்ந்துகொண்ட கணவன் தன்னுடைய சித்த விகாரத்தை மட்டுப்படுத்திக்கொண்டு அவளுடன் சரசசல்லாபம் செய்வதை விடுத்து அல்லும் பகலும் அனவரதமும் தன்னுடைய சம்பாத்தியத்திலேயே தன் முழுக் கருத்தையும் செலுத்த ஆரம்பித்து விடுகிறான். ஆனால் இவ்வாறு அவன் செய்து தன்னுடைய ஆர்வத்தையெல்லாம் அடக்கிக்கொண்ட போதிலும் அவனுடைய மனைவியின் மனத்திலுள்ள பிணக்குமட்டும் தீர்வதே யில்லை. ஏனெனின் அவன் அவளுடைய பிணக்கின் அந்தரங்கத்தைத் தெரிந்துகொள்வதில்லை. கணவன் தன்னுடைய மனைவிக்குள்ள மனவருத்தத்தை நீக்கும்பொருட்டுத் தன் மனத்தை அடக்கிக்கொண்டு சும்மா உறங்கும்போது அவள் மட்டும் தன்னந்தனியே தலையணையில் குப்புறக் கவிழ்ந்துகொண்டு கண்ணீர் வடிக்கின்றாள்.

கணவனோ தன்னுடைய மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாரமொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று முறை மட்டும் முயங்கினால் திருப்தியுண்டாய் விடுமென்று கருதுகின்றான். மற்ற மனிதர்களால் செய்யமுடியாத ஓர் அரிய காரியத்தைத் தான் நிறைவேற்றுவதாக அவன் மட்டும் நினைக்கிறான். வாரமொன்றுக்கு இரண்டு மூன்று இல்லச் சேர்க்கையுடன் இவன் கட்டுப்பட்டிருப்பதில் என்ன ஆச்சரிய மிருக்கிறது? இவனைக் காட்டினும் மற்றும் சிலர் வாரம் ஒருமுறையுடனும், இரண்டு வாரத்துக்கு ஒருமுறை

யுடனும், மாதம் ஒன்றுக்கு ஒருமுறை யுடனும் திருப்தி யடைந்து தம்முடைய மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு நடக்கவில்லையா? கூட்டுறவின் இடையிட்ட காலத்தை நீடித்துக்கொள்வதால் மட்டும் பெண்களின் பிணக்கு நீங்கிவிடுமென்று கருதுவது கூடாது. மணவாழ்க்கையின் கால அளவுக்கும் பெண்களின் பிணக்குக்கும் எவ்விதமான சம்மந்தமும் கிடையாது; மனைவியரின் பிணக்கின் காரணம் இன்னதென்று கண்டுபிடிப்பதில் கணவன்மார் அதிகம் ஆவல் கொண்டிருந்த போதிலும் அன்னாரின் உண்மையான மனோபாவத்தை அவர்கள் (புருஷன்மார்) ஒருபோதும் ஊகித்தறிவதில்லை. என்னென்னவோ விதமான சாமர்த்தியத்தா லெல்லாம் கணவன்மார் வெளிமுகத்தில் தமது மனைவியரின் மனப்பிணியை நீக்கப்பார்க்கின்றனர். ஆனால் உள்முகத்திலுள்ள அப் பிணியின் உண்மைக் காரணத்தை யுணர்ந்து அதற் கேற்றவாறு கணவன்மார் நடந்து கொண்டா லொழிய அப்பெண்களின் பிணக்கானது ஒரு சிறிதும் தணியமாட்டாது; அவர்களின் ஏமாற்றமும் தீர மாட்டாது.

இப் பிரபஞ்சத்திலுள்ள இயற்கைப் பொருள்களின் எல்லாத் தத்துவங்களையும் கண்டுபிடிப்பதற்காக அறிஞர்கள் எவ்வளவோ பாடுபட்டு வருகின்றனர். எத்தனை நக்ஷத்திர கிரகங்கள் ககோளத்தில் உண்டென்று எண்ணிவருகிறார்கள்; ரஸாயன சாஸ்திர முறைப்படி இவ்வுலகில் எத்தனை வகைப்பட்ட வெவ்வேறு தனிப்பட்ட பூதப்பொருள்கள் உண்டென்று அறிவுநூல் வல்லார் அலகிட்டு வருகின்றனர். ஆனால் பெண்களின் பிணக்கு எக்காரணத்தால் உண்டாகிற தென்பதை மட்டும் எவரும் கண்டறிய முயல்வதில்லை. ஊர் விஷயங்களெல்லாம் தெரியும்; ஆனால்

தன் வீட்டு விஷயம் மட்டும் தெரியமாட்டாது. ஸ்திரீக ளின் சிருஷ்டியில் மட்டும் எவ்விதமான இயற்கைச் சட்ட மும் அமைந்தில்லையென்று எண்ணுகிறீர்கள்? பூவுலகில் காணப்படும் ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஒவ்வொருவிதமான சட்டதிட்டம் அமைந்திருக்கும்போது, பெண்களின் விஷ யத்தில் மட்டும் யாதொரு விதமான சட்டமும் இல்லை யென்று சொல்வது முடியாது. ஆனால் ஆண்மக்கள் தங்க ளுடைய அவசரபுத்தியால் பெண்களின் நிலைமையை உள்ள படி உணர்ந்துகொள்ளாமல் அவர்களுடைய மனோவேதனை யெல்லாம் வெளிப்பிணக்கினாலேயே உண்டாகிறதென்று ஒருதலைப் பக்ஷமாகத் தீர்மானித்து விடுகின்றனர். பெண் களின் மனத்தைப் பரிசோதனை செய்யாமல், அவர்களின் ஆவல் தணியாத உட்பிணக்கை யறியாமல் அவர்களுக் காக ஆடவரே எக்ஸ் பார்ட்டித் தீர்ப்புச் செய்துவிடுகின் றனர்.

இந்திய மாதர்களுள் பெரும்பான்மையோர் தங்களு டைய ஜீவனோபாயத்துக்காக ஆடவரின் ஆட்சியின்கீழ் அடிமைப்பட் டிருப்பதனாலும், தங்களுடைய கர்ப்பகாலத் திலும், குழந்தைகளைப் பால்கொடுத்து வளர்க்கும் காலத் திலும் வேறெவ்விதத் தொழிலும் செய்யமுடியாமல் ஆண் பிள்ளைகளின் ஆதரவையே எதிர்நோக்கி யிருப்பதனாலும் ஸ்திரீகளெல்லாம் புருஷர்களுக்குத் தாழ்ந்தவர்களென் னும் ஒரு துரபிப்பிராயம் இந்நாட்டில் எப்பொழுதும் வழங்கி வருகின்றது. இயற்கையாகப் பார்க்குமளவில் அறிவிலும் ஆற்றலிலும் ஆடவரைக் காட்டினும் பெண்டிர் குறைந்தவராய்க் காணப்படவில்லை. ஸ்திரீகளுக்குச் சுதந் தரமில்லையென்றும், “தையல் சொற் கேளேல்” என்பதே போல் அவர்களுடைய அபிப்பிராயத்தைப் புருஷன்மார்

கேட்கவேண்டிய தில்லையென்றும் நம் நாட்டில் ஒரு தவ ருன வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இக் காரணத்தால்தான் காதல் சம்மந்தமான கலவியின் விஷயத்திலும் மனைவியின் அபிப்பிராயத்தைக் கணவன்மார் கவனிக்கவேண்டிய அவ சிய மில்லையெனக் கருதுகின்றனர். இப்புவனத்திலும் இதற்கு மேலுள்ள அச்சுவனத்திலும் ஆண்டவனால் படைக்கப்பட்டிருக்கும் எல்லா விதமான சிருஷ்டிப் பொருள்களும் அவனால் அமைக்கப்பட் டிருக்கும் சில இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டே நடக்கின்றன; இவ் வாறே பெண்மணிகளின் வேட்கையும் ஒருவகைச் சட்ட திட்டத்துக்குக் கட்டுப்பட்டே நடக்கின்றது; இந்த இரகசியத்தைத்தான் புருஷர்கள் தெரிந்துகொள்வதில்லை; பெண்களும் தங்களுடைய இன்பநிலையின் நியதியைக் கற் றுக்கொள்வது மில்லை; கற்றுக்கொடுக்கப்படுவது மில்லை. ஆண்பிள்ளைகளுக்கு ஆர்வம் அதிகரிக்கும்போது பெண் பிள்ளைகளெல்லாம் அவர்களுக்கு இணங்கவேண்டுமென்று மட்டும் அந்த ஆடவரெல்லாம் கருதுகின்றனரே யொழிய, பெண்களுக்கும் அப்படிப்பட்ட இன்பகாலம் ஒன்று இருப் பது சகஜ மென்று ஒருவரும் எண்ணுவது கிடையாது. ஸ்திரீகளைக் காணுந்தோறும் புருஷர்களுக்கு இன்பம் ஜனிப் பது ஓர் இயற்கையான தோற்றமாகவே காணப்படுகின் றது; ஆனால் ஆடவர் விழையும் போதெல்லாம் பெண்டி ருக்கு விருப்பம் உண்டாவதில்லை. மாதவிடாயும் கர்ப்ப காலமும் பெண்களின் இன்பச்சுவையின் கால அளவை அதிகமாகக் கட்டுப்படுத்தி யிருக்கின்றன. ஆண்பிள்ளை களுக்கு நினைத்தமாத்திரத்தில் ஆர்வநோய் அதிகரித்து விடுவதேபோல் பெண்களுக்கும் திடுமென்று அந்த மோகத் தீ மூள்வதில்லை. இக் காரணத்தால்தான் பொதுவாக ஆண்

களைக் காட்டினும் பெண்கள் இல்லற விஷயங்களில் இனி யில்லாத் தன்னடக்க முள்ளவர்களாகக் காணப்படு கின்றனர்.

மாதவிடாயாலும் கர்ப்பகாலத்தாலும் மனைவியரின் ஆர்வம் ஒரு வரன்முறையான சட்டதிட்டங்களுக்குக் கட் டுப்பட்டிருப்பதனால் அச் சட்டதிட்டங்களைச் செவ்வனே உணர்ந்துகொள்ளாமல் புருஷன்மார் ஒழுக ஆரம்பிப்பார்க ளாயின் அப்பொழுதுதான் அவர்களுடைய மணவாழ்க் கையில் யாதொருவிதமான இன்பமும் ஸ்திரீகளுக்கு ஏற் படுவதில்லை. பொருத்தமில்லாத் தாலியை இருத்திவைத் துக் கட்டியதேபோல் மனப்பிரிய மில்லாவேளையில் மண மகன் மல்லுக்கு நிற்பானாயின் அவனுடைய மணமகள் எவ்வாறு உடன்படுவாள்? பெண்களைப் பலவந்தப்படுத்தி அவர்களுடைய அபிப்பிராயத்துக்கு நேர்மாறாய் மண வாழ்க்கை புரியுமிடத்து மாப்பிள்ளைகளைக் காட்டினும் பெண்பிள்ளைகளுக்கே அதிகமான தீங்கு விளைகிறதென்று வைத்திய சாஸ்திரமும் முறையிடுகின்றது. தனக் கிஷ்ட மானபோது தன் மனைவி மனமிணங்கி உடன்படா விட் டாலும், அல்லது தன்னுடைய பலவந்தத்துக் கஞ்சி அவள் உட்படும்போது அந்த வாழ்க்கையில் அவள் முழு உத்சாகமும் காட்டாமற் போய்விட்டாலும் உடனே அவர்களுக்குப் பிணக்கு வந்துவிட்டதென்று அவன் எண் ணத் துணிகின்றான். காலமல்லாத காலத்தில் ஒருவன் சாகு படி செய்யப்போய், ஆற்றிலும் ஜலமில்லை யென்றும் வானத்திலும் மழையில்லை யென்றும் அவன் தெய்வத்தின் மீது குறை கூறலாமோ? இஃதேபோல்தா னிருக்கிறது காலமல்லாத காலத்தில் கணவன்மார் மனைவியரிடம் இன்ப சுகத்தை எதிர்பார்ப்பது. பெண்களுக்கு இன்பச் சுவை

உண்டாகக்கூடாத காலத்தில் அவ்வின்பத்தை எதிர்பார்க்கும் கணவன்மார் ஒருபுற மிருக்கட்டும். ஆனால் மற்றுஞ் சிலரோ தம்முடைய மனைவியருக்கு அந்தச் சுவை ஊறுங் காலத்திலும் அவர்களுடன் கலந்து உறவாடுவதற்கு வேண்டிய அறிவும் ஆற்றலும் இல்லாதவராய்க் காணப்படுகின்றனர். பெண்களின் இன்பச்சுவையோ மிகவேகமாக வெளிப்படும்; ஆனால் நாணத்தால் அவர்கள் அதை வெளிக் காட்ட மாட்டார்கள் ; அவ் வேளைகளில் அவர்களுடைய மனோ நிலைமையைக் கணவன்மார் அதிஸூக்ஷ்மமாகக் குறிப் பறிந்து கொள்ளுதல் வேண்டும்.

"முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு,"

என்றார் குறளுடையாரும். ஆடவரின் ஆர்வமோ நினைத்த மாத்திரத்தில் திடுமென உதிக்கக்கூடியது; எழுந்தது போலவே அஃது அதிசீக்கிரத்தில் தணிந்துவிடுதல் கூடும்; ஆடவரின் ஆசை அதிக ஆழமாயில்லாமல் எப்பொழுதும் மேல் நோக்காகவே நிற்கும். ஆனால் பெண்களின் பிரியமோ மாதப்போக்கின் கணக்குப்படி உண்டாகும்; அஃது அதிக ஆழமானதா யிருக்கும்; ஒருமுறை அஃது எழுந்துவிட்டால் இலகுவில் தணிவது கஷ்டமா யிருக்கும். இப்படிப் பட்ட ஆழிய தன்மையுடைய அணங்கியரின் உள்ளெண்ணத்தை உள்ளபடியே உணர்ந்துகொள்ள முடியாத அவசரப்பட்ட ஆடவரெல்லாம் பெண்களின் நிலைமையைப் பிணக்கென்றே குறை கூறுவர்.

மாதக்கணக்குப்படி மாதர்களுக்குண்டாகும் இன்ப வேட்கையின் குறிப்பையறிந்து அதன்படி ஆடவர் ஒழுக ஆரம்பிப்பார்களாயின் அதனால் ஸ்திரீகளுக்கும் அளவுகடந்த ஆனந்தமுண்டாகும். பெண்பாலார் தங்களுக்குள்ள

நாணத்தினால் தமது வேட்கையைக் குறிப்பாக வல்லாமல் வெளிப்படையாகக் காட்ட முன்வர மாட்டார்கள்.

கரத்தலு மாற்றேனிந் நோயை நோய்செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும்.—(குறள்)

அக் குறிப்பறிந்து ஒழுகுதலே ஆடவரின் கடமையாகும்; ஆனால் பெண்பாலார் தங்களுடைய இச்சையைக் குறிப்பாக வெளிப்படுத்தும்போது அதையுணர்ந்து அதற்குத் தக்கவாறு ஆண்பாலார் நடந்துகொள்ளாத பக்ஷத்தில் அப்பொழுது பெண்களுக்குண்டாகும் ஏமாற்றத்துக்கோ ஓர் அளவு சொல்லிமுடியாது; மனைவியின் குறிப்பைக் கணவன் அறிந்துகொள்ளாமற் போய்விடுவானாயின் அப்பொழுது அவள் தன்னுடைய நிலைமையைக் குறித்து மன வருத்தப்படாம லிருப்பதற்கு ஹேதுவில்லை. அப்பொழுது தன்னையும் தன் தலைவிதியையும் நொந்துகொள்வதோடு தன் தலைவனையும் வெறுப்புடன் நோக்க ஆரம்பிக்கிறாள்.

இவ்வுலகிலுள்ள மற்றெல்லா விஷயங்களைக் காட்டினும் குறிப்பறிந் தொழுகுதல் என்னும் விஷயமானது ஸ்திரீகளுக்கிடையில்தான் அத்தியாவசியமாய்க் காணப்படுகின்றது. மனைவியரின் இனிய குறிப்பைக் கண்டு அதன் அர்த்தம் தெரிந்துகொள்ளாத கணவன்மார் அனேகருண்டு; அல்லது அக் குறிப்புண்டாகும் வேளையில் தங்களுக்கு விருப்பமில்லை யென்று சும்மா இருந்துவிடும் புருஷர்களும் சிலருண்டு. மற்றுஞ் சிலரோ மணவாழ்க்கையில் மனைவியருக்கு மனக்களிப் புண்டாகும்படியான விதத்தில் நடந்துகொள்ளத் தெரியாமல் திகைத்து விழிப்பதுண்டு. சில புருஷன்மார் தங்கள் மனைவியரின் முகாரவிந்தத்தில் முத்தமிடுவதற்கும் தெரிந்துகொள்ளாம லிருக்கின்றனரென்றால்

வேறென்ன அவர்களின் பேதைமையைப்பற்றிக் கூறல் வேண்டும்? மனைவியுடன் மங்களகரமான மனமகிழ்வுகளைச் செய்வதால் அவர்களுக்கு எத்துணை உள்ளக்கிளர்ச்சியுண்டாகுமென்பதை உணர்ந்துகொள்ளாத சில புருடர்கள் எப்பொழுதும் தங்கள் இல்லக்கிழத்தியினிடத்தில் எரிந்து விழுந்த முகத்துடனே சிடுசிடுத்துக் கொண்டிருப்பர். "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி, வாலெயி றூறிய நீர்,''என்று வள்ளுவனார் கூறிப்போந்ததற்கிணங்க ஒழுகுவதற்கும் தெரிந்துகொள்ளாமல் ஒரு சிலர் உயிர் வாழ்தல் கூடும். ஸ்திரீகளுடன் புமான்கள் ஸ்தூலதேகச் சமீபம் செய்வதுதான் ஆனந்தமென்றெண்ண வேண்டாம். இருவருடைய உள்ளக்கிளர்ச்சியும் ஒருங்கே ஓங்கியெழும்படியான விதத்தில் அவர்கள் ஆனந்த பரவசத்துக்கான அழகிய சந்துஷ்டிச் சித்தத்தை அடைய முயல்வதில்தான் அளவில்லா இன்பப்பெருக்கு அழுந்திக் கிடக்கின்றது. சில கணவன்மார் தங்களுடைய வீட்டை ஒரு சாப்பாட்டு விடுதியெனக் கருதி அவ்விடத்தில் நடந்து கொள்வதேபோல் இவ்விடத்திலும் நடந்து கொள்வர். எம்முடைய நண்பரொருவர் காலையில் எழுந்திருப்பார்; பல் துலக்கியவுடன் சமையற்காரன் காபியைக் கொண்டு வருவான். அதை அழகுடன் பருகியவுடன் "கேஸ் கட்டை'' அவிழ்த்து வைத்துக்கொள்வார். கட்சிக்காரருடனும் குமாஸ்தாக்களுடனும் பேசிக்கொண் டிருந்து விட்டுப் பத்தரை மணிக்குமேல் ஸ்னானம் செய்யப் போவார். அதன்பின் இலையில் உட்காருவார். சமையலாள் பரிமாறுவான்; சாப்பிட்டு முடிந்தபின் தாம்பூலம்மட்டும் தம் தேவியார் கையால் பெற்றுக்கொள்வார். உடனே கோர்ட்டுக்குச் சென்றுவிடுவார். மாலையில் வலைப்பந்து,

வாசகசாலை முதலியவற்றின் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு இரவு 8-மணிக்கு வீட்டுக்குத் திரும்புவார். உடனே சமையற்காரனால் பரிமாறப்படும் அன்னக்கவளத்தை உருட்டிப் போட்டுக்கொண்டு மீண்டும் மறுநாளைக்கு வேண்டிய கேஸ்களைப் படிப்பார். இரவு மணி 12-அடித்து விடும். அவரது தேவியார் ஓர் அறையில் உறங்குவார். நமது நண்பரோ தம்முடைய சயனத்தில் படுத்துக்கொண்டு நாளைக்கு எத்துணைப் "*பீ சாப்பிடலாமோ" வென்று கனவு கண்டுகொண்டே காலை மணி 6-மட்டும் விழித்து விழித்து உறங்கிப் புரண்டுகொண்டு கிடப்பார். முன்போலவே மறுநாள் வேலையும் ஆரம்பமாகும். இவ்வாறே இருந்து அவர் காலஞ்சென்றுபோனார். இவ்வளவுதான் அவர்கண்ட இல்லறச் சுகம்!

மற்றுஞ் சிலரோ கார்த்திகைப் பிறையைக் கண்டதுபோலும், அத்திமரத்தில் அழகிய பூவைப் பார்த்ததுபோலும் இருண்ட இடத்தில் எப்பொழுதேனும் ஒருமுறை எவருக்கும் தெரியாமல் மணவாழ்க்கையுள் புகுவதுண்டு. கேவலம் உடம்பொடு உடம்பொட்டும் ஸ்தூலச் சேர்க்கைதான் முக்கியமென் றெண்ணிக்கொண்டு அதை மட்டும் அவசரமாக எப்படியோ ஒருவாறு நிறைவேற்றிக்கொள்ளுகின்றனர்; அதுவும் பகலிலேனும், பிரகாசத்திலேனும் உறங்குவது பாபமென் றெண்ணிக்கொண்டு இருளில் இரகசியமாய் இயங்குகின்றனர். மணமுடித்த மனைவியருடன் பகலிலேனும் பிரகாசமான வெளிச்சத்திலேனும் இயற்கையழகினைத் திருஷ்டித்தவாறு இன்பந்துய்த்தல் ஒரு பாபமான காரியமல்ல வென்பதைப் பலர் இன்னும் இந் நாட்டில் தெரிந்து கொண்டார்களில்லை. இப்படிப்பட்ட அறி

* "பீசாப்பிடலாம்" — பீஸ் அகப்படலாம்.

யாமையா லெல்லாம் மனைவியரின் மனமானது எவ்வளவு தூரம் வேதனைப் படுகிறதென்பது அந்த ஸ்திரீ ஜாதியாருக்கே செவ்வனே தெரியும்; இத்தகைய மனோவேதனையால் பெண்பாலாரின் தேககசுகமும் நாளடைவில் அதிகமாகக் கெட்டுப்போதல் கூடும்.

நம் இந்திய நாட்டிலுள்ள ஸ்திரீ புருஷர்களுக்கு இதன் சம்மந்தமான விஷயஞானமே சூன்யமா யிருக்கும் போது, ஆணும் பெண்ணும் பருவமடையா முன்னமே பதுமைகள்போலப் பல்முளையா முன்னும் பால்மணமாறு முன்னும் மிக மிக இளம்பிராயத்தில் கல்யாணம் செய்து வைக்கப்படுகின்றனர்; பால்ய விவாகமென்னும் பதுமைக் கல்யாணத்தால் விளையுந் தீமைகளுக்கோர் அளவில்லை: தானே பழுக்காத கருக்காயைத் தடிகொண்டடித்துக் கனியச்செய்வதேபோல், ஆறும் பிராயமென்னும் அறியாத வயதிலேயே விவாகம்செய்யப்பட்டுப் பத்தாம்பிராயத்தில் பருவமடைந்து பதினோராம் வயதளவில் பாலகனை ஈன்றெடுத்து இருபத்திரண்டாம் வயதில் பாட்டி யென்னும் பட்டத்தையும் பெற்றுவிடுகிறார் நம் நாட்டு இளங் கன்னிகைகள். தாயாகட்டும், தந்தையாகட்டும் முற்றிலும் இளைமைப்பருவத்தில் கருவை யுண்டாக்கும் சக்தியைப் பெறவில்லை; எனவே அவ்விளைமைப் பருவத்தில் எவ்வாற்றானும் கருத்தரித்துக் குழந்தை யுண்டாகுமாயின் அது வலுவற்ற தாயும் அற்ப ஆயுளை யுடையதாயு மிருக்கும். பத்து வயதிலேயே சிறுமிகள் குழந்தைகளைப் பெற்றிருக்கின்றனர். ஆனால் அச் சிறுமிகளுடைய கருப் பையானது மிகவும் சிறிதாகவே யிருக்குமாதலின் அவர்கள் தேகாரோக்கியத்தோடு கூடி நன்றாய் வளர்ந்த குழந்தைகளைப் பெற்றெடுப்பாரென்று நம்புவதற் கிடமில்லை. இம்மட்டுமோ! சாதா

ரணமாக ஏற்பட்டிருக்கும் இயற்கையான காலத்துக்கு முன்னரே கருத்தரித்து விடுவதனுல் தாயின் தேகசுகமும் குன்றி ஆயுளும் குறைகின்றது. இதனுல்தான் கணவன் மனைவியருக்கும் பிஞ்சிலே பழுப்பதுபோல வயதுகுன்றி, அவரால் பெறப்படும் "சோணிப்" பிள்ளைகளுக்கும் பிராண பலம் மிகக் கேவலமாய் விடுகின்றது. ஸ்திரீ புமான்களின் ஜனனேந்திரியக் கருவிக ளெல்லாம் இயற்கையாகவே வளர்ந்து இனிய உறுதியைப் பெறுமுன்னம் இப்படிப் பட்ட இளம்பிராயத்தில் பால்ய விவாகம் நடைபெற்று விடுவதால் அப்படிப்பட்ட ஸ்திரீ புருஷர்களுக் கிடையில் மணவாழ்க்கை யின்பமானது தனது தேஜஸை யிழந்து மழுங்கிக் கழுந்தாய் விடுகின்றது. கணவனும் மனைவியும் கட்டழகுள்ள காளைப்பருவத்தை யடைந்தபின் ஒருவரை யொருவர் நெருங்கினுல் அவர்களுக்கு எவ்வளவு பிரம்மா னந்தம் போன்ற சுகானந்த முண்டாகிறதோ அவ்வளவு ஆனந்தம் பருவமடையாத பால்ய ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாவதில்லை. ஸ்திரீ புருஷ ஸம்ஸர்க்க மென்பதே இன்னதென்றறியாத இளம்பெண்களைப் பள்ளியறைக் கனுப்பிப் பலவந்தமாகப் பருவமடையச்செய்வதைக்காட் டினும் பாதகமான காதகச்செய்கையானது மற்றொன்று மில்லை யென்றே கூறலாம். நம் நாட்டில் நடைபெறும் விவாக முறையையும் காலத்தையும்பற்றி யோசிக்குங்கால் கேவலம் பெண் மாப்பிள்ளைகளுடைய சரீர சம்மந்த இன் பத்துக்காகவே இப்படிப்பட்ட மரப் பாவைத் தாலி கட் டப்படுகிற தென்று யூகிக்க இடமுண்டாகிறது. இதனுல் விவாகம் செய்துகொள்ளும் சிறுவர் சிறுமிகளே இவ்வாறு மனம் போனபடி யெல்லாம் நடக்கிறுர்க ளென்று நாம் கூறத்துணியோம்; ஆனுல் அவ் விவாகங்களைச் செய்து

வைப்போரே மணப் பெண் மாப்பிள்ளைகளுடைய இன்ப சுகத்தை மாத்திரம் முக்கியமாய்க் கருதுகிறார்களென்று தெரிந்துகொள்ளுகிறோம். "...காம, வெட்டையிலே மதி மயங்கிச்சிறுவருக்கு மணம் பேசி விரும்பித் தாலி, கட்டையிலே தொடுத்து நடுக் கட்டையிலே கிடத்து மட்டும் கவலைதானே," என்றார் ஒரு பெரியாரும். இவ்வாறின்றி விவாகமாகும் பெண் மாப்பிள்ளைகளுக்குப் பிறக்கும் சந்ததியின் சுகதுக்கத்தைப்பற்றி அவர்கள் ஒரு விநாடியேனும் கவனித்திருப்பார்களாயின் நாம் இத்துணை வலுவழிந்த தாழ்ந்தவராகப் போயிருக்க மாட்டோம். இப்படிப்பட்ட இழிவான பலாத்கார வாழ்க்கையால் இளம்பெண் மாப்பிள்ளைகளுக்கு இந்திரிய இழிவு உண்டாவதல்லாமல் அவர்களுடைய தேகபலமும் அதிகமாகக் குன்றிப் போகின்றது. இளம்பிராயத்தில் இப்படிப்பட்ட வலிய கூட்டுறவில் ஈடுபட்டவர்களுக்குப் பிறகு இல்லற இன்பமானது யாதொருவிதமான மனோ ரம்மியத்தையும் எள்ளளவும் தரமாட்டாது.

புதிதாக விவாகம் செய்துகொள்ளும் சில மாப்பிள்ளைகள் ஏற்கனவே விலைமாதரிடம் தாம் கற்றுக்கொண்ட சிற்றின்பலீலைகள் சம்மந்தமான சில தகாத முறைகளைத் தம்முடைய மனைவியரிடத்திலும் பயில ஆரம்பிக்கின்றனர்; அப்பொழுது விலைமாதரிடம் தாம் அனுபவித்த அப்படிப்பட்ட ஸாஹஸங்களையெல்லாம் தம் இல்லாளிடத்திலும் எதிர் பார்க்கின்றனர். "இழிபவ ருயர்ந்தோர் மூத்தோர் இளையவர் கழியா நோயால், கழிபவர் யாவரேனும் கண்வலைப்பட்டு நெஞ்சம், அழிபவர் பொருள்கொண் டெள்ளுக் கெண்ணெய்போல் அளந்து காட்டிப், பழிபடு போகம் விற்கும்" பரத்தையரைப்போல் குடும்பஸ்திரீகள்

வெளிவேஷம் பூண்டு நடிக்கத் தெரிந்து கொள்ளாமை யால் அவர்களுடைய விஷயத்தில் பரஸ்திரீயின் பழக்க முள்ள கணவன்மார் பண்புடன் திருப்தி யடைய மாட் டார்; வேசைகள்தாம் சிற்றின்ப லீலைக்கு உரியவரென்று அந்த அறிவிலிகள் கருதுவ துண்டு. குடும்பத்தி லுள்ள விவாக மனைவியர் தம்முடைய உடல் பொருள் ஆவியை யெல்லாம் தமது கணவன்மாருக்காகத் தத்தம் செய்யத் தையாராயிருந்த போதிலும் விலைமகளிரைப்போல் வெளி வேஷத்தில் நடிக்க மாட்டார்கள்; ஆனால் பரத்தையரோ உள்ளன்பு எள்ளளவும் இல்லா விடினும் வெளி நடிப்பில் வெகு ஸாஹஸங்களெல்லாம் செய்து ஆடவரை அதிகம் வசப்படுத்தி மயக்கிவிடுவர். "நாவார வேண்டும் விதம் சொல்லுவார் உனை நான் பிரிந்தால், சாவேனென்றே யிருந் தொக்க வுண்பார்கள் கைதான் வறண்டால், போய்வாரு மென்று நடுத்தலைக்கே குட்டும் பூவைய" ராகிய இப்படிப் பட்ட வேசிகளுக் குரிய வெளி நடிப்பு இல்லாததனால் விவாக மனைவியரை* வெறுப்பது மதியீனரின் தொழி லாகும். விலைமகளிர்க்கு உண்மையான உள்ளன் பில்லை யென்பது ஒவ்வொரு வேசிக்கள்ளனுக்கும் நன்கு தெரிந்த விஷயமே.

---

*விவாக மனைவியர் தம்முடைய தேகத்தையும் மனத்தையும் அழகுபெறச் செய்துகொண்டு தமது கணவன்மாரைத் திருப்தி செய்து மனக்களிப் புண்டாகும்படி செய்வதை விடுத்துத் தம்மு டைய நடை உடை பாவனைகளை யெல்லாம் மிக அநாகரிகமாகச் செய்துகொண்டு தெய்வத்தால் கொடுக்கப்பட்ட தமது இயற்கை அழகையும் தொலைத்துக்கொண்டு பார்ப்போர் அருவருக்கும்படி பாம பாமரத்தன்மையுடன் நடப்பதும் தவறாகும்.

"பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவின வர்,"

என்றார் திருக்குறளிலும். பரத்தையருடன் பால்யமுதல் பழகினவருக்குப் பதிவிரதைகளின் பான்மையைப் பகுத்துணர்ந்துகொள்வது ஒரு சிறிதும் இயலாது. பணம் பறிக்கும் ஒரே நோக்கத்துடன் மட்டுமே ஆண் பிள்ளைகளின் ஐம்புல ஆசைகளையும் அதிகப்படுத்தக்கூடிய ஒரு "ஸாஹஸ பரதநாட்டிய யந்திரம்" போல் விலைமாதர் நடித்து வருகின்றனர். மனிதத்தன்மை ஒருசிறிது மில்லாமல் வெறும் உயிரற்ற யந்திரம்போல் ஸாஹஸ குணத்தால் மட்டும் ஆடவரை ஏமாற்றும் அந்தப் பொதுமகளிரிடம் சகவாசம் செய்துகொண்டிருக்கும், உண்மைக் காதலின் உயரிய பான்மையை யறியாத வேசிக் கள்ளர்களுக்குத் தம் சொந்த மனையாளிடம் எங்ஙனம் காதல் சுரக்கப் போகின்றது?

அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.—(குறள்)

ஆயினும் அப்படிப்பட்ட கணவன்மாரிடம் வாழும்படியான தௌர்ப்பாக்கியத்தை யுடைய மனைவியர் தாமும் வேசியரைப்போல் வெளிநடிப்புச் செய்யாவிடினும் தம்மால் இயன்றமட்டும் தமது புருஷன்மார்களைத் தமது மனோஹரமான செய்கைகளால் தம்வசப்படுத்தப் பிரயத்தனப்படல் வேண்டும். வேசியரின் ஆசை அவர் மனத்தினின்றும் ஒழியும்படி அவருடைய மனைவியர் ஒழுகவேண்டு மல்லாது வெறுப்பினால் கணவன்மாரை ஒதுக்கித்தள்ளுவதுகூடாது; புருஷன்மாருடைய மனத்தில் புளகாங்கிதமான களிப்புண்டாகும்படி புன்சிரிப்புடன் நடப்பதே ஒவ்வொரு ஸ்திரீரத்னத்துக்கும் முக்கிய கடமையாகும். பகல் முழுதும் பல

காலும் தொல்லைப்பட்டு மாலைப்பொழுதில் புருஷர்கள் இல்லஞ் சேரும்போது எதிர்நிற்கும் மனைவியர் எரிந்து விழும் கொள்ளிகளைப்போல் முகத்தை வைத்துக்கொண்டு தம் நாயகனைக் கண்டவுடன் வெடுவெடுப்புடன் சிடுசிடுப்பதுண்டு. இதுதான் இல்லக்கிழத்திக்கு ஏற்காத காரியமாகும். வேசிப் பழக்கமுள்ள புருஷர்களிடம் பழகும் மனைவிமார் வெகு ஜாக்ரதையுடன் அவர்களைத் திருத்த வேண்டும். கேவலம் ஐம்புல ஆசைகளை மட்டும் சிற்றின்பக் காதலென்று தவருகக் கருதி ஏமாந்துபோகும் கணவன்மார் தமது சொந்த மனைவியரைத் தம் வசப்படுத்தி அவர்களிடம் ஆதரவு காட்டுவார்களாயின் அப்பொழுது அந்த உண்மைக்காதல் இன்னதென்பதை நன்குணர்ந்து கொள்ளுவார்கள்.

வேசிக்கள்ளர்களால் எவ்வாறு விவாக மனைவியருக்குச் சுகானந்தமில்லையோ அவ்வாறே பதிவிரதா தர்மத்தை யிழந்த மனைவியராலும் ஸத்புருஷருக்கும் எவ்வகைப் பயனுமில்லை. பிறர் முகம் பாராத ஸ்திரீபுருஷர்களே தமக்குள் காதலின்பத்தின் சகலவிதமான சுத்த சத்திய சுகானந்தத்தையும் முற்றமுற்ற முயங்கப்பெறுவர். சோரத்தனமுள்ள ஆடவரும் பெண்டிரும் ஒருபோதும் தமக்குள் கருத்தொருமித்துக் காத லின்பத்தைக் கனியக் கனிய இவ் வுலகில் அனுபவிக்க மாட்டார். இவ்வாறே இயற்கைக்கு மாருன ஹஸ்தப்பிரயத்தனம் முதலியவற்ருல் இந்திரிய இழிவையடைந்த ஸ்திரீ புருஷர்களும் தமக்குள் சுகமான காதற் கரணங்களை யனுபவித்துக் களிப்படைய மாட்டார்கள். இயற்கைக்கு மாருன துறைகளால் இந்திரிய இழிவையடைவோர் எப்பொழுதும் கோட்டானைப் போலவே சுளித்த முகத்துடன் உத்ஸாகத்தை யிழந்த

உயிர்வாழ்க்கையை உடையவரா யிருப்பார். இயற்கைக்கு முரணான துறைகளில் இறங்கிய சிறுவர்களும் சிறுமிகளும் சந்தோஷமான சம்சார வாழ்க்கைக்கு ஒருபோதும் அருகதையுள்ளவராக ஆகமாட்டார்கள்; இப்படிப்பட்ட ஜன்மத் துரோகிகளுக்கு இயற்கையான இன்ப வழிகளிலும் சிறிதும் கவனம் செல்லாது.

இந்த இந்திய நாட்டில் ஸ்திரீகள் புருஷர்களுக்குத் தாழ்ந்தவர்களென்னும் ஒரு தவறான எண்ணமானது மனிதர்களின் மனத்தில் நெடுநாளாய்க் குடிகொண்டிருக்கிறது. கணவனும் மனைவியும் சமமான அந்தஸ்தை யுடையவரென்னும் சமரச எண்ணமானது இன்னும் இத்தேசத்தில் உறுதி பெறவில்லை. பெண்களெல்லாம் ஆண்களின்கீழ் அடிமைகளே யென்று ஆடவரெல்லாம் கருதியிருப்பதால் அவர்கள் தங்களுடைய ஆவலான வேளைகளில் மட்டும் தமது மனைவியர் மணவாழ்க்கைக்கு ஆயத்தமா யிருக்க வேண்டு மென்று எண்ணுகிறார்களே யல்லாமல் அந்த மாதரசிகளுக்கும் அவ்விஷயத்தில் சுதந்தரம் உண்டென்றும், அவர்கள் அந்தக் கூட்டுறவுக்கு ஆயத்தமா யில்லாத போது அவர்களை நிர்ப்பந்தம் செய்யக்கூடா தென்றும், அவர்களுடைய இன்பச் சுவை அதிகரிக்கும் வேளையில் ஆடவரும் அதற்கு ஆயத்தமா யிருக்கவேண்டு மென்றும் ஒரு சிறிதும் எண்ணுவ தில்லை. ஆனால் பெண் கல்வியின் முதிர்ச்சியால் அவர்களுடைய அந்தஸ்து உயர்த்தப்படும் போது மற்றெல்லாக் காரியங்களிலும் அவர்களுக்குச் சுதந்தரம் கிடைப்பதே போல் காதற் கரண காரியங்களிலும் மேன்மையும் சமத்துவமும் கிடைக்குமென்பது திண்ணம். மனைவியரின் மனத்திருப்திக்காகத் தம்மாலான தியாகங்களை யெல்லாம் செய்வதாகக் கூறும் கணவன்மார் அப்

பெண்களின் இன்பகாலம் இன்னதென்று தெரிந்துகொள்ளப் பிரயத்தனப் படுவதுமில்லை; அப்படிப்பட்ட வேளையில் அவர்களுடைய ஆர்வக்குறிப்பை யறிந்து அதன்படி அழகிய இன்பமும் அளிக்க முன்வருவதில்லை.

இவ்வுலகிலுள்ள எல்லா விஷயங்களுக்குரிய காலாகாலங்களின் கணக்கையும் மனிதர்கள் கண்டுபிடித்து விடுகின்றனர்; ஆனால் ஸ்திரீகளின் இன்பச்சுவையின் ஜுவாலையானது சுடர்விட் டெரியக்கூடிய காலம் இன்னதென்பதை மட்டும் அவர்கள் கண்டுபிடிக்க முயல்வதில்லை. மனைவியருக்கு மனமில்லாத வேளைகளில் கணவன்மார் செய்யும் கட்டாயத்தின் பயனாக உண்டாகும் விவாக சுகமானது ஒருதலைக் காமமாகப் போய்விடுவதல்லாமல், ஸ்திரீகளுக்கு விருப்பமுண்டாகும் வேளை தெரிந்து அதற்கேற்றவாறு முயங்காமற் போவதனால் ஏமாற்றமடைந்து ஆவல் தடுமாறிப் போன அவர்களுடைய மனமானது வேதனைப் பட்டு மணமகனையும் வெறுக்கத் துணிகின்றது.

ஏ நூதன விவாகம் செய்துகொண்ட புது மாப்பிள்ளைகாள்! இல்லற இன்ப சம்மந்தமான காரியங்களில் உங்களுக்கு உம் மனைவியர்மீது எவ்வளவு ஆதிக்யமுண்டோ அவ்வளவு அதிகமான ஆதிக்யம் அவர்களுக்கும் நும்மீது உண்டென்பதை நீங்கள் உறுதியாக நம்பி அதன்படி அழகுபெற நடந்துகொள்வீர்களாக. அறிவுள்ள ஆடவர்காள்! நும்பெண்டிரின் பாத்தியதை இன்னதென்பதையும், அவர்கள் தங்களின் ஆர்வந் தணிந்து பெருகுவதான வகையில் உங்களின் அவசரமற்ற பொறுமையும், கிரியாம்சையும் இருக்கவேண்டு மென்பதையும் செவ்வனே உணர்ந்து கொள்வீர்களாக.

அத்தியாயம்—4

பெண்களின் பிரியகாலம்

காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.—(குறள்)

ஆடவர்மீது பெண்டிருக்குப் பிரியம் ஜனிக்கும் காலத்தை யறிந்து அதற்கேற்றவாறு கணவன்மார் இன்பப்பெருக்கை இழைக்கவல்ல மணவாழ்க்கையைக் கொடுப்பார்க ளாயின் அப்பொழுது ஸ்திரீ புருஷர் இருவருக்கும் இணையற்ற இன்பசுகம் தேனினும் மேலதிகமாய் ஊறுதல் கூடுமென்று முன் அத்தியாயத்தில் யாம் கூறினோம். ஆனால் பெண்பாலாருக்குப் பிரியம் விளையக்கூடிய காலம் என்ப தொன்றில்லை என்று சில ஆண்கள் வாதித்தல் கூடும்; ஆயினும் ஆடவரின் தேகத்துடன் ஸ்பரிசிக்க வேண்டு மென்னும் ஆர்வமானது ஒவ்வொரு பெண் பிள்ளைக்கும் ஒவ்வொரு காலத்தில் உதிப்ப தென்பது வாஸ்தவந்தா னென்று பெரும்பான்மையான ஸ்திரீகளும் புருஷர்களுமாகிய வைத்திய நிபுணர்கள் ஏகோபித்து ஒத்துக்கொண் டிருக்கின்றனர். ஸ்திரீகளுக்கு இப்படிப்பட்ட வேட்கையானது இயற்கை யாகவே உண்டாவதுதான் அவர்களுடைய இயல்பான ஆரோக்கியமுள்ள சரீரசுகத்தைக் காண்பிக்கின்றது; இதுதான் இறைவனால் ஸ்திரீகளிடம் அருமையாக அமைக்கப்பட்டிருக்கும் ஒரு சிறந்த சக்தியாகும். ஆண்மாரி யல்லாத அழகிய பெண்தன்

MAR 1926

மையையுடைய ஸ்திரீ ரத்னங்களுக் கெல்லாம் இப்படிப் பட்ட இச்சாகாலம் ஒன்று இயற்கையாகவே இருப்பது தான் இவர்களுடைய மேன்மையை இனியில்லாவண்ணம் உயர்த்திக் காட்டுகின்றது. ஆனால் புருஷர்களை விழையும் படியான இச்சையானது எல்லாப் பெண்களுக்கும் இயற்கையாகவே உற்பத்தியாவதில்லை யென்றும், பிற புருஷர்களிடம் தங்களுடைய மானத்தை விற்கும் வேசியரிடமே இது சாதாரணமாய் ஜனிக்கக்கூடு மென்றும் சிலர் தவறுகத் தர்க்கிப்பதுண்டு. விவாகமான ஸ்திரீகளும், அவர்களைக்காட்டினும் அதிகமாகக் கல்யாணமாகாத கன்னிகைகளும் ஒருபோதும் தங்களுடைய வேட்கையை வெளிக் காட்ட மாட்டார்க ளென்பது வாஸ்தவந்தான். தங்களுடைய உயிர்க்கிறுதி வருவதாயினும் தமக்கு ஆடவர்மீதுண்டாகும் ஆர்வத்தின் காலம் இன்னதென்று வெளிப் படையாக ஒருவரும் ஒத்துக்கொள்ள மாட்டார். "பெண்ணிற் பெண்மையுடைத் தென்ப கண்ணிற்,காமநோய் சொல்லி யிரவு," என்றார் வள்ளுவனாரும். ஆனால் பசியுண்டாகும்போது ஆகாரத்தை விரும்புவதும், நீர்வேட்கையுண்டாகும் போது தண்ணீரை நாடுவதும் ஒவ்வொரு பெண்பிள்ளைக்கும் எவ்வளவு சகஜமாயிருக்கிறதோ அவ்வளவு சகஜமாகத்தான் காணப்படுகிறது அவர்களுக் குண்டாகும் ஆடவரை அன்புடன் அணுகவேண்டு மென்னும் அவாவும்.

ஆனால் இயற்கையாகவே மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு என்னும் நால்வகை நற்குணங்களும் நம் இந்திய மகளிரிடம் அமைந்து கிடப்பதால் அவர்கள் தங்களுக்குண்டாகும் பிரிய காலம் இன்னதென்பதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ளத் துணிவதில்லை; இவ்வாறு ஒத்துக்கொள்வதை

ஒரு மகா லஜ்ஜையான காரியமென்று எல்லாக் கன்னிகை களும் சாதாரணமாய்க் கருதுவதுண்டு. இல்லறவாழ்க்கைக்கு இன்றியமையாததெனக் கருதப்படும் இன்ப சாஸ்திரத்தையே ஒரு கேவலமான விஷயமென்று கற்ருேரும் மற்ருேரும் கருதியிருக்கும்போது ஒன்று மறியா அபலைகளான ஸ்திரீகள் மட்டும் எவ்வாறு ஆடவர்மீது தங்களுக்குண்டாகும் விவாக வேட்கையை வெளிக்காட்டுவர்? இந்திய நாட்டிலுள்ள ஸ்திரீகளுள் பெரும்பான்மையோர் தங்களுடைய ஜீவனேபாயத்துக்கு வேண்டிய காரியங்களிலேயே தங்கள் புருஷன்மார்மீது முற்றிலும் சார்ந்திருப்பதனுல் அவர்கள் தங்களுடைய இச்சாகால வேட்கையையும் வெளிப்படுத்தாமல் தாங்கள் ஆண்களைக் காட்டினும் தாழ்ந்தவரென்னும் எண்ணத்தினுல் அதை அழுத்திவைக்கப் பிரயத்தனப் படுகின்றனர். எல்லாவிதமான லௌகிக வைதிக காரியங்களிலும் புருஷர்களைக்காட்டினும் பெண்கள் தாழ்ந்தவ ரென்னும் தவருன எண்ணமானது அப்பெண்களின் மனத்திலும் நெடுங்காலமாய் நன்கு பதிந்துகிடப்பதனுல் அவர்களுடைய இல்லற இன்பத்துக்கும் ஒருவித சுதந்தரம் உண்டோ வென்று சந்தேகங்கொண்டு தங்களுக்குண்டாகும் வேட்கைத் தீயை முழுதும் மறைத்து வைத்து மௌனமா யிருந்துவிடுகின்றனர்.

பொதுவாக நோக்குமிடத்து, குளிர் தேசங்களிலுள்ள மாதர்களைக் காட்டினும் நம் இந்தியாவைப்போன்ற உஷ்ணப் பிரதேசங்களி லுள்ள ஸ்திரீகளுக்கு ஆடவர் மீதுண்டாகும் ஆர்வமானது அதிகமா யிருப்பது சகஜம் தானே? குளிர் தேசங்களிலுள்ள சிறுமிகளுக்கு அவர்களுடைய பருவமடையக்கூடிய (ருதுவாகவேண்டிய) காலமானது சுமார் 16-வது பிராயம் வரையில் பிந்திவிடுவதால்

அவர்களுக்கு இப்படிப்பட்ட இச்சையானது இயற்கையாகவே எழுமுன் முப்பது பிராயத்துக்கு மேல் வயது சென்றுவிடுதல் கூடும்; ஆனால் நம் இந்திய நாட்டிலோ இத்தேசத்தின் சீதோஷ்ண நிலைமையால் பெண்கள் அதிபால்யத்தில் பருவமடைந்து விடுகின்றனர்; பத்தாம் பிராயம் முதலே இவர்கள் பருவமடையத் தொடங்குவதால் அதிசீக்கிரம் அவர்களுக்கு ஆடவரின் அவாவும் அதிகரிக்கின்றது. இயற்கையாகவே இந்திய மாதர்களுக்கு இப்படிப்பட்ட இச்சையானது அதிபால்யத்திலேயே அதிகம் உற்பத்தியாய் விடுகின்றதென்று வைத்திய நிபுணர்களெல்லாம் அபிப்பிராயப் படுகின்றனர்; இது போதாதென்று இவர்களுடைய இச்சையானது எழுவதற்கு நெடுங்காலமுன்னர்ப் பல்முளைக்கும் பருவத்திலேயே பால்ய விவாகமும் செய்துவிடுகின்றனர். இந்தியாவிலுள்ள பல குடும்பங்களில்-படித்தவர்களும் பணக்காரர்களுமாகிய பல அறிவாளிகள் உட்பட—எண்ணிறந்த மனிதர்கள் தங்கள் வீட்டுச் சிறுமிகளுக்கு 4-வது, 5-வது பிராயமுதலே பதுமைத்தாலி கட்டிவிடுகின்றனர்; இன்னும் சில மனிதர்கள் பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் பல்முளைக்கும் "பசளை"களுக்கும் தாலிகட்டிவிடுகின்றனர். இப்படிப்பட்ட தாய்தந்தையருக்கிருக்கும் மதியீனமானது இம்மட்டுந்தானென்றா நினைக்கின்றீர்கள்? இதில் இன்னும் அதிகமான அதிசயமுமுண்டு: * எட்டு வயதுள்ள சிறுமியையும் பத்து வயதுள்ள பால்யனையும் மணவாழ்க்கையில் பூட்டி இயற்கைப் பிராயத்துக்கு

* ஆண் பெண்களுக்கு 25-வயதாகு முன் விவாகம் செய்யக்கூடாதென்பது வைத்திய சாஸ்திரக் கொள்கை. எக்காரணத்தை முன்னிட்டும ஆணுக்கு 22-வயதாகுமுன்னும் பெண்ணுக்கு 16-வயதாகுமுன்னும் விவாகம் செய்வது அறவே கூடாது.

முன்னரே எளிதில் பருவமடையும்படி செய்கின்றனர்; இப்படிப்பட்ட அஞசாரமான அறியாத்தன்மையால் அதிசீக்கிரம் பருவத்துக்கு முன்பே தங்களுடைய அரிய புத்திரிகளைப் பெரிய மனுஷியாக்கி விடுகின்றனர். இல்லற இன்பம் இப்படிப்பட்டதென்னும் உணர்ச்சியானது எள்ளளவும் இயற்கையாய் முளைக்காமுன்னம் நாம் நம்முடைய "காம, வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு மணம் பேசி விரும்பித் தாலி" கட்டிவிடுவதால் நம் வீட்டுக் குழந்தைகளைப் "பிஞ்சிலே பழுக்கச்செய்து" பழம்பிள்ளைத் தாய்ச்சிகளாகப் பண்ணி விடுகிறோம். இந்தப் பாதகண்டத்தில் எத்தனைச் சிறுமிகள் தம்முடைய பத்தாம்பிராயத்தில் பாலகனை ஈன்றெடுத்து விடுகின்றனரென்று எண்ணுகிறீர்கள்? இதற்கெல்லாம் காரணம் இச்சிறுமிகளின் பெற்றோரும் உற்றோரு மல்லவா?

இவ்வாறு பெண்களின் இயற்கையான இன்ப வேட்கையானது செவ்வனே முளைத்தெழுமுன் அவர்களை அதிபால்யத்தில் மணவாழ்க்கையில் மாட்டிவிடுவதால் அவர்களின் சம்மதத்துடனோ அல்லது சம்மதமில்லாமலோ அவர்களுடைய கணவன்மார் இல்லற ஒழுங்கை நடாத்திவரும்போது நாளடைவில் அப்பெண்களுக் குண்டாகக் கூடிய இன்ப சுகமானது இல்லாமலே ஒழிந்துவிடுகின்றது. நாம் முன்னமே கூறியதேபோல் எவ்வாறு ஆண்களுக்கு நினைத்த மாத்திரத்தில் பெண்களின்மீது காதலுண்டாகிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் வேண்டும்போதெல்லாம் ஸ்திரீகளுக்குப் புருஷர்கள்மீது விருப்ப முண்டாவதில்லை. ஆதலின் ஐந்து, ஆறு வயதிலேயே விவாகம் செய்து ஏழு, எட்டாம் பிராயத்தில் பள்ளியறைக் கனுப்பிப் பலாத்கார வாழ்க்கைக்குத் தாய்தந்தையர் உடந்தையா யிருப்பதால்

ஒருவிதமான அப்பிரயோஜனம் மட்டும் இல்லாமற் போக வில்லை: ஸ்திரீ ரத்னங்களுக்கு இறைவனால் இயற்கையாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இன்ப நுகர்ச்சிக்குரிய இச்சையானது இப்படிப்பட்ட பால்ய அகாலப் பழக்கத்தால் வேருடன் கெல்லப்பட்டுப் போய்விடுகின்றது. புருஷர்களின் பலாத்கார வாழ்க்கைக்குப் பெண்டுகளை ஓர் யந்திரமாகச் செய்து விடுகிறோமே யல்லாமல் அவர்களுக்கும் ஆண்டவனால் கொடுக்கப்பட்டிருக்கும் ஆர்வமென்ப தொன்று உண்டென்பதை ஒருவரும் சற்றும் கவனிப்பதில்லை; ஆதலின் தங்களுடைய மணவாழ்க்கை யின்பத்தில் தங்கள் மனைவிமார் சுகானந்தத்தைப் பெறுவதில்லை யென்று பல புருஷர்கள் குறை சொல்வதன் காரணம் அப் பெண்களுடைய இயற்கையான இச்சையை எல்லோரும் சேர்ந்து இல்லாமல் செய்துவிடுவதுதான். ஆண்களின் அடாத செய்கையாலேயே பெண்களின் பிரியமெல்லாம் ஒழிந்து போகின்றது. இதனாலேயே காலக்கிரமத்தில் ஸ்திரீகளின் சுகானந்தமும் குறைந்து அவர்களுடைய தேகபலத்துடன் தெள்ளிய ஆவியும் குன்றிப்போகின்றது.

ஆதலின் இந்திய மாதர்களிடம் ஏதேனும் இயற்கையான பிரிய முண்டோ வென்று கண்டுபிடிப்பது கஷ்டசாத்தியமான காரியமாகக் காணப்படுகின்றது; எதுவரையில் புருஷர்களின் க்ஷணச்சித்த ஆர்வத்துக்கு ஸ்திரீகள் இணங்கவேண்டுவதைத் தவிர்த்து வேறொரு சுதந்தரமும் அவர்களுக்கில்லை யென்று தவறாக நம்புகிறோமோ அதுவரையில் அவர்களுடைய "பிரிய காலம்" எப்பொழுது இயற்கையாக உதயமாகுமென்று யாராலும் சொல்வது முடியாது. ஆனால் நம் பெண்கள் தம் கணவன்மாரை விட்டுச் சிலகாலம் தனித்திருக்க நேருமாயின் அப்பொழுது

அவர்களுடைய இச்சாகாலத்தை ஒருவாறு கண்டுபிடிக்கலாம். கணவன்மாரை விட்டுப் பிரிந்திருக்கும் மனைவியருக்கு எப்பொழுதும் புருஷன்மீதே நாட்ட மிருப்பதோடு சில வேளைகளில் அவருடன் மணவாழ்க்கை புரியவேண்டுமென்னும் உள்ளக்கிளர்ச்சியும் ஓங்கி எழுவதுண்டு; இதுதான் அவர்களுடைய இயற்கையான இச்சாகாலத்தைக் குறிக்கும்; இப்படிப்பட்ட இச்சையானது எல்லா மாதர்களுக்கும் பிரிவுகாலங்களில் இயற்கையாகவே தோன்றக் கூடும். இப்படிப்பட்ட ஸ்திரீகளின் இச்சையிலிருந்து ஒருவாறு எல்லாப் பெண்களின் "பிரிய காலத்தையும்" கணக்கிட்டுச் சொல்லலாம். ஆனால் இப்படிப்பட்ட கணக்கைக் கண்டுபிடிப்பதில் பற்பல விதமான வைத்திய நிபுணர்கள் பற்பல விதமான கணக்குச் சொல்கின்றனர்; ஆயினும் பெரும்பான்மையான நிபுணர்கள் பெரும்பாகத்தில் ஒத்திருக்கின்றனர்; இவர்களுடைய அபிப்பிராயப்படி பெண்களின் பிரியமானது பொதுவாக அவர்களின் மாத வெளிப்பாட்டின் காலத்துக்குச் சற்று முன்னும், அந்த உதிரப் போக்கு நின்று ஒருவாரத்துக்குப் பின்னும் உச்சஸ்தானத்தை யடைகின்றது. பெண்களின் மாதப் போக்கின் காலமாகிய 28-தினங்கொண்ட ஒரு சாந்திர மாதத்தில் இரண்டுமுறை அவர்களுடைய வேட்கையானது உச்சமடைகிறது. அந்த உதிரக் கழிவுக்குச் சற்று முன் ஒருமுறையும், அது நின்று சுமார் ஒருவாரத்துக்குப் பின் மற்றொரு முறையுமாகப் பதினான்கு நாளைக்கு ஒருதடவை விகிதம் பெண்களின் பிரியகாலம் உதயமாகின்றது.

ஆனால் இக்காலத்தில் பெண்களின் மனோ நிலைமையை மாறுபடுத்துவதற்கு எண்ணத்தொலையாத பல காரணங்களுண்டு : பால்ய விவாகத்தினாலும், ஸ்திரீ புருஷர்கள் எப்

பொழுதும் இணைபிரியாம லிருப்பதனாலும், சிற்றின்ப சம்மந்தமான நூல்களைப் படிப்பதனாலும், அப்படிப்பட்ட நாடகங்களையும் நகரும் படங்களையும் நடிக்கப் பார்ப்பதனாலும், பெண்கள் தங்களுக்குப் பிரியமான உற்ற நண்பர்களுடன் அடிக்கடி கூடி உறவாடலாலும், இன்னும் மனோரம்மியமான மற்றும் பல ஐம்புல ஆசைகளையும் அனுபவிப்பதாலும், இவையன்றி இன்னும் பல இதர காரணங்களாலும் பெண்களின் பிரிய காலமானது மாறுபட்டுப் போதல் கூடும். ஆயினும் பிற காரணங்க ளொன்றும் இல்லாமற் போகும் வேளையில் சராசரி பதினான்கு நாளைக்கொருமுறை தான் ஸ்திரீகளின் இச்சையானது சாதாரணமாய் உச்சஸ்தானத்தையடைகின்றது. சாதாரணமான ஸ்திரீகளுக்கு 28-தினத்துக் கொருமுறையே மாதவெளிப்பாடு தோன்றுவதுண்டு; ஆனால் அந்த மாதப் போக்குக் கணக்கும், அதன் சம்மந்தமான இச்சாகாலக் கணக்கும் ஸ்திரீகளின் அங்க அமைப்பையும் அவரவர்களின் தேகஸ்திதியையும் பெரும்பாலும் சார்ந்ததா யிருக்கின்றன. ஆனால் சில மனிதர்கள் புறவுடைக் காலமே எல்லாப் பெண்களின் பிரியத்தையும் அதிகப்படுத்தும் காலமென்று தவறாக எண்ணியிருக்கின்றனர்; இது சரியான அபிப்பிராய மாகமாட்டாது. ஆடவரை அணுகவேண்டு மென்னும் அவாவும், அனுவசியமான உதிரம் வெளிப்படுங் காலமாகிய மாதப் போக்கும் ஒன்றாக மாட்டா. பெண்களின் மாதக்கழிவின் மர்மமே இன்னதுதா னென்று தீர்க்கமாக விளங்காமல் பெரும் பெரும் வைத்திய நிபுணர்களெல்லாம் இன்னும் அபிப்பிராய பேதத்துடன் அலைந்து திரியும்போது அந்த உதிரப்போக்குத்தான் எல்லா ஸ்திரீகளின் இச்சாகால மென்று முடிவு கட்டுவதானது தப்பான அபிப்பிராயமே

யாகும். சில ஸ்திரீகளுக்கு மூன்று வாரத்துக் கொருமுறை மாதக்கழிவு தோன்றுவதுண்டு; மற்றுஞ்சிலருக்கு ஐந்து வாரத்துக் கொருமுறை அந்த உதிரம் வெளியாவதுண்டு. ஆனால் திடமான தேகாரோக்கியத்தை யுடைய பெரும் பான்மையான சாதாரண ஸ்திரீகளுக்கு இருபத்தெட்டு நாளைக்கு ஒரு முறையே இப்படிப்பட்ட மாதவெளிப்பாடு உண்டாகும்.

இருபத்தெட்டு நாளைக்கு ஒரு முறை மாத வெளிப் பாடு உண்டாகக்கூடிய ஸ்திரீகளே பெரும்பான்மையோ ராயிருத்தலினால் அவர்களுடைய பிரியகால விதியையே யாம் ஈண்டுப் பரிசீலனை செய்வோம்: இவர்களுக்கு மாதப் போக்கு ஆரம்பமாக இரண்டு அல்லது மூன்றுதினம் முன் னர் ஓர் அவா உண்டாகும்; பிறகு அந்தப் போக்கு முடி ந்து எட்டு அல்லது ஒன்பது தினம் சென்று இரண்டு அல் லது மூன்றுதினம் வரை மற்றொரு முறை அப்படிப்பட்ட ஆர்வம் உதயமாகிறது. மாதக் கழிவு முடிந்து ஒரு வாரம் அல்லது ஒன்பது நாள் மட்டும் அவர்களுடைய மனோ நிலைமையானது ஒரேவிதமா யிருப்பது வழக்கம் ; பிறகு இரண்டு மூன்று தினம் வரையில் அவர்களுடைய ஆர்வ மானது அதிகம் சுடர்விட்டெரியும். எனவே பதினான்கு தினத்துக் கொருமுறை அவர்களுடைய இன்பச் சுவை யானது எழுந்து நிற்கும்; மற்றைக்காலத்தில் அது சாதா ரணமா யிருக்கும். 28-தினங்கொண்ட ஒரு சாந்திர மாதக் கணக்கில் இரண்டு முறை ஸ்திரீகளின் வேட்கையானது வெளிப்பட் டெரியும்போது அந்த இரண்டு காலங்களுள் ஒரு காலமானது புறவுடை யாவதற்குச் சற்று முன்னே உதயமாகின்றது. ஆனால் ஒருமுறை ஒரு பெண்ணுக்குப் பிரியகாலம் ஏற்படும்போது அஃது எத்தனை நாள்மட்டும்

நீடித்திருக்குமென்று நிச்சயமாய்ச் சொல்வது முடியாது; இப்படிப்பட்ட பிரிய காலத்தின் நீடிப்பானது ஸ்திரீகளின் பொதுவான தேகசுகத்தையும் அவர்களுக்கு அத் தருணத்தி லிருக்கும் உடற்கூற்றுத் தாருட்ய வன்மையையும் சார்ந்ததா யிருக்கும். திடதேகமுள்ள உத்ஸாக ஸ்திரீகள் பலருக்கு மூன்றுநாள்மட்டும் ஒரே தன்மையதாகிய ஓயாத இன்பம் உட்புகுந்து நிரம்பியிருக்கும்; ஆனால் மற்றுஞ் சில மாதர்களுக்கு, அவர்களுடைய தேகஸ்திதிக்கும் மனோநிலைமைக்கும் தக்கவாறு, சிலமணி நேரம்தான் அவர்களுடைய இன்பச் சுவை எழுந்து நிற்கும். அதிகமான உழைப்பினால் அயர்ச்சியடைந்த தேகத்தையுடைய ஸ்திரீகளுக்கும் இவ்வாறே சில மணிநேரந்தான் இவ்வின்பம் இருத்தல்கூடும். அதிமாக உழைத்துக் *கூலிவேலை செய்து வரும் பெண்பிள்ளைகளுக்கு அவர்களுடைய தேக அயர்ச்சியாலும் உத்ஸாகக் குறைவாலும் எப்பொழுதும் இச்சையென்பதே எழாதவர்போலவே மனமானது மாறி விடலாம். தேகசுகமும் மனோ உற்சாகமும் இன்பவேட்கைக்கு இன்றியமையாததால் அவையிரண்டுக்கும் ஆபத்து நேருங்கால் அவர்களுடைய ஆர்வமும் அழிந்துபோகின்றது.

இவ்வுலகிலுள்ள எல்லா மாதர்களுக்கும் ஒரேவிதமான இச்சைதான் உண்டாகக் கூடுமென்று ஒருவராலும் உறுத்திச் சொல்லல் முடியாது. மனிதர்களுடைய வெளித்தோற்றமும் உட்குணாதிசயமும் எவ்வாறு ஆளுக்காள் வேறுபட்டுக் காணப்படுகின்றனவோ அவ்வாறே அவர்க

* ஆடவரைப்போல் தேகத்தால் உழைத்துவரும் பெண்கள் தங்களுடைய தேஜஸையும் இழந்து பெண் தன்மையிலும் குறைந்துவிடுகின்றனர். அடுப்பங்கரையிலிருந்து சமையல் வேலை செய்வதாலும் பெண்களின் மாமை நிறம் குன்றக்கூடும்.

ளுடைய பிரியகாலத்தின் வேகக்கணக்கும் ஒவ்வொரு மாதுக்கும் வேறுபட்டதாகவே காணப்படும். சாதாரண மாய் எல்லா மாதர்களுக்கும் மாதம் இரு முறை இச்சா கால எழுச்சி உண்டாகக் கூடுமாயினும் சில ஸ்திரீகளுக்கு மாதம் ஒரு முறையே அப்படிப்பட்ட உணர்ச்சி உதய மாகும்: சில பெண்களுக்கு மாத வெளிப்பாட்டுக்கு முன் னுண்டாகக் கூடிய வேட்கைமட்டும் எழும்; மற்றுஞ் சிலருக்கு அவ்வெளிப்பாட்டுக்கு மறு வாரம் உண்டாக வேண்டிய பிரியம் மட்டும் காணப்படும். இப்படிப்பட்ட ஸ்திரீகளைக்காட்டினும் இன்னும் ஒருவகையான வேறுவித மாதர்களு முண்டு; அவர்களுக்கு நிச்சயமாக மாதவெளிப் பாடு நிகழ்ந்துகொண்டிருக்கும் காலத்தில்தான் மணவாழ் க்கை யடையவேண்டு மென்னும் வேட்கையானது அளவு கடந்து ஜுவலிக்கும்; ஆனால் புறவுடைக்காலத்தில் மாத ரை நெருங்கக் கூடாதென்று ஒவ்வொரு மதவாதியும் கூறிவருகின்றனர். இது வாஸ்தவந்தான். மாதவெளியீட் டின்போது மணவாழ்க்கை யடைந்தால் மணமகனுக்கும் மணமகளுக்கும் பலவிதமான எண்ணத்தொலையாத நோய் கள் உண்டாக ஏதுவுண்டாகுமென்று வைத்திய சாஸ்திர நிபுணர்களெல்லாம் ஒருங்கே கூறுகின்றனர். மாதப்போக் கின் உதிரம் வெளியாக வெளியாக அவர்களுக்குள்ள அபூர்வ உணர்ச்சியும் தானே தணிந்துவிடும்.

இப்பொழுதுள்ள தற்காலத்திய குடும்பவாழ்க்கை யில் பெண்களுடைய இன்பச் சுவையைத் தடைசெய் வதற்கு அனேகவிதமான இடையூறுகளெல்லாம் நேரிட் டிருப்பதேபோல் அவர்களுடைய இச்சையை அனுவசிய மாய் அடிக்கடி எழுப்புவதற்கு வேண்டிய பற்பலவிதமான நூதனக் காரணங்களும் உண்டாகாமற் போகவில்லை. தற்

போதுள்ள நாகரிகத்தில் சில ஸ்திரீகளுக்கு மாதம் முழுதும் ஒருநாள் கூட இத்தகையஇச்சையில்லாமல் பொழுது போவதில்லை. அல்லும் பகலும் அனவரதமும் பெண்பித்தாலேயே பெருமயக்கங்கொண்டு பேயாய்த் திரியும் பலவிடப் புருஷர்கள் இந்நாட்டில் காணப்படுவது போலவே புருஷ இச்சையால் பித்தேறிய சில ஸ்திரீகளும் இங்கில்லாமற் போகவில்லை. எப்பொழுதும் புருஷர்களுடன் நெருங்கிப் பழகுவதாலும், நாடக நடிப்பு முதலிய கேளிக்கைகளை ஸதா விடாமற் பார்ப்பதாலும், தீய நாவல்கள் முதலிய விகார நூல்களைப் படிப்பதாலும் ஸ்திரீகளுக்கு அடிக்கடி இப்படிப்பட்ட இச்சையானது சுடர்விட்டெரியக்கூடும். இப்படிப்பட்ட வேளைகளில் பதினன்கு நாளைக் கொருதரம் பெண்களின் ஆர்வம் பெருகக்கூடும் என்னும் விதியானது மாறுபா டடையவுங்கூடும். ஆயினும் மேற்கூறிய வண்ணமாய் இயற்கைக்கு மாருன செயற்கை வழியாலெல்லாம் பெண்களின் நிலைமையானது பாதிக்கப்படாமலிருக்குமாயின் சாதாரணமான தேகஸ்திதியை யுடைய மகளிர்க்கெல்லாம் மாதம் இருமுறைதான் (அஃதாவது 14-தினத்துக்கொருமுறையே) இன்பச்சுவை யென்பது மூண்டெழுதல் கூடும்; ஆதலின் அவரவருமே தத்தமுடைய மனைவியரின் உண்மை நிலையைக் கண்டறிதல் வேண்டும்; இரண்டு மாதக்கழிவுகளுக் கிடையில் எத்தனை முறை தமது மனையாட்டிக்கு இன்ப சுகத்துக்குரிய இச்சையானது என்ன கணக்கின்படி எழுகிறதென்று கவனித்துவரல்வேண்டும். இப்படிப்பட்ட பதினன்கு நாட் கணக்குப்படி அவளுடைய ஆர்வமானது மூண்டெழாவிடின் வேறு என்னவிதமான கணக்கின் பிரகாரம் அந்த இச்சை எழுந்தோங்குகிறதென்று கண்டுபிடித்தல் வேண்டும். இப்

படிப்பட்ட இரகசியத்தைக் கண்டுபிடிப்பதில்தான் ஸ்திரீ புருஷ வாழ்க்கையின் இன்பசுகமானது முழுதும் சார்ந்திருக்கிறது. பெண்மணிகளின் சரியான இன்பகால அளவைக் கணவன்மார் கண்டுபிடித்து விடுவார்களாயின் அவர்களுக் கிடையிலுள்ள பிரணய கலகமானது பெரும்பாலும் ஒழிந்துபோகும். மனைவியரின் இச்சாகாலக் கணக்கைக் கண்டுபிடித்து அதன்படி கணவன்மார் ஒழுக ஆரம்பிப்பார்களாயின் அப்பொழுதுதான் அவர்களுடைய இல்வாழ்க்கையானது இன்பவாழ்க்கையாய் முடியும். இதுதான் இல்லறத்தின் இரகசியம்.

ஆனால் பெண்மணிகளுடைய இத்தகைய காலத்தை எவ்வாறு கண்டுபிடிப்பதென்று பல புருஷன்மார் மயங்குதல் கூடும்; இதைக் கண்டுபிடிப்பது ஒருபெருங் காரியமன்று. பெண்களைச் சில நாளைக்குச் சும்மா விட்டுவிடுவோமாயின் அவர்களுடைய வேட்கையானது தானே கனிந்தெழும். இரண்டுவாரம் வரையில் கணவனொருவன் சும்மா இருந்துகொண்டு தனது மனையாட்டியானவள் எப்பொழுது மணவாழ்க்கை யின்பத்தை அனுபவிக்கப் பெரிதும் இச்சைகொள்ளுகிறாளென்று பரீக்ஷித்துவந்தால் எந்த வேளையில் அவளுடைய வேட்கையானது அளவு கடந்ததாய்க் காணப்படுமோ அதேகாலந்தான் அவளுக்குரிய அந்தக் காலமென்று கண்டுகொள்ளலாம். இந்தவிதமான வேட்கையானது விரும்பி யெழாத காலங்களில் கணவன்மாருடைய விருப்பத்துக்கு மனைவியர் எளிதில் உடன்பட இசையார். ஆனால் அவர்களுடைய ஆர்வகாலத்தில் ஆண்மகன் அணுக முன்வருவானாயின் அவ்வேளையில் அவனுடைய மணமகளும் மிக்க உற்சாகத்துடன் மணவாழ்க்கைக்கு இணங்கி நிற்பாள். எந்த வேளையில் அவளுடைய

விருப்பமானது முன்னேறியிருக்கிறதோ அதே வேளையில் அவளுடைய கணவனும் ஸ்பரிச வாழ்க்கைக்கு உடன் படுவானாயின் அதைக்காட்டினும் பரமானந்தம் அவளுக்கு வேறென்ன இருத்தல்கூடும்? இப்படிப்பட்ட இன்பசுக த்தை ஒருமுறை ஒருவன் அனுபவித்து விடுவானாயின் இதன்பின் ஆயிரம் பலாத்காரச் சேர்க்கையா லுண்டாகக் கூடிய சுகத்தைக்காட்டினும் அதிக சுகத்தை அவன் அனு பவிப்பான். புருஷனுடைய பலவந்தத்துக்குப் பயந்தே னும், அல்லது அவனுக்கு மனஸ்தாபம் விளையுமென் றஞ்சி யேனும் மனைவியானவள் புருஷனது விருப்பத்துக்கு உடன்படுவா ளாயின் அதனால் அவனுக்கொன்றும் பய னில்லை; அவளும் யாதோர் இன்பத்தையும் அனுபவிப்ப தில்லை. ஏனெனின், இன்பசுகத்துக்குரிய இனிய விடாயை மனைவியானவள், புருஷனுக்கு நினைவுவரும் வேளையில் உற் பத்தி செய்துகொள்ளுதல் முடியாது. வெளி நடிப்பினால் தனக்கும் பிரியமிருப்பதுபோல் ஒரு மனைவியானவள் பாசாங்கு செய்தபோதிலும் உண்மையான சுகானந்த மானது ஒருபோதும் உதயமாக மாட்டாது. இக் கார ணத்தால்தான் விலைமாதரிடம் நெருங்குவதால் உண்மை யான இன்பம் உண்டாவ தில்லையென்று அறிஞர் கூறுகின் றனர். வெளி நடிப்பால் விலைமாதர் எவ்வளவு அபிநயம் செய்தபோதிலும் உண்மையான உள்ளன்பிற் குரிய உள் ளக் கிளர்ச்சியானது அவர்களுக்கு ஒருபோதும் உதய மாக மாட்டாது. ஆண்பிள்ளைகளின் ஆத்திரத்தைத் தணித்து அவர்களுடைய ஆஸ்தியையும் பறிக்கவேண்டு மென்பது மட்டுந்தான் அன்னாரின் ஒரே நோக்கமாகும். உண்மையான நோக்கத்துடன் ஒருபோதும் பொதுமக ளிர் நடிக்க முடியாதென்பது ஒருதலை. ஆதலின் விலைமதா

ரிடம் அனுபவிக்கக்கூடியதெல்லாம் ஒரு தலைக் காமம்தான். இப்படிப்பட்ட இணையில்லா இன்பத்தை இல்லாளிடத்தில்தான் பெறுதல் முடியும். இதனால்தான் திருவள்ளுவரும் "பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில், ஏதில் பிணந்தழீஇ யற்று," என்று கூறிப் போந்தார்.

பூவில்வே சிகள்வீடு சந்தைப் பெரும்பேட்டை
புனைமலர் படுக்கை வீடு
பொன்வாசல் கட்டில்பொது வம்பல முடுத்ததுகில்
பொருவில்சூ தாடு சாலை
மேவலா கியகொங்கை கையாடு திரள்பந்து
விழிமனங் கவர்தூண்டி லாம்
மிக்கமொழி நீர்மே லெழுத்ததிக மோகமொரு
மின்னலிரு தொடைசர்ப்ப மாம்
ஆவலா கியவல்கு லோதண்டம் வாங்குமிட
மதிகபட மாமனது கல்
லமிர்தவா யிதழ்சித்ர சாலையெச் சிற்குழி
யவர்க்காசை வைக்க லாமோ?
... ...

என்று குருபாத தாசரும் தம்முடைய "குமரேச சதக"த்தில் வேசைய ரிழிவைப்பற்றிக் கூறியுள்ளார்.

ஆயினும் மனைவியரின் இன்பகாலக் கணக்கைக் கண்டு பிடித்து அதன்படி தங்களுடைய இஷ்டபூர்த்தியை அனுபவித்துக் கொள்ளும்படியான பொறுமை யென்பது பல புருஷர்களுக்கு உண்டாவதில்லை. "ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு" என்பது இப்படிப்பட்ட புருஷர்களுக்கே சாலவுந்தகும். புருஷர்களின் இன்பமானது நினைத்தமாத்திரத்தில் தோன்றக்கூடிய தாதலின் அவர்களுக்குப் பொறு

மை யென்பதே இவ்விஷயத்தில் அதிகம் உண்டாவதில்லை. “வெந்தது போதும்; என் கந்தையில் கொட்டு,” என்றே வெகுபேர்கள் நடந்துவருகிறார்கள். இவர்களுக்கு ஆனந்த மென்பதே ஒருபோதும் தம்முடைய குடும்பவாழ்க்கை யால் உண்டாக மாட்டாது. புருஷரின் அவசரப்பட்ட ஆர்வம் மட்டும் ஒருதலையாய்த் தணியுமல்லாமல் உண்மை யான இருதலைச் சுகானந்தம் எப்போதும் எள்ளளவும் ஜனிப்பதில்லை. இதுதான் இதன் இரகசியம்.

அத்தியாயம்—5

காதலின் வெற்றி

மருவிய காதல் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டீர்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று.

பெண்களுக் கிருப்பதேபோல் ஆடவருக்குத் தமது ஆர்வத்தைத் தணித்துக்கொள் வது இயற்கையாகவே முடியாத காரிய மென்று நாம் முன்னரே கூறியுள்ளோம்; நினைத்த மாத்திரத்தில் புருஷர்களின் வேட்கையானது வேகமாய்ப் புறப்பட்டுவிடும்; ஏதேனும் ஓர் இலேசான காரணம் இருக்குமாயின் அதைக்கொண்டே ஆடவரின்

இன்பத் தீயானது அனல்விட்டெரியத் தலைப்படும். ஆதலின் பெண்களைக்காட்டிலும் புருஷர்களே தங்களுடைய ஆர்வத்தை அடக்குவதில் அதிகம் பிரயாசை யெடுத்துக் கொள்ளவேண்டி யிருக்கிறது. தங்களுடைய வேட்கையை எழாமல் தடுப்பதற்கு ஆண்களைப்போல் பெண்கள் அவ்வளவு பிரயாசைப்பட வேண்டியதில்லை; ஆடவரைப்போல் அடிக்கடி பெண்களுக்கு இன்பசுக மென்பது எழாமல் பெரும்பான்மையான ஸ்திரீகளுக்குப் பதினான்கு நாளைக்கு ஒரு முறைதான் அந்தத் தீயானது தானே அனல்விட்டெரியும். ஆடவரைப்போல் நினைக்குந்தோறெல்லாம் பெண்களுக்குப் பிரியம் உண்டாகாததால் மனைவிமாரின் பிரியகாலத்தைக் கவனிக்காமலே கணவன்மார் தங்களிஷ்டம்போல் அவர்களை வாழ்க்கைக் கழைப்பது ஒரு தகாத காரியமா யிருக்கிறது. பெண்களுக்கு விருப்பமிருப்பினும் அஃதில்லாமற் போயினும் புருஷர்கள்மட்டும் தமக்கிஷ்டமான போதெல்லாம் தம்முடைய மனைவியரைத் தமது விருப்பத்துக்கு உடந்தைப்படும்படி இம்ஸிக்கின்றனர். மணமகளைக்காட்டிலும் மணமகனே உயர்ந்தவ னென்னும் ஒரு தப்பான அபிப்பிராயம் இந்நாட்டில் பரவியிருப்பதால் புருஷனுக் கிஷ்டமானபோது அதற்கிணங்க வேண்டுவதல்லாமல் மறுத்துச் சொல்வதற்கு வேறோர் அதிகாரமும் அந்த அபலைகளான அணங்கியருக்குச் சிறிதுமில்லையென்றே தவறாகக் கருதுகின்றனர்.

ஆண்பிள்ளைகளுக்கு அடிக்கடி பெண்களின்மீது விருப்பமுண்டாகிறது; சிலருக்குத் தினம்தினம் அவ்விருப்பமானது கனிந்துருகக்கூடும்; மற்றும்பலருக்கோ இரண்டு மூன்று தினத்துக் கொருமுறை அப்படிப்பட்ட வேட்கைத்தீயானது வேகமாய்க் கிளம்புகிறது. ஆனால் பெரும்

பான்மையான பெண்களுக்கோ பதினுன்கு தினத்துக் கொருமுறைதான் புருஷ வேட்கை இயற்கையாக எழுகின்றது; மற்றுஞ் சிலருக்கு மாதமொரு முறைதான் அந்த விருப்பம் உதயமாகின்றது. இப்படிப்பட்ட வேற்றுமை யான நிலைமையில் ஸ்திரீ புருஷர்களுக்கிடையில் எவ்வாறு மணவாழ்க்கை இன்பத்தில் ஒற்றுமை யுண்டாதல் முடியு மென்று சிலர் சந்தேகித்தல் கூடும். அடிக்கடி மூளும் ஆடவரின் ஆர்வத்துக்கும் பருவத்துக் கொருமுறை பூக்கும் பெண்களின் பிரியத்துக்கும் எவ்வாறு ஸமரஸம் ஏற்படுதல் கூடுமென்பதுதான் பல படித்தவர்களின் மூளையையும் கலங்கச் செய்துவிடுகின்றது. இக்காரணத்தால்தான் ஆதி காலத்தில் ஒரே ஸ்திரீயுடன் மனத்திருப்தியடைய முடியாத சில புருஷர்கள் பலதாரமணம் செய்துகொள்ளலா மென்று சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள். அடிக்கடி ஆண் பிள்ளைக்கு ஆர்வம் ஜனிக்குங்கால் அதை ஒரே விவாகத் தைக்கொண்டு தணித்துக்கொள்ள முடியாமற்போயின் பலதாரமணத்தா லல்லாமல் அவ் வுஷ்ணத்தை வேறெவ் விதச் சட்டவிரோதமல்லாத நல்வழியாலும் தீர்ப்பது முடியாது.

“புக்கவிடத் தச்சம் போதரும்போ தச்சம்
துய்க்குமிடத் தச்சம் தோன்றாமற் காப்பச்சம்
எக்காலும் அச்சந் தருமால் எவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்,”

என்றார் நாலடியாரிலும். பரஸ்திரீகமனமும் பரத்தையர் நேசமும் பாபமான காரியங்களா யிருக்கும்போது வேறு தவறானவழியி லிறங்காமல் ஒழுங்கான முறையில் தன்னுடைய இஷ்டபூர்த்தியை நிறைவேற்றிக்கொள்ள ஒரு சத் புருஷன் முன் வருவானாயின் அவன் தெய்வநியதியின்படி

பலதாரமணம் செய்துதான் தீரவேண்டும். ஒரு மனைவியுடன் தன்னடக்கம் செய்துகொள்ள இயலாத புருஷர்கள் பல மனைவியரை விவாகம் செய்துகொள்ளாம விருப்பது முடியாது. இதுதான் பலதாரமணத்தின் ஒரு காரணம் என்பர்.

தன்னடக்கமில்லாத பல புருஷர்கள் தங்களுடைய இஷ்டபூர்த்திக்காகப் *பலதாரமணமும் செய்துகொள்ளாமல் ஒரேதாரத்தை வைத்துக்கொண்டு அவளை எப்பொழுதும்இடைவிடாமல் மணவாழ்க்கைக்கு எதிர்பார்ப்பதானது உண்மையில் மிகப் பரிதாபகரமான விஷயமாகவே காணப்படுகிறது. இரண்டுவாரத்துக் கொருமுறை விருப்பமுண்டாகக் கூடிய ஒரு மனைவியை வைத்துக்கொண் டிருக்கும் புருஷனொருவன் தன்னைக்காட்டினும் தன் தாரம் தாழ்ந்தவளென்று கருதியிருக்கும் தறுகண்மையால் தனக்கிஷ்டமான போதெல்லாம் அவள் இணங்கியே தீரவேண்டுமென்னும் தனது தீய குணத்தின் பயனாக ஒவ்வோர் இரவிலும் அம்மெல்லியாளை இரக்கமற்ற பலவந்த வாழ்க்கைக்கு அழைப்பானாயின் அதைக் காட்டினும் வேறென்னதான் வெட்ககரமான விஷயம் இவ்வுலகில் காணப்படல் கூடும்? ஒரு க்ஷணநேரத்தின் இன்ப இச்சைக்கு ஆசைப்பட்டுப் பலகாலும் அனுபவிக்கக்கூடிய ஆனந்தத்தை அப்படிப் பட்ட புருஷர்கள் அடியோடு இழந்துவிடுகிறார்கள்; மிதமிஞ்சிய இஷ்டபூர்த்தி நுகர்தலினால் திடதேகியா யிருப்பவனுக்குச் சிறிதுநாளைக்கு யாதொருவிதமான பலஹீனமும் தோன்றாதென்பது உண்மையேயாயினும் அவன்

* இதனால் இந்நூலாசிரியர் ஏகபத்னீ விரதத்தைத் தாழ்வாகச் சொல்லுகின்றாரென்பதன்று; பலமனைவியர் விவாகத்தைப் போற்றுகின்றாரென்பது மன்று.

இயற்கைக்கு விரோதமாய் நடப்பதனுல் தனக்கொன்றும் தீங்கு விளையாதென்று எண்ணற்க. ஒருகால் உடனே கெடுதியுண்டாகம லிருக்கலாம். ஆனல் சில நாட்களுக்குப் பின்னர் அவன் தன்னுடைய துஷ்கிருத்தியத்தின் பயனை யடையாமற் போகான். ஏனெனின் இடைவிடாத துர்வின்யோகத்தினுல் அவன் சரீர முழுதும் பீர்க்கங்காயின் கூடுபோலாகி உள்ளுக்குள் தாதுவும் வலுவழிந்து கெட்டுப்போகின்றது. இயற்கை விதிகளுக்கு மாறாக நடப்பதனுல் உண்டாகும் தீமைகள் ஸ்திரீகளிடத்தில் காட்டினும் புருஷர்களிடத்தே மிக்குத் தோன்றுகின்றன. தமது அவசர புத்தியால், அனேக வருஷம் அடையக்கூடிய இல்லற இன்பத்தையே அவர்கள் ஒரேசமயத்தில் உதைத்துத் தள்ளிவிடுகின்றனர். ஸ்திரீ புருஷர்கள் இருவரும் ஏககாலத்தில் இன்பங்கொண்டு சமபோகத்தை ஒரு முறை அனுபவித்து விடுவார்களாயின் அதைக்காட்டினும் சுவர்க்கானந்தம் வேறென் றிருப்பதாய்ப் பிறகு எப்பொழுதும் காண்மாட்டார்கள். ஆனல் இப்படிப்பட்ட இஷ்ட பூர்த்தியை அடைவதெப்படி யென்று நீங்கள் தெரிந்து கொள்ளுமுன் புருஷர்களுடைய வேட்கையின் தாத்பரியம் இன்னதென்பதைப் பற்றியும் செவ்வனே தெரிந்துகொள்ளல் வேண்டும். புருஷர்களுள் பெரும்பான்மையோர் தம்முடைய ஆர்வத்தின் தாத்பரியமே இன்னதென விளங்கிக்கொள்ளாம லிருக்கிறார்கள். ஏன் தங்களுக்கு இஷ்டமுண்டாகும் போதெல்லாம் தமது ஜனனேந்திரியத்தில் உயிருண்டாகிற தென்றும், இப்படி உயிருண்டானவுடன் அதன் சார்பாய் வீரியஸ்கலிதம் வெளியாக வேண்டியதும் அவசியம்தானே வென்றும் ஒருவரும் சந்தேகமறத் தெரிந்து கொண்டார்க

ளில்லை. இச்சிக்கும் போதெல்லாம் இன்ப சுகத்தை விரும்பும் ஸ்திரீயேனும் புருஷனேனும் உலக நன்மைக்காக உண்டானவர்களல்லவென்றும் மிருகங்களின் கேடுகெட்டவர்களென்றும் வைத்திய சாஸ்திரம் முறையிடுகின்றது.

ஆடவரிடத்தும் பெண்டிரிடத்தும் ஜனனேந்திரியக் கருவிகள் என்று சொல்லக்கூடிய இருவகை வெவ்வேறு வித இராஜ கருவிகள் இறைவனால் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்பதுமட்டும் எல்லோருக்கும் இயற்கையாகவே தெரியாமலில்லை. ஆண் பெண்களின் மணவாழ்க்கையால் எவ்வாறு இன்பம் ஜனிக்கிறதென்பதும் ஒவ்வொருவருக்கும் செவ்வனே தெரியும். ஒருவனுக்கு 17 அல்லது 18-வது வயது வந்தவுடன் வீரிய விருத்தி யுண்டாகின்றது; இது தான் அவனுடைய கௌமாரப் பருவத்தின் தொடக்கம் என்னலாம். இவ்வயது முதல் அவனுடைய அவயவங்களெல்லாம் வலிமையுறுகின்றன. இப்படிப்பட்ட கௌமாரப் பருவத்தில் வீரியம் வீணாக்கப்படாமலிருந்தால் அது சரீரத்துள் சுவறித் தேகமுழுமைக்கும் தாருட்டிய விருத்தியையும் உறுதியான நரம்பு முறுக்கையும் கொடுக்கின்றது. ஓர் ஊசியின் நுனியில் தங்கக்கூடிய வீரியத்தை ஒரு பூதக் கண்ணாடியின்கீழ் வைத்துப் பரிசோதிப்போமாயின் நூற்றுக் கணக்கான ஜீவப்பிராணிகள் அதில் உயிருடன் இருப்பதைக் காணலாம். இவற்றிற்கு வீரிய கர்ப்பக்கிருமிகள் என்று பெயர் சொல்வர். ஒவ்வொரு கிருமிக்கும் முன்புறம் கூர்மையான முட்டை வடிவுள்ள ஒரு தலையும், திரணையான குறுகிய உடம்பும் (இந்த உடம்பை ஸ்படிகமயமான ஒரு முறுக்கிய ஜவ்வு சுற்றிக்கொண்டிருக்கும்) ஒரு நீண்ட நுனி கூர்மையான, ஆடிக்கொண்டிருக்கக்கூடிய வாலும் இருக்கும். ஒவ்வொரு முறையும் சாதாரணமாய் வெளியாகும்

புருஷவீரியத்தில் சுமார் 20 கோடிமுதல் 60 கோடிவரை யில், தாமே ஆடியசையும் சக்தியையுடைய ஜீவப் பிராணிகளாகிய மேற்கூறிய மிகமிக நுண்ணிய கர்ப்பக்கிருமிகள் வெளியாகின்றன என்பதையும் வைத்திய சாஸ்திரமானது நன்கு நிலைநிறுத்தியிருக்கின்றது. இந்த 20 கோடிமுதல் 60 கோடி வரையிலுள்ள கர்ப்பக்கிருமிகளே ஒவ்வொரு சமயத்திலும் ஆடவரின் தேகத்திலிருந்து ஜனனேந்திரியக் கருவியின் வழியே வெளியாகின்றன. புருஷர்களின் சாதாரணமாயிருக்கும் ஜனனேந்திரியக் கருவியானது சித்தவிகாரமான எண்ணத்தாலோ அல்லது வேறுவித காரணத்தாலோ உணர்ச்சியை அடைந்துவிடுமாயின் உடனே உள்ளி



1 2

வீரிய கர்ப்பக் கிருமிகள்.

1 மகா பெரிய பெரிய ஸைஸ்.

2 மிகமிகப் பெரியதாகச் செய்யப்பட்டவை.

ருக்கும் வீரியத்தை வெளிப்படுத்திவிட வேண்டுவதுதான் அவசியமெனச்சிலர் தவருகக் கருதுகின்றனர். உயிரின் சத்தாகிய இந்திரியக்கிருமிகள் கிஞ்சித்தேனும்கவலையில்லாமல் அழிக்கப்பட்டால் அதனுடன் புருஷனுடைய தேகாரோக்கியமும் அவ்வளவுக்கவ்வளவு குறையுமன்றோ? சற்றுநேரங்கூட இத்தகைய நஷ்டத்தைப்பற்றிச் சிந்தியாமல் ஸ்கலிதமாக்கிக் கொள்ளும் ஒவ்வொரு சமயத்திலும் அவனுடைய தேகாரோக்கியத்துக்குத் தாருட்டிய விருத்தியைக் கொடுக்கக்கூடிய ஜீவதாதுவான உயிர்ச்சத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய் இழந்து விடுகிருன். ஆதலின் ஜனனேந்திரியக் கருவியில் ஏதேனுமோர் உணர்ச்சி உண்டான மாத்திரத்தில் வீரியத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று எண்ணுவது அறவே தகாத காரியமாகும்; ஜனனேந்திரியக் கருவியில் உணர்ச்சி உண்டாவது இந்திரிய ஸ்கலிதத்தின் அவசியத்துக்காக வன்று. மிதமிஞ்சிய தாருட்யம் மிகுந்து விடுவதால் அனுவசியமானதை அப்புறப் படுத்தும் பொருட்டுத்தான் ஜனனேந்திரியத்தில் இயற்கையாய் அவ்வுணர்ச்சி உண்டாகிற தென்று ஒரு சிலர் கருதுவது தவருன அபிப்பிராயமே யாகும். அதிகமான தாருட்டிய விருத்தியின் காரணத்தால் இப்படிப்பட்ட உணர்ச்சி யுண்டாவதில்லை. ஆனுல் நரம்புக்கருவிகளின் உணர்ச்சி மிகுதியால் உதிரக்குழல்கள் (பெரும்பாலும் காரிரத்தக் குழல்கள் - நாளங்கள்) திமிர்த்து அதன் காரணத்தால் ஜனனேந்திரியக் கருவியில் உயிர்ப்புண்டாகிறது. நரம்புக் கருவிகளின் தொழிலால் கோசத்துக்கு உள்நோக்கிச் செல்லும் அழகிய செவ்விரத்தத்தைக் காட்டினும் அதன் உள்ளேயிருந்து வெளியே செல்லும் காரிரத்தமானது தடைப்பட்டு அதனுல் அங்குச் செல்லும் செவ்விரத்தமானது

அதிகமாய்த் தேங்கி விடுவதால் அவ்வேளையில் அந்தக் கருவியில் உயிர்ப்பும் உணர்ச்சியும் அதிகமாய் உண்டாகின் றன.

ஜனனேந்திரியத்தில் ஏன் உணர்ச்சி யுண்டாகிறதென் றும், இந்திரிய ஸ்கலிதமானது எவ்வாறு உண்டாகிறதென் றும் செவ்வனே தெரிந்துகொள்வீர்களாயின் அந்தக்கருவி யில் உயிர்ப்புண்டானவுடன் அதை நிவர்த்திசெய்துகொள் ளும்பொருட்டு வீரிய ஸ்கலிதம் செய்து கொண்டுதான் ஆகவேண்டுமென்று எண்ணமாட்டீர்கள். உயிர்ப்புண் டான ஜனனேந்திரியத்தைத் தளர்த்திக்கொள்வதற்கு வீரிய வெளிப்பாட்டைச் செய்துதான் ஆகவேண்டுமென் னும் தவறான எண்ணத்தினால்தான் சில சிறுவர்கள் இயற் கைக்கு மாறான துறைகளில் தம் அறியாமையால் இறங் கித் தத்தளிக்கின்றனர். ஒவ்வொரு ஸ்கலிதத்திலும் சுமார் 60 கோடி ஜீவசத்தான உயிர்க்கிருமிகள் உதிரத்தை முறித்து உண்டாக்கப் படுகின்றன வென்பதை உய்த் துணர்ந்துகொள்வாராயின் சிறுவர்கள் அப்படிப்பட்ட அரு வருக்கத்தக்க செய்கைகளால் தமது அழகிய ஆருயி ரன்ன அரிய சுகத்தை இளமையில் அறியாமையால் அழித்துவிடத் துணியார். அதிகமான செவ் விரத்தம் கோசத்தில் தங்குவதால்தான் அதில் உயிர்ப்புண்டாகிற தென்று இப்பொழுது தெரிந்துகொண்டோம்; இப்படிப் பட்ட மிகுதியான உதிரத்தை நரம்புத் தளர்ச்சியால் கோசத்தை விட்டு வெளி யேறும்படி செய்துவிட்டால் வீரிய வெளிப்பாடு செய்யவேண்டிய அவசிய மில்லாமலே அதன் உணர்ச்சி நீங்கிவிடும். ஸ்திரீ புருஷ சாந்திக்கு இட மில்லாத வேளைகளில் மனதைச் சிறிது அடக்கிக்கொண் டால் அப்பொழுதுள்ள உணர்ச்சியானது தானே தணிந்து

விடும். ஆரம்பத்திலேயே மனத்தை அடக்குவதற்குச் சிறிது தவறிவிடுவோமாயின் பிறகு காலமுழுதும் காமாந்தகாரமானது அளவுக்கு மீறிக்கொண்டே போகும்; அதனுல் அளவுகடந்த தேகபலமானது குன்றத் தலைப்படும். ஒவ்வொரு சமயத்திலும் * வெளியாகும் 20 முதல் 60 கோடி வரையிலுள்ள உயிர்க்கிருமிகளுள் ஒவ்வொன்றும் ஒரு ஸ்திரீயின் ஒரு சினையை மனிதப் பிண்டமாகச் செய்துவிடக் கூடியதாயிருக்கிறது. இப்படிப்பட்ட கணக்கின்படி ஒவ்வொரு கிருமியைக்கொண்டு ஒவ்வொரு சினையையும் கருக்கொள்ளும்படி செய்வோமாயின் ஓர் ஆண் பிள்ளைக்கு ஒருமுறை வெளியாகும் அவ்வளவு வீரியத்தைக் கொண்டு இவ்வுலகில் எத்தனைச் சந்தான பாக்கியங்களைத் தோற்றுவிக்கலாம் என்பதும், அத்துணை உன்னதமான வீரியத்தை வீண்படுத்துவது எவ்வளவு பாபமென்பதும் ஒருவாறு விளங்கும். இப்படிப்பட்ட கர்ப்பக் கிருமிகள் ஒவ்வொன்றும் நம்முடைய தேகத்திலுள்ள மகா மேலான பிரத்தியேகமுள்ள விலைமதிக்க வொண்ணுத வஸ்துக்களைக்கொண்டே சிருஷ்டிக்கப்படுகின்றன! மனித வீரியத்தில் தீமுறுகற்பாஷாணத்தின் திராவகமும் சுன்னத்தின் சத்தும் அதிகமா யிருக்கின்றன; இவ்விரண்டும்

* ஒவ்வொரு சொட்டு வீரியம் வெளிப்படுவதால் உடம்பிலுள்ள 40 சொட்டிரத்தம் வடிவதா லுண்டாகக்கூடிய அவ்வளவு தேகபலம் குறையுமென்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். ஆதலால் தீயவழிகளால் வீணுகும் வீரியம் எவ்வளவோ அவ்வளவைப் போன்ற 40 பங்கு நல்லிரத்தம் நம் தேகத்தினின்றும் கழிந்துவிடுகிறது. இதனுல் க்ஷயம், அஜீரணம், மனச்சோர்வு, நினைவின் தடுமாற்றம் முதலிய வியாதிகளும், கைகால் ஓய்வும் உண்டாவது ஓர் ஆச்சரியமன்று.

மனித தேகத்தின் மதிக்கவொண்ணுத சத்துக்களாகும். இப்படிப்பட்ட விலைமதிக்க முடியாத உயர்ந்த வஸ்துக் களா லாக்கப்பட்ட வீரியத்தை வீண்செலவு செய்வோ மாயின் அதனுல் எவ்வளவு தாது நஷ்ட முண்டாகக் கூடு மென்று நீங்களே நிதானித்துப் பார்ப்பீர்களாக.

ஆதலின், புருஷ வீரியமானது நம்முடைய தேகத் தில் உற்பத்தியாகும் மிச்சமான தாதுவென்றும், ஆதலின் அதை, கோசத்தில் உயிர்ப்புண்டானவுடன் வெளிப்படுத் தியே ஆகவேண்டு மென்றும் இதுவரையில் எவரேனும் தவருக எண்ணியிருப்பாராயின் இனியேனும் அந்த வீரி யத்தின் இரகசியத்தை யுணர்ந்துகொண்டபின் இளம்பால் யர்களெல்லாம் தங்களுடைய தாருட்யமான தேகவன் மையை அதி ஜாக்ரதையுடன் காப்பாற்றிக்கொள்வாராக. பால்யம் என்பது மிகுந்த சோதனைக்குரிய காலமாம்; அப்பொழுது தேக உறுப்புக்களெல்லாம் வன்மை யடை கின்றன. முக்கியமாய் இன்பச்சுவையை அனுபவிக்கும் சக்தி அதிகப்படுகின்றது. ஒவ்வொரு ஸ்கலிதத்தாலும் எவ்வளவோ அருமையான சுன்னச் சத்தும் நீமுறுகற் பாஷாணத்திராவகமும் வெளியாவதுடன் அதை வெளிப் படுத்துங்காலையில் எத்துணை நரம்புத் தளர்ச்சியும் தேக அயர்ச்சியும் உண்டாகின்றன வென்றும் சிறிது நிதான புத்தியுடன் ஆராய்ந்து பாருங்கள். வாலிபப்பருவம் வந்தவுடன் நம்மவர்களுக்குத் தேகதிடம் குறைகின் றது; இதன் காரணம் என்னையோ வெனின், அறிவின் மையாலும் தகாத சகவாசத்தாலும் அப்பியாசமாகிற கொடிய வழக்கங்கள் தேகாரோக்கியத்தைக் கெடுக்கின் றன என்பதுதான். இவ்வளவு தாது நஷ்டத்தையும் நரம் புத் தளர்ச்சியையும் வேறு நன்மையான வழியில் செலவு

செய்தால் எவ்வளவு பிரயோஜன முண்டாகு மென்றும் சற்று நிதானித்துப் பாருங்கள். ஆதலின் சமயபேதத்தால் ஜனனேந்திரியக் கருவியில் உயிர்ப்புண்டாகும்போது நம்முடைய பகுத்தறிவை மட்டும் சிறிது பக்குவமாக உபயோகப்படுத்தி மனசைச் சற்று நிதானப்படுத்திக்கொள்வோமாயின் அதிக இரத்தத்தால் உணர்ச்சியேறிய கோசமானது தானே தளர்ச்சியை யடைந்துவிடும். கோசத்தில் உயிர்ப்புண்டாகும் வேளையில் அதை அதிகப்படுத்தும் படியான அருவருப்பான விஷயங்களுக்குச் சிறிதும் இடங்கொடுக்காமல் புத்தியைச் சற்று நிதானப்படுத்தல் வேண்டும்; தெய்வ ஸ்தோத்திரத்திலும் நல்லார் கூடியுள்ள இடத்தை நாடுவதிலும் புத்தியைச் செலுத்தல் வேண்டும். அப்படி உணர்ச்சி யுண்டாகுங்காலத்தில் ஏகாக்ர சித்தத்துடன் கண்களை இறுக மூடிக்கொண்டு அங்கமுழுதும் ஆண்டவனது அருட்பிரகாசமான அமிர்ததாரையால் பரிசுத்தமாக்கப்பட்டு விட்டதென்று ழனனம் செய்வதாலும் மட்டிலடங்கா வெற்றியுண்டாகும். நல்லோர் பெரியோர்களின் அச்சத்தை மனத்துள் நிரப்புவதாலும் கோரிய பலன் சித்தியாகாமற் போகாது. இப்படிச்செய்வோமாயின் ஜனனேந்திரியக் கருவியில் விரிவடைந்திருக்கும் உதிரக் குழல்களெல்லாம் சுருங்கத் தலைப்படும்; உடனே கோசத்திலுள்ள அதிகமான உதிரமெல்லாம் வெளியேறி அது தானே தளர்வடைந்து விடும். சிறுநீர்ப் பெய்கையாலும் தானே தணிவுறுமென்பர்.

ஆனால் ஒரு மனிதன் சன்னியாசக் கோலத்தை மேற்கொண்டு சதா சர்வகாலமும் தன்னுடைய ஆர்வத்தை இவ்வாறு தணிப்பது கூடாது; இது தலைவலிபோய்த் திருவலி வந்ததே போலாம். இயற்கையா யமைந்துள்ள இத்

தகைய ஆர்வத்தை எப்பொழுதும் அடக்குவதால் ஆண் பிள்ளையின் தேகத்திலுள்ள திடமானது தளர்வடைதல் கூடும். பால சன்னியாசிகளுக்கு ஓங்கிய ஆத்திரத்தை ஒவ்வொரு முறையும் அழுத்தித் தடுப்பதற்கு எவ்வளவோ கடுமையான மனவலிமையும் தேகதிடமும் வேண்டி யிருக்கின்றன; ஆதலின் அடிக்கடி இவ்வாறு தடை செய்வதால் எண்ணிறந்த கேடுகளெல்லாம் உண்டாகின்றன வென்று வைத்திய நிபுணர்கள் பலர் கூறியிருக்கின்றனர். ஆனால் அத்தகைய வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயப்படி ஆண்பிள்ளைகள் சாதாரணமாய் இரண்டு வாரம் வரையில் தங்களுடைய ஆர்வத்தை அடக்கிக்கொள்ளலாம். ஆணும் பெண்ணும் அழகிய கூட்டுறவுடன் அமைந்துவிடும் பக்ஷத்தில் அவர்களுக்குள் பதினான்கு* நாளைக் கொருமுறை மணவாழ்க்கையின்பம் நேரிடுமாயின் அப்பொழுதுதான் அளவுகடந்த சுகானந்தம் அதிகமாக ஜனிக்கும். பெரும்பான்மையான சாதாரணப் பெண்களுக்குப் பதினான்கு தினத்துக் கொருமுறைதான் சரியான வேட்கையானது மூண்டெழுதல்கூடுமென்று யாம் முன்னமே கூறியுள்ளோம். அப்படிப்பட்ட வேளையில் ஆடவரும் அந்த அணங்கியருடன் அணுகத் துணிவார்களாயின் அவர்களுக்குள் எவ்வளவோ

---

* ஆனால் திடதேக முள்ள பால்ய ஸ்திரீ புருஷர்களாயின் ஆரம்பத்தில் சில ஆண்டுகள் வரையில் 30-வயதுக் குட்பட்டிருந்தால் வாரமொன்றுக்கு மூன்று முறையும், 30—முதல் 40—வயது மட்டும் வாரம் இரு முறையும் மணவாழ்க்கை புரியலாமென்று சில வைத்தியர் கூறுவர். ஆனால் பெண்களுக்கும் அதேகாலத்தில் விருப்பமுண்டானாலொழிய இப்படிச் செய்வது கூடாது. மிதமிஞ்சிய போகத்தால் பெண்களைக் காட்டினும் ஆண்களுக்கே அதிகமான நஷ்டமும் கஷ்டமு முண்டாகும்.

எல்லை கடந்த இன்பசுகம் உதயமாகும். ஆனால் அப்படிப் பதினைந்து நாளைக் கொருமுறை பத்மினிமாருடன் இல் வாழ்க்கை நடாத்தும்போது ஒரே முறைதான் அந்தச் சுகானந்தத்தை அனுபவிக்கவேண்டு மென்னும் நியதி யொன்றுமில்லை. பதினைந்து தினத்துக் கொருமுறை மண வாழ்க்கையுட் புகுதலை ஆரம்பிக்கும்போது அந்த இரண்டு மூன்று நாட்களுக்குள் பலமுறை கூட்டுறவு முறைகளைக் கைக்கொள்ளலாம். 14 நாட்கள் மட்டும் விரதம் வைக் கும் புருஷர்கள் இரண்டு வாரத்துக்குப்பின் ஒரே முறை இல்லம்புகுவதால் திருப்தியடைய மாட்டார்கள். சரியான தேகதிடத்தை யுடைய மனைவியரா யிருக்கும் பக்ஷத்தில் அவர்களுக்கும் அநேகமுறை அவ்வின்பத்தை அடைய வேண்டுமென்னும் அபேக்ஷயே உண்டாகும். 14 தினத் துக் கொருமுறை பெண்களின் பிரியமானது பெருகி யெழும்போது சாதாரணமாய் இரண்டு மூன்று நாள் மட் டும் அந்த ஆர்வமானது அதிகரித்தே நிற்கும்; அக்காலை யில் அவர்கள் ஒவ்வொரு நாளும் அந்த ஆனந்த சாகரத் துள் மூழ்கப் பிரியப்படுவார்கள்; ஆதலின் பத்து அல்லது பன்னிரண்டு தினத்துக் கொருமுறை ஆரம்பம் செய்து இரண்டு மூன்று நாட்களுக்குள் பல முறை வாழ்க்கை இன்பம் அனுபவிப்பதே ஸ்திரீ புருஷர் இருவருக்கும் அளவிலா ஆனந்தத்தை அளித்தல் கூடும். இந்த 10 அல் லது 12 தினங்களுக் கிடையில் ஸ்திரீ புருஷ வேட்கைக் குரிய பிரத்தியேகமான சம்பவம் ஏதேனும் உண்டானா லொழிய இரண்டு வாரத்துக் கொருமுறை இல்லறவின் பத்தை அனுபவிப்பதே காதலரின் கனிந்த வெற்றி யாகும்.

ஆனால் சில மாதர்கள் 28 தினத்துக்கு இரண்டுமுறை

இன்பகால எழுச்சியை யடையாமல் ஒரு மாத காலத்துக்குள் ஒரே முறைதான் அப்படிப்பட்ட ஆர்வத்தை அடைவார்கள்; இப்படிப்பட்ட தௌர்ப்பாக்கியமுள்ள ஸ்திரீகளை மணந்துகொண்ட மாப்பிள்ளைமார்கள் மாதமொரு முறைதான் சரியான இல்லற இன்பத்தை அடைதல் கூடும். மணமகளுக்கு விருப்பமில்லாத மற்றைக் காலங்களில் புருஷன்மார் நிர்ப்பந்த வாழ்க்கைக்கு அப்படிப்பட்ட பெண்களை அழைப்பது கூடாது. ஆனால் இத்தகைய ஸ்திரீகளைக்கொண்டு மாதமொருமுறை வாழ்க்கையுடன் மனத்தை அடக்கிக்கொண்டு சும்மா இருப்பது சாத்தியமில்லாவிடின் ஒரு தாரத்துக்குமேல் மறு தாரம் மணந்துகொண்டுதான் ஆதல் வேண்டும். மாதர்களுக்கு விருப்பமுண்டாகும் வேளைகளிலல்லாமல் மற்றைக் காலங்களில் அவர்களை நிர்ப்பந்தம் செய்வதில் ஒன்றும் உண்மையான இன்பம் ஜனிப்பதில்லை யென்று உறுதியாகக் கண்டுகொண்ட கணவன்மார் தம்முடைய ஏகபத்நினிக்குவிருப்பமுண்டாகும் வரையில் காத்திருக்க முடியாவிடின், அவர்கள் ஆண்டவனுக் கடுக்காத பர ஸ்திரீகமனம் செய்வதினின்றும் தப்பவேண்டுமாயின் அவர்கள் சட்ட முறைப்படி ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணந்துகொள்ளாமல் வேறொன்றும் செய்வதற் கில்லை. ஆயினும் இரண்டு வாரத்துக் கொருமுறை இன்பம் நிகழக்கூடிய ஸ்திரீகளையுடைய புருஷர்கள் அந்த இரண்டு வாரத்துக் கொருமுறையே தம்முடைய சுகானந்தத்தை அனுபவிப்பார்களாயின் அதனால் அவர்க ளிருவருக்கும் தேகாரோக்கியமும் ஆனந்தப் பெருக்கும் அதிகரிக்கும். மனிதர்களுடைய தேகக் கூறுபாட்டைக் கவனிக்குமளவில் அவர்களுள் எவ்வளவுக் கெவ்வளவு தங்களுடைய மனத்தைக் கெட்

டிப்படுத்திக் கொள்ளுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவரது ஆர்வமும் ஓர் அளவுக்குள் அடங்கி நிற்குமெனத் தெரிந்துகொள்ளுகிறோம்; ஆனால் அதற்கு மாறாக எவ்வளவுக் கெவ்வளவு நாம் நம்முடைய ஆர்வத்தை மனம் போன வழியிலெல்லாம் செலுத்துகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நமது இச்சையும் கட்டுக் கடங்காதுபோய்க் காம நோயால் தேகவன்மையும் குன்றும். ஒவ்வொரு மணவாழ்க்கையும் எவ்வளவு தேகபலத்தை இழுத்துக் கொண்டு போகிறதென்று நீங்கள் முன்னமே தெரிந்து கொண் டிருக்கிறீர்கள். அதிகமான தாருட்ய விரயமானது அளவுகடந்த தீமையை உண்டுபண்ணு மென்பது வைத்திய சாஸ்திரம் கண்ட உண்மையாகும்.

பொதுவாகப் புருஷர்கள் கவனிக்கவேண்டிய முக்கியமான விதியொன் றுண்டு: புதிதாகச் சயனவறையுட் புகுதும் புதுமாப்பிள்ளைமார்காள்! நீங்கள் ஒருபோதும் உங்களுடைய மனைவியருக்கு மனவிருப்பமில்லாத வேளைகளில் அவர்களை இன்பசுகத்துக்கு எதிர்பாராதீர்கள். காதலிருவருங்கருத்தொருமித்து ஆதரவு பூணுவதே அழகிய இன்பமாகும். எக்காலத்தும் பெண்பாலாருக்குப் பிரியமில்லாத வேளைகளில் நீங்கள் நிர்ப்பந்தம் செய்வதற்குத் துணிவு கொள்வது தகாது. ஒவ்வொரு மணவாழ்க்கைக்கும் வேண்டிய உற்சாகத்தை உங்கள் மனைவியரிடம் முதன்முதலில் முற்றிலும் உண்டாக்கிய பின்னரே நீங்கள் அவர்களிடம் நெருங்க முற்படல் வேண்டும். இதுதான் இல்லற இன்பத்துக்கு இன்றியமையாத சட்டமாகும்.

இதுவரையில் நாம், ஆண்பிள்ளைகள் தங்களுடைய பிரிய நாயகியின் இன்பகால எழுச்சியை எதிர் நோக்கிய வண்ணமாய் எவ்வாறு இரண்டுவார காலம் வரையில் காத்

திருக்க வேண்டுமென்று சிறிது ஆராய்ச்சி செய்தோம். ஆனால் இவ்வுலகில் இன்னுமொரு விதமான புருஷர்களு முண்டு; இவர்களின் நிலைமையையும் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட ஆண்பிள்ளைகளுக்கு இயற்கையாகவே தாதுபுஷ்டியென்பது அதிக பலஹீன முள்ளதா யிருக்கும்; பல வாரங்களுக் கொருமுறைதான் இவர்கள் தம்முடைய மனைவியைச் சமீபிப்பதற்கு உடன் படுவார்கள்; அப்படிப்பட்ட காலங்களில் வெளியாகும் வீரியத்தாலும் அவர்களுக்கு அதிகமான தேக பலம் குறைந்துவிடும். ஆனால் அவர்களுடைய நாயகிகளுக்கு வேட்கை உண்டாகும்போது அவர்களுக்கிருக்கும் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு அந்தக் கணவன்மார் முற்படாவிடின் அதனால் அந்த ஸ்திரீகளுக்கும் தேகாரோக்கியம் குறைவுபடுதல் கூடும். இப்படிப்பட்ட அஸந்தர்ப்பங்களில் அந்த ஸ்திரீ புருஷர்கள் செய்யத்தக்கவை இரண்டு விதமான காரியங்களாகத்தாம் இருக்கின்றன. தம்முடைய ஜனனேந்திரியக்கருவியில் எப்படிப்பட்ட உணர்ச்சியாவது இல்லாமலிருக்கக்கூடிய கணவன்மார் தக்க வைத்தியர்களிடம் பரியாலோசனை செய்து தமது தாருட்யத்தை அதிகம் விருத்தி செய்துகொள்ளல் வேண்டும்*.

ஆனால் மற்றுஞ்சில மாப்பிள்ளைகளுக்கு எப்பொழுதேனும் ஒரு முறை தமது ஜனனேந்திரியக் கருவியில் உயிர்ப்புண்டாகும்; அப்படிப்பட்ட வேளைகளில் மணவாழ்க்கை

---

* இதற்கு எம்மிடமுள்ள வாலாஜா மாத்திரைகளே அதிக பயன் தருதல் கூடும். இம்மாத்திரைகளின் பெருமை மற்றோரிடத்தில் காணப்படும். 10-மாத்திரைகள் கொண்ட மாதிரி சீசா 1-க்கு ரூ. 1—8—0. 40-மாத்திரைகள் கொண்ட முழு சீசா 1-க்கு ரூ. 5—0—0.

புரிந்தபோதிலும் அவர்களுக்கிருக்கும் உணர்ச்சியின் மிகுதி யால் அதிசீக்கிரம் வீரியம் வெளிப்பட்டுவிடும். இல்லற இன்பத்தா லுண்டாகக்கூடிய உணர்ச்சியின் "முனுமு ணுப்பை"த் தாங்கமுடியாமல்தான் இவ்வாறு அவர்களுக் குத் துரித ஸ்கலிதம் உண்டாய்விடுகிறது. இப்படிப்பட்ட வேக விரயத்தை இரண்டு விதத்தால் தடுத்துக்கொள்ள லாம்: ஆணும் பெண்ணும் அழகிய வாழ்க்கையுள் ஈடுபட் டிருக்கும்போது இருவரும் ஒருவரையொருவர் நோக்கிய வண்ணமே இயங்காமல் தங்களுடைய சித்தத்தை யெல் லாம் ஒருவழிப்படுத்தல் வேண்டும். ஆடவர் தாம் ஒன்று படுங்கால் ஆடியசைவதால்தான் சாதாரணமாய் வேக வீரி யம் உண்டாய்விடுகிறது; ஆதலின் எவ்வளவு நேரம் அவர் கள் நிஸ்சலனமாய் ஏகாக்கிர சித்தத்துடன் இருக்கிறார் களோ அவ்வளவு நேரம் வீரிய விரயமும் பிற்படும். இது வன்றி இன்னுமொரு வழியுமுண்டு: ஆண்பிள்ளை, அதற் கென்று தையாரிக்கப் பட்டிருக்கும் ரப்பரால் செய்த கவசமொன்றை வாங்கித் தமது ஜனனேந்திரியக் கருவியின் மீது அணிந்துகொள்ளல் வேண்டும். இந்த ரப்பர் கவ சத்தை அணிந்துகொண்டால் பிறகு வீரியவிரயம் சீக்கிரம் உண்டாய்விட மாட்டாதாம்; இப்படிப்பட்ட ரப்பர் கவ சத்தால் பற்பல விதமான தீமைகளெல்லாம் விளையக் கூடு மாயினும் வீரிய விரயத்தை யுடைய திடமற்ற புருஷர்கள் இதனால் சிறிது நன்மை யடையக் கூடுமாதலின் இந்தக் கவசத்தை ஒருவாறு உபயோகித்து வரலாம்.

ஆனால் இவ்வுலகில் எத்தனையோவிதமான ஸ்திரீபுரு ஷர்களுண்டு. அவர்களுடைய விஷயங்களை யெல்லாம் தனித்தனியே ஈண்டு எடுத்துரைப்பது இயலாது. பொது வான பல அரிய விஷயங்களை மட்டும் யாம் இங்கெடுத்துக்

கூறினோம்; ஆனால் அவரவரும் தத்தம்முடைய பகுத்தறிவைச் செவ்வனே உபயோகப்படுத்தித் தமக்குரிய விவாக சுகத்தை அதிகமாகப் பெருக்கிக் கொள்வார்களாக. ஏட்டில் எவ்வளவு எழுதியபோதிலும் அவரவரும் தத்தம்முடைய பகுத்தறிவைக்கொண்டே பள்ளியறையின் பரமானந்தத்தைப் புதுப்பித்துப் பெருக்கிக்கொள்ளல் வேண்டும். இதைக்குறித்து அடுத்த அத்தியாயத்திலும் இன்னும் சிறிது எழுதுவோம்.

அத்தியாயம்—6

காதலின் வெற்றி (முன்தொடர்)

நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை.—(குறள்)

மனித வர்க்கத்தாருள் பெரும்பான்மையோர் பொதுவாக மணவாழ்க்கையின் காலத்தைப் பற்றியும் அதை எத்தனை நாளைக் கொருமுறை அனுபவிக்க வேண்டு மென்பதைப் பற்றியும் ஒருசிறிதும் தெரிந்து கொள்வதில்லை; அவ்வாறு அவர்கள் தெரிந்துகொள்ள விரும்பிய போதிலும் அதற்கு வேண்டிய தமிழ் நூல்களும் இந்நாட்டினருக்குக் கிடைப்பதில்லை. இது மட்டுமல்லாமல் இன்னும் இவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய பல அரிய விஷயங்களும் உண்டு. ஸ்திரீ புருஷர்கள் தங்களுக்குள் பரஸ்பர

மான சம்மந்த சுகத்தை அனுபவிக்க முயலுமுன் தாங்கள் நடாத்தும் மர்மம் இன்னதென்பதைச் செவ்வனே உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஆண் பெண்களின் சரீரக் கூறுபாடானது எவ்வாறு உருப்படுத்தப் பட்டிருக்கிறதென்றும், அவர்களின் தேகசம்மந்த காலத்தில் அங்க அவயவங்களில் கடவுளின் கற்பிதத்தின்படி இயற்கையாய் என்ன நிகழ்கிறதென்றும் உண்மையைத் தெரிந்துகொள்வோமாயின் பிறகு அவ் வறியாமையாலுண்டாகக்கூடிய பற்பலவிதமான தீமைகளும் அடியோடு தொலைவதுடன் உண்மையான இல்லற இன்பத்தின் இனிய வெற்றி இன்னதென்பதையும் செவ்வனே விளங்கிக் கொள்வோம். காதலின்பத்தின் கருத்து இன்னதென் றறியாமையால் எத்தனையோ ஸ்திரீ புருஷர்கள் தங்களுடைய இல்லற இன்பத்தையே ஒரு தொல்லை நிறைந்த புல்லறமாகச் செய்து கொள்ளுகின்றனர்.

மணவாழ்க்கைக்காக மனையை நெருங்குமுன் அம்மாதரசிக்கு வேண்டிய மனவெழுச்சியையும் உள்ளக்கிளர்ச்சியையும் உண்டுபண்ணல் வேண்டும். மனையின் மனத்தின்கண் உத்ஸாகத்தை எழுப்பாமல் கணவன் மட்டும் தன்னுடைய வேட்கையைத் தணித்துக்கொள்ளும் பொருட்டுப் பலவந்தமாய்ப் பிரயத்தனம் செய்ய எத்தனிப்பானாயின் அதனாலொன்றும் மெய்யான பயனுண்டாவதில்லை. ஒரு முறை விவாகம் செய்துவிடும் பக்ஷத்தில் பிறகு எப்பொழுதும் மனைவியின் மாமையை மணமகன் ஒரு சிறிதும் கவனிக்க வேண்டியதில்லையென்று கருதுவது முற்றிலும் தவறான காரியமாகும். நாம் முன்னம் பல முறையும் கூறியதே போல் மனைவியருக்கு மனமில்லாதபோது மாப்பிள்ளைமார் மணவாழ்க்கைக்கு விழைவதுதான் கூடாத காரியமாகும்.

ஆனால் ஒவ்வொரு முறையும் கணவன்மார் மனைவியரின் உத்ஸாகத்தை உயரக்கிளப்பிய பின்னர்தான் சமீபத்தில் நெருங்குவதற்கு முற்படல் வேண்டும். மிருகங்களுக்குள்ளும் பக்ஷிகளுக் குள்ளும் இப்படிப்பட்ட குணமானது அதிகமாகக் காணப்படுகின்றது; பெண்ணுக்கு வேண்டிய வேட்கையை விருத்தி செய்த பிறகே ஆணானது அதன் சமீபத்தில் நெருங்குகின்றது ; ஆனால் மனுஷன் மட்டும் தான் மனமில்லாத வேளைகளிலும் மனுஷியைப் பலவந்தம் செய்ய முற்படுகிறான். பெண் மிருகத்துக்கு இப்படிப் பட்ட வேட்கையானது அதிகமாய் உண்டாகாத வரையில் ஆண் மிருகம் அதனிடம் சேரத் துணிவதில்லை.

ஸ்திரீகளின் உள்ளக்கிளர்ச்சியானது கணவனுடைய கட்டாயத்துக்காக மட்டும் ஒருபோதும் உண்டாய்விட மாட்டாது; ஆடவர் பெண்டிருடைய மன மொழி மெய் களெல்லாம் ஈடுபட்டிருந்தால் மட்டுமே லீலா ரம்யமானது இனியில்லா உற்சாகத்துடன் கரைபுரண்டு வழியும். ஆனால் அதை உற்சாகப்படுத்திக் கிளப்ப வேண்டியது கணவனுடைய கடமையா யிருக்கிறது; ஆதலின் ஒவ்வொரு முறையும் இன்பத்தில் மனங்கொள்ளுமுன் கணவன்மார் ஒவ்வொருவரும் தத்தம்முடைய மனைவியரை உல்லாசப் படுத்தி உற்சாக மூட்டல் வேண்டும். இதில்தான் இருவர்களின் இரகசிய முழுதும் பொதிந்திருக்கிறது. இதற்கு வேண்டிய பொறுப்பும் புருஷரைச் சார்ந்ததா யிருக்கிறது; இவ்வாறு அவளுடைய உற்சாகத்தை உண்டு பண்ண வேண்டியது அவளுக்குண்டாகக்கூடிய மனத்தின் வெறுப்பையும் தேகத்தின் சிரமத்தையும் போக்கவேண்டுமென்னும் ஒரு சாதாரணமான மானுஷீக தர்மத்தினால் மட்டும் அத்தியாவசியமாக இருக்கிறதென்று கருதவேண்டாம் ;

ஆனல் அவ்வாறு அகமுடையாளின் ஆர்வத்தை எழுப்புவ தால் ஆடவருக்கும் அளவுகடந்த ஆனந்தமே உண்டா கும். இருவருடைய மணவாழ்க்கையும் ஒருமனப் பட்டி ருக்குமாயின் அப்பொழுதுண்டாகும் சுகானந்தமானது இருவருக்கும் பிரம்மானந்தத்தை மட்டும் உண்டுபண் ணுவதல்லாமல் அவருடைய தேகத்துக்கும் மனத்துக் கும் அளவற்ற சுகாதாரத்தையும் அளிக்க வல்லதா யிருக்கும்.

இவ்வாறு ஒருமனப்பட்ட ஆடவரும் பெண்டிரும் தமக்குள் மனமொத்திருந்தால் எப்பொழுதும் இனமொத் திருப்பார். இவ் வுலகில் பெரும்பான்மையான மனிதர் கள் இல்வாழ்க்கையின் இன்பத்தை ஒரு மகா லஜ்ஜையான காரியமெனக் கருதிக்கொண்டு வெளிச்சம் நுழையக்கூடிய இடத்தில் உறங்குவது ஒருபோதும் கூடாதெனநினைத் திருக்கின்றனர்; இருளென்பதுதான் இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாத துணையெனக் கருதியிருக்கின்றனர் போ லும். உண்பதும் உறங்குவதுமான செய்கைகள் நல்ல காற்று உலாவும்படியான வெளிச்சத்திலேயே நடைபெற வேண்டுமென்று வைத்திய நிபுணர்களெல்லோரும் அபிப் பிராயப் படுகின்றனர்; நல்ல காற்று அதிகமாய் உலாவக் கூடிய இடமே உறங்குவதற்குத் தகுதியான ஸ்தான மாகும்; அவ்விடத்தில் இராக் காலங்களில் விளக்கு வெளிச் சமும் இருப்பது கூடா தென்று நினைப்பது தவருகும். இல்வாழ்க்கை யுடையான் இல்லத்தில் உறங்கும்போது இருட்டிலேதான் இருக்கவேண்டு மென்று எந்த மதமும் சொல்லவில்லை; எந்த வைத்திய நூலும் இவ்வாறு கூற வில்லை. பகலில் நல்ல வெளிச்சத்திலேனும் இரவில் விளக்கு வெளிச்சத்திலேனும் இல்லக்கிழவன் நல்லறம் பூண்டொழு

னுல் ஒருவருக்கும் ஒன்றும் குறைவில்லை. எனவே இருட்டறையில்தான் இராக் காலத்தில் படுத்துறங்க வேண்டுமென்னும் நியதி ஒன்றுமில்லை.

பெண்பாலாரின் அங்கக் கூறுபாட்டின் அமைப்பை உற்று நோக்குவோமாயின் அன்னாரின் ஜனனேந்திரியக் கருவிக்குள் இயற்கையாகவே ஒருவகை ஜவ்வானது இளமையில் குறுக்கே மறைத்துக்கொண்டிருக்கும். மணவாழ்க்கையின் காலமட்டில் இத்தகை ஜவ்வானது ஒழிக்கப்படுவதில்லை; பின்னர் இல்லற வாழ்க்கையுள் ஈடுபட ஈடுபடத்தான் அஃது அவ்விடத்திலிருந்து அப்பாற் செல்லும். இதை யுணராத ஆண் பெண்கள் பலர் விவாகமானவுடன் இடுக்கண் எய்துவ துண்டு. அங்குள்ள ஜவ்வானது ஒழியுமுன் மணமகன் மணமகள் இருவருக்குமே ஜனனேந்திரியக் கருவிகளில் ஒருவிதமான நோவுண்டாகும்; இதைக் கண்டு எவரும் அஞ்சத் தேவையில்லை. ஏனெனின் சில நாட்களுக்குப்பின் அவர்களுக்குள் இல்லற வாழ்க்கையென்பது இனமொத்த நல்லற வாழ்க்கையாய் மாறிவிடும். இதற்குமேல் அவரவரும் அனுபவத்தில் தெரிந்துகொள்வர்.

ஆதலின் மணவாழ்க்கையின் காலத்தில் என்ன நிகழ்கிறதென்று அவரவரும் செவ்வனே தெரிந்துகொள்ளலாம்; இல்லற வாழ்க்கையுள் நுழைந்து சிலகாலம் சென்றவுடன் அவரவரும் அதன் இனமொத்த தன்மை இன்னதென்பதை நன்கு தெரிந்துகொள்வார்கள். ஆனால் பருவகாலத்தை யடைந்த புதுப்பெண் ஒருத்தி பள்ளியறைக்குள் நுழைந்தவுடன் திக்பிரமை கொண்டவளேபோல் திகைப்புண்டு தியங்குகிருள்; ஏனெனின் அவளுக்கு அவ்வில்லற சம்மந்தமான ஞானமொன்றும் அதற்குமுன் ஒரு

வாலும் கற்பித்துக் கொடுக்கப்படுவதில்லை. தன்னுடைய தேகத்தினுள்ளும் மேற்கூறிய ஐவ்வொன்று குறுக்கே தடுத்துக்கொண் டிருப்பதும் அப்பெண்ணுக்குத் தெரிய மாட்டாது; இத்தகைய ஐவ்வொன்று எல்லாப் பெண் களுக்கும் இயற்கையாகவே உண்டென்றும், அது முதன் முதலில் உண்டாகும் மணவாழ்க்கையினால் வழிவிலகு மென்றும், அதனால் சிறிது நோவுண்டாகக் கூடுமாயினும் அதன் காரணமாக அச்சமொன்றும் கொள்ளவேண்டிய தில்லையென்றும் ஒவ்வொரு பருவமடைந்த மணமகளுக் கும் அவரவரின் அன்னைமார் அறிவித்தல் அத்தியாவசிய மாகும். ஆனால் இப்பொழுது எல்லோரும் இந்த விஷ யத்தை உணர்ந்துகொள்ளாமலே மணவறைக்குள் புகு கின்றனர். இவர்களின் கதிதான் இப்படி யிருக்கிறதென் றாலோ இவர்களை மணந்துகொள்ளும் மாப்பிள்ளைமாரின் அறியாமையும் அதனினும் அதிகமாகத்தான் காணப்படு கின்றது. பெண் மாப்பிள்ளைகள் தங்களுடைய ஜனனேந் திரியக் கருவிகளின் தன்மை இன்னதென் றறியாமலும், தாங்கள் செய்யப்போகும் இல்லற வாழ்க்கையின் இரகசி யம் இன்னதென் றுணர்ந்து கொள்ளாமலும் மணவாழ்க் கையின் சுகானந்தத்தைப் பெறும் பொருட்டுப் பள்ளி யறைக்குள் புகுவதுதான் ஆச்சரியத்துக்குள்ளெல்லாம் மகா ஆச்சரியமாய்க் காணப்படுகின்றது.

மேலே கூறியவாறெல்லாம் உள்ளக் கிளர்ச்சியையும் ஒழுங்கான இடத்தையும் அடைந்துகொண்ட கணவனும் மனைவியும் எப்பொழுதும் சுகாசனத்தில் உறங்கவேண்டும்; தேகத்துக்கும் மனத்துக்கும் ஏககாலத்தில் ஆனந்தத்தை யும் ஆரோக்கியத்தையும் விளைக்கக்கூடிய இலகுவான ஆஸ னத்தில் இருப்பதுதான் எல்லோருக்கும் ஒப்பமுடிந்த

உடன்பாடாகும்; சதிபதிகளிருவருக்கும் தேகாரோக்கியத்துடன் சுகானந்தமும் உண்டாகவேண்டுமென்பதே முக்கிய நோக்கமாயிருத்தல் வேண்டும். இவ்வுலகில் இல்லற இன்பத்தைத் தரத்தக்க வழி ஒன்றுதான் உண்டென்று ஒருவராலும் கூறுவது முடியாது; அவரவருக்கும் ஆத்மானந்தத்தை விளைக்கத்தக்க மார்க்கங்கள் அனேகமுண்டு; தங்களுடைய தேகத்துக்கும் மனத்துக்கும் நலிவுண்டாகாதவழியாலெல்லாம் அந்தச்சதிபதிகள் மணவாழ்க்கையின் மங்களானந்தத்தை மகிழ்வுடன் பெற்றுக்கொள்ளலாம். அவரவருக்கும் இன்பந் தரக்கூடிய வழி இன்னதென்பதை அவரவருமே அனுஷ்டித்துத் தெரிந்துகொள்ளல் வேண்டும்; அவரவரின் தேகக் கூறுபாட்டின் ஒழுங்கை மற்றெவரும் தெரிந்துகொள்ளுதல் முடியாது. ஆனால் பலர் தாங்கள் இல்லற வாழ்க்கையில் உறங்கவேண்டிய ஒழுங்கைத் தெரிந்து கொள்ளாமல் தங்களுடைய தேகத்துக்கும் மனத்துக்கும் அதிகமான நலிவையும் உற்சாகக் குறைவையும் உண்டு பண்ணிக்கொள்வதுண்டு. ஈதெல்லாம் அவரவரின் அனுபவத்தால் விளையக்கூடிய படிப்பினையாகும். பொதுவாகத் தேகத்துக்கும் மனத்துக்கும் ஒருவிதத்திலேனும் அயர்ச்சியாவது ஆயாஸமாவது உண்டாகாமல் சுகமான எளிய வழியில் உறங்குவதுதான் இல்லற இன்பத்துக்குரிய எண்ணிலா ஆனந்தத்தைத் தரும்.

ஸ்திரீ புருஷ வாழ்க்கையில் ஒருவகை எலெக்ட்ரிக் (மின்சார) உணர்ச்சி யுண்டென்பதை நீங்களனைவரும் நன்குணர்ந்திருக்கிறீர்கள்; ஆனால் அந்த மின்சார சக்தியில் உடன்பாடென்றும் (Positive), எதிர்மறை யென்றும் (Negative) இருவகை வேறுபாடுகளுண்டு. இந்த இருவகைச் சக்திகளும் ஒன்றோடொன்று ஐக்கியமாவதனால்

தான் இடையில் எலெக்ட்ரிக் தேஜஸ் உதயமாகின்றது; இப்படிப்பட்ட தேஜஸே இரதி கேளிக்கையிலும் இன்றியமையாததாய்த் தோன்றிக்கொண் டிருக்கிறது. ஆடவருடைய சூரிய கலையில் (வலப்பக்கத்து நாசியில்) சுவாசம் ஓடிக்கொண் டிருக்கும்போது அன்னவரின் உடன்பாட்டு மின்சாரம் வெளிக் கிளம்பும்; அஃதேபோல் பெண்டிரின் சந்திர கலையில் (இடப் பக்கத்து நாசியில்) சுவாசம் ஓடிக் கொண்டிருக்கும்போது அன்னவரின் எதிர்மறை மின்சாரம் வெளிக் கிளம்பும். எனவே ஆடவரின் சூரிய கலையும் பெண்டிரின் சந்திர கலையும் சம காலத்தில் ஓடும்படியாய் அவர்க ளிருவரும் உறங்குதல் வேண்டும். அதற்குரிய மார்க்கமானது பின்வருமாறு காணப்படுகிறது: சயனத்தில் உறங்கும்போது மணமகன் தன் இடப்புறமாகத் திரும்பிக் கொண்டு மணமகளைப் பார்த்தவண்ணம் படுத்தல் வேண்டும். மணமகளோ தன் வலப்புறமாகத் திரும்பிக்கொண்டு மணமகனைப் பார்த்தவண்ணம் படுத்தல் வேண்டும். அப்பொழுது இடப்பக்கம் திரும்பி யுறங்கும் புருஷனுடைய வலப்பக்கத்து நாசியில் சூரியகலையும், வலப்பக்கம் திரும்பி யுறங்கும் ஸ்திரீயினுடைய இடப்பக்கத்து நாசியில் சந்திர கலையும் சம காலத்தில் ஓடத் தலைப்படும். ஆதலின் அவ் வேளையில் புருஷ உடன்பாட்டு மின்சாரமும் ஸ்திரீயின் எதிர்மறை மின்சாரமும் ஒன்றோடொன்று ஐக்கியப்பட்டு மேற்கூறிய எலெக்ட்ரிக் தேஜஸை உண்டுபண்ணுகின்றன. எனவே அவ்விருவரும் தம்முடைய இல்லற இன்பத்தை இணையில்லா நல்லறத்தை எய்த வேண்டுமாயின், கணவன தன் இடப்புறம் திரும்பி மனைவியின் முகார விந்தத்தையும், மனைவி தன் வலப்புறம் திரும்பிக் கணவனது முகார விந்தத்தையும் நோக்கியவண்ணமாய் ஒருவரையொருவர்

உற்று நோக்கிக்கொண்டு உறங்குதல்வேண்டும். இதுதான் எல்லோராலும் அனுஷ்டிக்கப்பட வேண்டிய இல்லறத் தர்ம நல்லறச் சயனமாகும். இவ்விதமே இராக் காலத்தில் உறங்க வேண்டுமென்று மூதறிவாளர் முறையறிந்துரைப் பர்; இதனால் இருவருடைய நேசப் பான்மையும் என் றென்றும் இணைபிரியா திருந்துவரு மென்றும் அம் மகான் களும் மகாத்மாக்களும் இயம்பா நிற்பர். இதுதான் மண வாழ்க்கையின் மர்மத்தால் விளையக்கூடிய இல்லற எலெக் ட்ரிக் தேஜோமயானந்த மாகும்.

மணமகனும் மணமகளும் தம்முள் கருத்தொரு மித்து இல்லற வாழ்க்கையை இனிது நடாத்தும்போது சிறிது நேரத்துக்குள் மணமகனுடைய தேகமும் மனமும் வேட்கைத் தீயின் முகட்டை யடைந்து அதன் காரண மாய்ப் பிரேமையின் மின்சாரத் தாக்குதல் உண்டாய் உடனே அவனுடைய தாருட்ய நஷ்டத்தால் சோர்ந்து விடுகிறான். இருவரும் ஒரே சமமான பிரேமையை அடைந் திருப்பார்களாயின் இருவருக்கும் ஒரேகாலத்தில் இப் படிப்பட்ட பிரேமை உண்டாகும்; இத்தன்மைத்தாகிய சமகால பிரேமையில்தான் இல்லக் கிழவர்களின் இன்ப முழுதும் காணப்படுகிறது. ஆனால் அதிருஷ்டசாலிகளான ஆடவருக்குத் தாம் அவர்களுடைய பெண்டிரின் ஆர்வ நிலையும் ஆடவருடன் ஸமகாலத்தை யுடையதாய் ஒத் திருக்கும் ; ஆனால் பெரும்பான்மையான புமான்களுக்கு அவர்களுடைய மனைவிகளின் பிரேமையானது உருக் கொள்வதற்கு முன்னரே தாருட்யத் தோற்றம் வெளி யாய் விடுவதுண்டு. கணவன் தன்னுடைய வேட்கைத் தணிவால் மன மொழி மெய்க ளெல்லாம் அயர்ந்து கிடக் கும்படி சோகமுற்றிருக்கும் வேளையில் அவனுடைய மனை

வியானவள் தன்னுடைய ஆர்வத்தின் திருப்தி சிறிதும் உண்டாகாமையால் அளவுகடந்த ஏமாற்றத்தை யடைந்திருப்பாள். இப்படிப்பட்ட ஒருதலை இன்பத்தாலும், இருதலை இன்ப மார்க்கங்கள் இன்னவை யென்று தெரிந்து கொள்ளாமையாலும் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது புமான்களால் அவர்களுடைய மனைவியருக்கு எவ்வகையான இல்வாழ்க்கைச் சுகமும் உண்டாவதில்லை. புருஷர்கள் தங்களுடைய ஆர்வத்தைமட்டும் பூர்த்தி செய்து கொள்ளப் பிரயத்தனப் படுகிறார்க ளல்லாமல் தங்களுடைய நாயகியாரின் மனோநிலைமையைச் சிறிதும் சிந்திப்பதில்லை. இல்லற வாழ்க்கையில் கணவன்மார் கவனிக்க வேண்டிய பல விஷயங்களுண்டு. இவற்றுள் பொறுமை யென்பது ஒரு முக்கிய குணமாகும்; இதைச்செய்வதற்கு முடியாமல் பெரும்பான்மையான புமான்கள் அவசரத்தால் ஆத்திரப்பட்டு விடுகின்றனர். ஆனால் சற்று அமைதியுடன் தங்களுடைய புத்தியை நிதானப் படுத்துவார்களாயின் இல்லக் கிழவர்களின் இரு மனமும் ஒருமனமாய் இன்பசாகரத்துள் மூழ்கத் தலைப்படும். ஆனால் தேகவன்மையின் இயற்கையான தாருட்யக் குறைவாலோ, அல்லது வீரிய வலுவிழந்த வியாதியின் தன்மையாலோ புருஷர்கள் கஷ்டப்படும்போது அவர்கள் தக்க வைத்தியர்களிடம் காட்டித் தம்முடைய தேகவன்மையை முறுக்கேறும்படி செய்து கொள்ளல் வேண்டும். அதிசீக்கிரம் வீரிய வெளிப்பாட்டை அடைந்துவிடும் மனிதர்கள் தங்களுடைய கவனக் குறைவாலேயே இல்லற இன்பத்தை இழந்துவிடுகிறார்கள்*. ஆணுக்கேனும் பெண்ணுக்கேனும்

* இப்படிப்பட்ட வியாதிகளுக்கு எங்களுடைய வாலாஜாமாத்திரைகள் அபூர்வமான இன்ப சுகத்தை யளிக்கும்.

இல்வாழ்க்கை சம்மந்தமான குணக்கே டுண்டாகும்போது அவர்கள் தக்க வைத்திய முறையால் தங்களுடைய தேகத்தை நல்ல நிலையில் வைத்துக்கொள்ளலாம். பால்யத்தில் செய்துகொண்டு வந்த துஷ்டப் பழக்கத்தினுலோ அல்லது இயற்கையான தேகவலுவின்மையாலோ இப்படிப்பட்ட இல்வாழ்க்கைக் குணக்கேடுகள் உண்டாகின்றன. ஆனால் மனோவசியப் பழக்கத்தினாலும் மனிதர்கள் தங்களுடைய வீரிய வெளிப்பாட்டை அடக்கிக்கொள்ளுதல் சாலுமென்று யோகாப்பியாச முறையுடையோர் கூறுகின்றனர்; சிறிதுகாலம் பழக்கப்படுத்தினுல் இவ்வகைச் சாதனை அதி எளிதில் உண்டாய் விடுமென்று அன்னவர் கூறுநிற்பர். இவ்வாறே ஸ்திரீகளும் மனப் பழக்கத்தால் இந்திரியங்களின் ஆட்சியைப் பெறலாமென்று கூறுகின்றனர்.

இவ்வுலகில் மற்றும் ஒருவிதமான மனிதர்கள் சிலர் உண்டு: இவர்கள் குழவியைப் பெறும் ஒரே நோக்கத்தாலல்லாமல் மற்றைக்காலங்களில் மனைவியரைக் கண்ணெடுத்துப் பார்ப்பதும் கூடாதென்று வாதம் புரிகின்றனர்; சந்தான உற்பத்திக்கல்லாமல் வேறு நோக்கத்துடன் இல்வாழ்க்கை நடத்துவது சுயநயம் பிடித்த ஒருவெறுங்காரியமென்பது இன்னவரின் அபிப்பிராயமாகும். ஆனால் இவ்வாறு இவர்கள் கூறுவது இல்லற வாழ்க்கைக்குரிய சரியான அபிப்பிராயமாக மாட்டாது. சந்தானவிருத்தியென்பது நம்முடைய கையிலில்லை; புத்திரோற்பத்திக்காக மட்டும் மணவாழ்க்கையில் சம்மந்தம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறுவோமாயின் அப்படிப்பட்ட புத்திர உற்பத்தியாகுங் காலம் இப்படிப்பட்ட தென்று எப்படி நாம் கண்டுபிடிப்பது? பலகாலும் இல்வாழ்க்கையில் இருந்தா

லன்றே ஒருகால் பிண்டோற்பத்தி உண்டாகும். சில வேளைகளில் நூற்றைம்பது முதல் இருநூறு முறைமட்டும் மணவாழ்க்கையுள் புகுந்தாலும் ஒரு குழந்தை யுண்டாவது கஷ்டமாயிருக்கிறதென்பர்; ஆதலின் குழந்தை உண்டாவதற்கு மட்டுமேதான் இல்வாழ்க்கை வேண்டுமென்பது சாரமற்ற வெறும் பேச்சாகவே காணப்படுகின்றது. மேலும் மணவாழ்க்கையென்பது மனிதனுடைய மனத்திலும் தேகத்திலும் இயற்கையாய் உண்டாகக்கூடிய ஒரு வேட்கையைச் சாந்தியடையும்படி செய்கிறது; இதனால் ஸ்திரீ புருஷர்களுக்கு எவ்வளவோ எண்ணத்தொலையாத ஐம்புல ஆனந்தங்களையெல்லாம் அனுபவிக்கும்படியான ஒரு பரமானந்தம் உதிக்கக்கூடிய ஹேது ஒன்றுண்டாகிறது. இன்னமும் ஆடவர் பெண்டிரின் ஆத்மதிருப்தியும் அன்னவரின் இல்வாழ்க்கை இன்பத்தால் உதயமாகின்றது. யாம் முன்னமே இந்நூலின் முன்னுரையில் கூறியதேபோல், ஸ்திரீ புருஷர்கள் தங்களுடைய பஞ்சேந்திரிய இஷ்டபூர்த்திக்காக மட்டும் இல்லற இன்பம் அனுபவிப்பதில்லை; ஆனால் அதனா லுண்டாகக்கூடிய ஆத்மதிருப்திக்காகவே அவர்கள் அடிக்கடி மணவாழ்க்கை இன்பத்தை அனுபவிக்க வேண்டியதிருக்கிறது. மணவாழ்க்கையால் உண்டாகக்கூடிய பஞ்சேந்திரிய இன்பத்தைக் காட்டினும் அதை அனுபவிக்கிறோ மென்னும் ஆத்மதிருப்திக்குரிய ஆனந்தமே சிறந்ததாய்க் காணப்படுகின்றது.

இப்படிப்பட்ட மனிதர்களன்றி இன்னும் சிலருமுண்டு: இவர்கள் தங்களுடைய இல்லற வாழ்க்கையால் சந்தான உற்பத்தி உண்டாய்விடக் கூடுமென்னும் அச்சத்தினால் மணவாழ்க்கையின்போது தங்களுடைய தாருட்யத்தை வெளியில் விரயமாக்கி விடுகின்றனர். இப்படிப்பட்ட

முறையால் கர்ப்பமுண்டாக ஹேதுவில்லாமற் போயினும் ஆண்பிள்ளைகளின் தாருட்யமானது அனுவசியமாய் நஷ்டமாய் விடுவதில் ஒன்றும் சந்தேகமில்லை. இதனால் மணமகனுக்கு மட்டும் நஷ்டமென் றெண்ணவேண்டாம்; மணமகளுக்கும் இப்படிச் செய்வதால் அதிக நஷ்ட முண்டாதல் கூடும்; புமான்களின் வீரியத்தால் ஸ்திரீகளுக்கும் தாருட்ய விருத்தியுண்டு; மேலும் இதனால் ஒருவகை உள்ளக் கிளர்ச்சியு முண்டு; ஆனால் இதற்கு மாறாக வீரியத்தை வெளியில் விரயம் செய்வதால் பெண்ணின் நிலைமையானது திரிசங்கு சுவர்க்கமாகத்தான் முடிகிறது; இப்படிச் செய்வதால் ஸ்திரீகளுக்கு ஏமாற்ற முண்டாய்விடும். இன்னமும் அன்னவரின் தேகாரோக்கியத்துக்கும் ஒருவகை நஷ்டமுண்டு: புருஷ தாருட்யத்தால் பெண்களின் தேகாரோக்கியத்துக்கு மெத்த நன்மை உண்டாகிறதென்று வைத்திய நிபுணர்க ளெல்லோரும் அபிப்பிராயப் படுகின்றனர். மேலும் இப்படிப்பட்ட இந்திரிய நாசத்தால் புருஷர்களுக்கும் மணவாழ்க்கையில் ஒருவகை வெறுப் புண்டாவதுடன் அவர்களுக்கு நாளடைவில் நபுஞ்சகத்தனமும் உண்டாய் விடுதல் கூடும். தனக்கும் பயனில்லாமல் தன் மனைவிக்கும் சுகமில்லாமல் இவ்வாறு செய்யப்படும் வீரிய நாசத்தால் இருவருக்கும் அளவற்ற தீங்குக ளெல்லாம் விளைவதால் இப்படிப்பட்ட அனுசார முறையை அறிஞர்கள் ஆமோதிக்காமல் வெறுத்து ஒதுக்குகின்றனர்.

எத்துணை விதமாக எழுதிக்காட்டிய போதிலும் இன்ன இடத்தில் இன்ன நேரத்தில் இன்ன நிலைமையில் இன்ன விதமாகத்தான் இல்லற வாழ்க்கையில் இலேசாக ஒழுக வேண்டுமென்பதை அவரவரும் தத்தம் சொந்த அனுபவத்தினால்தான் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்; ஆனால்

ஒவ்வொருவருக்கும் பொருத்தமான கட்டுப்பாடுள்ள சட்டமொன்றும் செய்வது முடியாது. இதுவரையில் இந்த அத்தியாயத்தில் சொல்லப் பட்டிருக்கும் சிற்சில பொது வான விதிகளைக்கொண்டு அவரவரும் தத்தம்முடைய பகுத்தறிவைச் செவ்வனே உபயோகித்துத் தமது சொந்த விஷயத்தை நிதானித்துத் தீர்மானித்துக்கொள்ளல் வேண்டும்; அவரவருக்கும் அவரவரே ஆசிரியராயிருத்தல் வேண்டும். இதுதான் இல்லறத்தின் இரகசியம்; இதுதான் இன்பத்தின் இனிமை; ஆதலின் இதுதான் காதலின் வெற்றியுமாகும்.

அத்தியாயம்—7

ஸ்திரீ புருஷ மணவாழ்க்கை

நாணென வொன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்.—(குறள்)

சென்ற அத்தியாயத்தில் ஸ்திரீபுருஷர்கள் இரவிலேனும் பகலிலேனும் செம்மையான வெளிச்சத்தில் இல்லற வாழ்க்கையில் இயங்கலா மென்று கூறினோம். பகலில் மணவாழ்க்கையி லிருப்பதால் பாதகமொன்று மில்லை*. ஆனால்

* அழகும் குணமுமுள்ள அதிமேதாவியான புத்திசாலிப் பிள்ளைகளைப் பெற விரும்புவோர் பகலில் நல்ல வெளிச்சத்தில் மணவாழ்க்கையுட் புகுதலாமென்று பண்டிதர்கள் கூறுநிற்பர்.

அதிகாலையில் தூக்கத்திலிருந்து விழித்தவுடன்படுக்கையை விட் டெழுந்திருக்குமுன் ஸ்திரீ புருஷர்கள் இல்வாழ்க்கை இன்பத்தை யனுபவிக்க முற்படுவார்களாயின் அஃது அவர்களுடைய சுகாதாரத்துக்குப் பெருத்த தீங்கையே விளைவிக்கு மென்று வைத்திய சாஸ்திர நிபுணர்கள் அனைவரும் அபிப்பிராயப் படுகின்றனர். வயிறு நிரம்ப ஆகாரம் செய்தவுடனும் அப்படிப்பட்ட வாழ்க்கையில் கருத்துக் கொள்வது கூடாது. அதிக உழைப்பினால் தேகமும் மனமும் தளர்ச்சி யடைந்து அயர்ச்சியுற் றிருக்கும்போதும் மணவாழ்க்கையென்பது பொருந்தாது. இவ்வாறே மாதப் புறவுடையின் காலத்திலும்* முதிர்ந்த கர்ப்பத்தின் வேளையிலும் மனைவியரிடம் நெருங்குவது முற்றிலும் வெறுக்கத் தக்க செய்கையே யாகும். ஸ்திரீ புருஷர்களுடைய மனமானது அதிகமான துக்கத்துள் ஆழ்ந்திருக்கும்போதும் அப்படிப்பட்ட இன்பத்தை நினைப்பது கூடாது. ஆனால் வைத்திய நிபுணர்களின் பெரும்பான்மையான அபிப்பிராயத்தின்படி ஆராய்ந்து பார்க்குமளவில் இல்வாழ்க்கை இன்பத்துக்கு மகா உசிதமான காலமாயிருப்பது, இரவில் போஜனம் செய்துகொண்ட பிறகு சிறிதுநேரம் சென்று, உறக்கம் வருவதற்கு முன்னர்தான் என்று சந்தேகமறத் தெரிந்து கொள்ளுகிறோம். மணமகனும் மணமகளும் அதிகஉல்லாசமா யிருக்கும்போது இரவில் தூங்கப்போகு முன் நல்ல வெளிச்சத்தில் மணவாழ்க்கையுட் புகுவது தான் அவர்களுடைய தேகத்துக்கும் மனத்துக்கும் அதிக

* மாத வெளிப்பாட்டின் உதிரத்துடன் வெளியாகும் சளியில், சிலவேளையில் புருஷர்களுடைய சிறுநீர்த்தூம்பில் அரிப்பையும் அருவருக்கத்தக்க வியாதியையும் உண்டுபண்ணக்கூடிய துர்க்குணம் காணப்படுவதுண்டு.

மான ஆரோக்கியத்தையும் சுகானந்தத்தையும் அளிக்கும். இல்லற இன்பத்துக்குப் பின் புருஷனும் பெண்ஜாதியும் அயர்ந்து நித்திரை புரிய நேர்வதால் இருவருக்கும் அளவு கடந்த ஆத்ம திருப்தியும் ஆரோக்கிய மேன்மையும் உண்டாகும். அயர்ந்த நித்திரையால் எவ்வளவு ஆரோக்கியமுண்டாகக்கூடு மென்பதை அப்படிப்பட்ட நித்திரையற்ற மனிதர்களின் அவஸ்தையிலிருந்தே நன்கு தெரிந்துகொள்ளலாம். பகலிலுண்டாகும் தேக அயர்ச்சிக்கும் மன அயர்ச்சிக்கும் இராக்காலத்தில் நித்திரைமட்டும் இல்லாமற் போய் விடுமாயின் இவ் விகலோக வாழ்க்கையானது எவ்வளவு பளுவான நரகவேதனையாய் முடியுமென்பதை நீங்களே சற்று நிதானம் பண்ணிப் பார்ப்பீர்களாக.

கணவன் மனைவியரின் மணவாழ்க்கை இன்பத்துக்குப் பின் அவர்களிருவரும் அயர்ந்து உறங்கிவிடுவதால் அவர்களுக்குண்டான நரம்புத்தளர்ச்சிக் கெல்லாம் பரிகாரம் உடனே ஏற்பட்டுவிடுகின்றது. ஆனால் ஒருவனுக்கு மனைவியிடம் நெருங்கவேண்டு மென்னும் உணர்ச்சியானது உச்சநிலையை யடைந்திருந்து, அவனுக்கு அவ்வேளையில் தன் மனைவியானவள் சமீபத்தில் நெருங்கக்கூடாத நிலையிலிருப்பாளாயின் அவனுடைய மனமானது இராமுழுதும் என்ன பாடுபடுமென்பது உங்களுக்குத் தெரியுமா? இராமுழுதும் அவன் தன் படுக்கையில் புரண்டு புரண்டு கொண்டு உடம்பு முழுதும் மயிர்க்கூச் செறியும்படியான தன்மையில்தான் அனலில் விழுந்த புழுவைப்போல் அதிகமான வேட்கை நோயால் அவஸ்தைப்படுவான்; இவ்வாறின்றி அவன் தன் மனைவியுடன் ஐக்கியமாய் இல்லற இன்பத்தை இயல்புடன் அனுபவிப்பானாயின் ஆர்வப் பிரேமை கொண்டிருந்த அவர்களுடைய மனமும் தேகமும் இல்லற இன்பத்

தை அடைந்தவுடன் அவர்களுடைய நரம்புக் கருவிக ளெல்லாம் முறுக்குத் தளர்ந்து தேகமும் மனமும் அயர்ச் சியை யடைந்தவுடன் சிறிது நேரத்திற்குள் ஆழமான நித்திரை வந்து அதிகமான ஆரோக்கியத்தைக் கொடுத் தருளும். இப்படிப்பட்ட அயர்ந்த நித்திரையால் பொழுது விடியுமுன் போன பலம் நிறைந்து கணவன் மனைவியரின் தேகமும் மனமும் முழு ஆரோக்கியமான நிலைமைக்கு வந்து விடுகின்றன. ஆனால் புருஷனுடன் பெண்சாதிக்கும் இன்ப வேட்கையானது இனிது நின்று சமவாழ்க்கையை யடைந் திருக்குமாயின் அவர்க ளிருவருக்குமே சமமான அயர்ச்சி யும் அயர்ந்த நித்திரையும் உண்டாகும்; அவ்வாறின்றி மனை வியின் இன்பமானது பூர்த்தியாகுமுன் கணவன் மட்டும் தன்னுடைய ஆவலைத் தணித்துக்கொண்டு அவளைப்பற்றிச் சிறிதும் கவனியாது உறங்கி விடுவானாயின் அவளுடைய நிலைமை என்னும் ? அவளுடைய மனம் திருப்தியடையச் சற்றுநேரம் செல்லலாம்; ஆனால் அவன் மட்டும் இரண்டு மூன்று நிமிஷத்துக்குள் தன்னுடைய மனத்தை மாத்திரம் திருப்தி செய்துகொண்டு தன் ஆர்வம் தணிந்தவுடன் மனந் தளர்ந்து அயர்ச்சி யடைந்து கிடப்பானாயின் அவளுடைய எண்ணமானது அன்னவளின் நித்திரைக்குப் பங்கம்செய்து அவளது தேகத்தையும் மனத்தையும் ஏமாற்றத்துக் குள் ளாக்கி விடாதோ? இப்படிப்பட்ட ஏமாற்றத்தால் சில சம யங்களில் இரண்டு மூன்று மணிநேரம் வரையில் நித்திரைக் குப் பங்கம் உண்டாகலாம் ; இன்னும் சில வேளைகளில் இராமுழுதும் சற்றும் உறக்கமேயில்லாமல் போய்விடவுங் கூடும். இந்தியாவில் விவாகமான ஸ்திரீகளுக் குண்டாகும் வியாதிகளுள் பெரும்பான்மையன இப்படிப்பட்ட வியவ காரத்தால் விளையக்கூடிய நித்திரைப்பங்கத்தாலேயே உண்

டாகின்றன வென்று வைத்திய சாஸ்திரிகள் அபிப்பிராயப் படுகின்றனர். ஒவ்வொரு சமயத்திலும் ஸ்திரீகளின் வேட்கையானது பூர்த்தியாகாமல் புருஷர்களின் ஆர்வம் மட்டும் தணிந்துகொண்டே போகுமாயின் அந்த அபலைகளான அணங்கியரின் தேகஸ்திதி என்னும் ?

"காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்,"

என்றூர் குறளாசிரியரும். ஆனல் இவ் வுலகில் அனேக மனிதர்களுக்குத் தங்களுடைய மனைவிகளுக்கும் சாந்தியடைய வேண்டிய இல்வாழ்க்கை இன்பம் உண்டென்னும் ஸூக்ஷ்மமானது தெரியமாட்டாது. அப்படிப்பட்ட கணவன்மார் தங்களுடைய ஆர்வம் தணிந்தவுடன் தங்களுடைய மனைவியருக்கும் ஜனித்த வேட்கையானது தானே தணிந்துவிட்டதென்று தவருகக் கருதிவிடுகின்றனர் ; ஆனல் அறிவுள்ள மாப்பிள்ளைமார்கள் தங்களுடைய மனைவியரின் இஷ்டபூர்த்தியும் நிறைவேறும் வரையில் பிற்படுவார்கள். அவர்களின் இஷ்டபூர்த்தி சித்தித்ததென்று அவர்களே தெரிவிக்கும்படியான சந்தேகக் குறிப்புக்களைப் பரஸ்பரம் ஏற்படுத்திக்கொண்டு, அவர்கள் தங்களின் அபீஷ்டம் சித்தித்ததென்று தெரிவித்தவுடன் அதன் பின்னரே இவர்களும் தங்களின் தர்மத்தைப் பூர்த்தி செய்ய முற்படுவர். இஃதே இரு வகையோடும் இறும்பூது நிறைந்திடும் இன்பமயமான மன்மத மார்க்கமாம். இவ்வாறின்றி அவர்கள் தங்களுடைய ஆர்வத்தை மட்டும் தணித்துக்கொண்டு தம் மனைவியரை எல்லாம் திரிசங்கு சுவர்க்கத்தில் விட்டு விடுவார்களாயின் அதனல் அவர்களுடைய தூக்கமும் கெட்டு அவர்களது தேகத்துக்கும் மனத்துக்கும் அதிகமான ஆரோக்கியக்குறைவு முண்டாகும்.

இல்வாழ்க்கை நிலைமையால் திருப்தியை அடையாத சில பெண்கள் பிறகு சிலமணி நேரம் சென்று உறங்கிவிடவுங் கூடும்; ஆனால் பெரும்பான்மையான ஸ்திரீகளுக்கு இப்ப டிப்பட்ட திரிசங்கு சுவர்க்க நிலையால் நித்திரையின்மையும், அதன் காரணமாகப் பற்பல வியாதிகளும் உண்டாதல் கூடும். ஆதலின் பெண்களுக்கு மணவாழ்க்கையில் விருப்ப மில்லாதபோது புருஷன்மார் விழைவது கூடாத காரியமா கும்; அதைக்காட்டினும் அதிகமான தீமையை விளைக்கும், அப்படிப்பட்ட காலத்தில் அவர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யாமல் அவர்களைத் திரிசங்கு சுவர்க்கத்தில் விட்டு விடுவது. இப்படிப்பட்ட நிலைமையில் ஒரு பெண் மணி இரவெல்லாம் நித்திரை யில்லாமல் அவஸ்தைப்படும் போது அவளுடைய கணவன்மட்டும் தன்னுடைய ஆர் வத்தைத் தணித்துக்கொண்டு தன்னருகில் அயர்ந்து நித் திரை செய்வதைக் கண்டால் அவளுடைய மனம் என்ன பாடுதான் படமாட்டாது! திடசித்த மில்லாச் சிலரது உள்ளம் வியபிசார தோஷத்தின் பாற்பட வைக்கின்ற நினைவுகளில் தடுமாறச் செய்துவிடும். ஆரம்பத்தில் பல பெண்கள் தங்களுக்குண்டான ஏமாற்றம் இன்னதென்ப தைத் தெரிந்துகொள்ளாம லிருக்கலாம்; ஆனால் அவர்கள் தெரிந்து கொண்டாலும் தெரிந்து கொள்ளாமற் போயி னும் நாளடைவில் அவர்க ளுடைய தேக சுகமானது பாதிக்கப்படாமல் போகமாட்டாது. இவ்வாறு அவர்க ளுடைய தேகசுகம் அதிகம் கெடுவதுடன் தங்களுடைய மனோ நோயாகிய மாறா வேதனையால் அவர்களுடைய மனமும் மிகுதியான தீமையை யெல்லாம் பெறுகின்றது. கற்புடை மகளிரைக் காக்க விரும்பும் இவ்வுலகம் இந்த ஸூக்ஷ்ம தரிசனங்களையும் உணர்ந்து அவ்வழிப் பட்டு

அந்தத் தர்மத்தையும் அவசியம் திருப்திபடுத்தமுற்படல் வேண்டும்.

செப்பாரு முகிழ்முலையா ரெல்லாருங் கணவனுடன்
சேர்ந்துவாழ
ஒப்பாருமில்லாவென் கணவனுடன் யான்கூடி
யுறவாடாமல்
வெப்பாலு மிகுகாமத் துயராலு நாடோறு
மெலிந்துவாடி
இப்பாடு படவென்றோ இறையோனென் றலையேட்டி
லெழுதினனே.

ஆனால் வாரமொன்றுக்கு இரண்டு முறையோ அல்லது மூன்றுமுறையோ மணவாழ்க்கையுட் புகுவதால் தன்னுடைய ஆர்வம் மட்டும் தணிந்து அவனது தேகசுகமும் க்ஷேமமான நிலைமையி லிருப்பதால் அப்படிப்பட்ட கணவன் தன்னுடைய தேக சுகத்தை மட்டும் கவனித்துக் கொண்டு தன் மனைவியின் மனோ நிலைமை என்ன தன்மையி லிருக்கிறதென்று ஒருசிறிதும் சிந்திப்பதில்லை. மனைவியரின் விருப்ப காலம் இன்னதென் றுணர்ந்துகொள்ளாத கணவன்மார் தங்களுடைய மணவாழ்க்கையின் வேளையிலும் அவர்களுக்கு வேண்டிய பூர்ணசுகத்தையும் அளிப்பதில்லை. புருஷன் மட்டும் தன்னுடைய வேட்கை தணிந்தவுடன் தன் மனைவியின் பரிதாப நிலைமையைச் சிறிதும் கவனியாது தான் மற்றொரு புறம் திரும்பிக் கொண்டு தூங்கும் வேளையில், அந்த மனைவியானவள் தன்னுடைய பொல்லாக்காலத்தா லேற்பட்ட மனோவேதனையால் மந்தங்கொண்டு தூக்கம் பிடியாமல் படுக்கையின் மீது புரண்டுகொண் டிருக்கும்போது அவள் தன் கணவனுடன் வார்த்தையாடலா மென்று மீண்டும் முன் வருவா

ளாயின் அவன் தன்னுடைய மனமும் தேகமும் அயர்ந்து கிடப்பதன் காரணமாகவே ஒன்றும் பேசாமல் சும்மா வெறுப்புட னிருப்பானாயின் அவளுடைய மனமும் உடைந்து தேகமும் வாட்டமடையாமல் சும்மா இருத்தல் முடியுமோ? இதனால் அவர்க ளிருவருக் கிடையிலுள்ள மனவேற்றுமையானது நாளுக்குநாள் முதிர்ந்துகொண்டே போகுமன்றோ? அதனால் அவர்களுடைய மனவோர்மை யானது கொஞ்சங் கொஞ்சமாகப் பிளவுபட்டுக்கொண்டே போகும். எவ்வளவுக் கெவ்வளவு கணவன்மார்களால் மனைவியருக்கு ஆத்மதிருப்தி யுண்டாவதில்லையோ அவ்வள வுக் கவ்வளவு அவர்களுக்குத் தம் புருஷர்மீது வெறுப்பே அதிகமா யுண்டாகும். இக் காரணத்தால்தான் சில மாதர் கள் சில சமயங்களில் தங்களுடைய புருஷர்களைத் தவிர அயல் முகம் பார்க்கத் துணிந்து விடுகின்றனர். பாவம்! சொந்தக் கணவனால் ஒருபோதும் தேக தர்ம திருப்தி யடையாத மனைவி, அந்தோ, வேறு என்செய்வள்! இங் ஙனம் துணியாதவளோ உள்ளஞ் சுருங்கி உடல் வெந்து உட்குழிந்த கண்ணினளாய் உருவழிந்து உயிர் விடுகின் றாள். ஆடவர்கள் பெண் ஜன்மம் எடுத்துப் பார்த்தா லன்றி இவ்வேதனை ஸாகரத்தின் ஆழம் இத்தகைய தென் பதை அவர்கள் ஒருபோதும் உணரார்.

ஏற்கனவே நாம் கூறியதேபோல் பெண்களின் தேக மானது புருஷ தேகத்தின் தாருட்யத்தால் வலுவடைகிற தென்னும் உண்மை உங்களுக்கெல்லாம் நன்கு தெரியும். ஆனால் மணவாழ்க்கையின் காலத்தில் ஆடவரிடமிருந்து வீரியம் வெளிப்படுவதேபோல் பெண்டிருக்கு ஒன்றும் தாருட்யம் வெளியாவதில்லை; ஆனால் பெண்களின் இஷ்ட பூர்த்தியானது சம்பூர்ணமான மனக்களிப்புள்ள திருப்தி

யை அடையுமாயின் அப்பொழுது சிறிது நாதமென்னும் ஒருவகைத் தைலப்பசையானது ஜனனேந்திரியக் கருவியில் உற்பத்தியாகும். இந்த நாத வெளிப்பாட்டினுல் அன்னவருக்குண்டாகும் ஆனந்தத்தைக் காட்டினும் அவர்களுடைய மனத்திலும் தேகத்திலும் உதயமாகும் மின்சார சக்தி போன்ற பிரேமைதான் அவர்களுடைய நரம்புக் கருவிகளுக்கு அளவற்ற சுகானந்தத்தை அளிக்கின்றது. இப்படிப்பட்ட மின்சார பிரேமையானது உச்சநிலையை யடைந்து உள்ளக் கிளர்ச்சியுடன் ஓங்கி நிற்கும் வேளையில் அதன் ஆர்வத்தை அகமுடையான் தன்னுடைய சமகால வாழ்க்கை யின்பத்தால் சமன்செய்து சம்பூர்ணமாக்குவாணுயின் அப்பொழு துண்டாகும் புளகாங்கிதமான ஓர் எலெக்ட்ரிக் உணர்ச்சியால் அவளுடைய தேகமும் மனமும் அளவுகடந்த நன்மையை யடையும். ஆனுல் இப்படிப்பட்ட சம்பூர்ண ஏககால சமசம்மந்த அனுபவத்தை அடையாமல்தானு அனேகம் ஸ்திரீகள் குழந்தைகளைப் பெறுகிறுர்களென்று நீங்கள் கேட்கலாம். பெண்டுகள் பிள்ளைகளைப் பெறுவதற்கும் அவர்களுடைய இன்ப இச்சையானது சம்பூர்ணமான சாந்தியை யடைவதற்கும் ஒன்றும் சம்மந்த மில்லை*. பெண்டுகள் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டு மிருக்கலாம்; ஆனுல் அவர்களுடைய இஷ்ட பூர்த்தியானது ஒருவிதமான சம்பூர்ணத்தை அடையாமலு மிருக்கலாம். ஆயினும் அடிக்கடி நேரிடும் இப்படிப்பட்ட ஒருதலை இன்பவாழ்க்கையால் பெண்களின் கருப்பையானது வாய் சுருங்கி விடுவதனுலேயே சில மாதர்களுக்

* பெண்களுக்கு இஷ்டமில்லாத காலங்களில் பலவந்த வாழ்க்கை புரிவதாலும் எவ்வாறு கர்ப்பந்தரிக்கக் கூடுமென்பதை அடுத்த அத்தியாயத்தில் காணலாம்.

குக் கர்ப்பம் தரிப்பதில்லை யென்று பல வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். பெண்களுடைய இஷ்ட பூர்த்தியானது நிறைவேறு முன்னம் ஆண்பிள்ளையின் தாருட்யம் அனேக தருணங்களில் விரயமாய் விடுவதனுல் அப்பெண்களுடைய கருப்பையானது மிகச் சுருக்கமடைந்து மலட்டுத்தனத்தை உண்டுபண்ணுவ தல்லாமல் மற்றும் பல பிணிகளுக்கும் இடம்பாடாகும்.

ஸ்திரீ புருஷர்கள் தம்முடைய மணவாழ்க்கைக்கு இணங்கும்போது நல்ல வெளிச்சத்தில் உறங்கவேண்டுமென்று நாம் முன்னரே கூறியுள்ளோம். ஆனுல் அவ்வாறு உறங்கும்போது இல்லக்கிழவர் இருவரும் தேகத்தில் ஆடையில்லாது இருத்தல் தகுமோ வென்று பலருக்குச் சந்தேகம் விளைதல் கூடும். ஸ்திரீ புருஷர்கள் வெளித் தோற்றத்தில் தங்களுடைய அழகிய ஆடையாபரணங்களால் எவ்வளவு நாகரிகம் செய்துகொண்ட போதிலும் சயனகிருகத்துக்குள் மணமகனும் மணமகளும் ஆடையணியாமலிருப்பதால் எவ்வளவு இன்பசுகம் உதயமாகக் கூடுமோ அதில் பத்திலொருபங்கும் வஸ்திரத்துடன் முயங்குவதில் உண்டாக மாட்டாது. மணவாழ்க்கையின் காலங்களில் மட்டுந்தாம் இவ்வாறு ஆடையில்லாம லிருப்பது தகும்; ஆனுல் இரா முழுதும் ஒருவரோடொருவர் இவ்வண்ணம் நெருங்கி உறங்குவது கூடாது; இவ்வாறு செய்வதால் இருவருடைய இல்லறச் சுகமும் அதிசீக்கிரம் தெகிட்டலை அடைந்துவிடும். இருவரும் ஒருவர் பார்வையில் மற்றொருவர் அதிமிதமாகவே நடந்துகொள்ளல் வேண்டும். பெண்களை அடிக்கடி ஆடையில்லாது பார்ப்பதாலும், அவர்களுடன் அடிக்கடி அமிதமான அளவில் இல்லற வாழ்க்கையை இயற்றிக்கொள்வதாலும் அதிசீக்

கிரம் குடும்பவாழ்க்கையில் "இலேப்பு"ண்டாய் விடும். எவ்வளவுக் கெவ்வளவு பெண்கள் மணவாழ்க்கை விஷயத்தில் அதிக நாணம் காட்டுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு புருஷர்களுக்கும் அதில் அதிக பிரேமை யுண்டாகும்.

"ஊட லுணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்,"

என்றார் வள்ளுவனாரும். இது சம்மந்தமாகப் பேசும் பொழுது விவாகமான பெண்களுக்கு யாமொரு புத்தி கூறுவோம்: அழகிய அணங்கியர்காள்! நுமக்கு விருப்ப மில்லாதபோது புருஷரின் விருப்பத்துக்கு ஒருபோதும் இணங்காதீர்கள். எவ்வளவுக் கெவ்வளவு நுங்களால் இவ்விஷயத்தில் மிதமாயிருத்தல் முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு புருஷர்களையும் இவ்விஷயத்தில் மிதமாயிருக்கும்படி செய்துவிடலாம். ஒவ்வொரு வாழ்க்கையையும் புருஷன்மார் அதிகமான அரும்பாடுபட்டே அடைதல்வேண்டும். விவாகமான இல்லாளா இருப்பதனால் புருஷன் விரும்பும் வேளையிலெல்லாம் மனைவி இணங்கவேண்டு மென்பது ஒன்றும் சட்டமில்லை. ஒவ்வொரு முறையும் புருஷர்கள் பிரயாசைப்பட்டே தம் மனைவியரின் அபிப்பிராயத்தை அடைதல் வேண்டும்; அப்பொழுதுதான் அதில் அளவு கடந்த ஆனந்தம் ஜனித்தல் கூடும். பெண்கள் கூடுமானவரையில் இல்வாழ்க்கையின் காலத்திலல்லாமல் மற்றைக் காலங்களில் புருஷரை விட்டுத் தனியே உறங்குவதுதான் சிலாக்கியமாயிருக்கும். சாதாரணமான வெறுங் காலத்திலும் ஸ்திரீ புருஷர்கள் ஒருவரையொருவர் நெருக்கிக்கொண்டு தூங்குவது சுகாதார முறைப்படியும் கூடாத காரியமாகும். கூடிய மட்டும் இருவரும் தனித்தனியான அறையில் படுத்துறங்க

முடியாவிடினும் ஒரே அறையில் தனித்தனியான படுக்கைகளில் உறங்கவேண்டும்*.

நாம் இதுவரையில் கூறிவந்த எல்லா விஷயங்களேக் காட்டினும் நம் இந்திய மாதர்கள் அதிகம் கவனிக்கவேண்டிய அவசியமான மற்ருெரு விஷயமுமுண்டு: இந்திய மாதர்கள் தங்களுக்கு இயற்கையாகவே இறைவனுல் கொடுக்கப்பட்ட அழகையும் தங்களுடைய அஜாக்ரதையால் அதிகம் கெடுத்துக்கொள்ளுகிருர்கள். தங்களுடைய ஊழியத்தாலும் குடும்பக் கவலையாலும்† இந்நாட்டுப் பெண்கள் பலர் தங்களுடைய சாமுத்திரிகா லக்ஷணங்களையெல்லாம் வீணுகப் பண்ணிவிடுகிருர்கள். தங்களுடைய நடையுடை நாகரிகங்களைச் செம்மை செய்துகொள்ளத் தெரியாமல் தமது மேனியையும் வதனத்தையும் பாழ்படுத்திக் கொள்ளுகின்றனர். வயது சென்றபோதிலும் கௌமாரதசையையுடையவர்போல் தங்களுடைய அழகை ஸ்திரப்படுத்திப் பத்திரம் செய்துகொள்ளாமல் சிறு பெண்களாயிருக்கும் பொழுதே பெரிய பெண்டுகள்போல் பெருமையுடன் நடித்துப் பல சிறுமிகள் தமது செய்கையாலேயே கிழத்தனத்தை யடைகின்றனர். சிலர் அளவுக்கு மிஞ்சிய தாம்பூ

---

* முன் 110-ஆம் பக்கத்தில் கூறிய சயனமுறையும் ஈண்டுக் கூறிய சயனமுறையும் வெவ்வேருகும் : அது மணவாழ்க்கையின் போது உறங்கவேண்டிய முறையாகும் ; இது மற்றைச் சாதாரண வேளைகளில் உறங்கவேண்டிய முறையாகும்.

† அறுசுவையுண்டி அமைப்பது இல்லாளின் பிரதான கடமையாகும். ஆயினும் நெருப்பருகில் இருப்பதிலும் மிதத்தை யனுசரித்தல் வேண்டும். ஏனெனின் சமையலறையில் நெருப்பருகில் நின்று சமையல் வேலையைச் செய்வதனுலேயே பெண்களின் மாமை நிறம் மழுங்கிவிடுமென்று அறிஞர் கூறுகின்றனர்.

லத்தாலும் மற்றும் பல அருவருக்கத்தக்க தந்தச்சூரணங் களாலும் தங்களுடைய முகாரவிந்தத்தை அதிவிகாரம் செய்துகொள்ளுகின்றனர். பல்லில் பலவிதமான வர்ணப் பொடிகளைத் தீற்றுவதாலும் சுருட்டுப் பிடிப்பதாலும் தங்களுடைய வாயைப் பலபெண்கள் துர்க்கந்தமுண்டா கும்படி மகா விகாரம் செய்து கொள்ளுகின்றனர். (இத ளுல் ஆடவர் மட்டும் சுருட்டுப் பிடிக்கலாமென்று அனுமதி கொடுத்துவிட்டதாக எண்ணிவிடவேண்டாம்.) சில மாதர் கள் அளவுக்கு மிஞ்சிய மஞ்சளைப் பூசிக்கொண்டு தம்மு டைய முகத்தின் லக்ஷணத்தை அவலக்ஷணம் செய்து விடுகின்றனர். இந்தியாவிலுள்ள ஸ்திரீகளுள் சிலர் மாதம் ஒன்முனபோதிலும் ஸ்னுனம் செய்யாமல் உடம்பெல்லாம் கற்றாழை நாற்றம் வீசும்படி செய்துகொண்டு சும்மா இரு க்கின்றனர். "நாமென்ன தேவடியாளா? குடித்தனக்காரி யல்லவா? குடித்தனக்காரிக்கு மேனி மினுக்கு என்ன வேண்டி யிருக்கிறது?" என்று பலர் தத்துவம் பேசிக் கொண்டு தங்களுடைய அலக்ஷிய புத்தியாலேயே அவ லக்ஷணம் பண்ணிக் கொள்ளுகிருர்கள். இன்னும் சில கன் னிகைகள் தமது 12-ஆம் பிராயத்தில் தலைச்சன் பிள்ளை பெற்றவுடனேயே அதற்குமேல் தாங்கள் வயோதிகத் தன்மையை யடைந்த பேரிளம் பெண்டிராக ஆய்விட்டோ மென்று மதித்துக்கொண்டு அதற் கேற்றவாறு தங்க ளுடைய நடை நொடி பாவனைகளால் கிழவிகள்போல் நடிக் கத் தலைப்படுகின்றனர். மனிதர்களுடைய மனோதத்வ சாஸ்திரத்தின் பிரகாரமும், அவர்களுடைய உடற்கூற்று வண்ண முறைமைப்படியும் உற்று நோக்குவோமாயின் பெண்களும் ஆண்களும் எவ்வளவுக் கெவ்வளவு தம்மை இளமைப்பருவ முள்ளவர்களென்று நினைத்து அதற்குத்

தக்கவாறு உல்லாசத்துடன் ஒழுக ஆரம்பிக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் பால்யமாகவே யிருந்து வருவார்கள்; ஆனால் அவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு தம்மை வயதுமுதிர்ந்த பெரியவரென்று மனனம் பண்ணி வருகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அதிபால்யத்தில் முதுமையையடைந்து விடுவார்கள்.

இன்னும் இந்தியாவிலுள்ள எத்தனையோ பெண்கள் தங்களுடைய அநாகரிகமான ஆடைகளாலும் ஆபரணங் களாலும் தங்களுடைய நேர்த்தியான இயற்கை யழகை மிகவும் கெடுத்துக் கொள்கின்றனர். ஆனால் அவரவரும் தத்தம்மால் இயன்றமட்டும் தமது இயற்கை யழகைத் தம்முடைய செயற்கைக் கோலங்களால் அவலக்ஷணம் செய்து கொள்ளாமல் அதிஜாக்கிரதையாக இருந்துகொள் வார்களாக. மனிதர்கள் தங்களுடைய சொந்த அஜாக்ர தையாலேயே அனுவசியமாய் இளமையிலேயே முதுமை யைப் போன்ற விகாரத்தை யடைந்துவிடுகின்றனர். இல் லற வாழ்க்கையென்பது நாம் முன்னமே கூறியதேபோல் கேவலம் மணவாழ்க்கை இன்பத்தில் மட்டுந்தான் பொதிந் திருக்கிறதென் றெண்ணிவிட வேண்டாம். ஸ்திரீகளின் பார்வையில் புருஷர்களும், புருஷர்களின் பார்வையில் ஸ்திரீகளும் மிக்க ரம்மியமான அழகுடன் காணப்பட்டால் மாத்திரமே அவர்களுடைய பரஸ்பர அபிமானமானது மேன்மேலும் சுடர்விட் டெரிந்துகொண்டே யிருக்கும். எவ்வளவுக் கெவ்வளவு அவர்களுடைய பரஸ்பர அன்பும் ஆர்வமும் அதிகப்பட்டுக்கொண்டே யிருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுடைய லௌகிகவைதிக வாழ்க்கையும் ஆனந்த பரவசமுற்றதாகவே காணப்படும். இப்படிப்பட்ட அன்புக்கு மூலவேர் அழகுதான். இந்த

அழகை யுடையவர் அந்தப்புரத்தில் ஒருவரோ டொருவர் தம்முடைய முழு அழகையும் கண்ணாரக்கண்டு களிகூர வேண்டுமென்றே அறிஞர் நூல் கூறுகின்றது. ஆணின் அழகைப் பெண் கண்டு அனுபவிப்பதிலும், பெண்ணின் அழகை ஆண் கண்டு அனுபவிப்பதிலுந்தாம் பரமானந்தம் காணப்படுகிறது. புருஷர்களின் முன்னிலையில் பெண்கள் சில சமயங்களில் தமது சயன அறைக்குள் நாணக்கோலத் துடன் நிற்கத் துணிந்தபோதிலும் அவர்களுக்கு அடிக்கடி யுண்டாகும் இயற்கை மானத்தினுல் அவர்களுடைய அழ கானது தம் புருஷர்களின் பார்வையில் அதிக கௌரவ முள்ளதாகக் காணப்படுகின்றது. மாத வெளிப்பாட்டின் காலத்தில் தமக்கு இயற்கையா யுண்டாகும் நாணத்தினுல் தம் புருஷர்களின் எதிரில் வருவதற்கும் லஜ்ஜையடையும் ஸ்திரீகள் தமக்குண்டாகக்கூடிய பிரியகால வேளைகளில் தம்முடைய இயற்கை செயற்கையா யுண்டான அழகை யெல்லாம் காட்ட அதிகம் ஆர்வங் கொள்ளு கின்றனர்; புருஷர்கள் தங்களுடைய அழகைக்கண்டு ஆர்வங் கொள் வாரென்னும் எண்ணமானது அப்பொழுது அதிகமாகப் பொங்கி நிற்கும்.

ஆனுல் ஸ்திரீகள் அடிக்கடி புருஷர்களின் வலையில் அதி எளிதில் சிக்கக்கூடியவர்களா யிருப்பது கூடாது. இதனுல் ஸ்திரீபுருஷ வாஞ்சையானது அதிசீக்கிரம் மழுங் கிக் கழுந்தாய்ப் போம்; இன்னும் அவர்களுடைய தேகா ரோக்கியமும் அதிகமாய்க் குன்றிப்போம். ஸ்திரீ புருஷர் கள் ஒரேவீட்டில் அதி சமீபத்தி லிருப்பதனுல் அவர்கள் அடிக்கடி அளவுக்கு மீறி இல்வாழ்க்கையை யனுபவிக்க வேண்டுமென்னும் சட்டமொன்று மில்லை. மணமகனுக்கும் மணமகளுக்கும் ஏக காலத்தில் அபிப்பிராயமானது ஒத்து

৭।

வந்தாலல்லாமல் ஒருவரையொருவர் சமீபிப்பது கூடாத காரியமாகும். வார மொன்றுக்கு, அல்லது மாத மொன் றுக்கு இத்தனை முறை முயங்கவேண்டு மென்னும் சட்ட மொன்று செய்துகொண்டு குறிப்பிட்ட தினங்களில், யாருக்கு விருப்பிருந்தாலும் வெறுப்பிருந்தாலும் அந்தக் குறிப்பின் பிரகாரம் முடித்தே தீரவேண்டு மென்பது ஒரு முட்டாள்தனமான சட்டமாகும். பசியில்லாத காலங் களில் போஜன மருந்துவதால் எவ்வளவு கேடுகளெல்லாம் நம் தேகத்துக்கு விளைதல் கூடுமோ அதைக் காட்டினும் பதின்மடங்கு அதிகமான தீமைகளெல்லாம் விருப்ப மில் லாத காலத்தில் வீட்டை விழைவதால் நேரிடக்கூடும். இத ஞல்தான் மீறிய விருப்பம் ஜனிக்கும் காலத்தில் செய்யப் படும் வீரிய வாழ்க்கையில் மட்டும் கருக்கூடுவதுதான் அதி சிலாக்கியமான கர்ப்பமாயிருக்கவேண்டு மென்று ஆண்ட வனே சட்டம் பிறப்பித்துள்ளான் போலும். அப்படிப் பட்ட மேற்கூறிய இயற்கை முறையானது இவ்வுலகில் இல்லாம லிருக்குமாயின் ஆண் பிராணிகளெல்லாம் பெண் பிராணிகளிடத்தில் அதிகமான வாழ்க்கையை அனுபவித்து அதனுல் தம் ஜீவாதார சக்தி முழுதையும் அதிசீக்கிரம் இழந்து, இவ்வுலகத்திய ஜீவப்பிராணிகளனைத்தும் இன்னும் சிறிது காலத்துக்குள் இல்லாமற் போய்விடுதல் கூடும்; இன்ப நுகர்ச்சிக்கு ஒரு வரைதுறை யில்லாமல் எல்லாம் வெறும் விளையாட்டாகவே போய்விடும். இதனுல்தான் மிருகம் பறவை முதலிய ஜீவப்பிராணிகளிடத்தில் பெண் களுக்கு விருப்பமில்லாத வேளைகளில் ஆண்கள் சமீபத்தில் நெருங்கவேண்டு மென்னும் விருப்பமே யுண்டாவதில்லை. ஆனுல் மனிதப் புருஷர் மட்டும் தமக்குக் கடவுளால் பகுத்தறி வென்னும் கைத்தீபம் கொடுக்கப்பட் டிருந்தும்

தம்முடைய மனைவியருக்கு விருப்பமில்லாத வேளைகளி லெல்லாம் நிர்ப்பந்தம் பண்ணுகின்றனர். இதுதான் கூடாத காரியமென்று யாம் அடிக்கடி இந்நூலில் கூறி யுள்ளோம். இதனால்தான் ஸ்திரீகள் அதிகமான மிதத் துடன் நடக்கவேண்டுமென்றும் யாம் சொன்னோம்.

> "முயங்குங்கால் பாயும் பசலைமற் றாடி
> உயங்காக்கால் உப்பின்றாம் காமம்—வயங்கோதம்
> நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப
> புல்லாப் புலப்பதோர் ஆறு,"

என்றார் நாலடியாரிலும். அளவில்லாத அனுஷ்டானத்தி னால் இருவருக்கும் தேகங் கெடுவது மாத்திரமின்றிப் பிறக் கும்குழந்தைகளும் துர்ப்பல முள்ளவைகளாயிருக்கின்றன. பெற்றோர்கள் தேகாரோக்கியத்தோடும் விசால மனதோ டும் கூரிய புத்தியோடும் இருப்பார்களாயின் அவர்களு டைய குழந்தைகளும் அவ்வாறே யிருப்பார்கள். மண வாழ்க்கையின் போதிருக்கும் தேக மனோ நிலைமைக்குத் தக்கவாறாகத்தான் கர்ப்பமும் தரிக்கும். சதிபதி இருவ ரும் கௌமார பருவத்தி லிருக்கும்போதுதான் இருவருக் கும் கரு உற்பத்தியாக்கும் சக்தி ஏற்படுகின்றது. இச்சக்தி ஸ்திரீகளிடத்து ஐம்பதாவது பிராயம் வரையிலும், புருஷர் களிடத்து அதற்குச் சற்றுப் பின்னும் நிலைத்திருக்கிறது. இச்சக்தி தோன்றியவுடன் பிறக்கும் குழந்தைகளும் திட காத்திர முள்ளவையாக இருப்பதில்லை. இருவருக்கும் வயது முதிர்ந்தபின்னர் உண்டாகும் குழந்தைகளும் தேக திடம் அற்றவர்களாகவே இருப்பார்கள். எனவே யௌவ னத்துக்கு முந்திய இளமைப்பருவத்தும் வயது முதிர்ந்த கிழப்பருவத்தும் உண்டாகும் குழந்தைகள் தேகத்திலும் மனத்திலும் திடமற்றவையாகவே காணப்படுகின்றன.

எனவே மனைவியரின் வேட்கை உதயமாவதற்கு முன்னம் அவரின் சமீபத்தில் நெருங்குதல் நெறியன்றும், அதர்மமாம். பெண்காள்! நும்முடைய விருப்பமானது மணவாழ்க்கையை யடையவேண்டுமென்னும் ஆர்வத்தால் நிரம்பித் ததும்புமட்டும் வேறெவரின் பலாத்காரத்துக்கும் உடந்தைப் படாதீர்கள். இவ்விஷயத்தில் ஆடவருக்கு எவ்வளவு சுவாதீனமுண்டோ அவ்வளவு சுவாதீனம் உங்களுக்கும் உண்டென் றறிந்துகொள்ளுங்கள். அந்தச் சுதந்தரத்தை உங்கள் கணவன்மார் அறிந்து மதித்து அதன்படி நடந்துகொள்ளும்படி அவர்களைத் திருத்தித் தர்ம புத்தி யுண்டாகும்படி அவர்களைப் பக்குவப் படுத்துவீர்களாக.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 31 MAR1926 MADRAS

அத்தியாயம்—8

கருக்கூடுவதும் கர்ப்பமாதரும்

வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்
கவாஅன் மகற்கண்டு தாய்மறந் தாங்கு.—(நாலடி)

ஸ்திரீ புருஷர்களின் ஜனனேந்திரிய சம்மந்தமான கருவிகளைப்பற்றி நீங்கள் முன்னமே ஒரு சிறிது தெரிந்துகொண் டிருக்கிறீர்கள். ஆண் தேகத்திலிருந்து மணவாழ்க்கையின் போது வெளிப்படும் தாருட்யமானது அன்னவரின் பீஜத்திலிருந்துதான் உற்பத்தியாகின்றது. ஜன

னேந்திரியக் கருவியருகில் ஒரு தோற்பைக்குள் இரண்டு பீஜங்கள் தொங்கிக்கொண் டிருக்கின்றன; இவ்விரண்டு பீஜங்களில் தாம் புருஷ தாருட்யம் அவர்களுடைய செவ் விரத்தத்தின் சிரேஷ்டமான பாகங்களிலிருந்து சேமித் துச் செய்யப் படுகின்றது. ஒவ்வொரு முறையும் சாதா ரணமாய் வெளியாகும் வீரியத்தின் அளவானது சுமார் அரைக்கால் ஔன்ஸ் இருக்கும்; இந்த அரைக்கால் ஔன்ஸ் வீரியமும் ஒரு முறை வெளியாவதால் ஐந்து ஔன்ஸ் இரத்தம் வடிவதனு லுண்டாகக்கூடிய அவ்வளவு பலஹீனம் ஏற்படும். ஏனெனின் ஒவ்வொரு துளி வீரிய மும் 40 துளி நல்லிரத்தத்தினின்றும் உற்பத்தியாக்கப்படு கிறதென்பது உங்களுக்கு முன்னரே தெரியும். மிதமிஞ்சிய இல்வாழ்க்கையுள் மூழ்கிக்கிடப்பவர் தங்களுடைய அளவு கடந்த அனுபவத்தால் எவ்வளவு தேகபலம் குறையு மென்று இங்கு நன்கு நோட்ட மிடுவார்களாக. இந்த அரைக்கால் ஔன்ஸ் தாருட்யத்தில் தான் 20 கோடி முதல் 60 கோடிவரையில் கர்ப்பக் கிருமிகள் உயிருடன் மேய்ந்துகொண் டிருக்கின்றன. இந்தக் கிருமிகளுள் ஒவ் வொன்றும் பெண்ணின் சினை ஒவ்வொன்றையும் கருக் கொள்ளும்படி செய்யக்கூடியதா யிருக்கிறது. இந்தக் கிருமியானது பெண் சினையைக் காட்டினும் மிகமிகச் சிறி தாயிருக்கும். இப்படிப்பட்ட தாருட்யம் பெண் தேகத் துள் சென்றவுடன் அவ்விடத்தில் ஒருவிதமான இன்பச் சுவைக்குரிய ஓர் இனிய உணர்ச்சியைப் பெருக்கும். இவ் வாறே ஸ்திரீகளுக்கும் சில ஜனனேந்திரியங்க ளுண்டு. ஸ்திரீகளின் அடிவயிற்றுள் கருப்பை யென்று ஒன்றுண்டு. இது மேற்புறம் அகன்றும் பெருத்தும் கீழ்ப்புறம் உருண் டும் சிறுத்தும் இருக்கும். இதில் சம்மந்தப்பட்டிருக்கும்

மூக்குச்சளி போன்ற ஜவ்வும் இன்னும் அங்கிருந்துண்டாகும் உபயோகமற்ற உதிரமும்* சேர்ந்துதான் மாதவெளிப்பாடாக வெளியாகின்றன. பிறகு உடனே அந்த ஜவ்வானது வளர ஆரம்பிக்கும். கருப்பைக்குள் கர்ப்பம் உண்டாய் விடுமாயின் இந்த ஜவ்வானது அதிகம் தடித்துப் பருமனடைந்து விடும்.

இதன் பக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் சித்திரப் படத்தில் க என்று காட்டப்பட் டிருக்கும் இடம்தான் கருப் பையென்னப் படுவது. ம என்பது அக்கருப் பையின் அடிப்புறமாகும். கருப்பை முழுதையும் பொதுவாக நோக்குவோமாயின் அது தலைகீழாக வைக்கப்பட் டிருக்கும் ஒருசுரைக்காயைப்போல் தோன்றும். வா என்பது கருப் பையின் வெளிவாயாகும். து என்பது ஜனனேந்திரியத்தில் ஆரம்ப வழியைக் காட்டும். அ என்பது ஜனனேந்திரியத்தின் வெளிப்புறமாகும். ஆண் பிள்ளைகளுக்குப் பீஜமிருப்பதே போல் பெண்பிள்ளைகளுக்கும் இரண்டு சினைப்பைகளுண்டு; இவ்விரண்டும் கருப்பையின் இருமருங்கிலும் பக்கத்துக் கொன்ருய் அமைக்கப்பட் டிருக்கின்றன. உருட்சியான வெவ்வேறுவித அளவையுடைய அனேகம் சிறுசிறு அறை



*கருப்பையிலுள்ள உரோமம் போன்ற நுண்ணிய உதிரக்குழல்கள் (தந்துகக்குழாய்கள்) வெடிப்பதனுல் அங்கே இரத்தமுண்டாகும்.

கள் நிறைந்த கெட்டியான சதையா லமைந்திருக்கும் அந்தச் சினைப்பை. தேன் கூட்டின் சிற்றறைகள் போன்ற இந்த நுண்ணிய அறைகளுக்கு கிரஹ்பியன்* நுண்ணறையென்று பெயர் சொல்வர். இந்த ஒவ்வொரு சிறு அறையிலிருந்தும் சாதாரணமாய் ஒவ்வொரு மாதவெளிப்பாட்டின் காலத்திலும் ஒவ்வொரு சினை விகிதம்† வெடித்து வெளியாகும். ஸ்திரீகளின் தேகத்திலிருந்து வெளியாகும் சினைகள் 125 முதல் 150 வரை வரிசையாக அடுக்கி வைக்கப்படு மாயின் அவற்றின் நீளம் ஓரங்குலம்தா னிருக்கும்; எனவே அவை அத்துணை மென்மையாகவும் நுட்பமாகவும் திரண்டுருண்டிருக்கும்; இதற்குள் ஒரு மஞ்சட் கருவும் இறைவனுல் அமைக்கப்பட் டிருக்கிறது. இவ்வாறு சினைப் பையிலிருந்து வெடித்து வெளியாகும் சினையைக் கருப் பைக்குள் கொண்டுவந்து சேர்ப்பதற்கு அதன் இரண்டு பக்கத்திலும் இரண்டு குழல்களுண்டு. இவற்றிற்கு நாதக்குழல்க ளென்று பெயர் சொல்வர். இந்த நாதக் குழல்களிரண்டும் பக்கத்துக் கொன்ருய் நீண்டு ஒருமுனை கருப் பையின் மேற்புறத்தோடு சேர்ந்தும், மற்ருெரு முனை குஞ்சம்போல் விரிந்து சினைப்பையின்மேல் தொங்கிக்கொண்டும் இருக்கும்; ஒவ்வொரு குழலும் சுமார் 4 அங்குல நீளமுள்ளதாயும், உட்டொளை மிகச் சிறியதாயு

* சுமார் 250 வருஷங்களுக்குமுன் ஜீவித்திருந்த கிரஹ்ப் என்னும் உலாந்தா தேசத்துச் சரீர மர்ம சாஸ்திரியால் கண்டுபிடிக்கப் பட்டதனுல் இவற்றிற்கு கிரஹ்பியன் நுண்ணறை யென்று பெயர் வழங்கலாயிற்று.

† சில சமயங்களில் இரண்டு சினைகளும் வெடித்து வெளியாகலாம். மாதப்புறவுடை இல்லாத காலங்களிலும் சில பெண்களுக்கு இரண்டு, மூன்று சினைகள் வெடிப்பதுமுண்டு.



சினையை மிகப் பெரிதாக்கிக் குறுக்கே பிளந்ததன் மேற்பாதி.

இதன் கீழ்ப்பாதியும் இவ்வாறே காணப்படும்.

மிருக்கும். மாதவெளிப்பாட்டின் போது இந்த நாதக் குழல்கள் சினைப்பையி லிருந்து வெடித்து வெளியாகும் சினையை ஸ்வீகரித்துக் கருப்பைக்குள் செலுத்தும். இதற்காக நாதக்குழல்களிலுண்டாகும் விரிவினால்தான் சூதகத்துக்குச் சற்று முன் சில பெண்மணிகளுக்கு அடிவயிற்றில் வலியுண்டாகிறது. சினைப்பையிலிருந்து வெளியான முட்டை கருப்பைக்குள் வந்து சேர எட்டு நாள் செல்லும்; அதுவரையில் அந்தச் சினையானது உயிருடன்தானிருக்கும். மாதவெளிப்பாட்டின் போது மட்டுந்தான் நாதக்குழலானது அந்தச் சினையைச் சுயமே ஸ்வீகரிக்கும்; மற்றைக் காலங்களில் வெடிக்கும் சினைகளெல்லாம் வீணே தொந்திக்குள் சென்று சேர்ந்துவிடும். பெண் குழந்தைகளுக்கு இரண்டு வயது ஆனது முதலே இந்தச் சினைகளும் தோன்றத் தலைப்படும்; பிறகு நெடுநாள் வரையில் வயது முதிர்ந்த பின்னரும் இந்தச் சினைகள் உற்பத்தியாய்க் கொண்டே யிருக்கும். ஆனால் பருவமடையுமுன் நாதக் குழல்கள் மிக மிகச் சிறுத்துக் குறுகி யிருப்பதாலும், மாத வெளிப்பாடு நின்ற பிறகு* அவை தேய்ந்து உலர்ந்து சுருங்கி விடுவதாலும் பருவத்துக்கு முன்னும், மாதவெளிப்பாடு நின்ற பின்னும்† உற்பத்தியாகும் சினைகளெல்லாம் நாதக்குழல்களால் இழுத்துக்கொள்ளப் படுவதில்லை.

---

* பருவமடைந்த பின்னர் சுமார் 30, அல்லது 35 வருஷங்கள் மட்டும் மாதவெளிப்பாடு தோன்றும்; ஆனால் பெரும்பாலும் 45-வது வயதுடன் அவ்வுதிரம் நின்றுவிடும். உண்மையான ஈசுவர பக்தியில் ஈடுபட்டு உலகைத் துறந்து ஞானமார்க்கத்தில் கலந்துவிட்ட பெண்மணிகட்கு மாதவெளிப்பாடு தெய்விகமாய் நல்ல யௌவனத்திலேயே நின்றுவிடும் அற்புதமும் நிகழ்வதுண்டு.

† மாத வெளிப்பாடு நின்றவுடன் சினை உற்பத்தியும் நின்றுவிடுமென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

இவ்வாறு மாதவெளிப்பாட்டின் காலத்தில் வெடித்து வெளியாகும் சினையானது நாதக்குழல் வழியே சுமார் 8-நாள் மட்டும் ஊர்ந்துவந்து கருப்பைக்குள் இறங்கின பிறகாவது, அல்லது அது கருப்பைக்குள் இறங்குமுன் நாதக் குழலிலேயே வந்துகொண்டிருக்கும் போதாவது புருஷனுடைய தாதுவில் காணப்படும் கர்ப்பக் கிருமியொன்று அதைச் சந்திக்குமாயின் உடனே இரண்டும் லயித்துக் கருவாகி விடும். ஆண்தேகத்தில் உற்பத்தியாகி வெளியாகும் தாருட்யமானது பெண் தேகத்துடன் சம்மந்தப்பட்டவுடன் அதிலுள்ள 60 கோடிக் கிருமிகளுள் ஒன்றேனும் கருப் பைக்குள் நுழைந்து அங்குள்ள சினையைச் சந்திக்குமாயின் இரண்டும் ஒன்ருய்க் கருக்கூடிப் பிண்டோற்பத்திக்கு ஆரம்பமாகும். கருப்பையின் வாயில் வழியே உட்செல்லும் கர்ப்பக் கிருமியானது பெண்சினையின் மஞ்



கர்ப்பந்தரித்துச் சுமார் 40 நாள் அல்லது 6 வாரம் சென்ற பிண்டம். இதன் நீளம் சுமார் ஓரங்குலந்தா னிருக்கும்.

சட்கருவை யடைந்தவுடன் அது ஆடாமல் அசையாமல் ஸ்தம்பித்துப் போய்விடும்; அதன்பின் அந்தக் கருவானது உருவாகத் தலைப்படும். ஒரு முறை ஸ்திரீ புருஷர்கள் மணவாழ்க்கையுள் புகுவார்களாயின் அப்பொழுது உண்டாகும் தாருட்யக் கிருமிகள் வேறு காரணங்களால் அழிக்கப் பட்டாலொழிய, சாதாரணமாய், சுமார் எட்டுநாள் மட்டும் உயிரோடிருக்கும். பெண்களுடைய சினையானது 8 அல்லது 9 தினம் வரையில் உயிருடன் நாதக்குழலில்

ஊர்ந்து வருவதாலும், புருஷர்களுடைய தாருட்யத்தி லுள்ள கிருமிகளும் 8 அல்லது 9 தினம்வரையில் கருப் பைக்குள் உயிருட னிருப்பதாலும்* ஒரு மாதத்தின் எந்த நாளையிலும் வீடு கூடலாமென்றும், அதனாலெல்லாம் கருத் தரித்தல் கூடுமென்றும் தோன்றியபோதிலும் எவ்விதமாக இருவகை உருவும் ஒன்றுகூடுகின்றன வென்பது இது வரை கண்டறியப் படாததாயுள தெனினும் மாதவெளிப் பாட்டுக்குச் சில தினம் முன்னும், அதற்குப்பின் ஒரு வாரம் வரையிலும் இல்லம் நுழைவதுதான் கருத்தரிப் பதற்குமிகவும் உசிதமான காலமென்று வைத்திய நிபுணர் களெல்லாம் கூறுகின்றனர்†. இந்த இரண்டு காலமுமே நாம் முன் 4-வது அத்தியாயத்தில் கூறிய பிரியகாலத் தைக் குறிக்கும். ஸ்திரீகளுக்குச் சுயமே பிரியமுண்டாகக் கூடிய அந்த இரண்டு காலமுமே அவர்களுக்குக் கர்ப்பம் தரிப்பதற்கும் அதிக வசதியான காலமாய் அமைந்திருக் கிறது. இவ்வாறிருந்தும் பலமுறை மணவாழ்க்கை புரிந்த பிறகுதான் கர்ப்பமுண்டாகும்‡. ஆதலின் மாதவெளிப் பாடு நின்று 17 தினம் சென்றபிறகு 23-வது தினம் வரை யில் ஸ்திரீ புருஷர்கள் ஒருவரை யொருவர் நெருங்கினால்

* இதனால்தான் பெண்களுக்கு அபிப்பிராயமில்லாத காலங்க ளிலும் பலவந்தமாய் இழைக்கப்படும் மணவாழ்க்கையின் பிறகும் கர்பந்தரிப்பதற்கு ஹேதுவுண்டாய் விடுகிறது.

† மாதவெளிப்பாடு தொடங்க ஒருதினம் முன்னம் மணவாழ்க் கைபுரிவதே மகா நிச்சயமான காலமென்று மகா பண்டிதர்கள் சிலர் கூறுவர்.

‡ ஒரே முறையிலேயே சில பெண்களுக்குச் சில வேளைகளில் கர்ப்பந்தரித்து விடுதல்கூடும். ஆண் கிருமியும் பெண் சினையும் சரி யான விதத்தில் லயமாய்விடும் பக்ஷத்தில் உடனே கர்ப்பமுண்டாகும்

அதனுலொன்றும் கருத்தரிப்பதற்குப் பிரயோஜன மில்லை யென்று மகா வைத்திய பண்டிதர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

மேற்கூறிய பல்வகைப்பட்ட காரணங்களையும் நன்கு நோக்குவோமாயின் இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு மாதும் கர்ப்பமடையக் கூடிய யோக்கியதையை உடையவளாகவே காணப்படுகிறுள். ஆனுல் இவ்வாறிருந்தும் எல்லாப் பெண்களும் குழந்தைகளைப் பெறுவதாய் நாம் காணவில்லை. சிலபெண்கள் ஒருபோதும் கருக்கொள்ளாமலே காலமெல்லாம் இருந்து விடுகின்றனர்; ஆனுல் மற்றுஞ் சிலரோ கருக்கொண்ட பிறகு பிரசவகாலம் வரையில் அந்தப் பிண்டத்தைக் கருப்பையில் வைத்திருக்க முடியாதவராயிருக்கின்றனர். பெண்கள் பல காரணங்களைக் கொண்டு மலட்டுத்தனத்தை யடைவதுண்டு; ஆனுல் சிலவேளைகளில் ஆடவரும் சிற்சில காரணங்களால் மலடர்களாய்ப் போவதுமுண்டு: பிறவியிலேயே புருஷ தாருட்யத்திலுள்ள கிருமிகள் தம்முடைய பலஹீனத்தால் பெண் சினையுடன் லயித்துக் கர்ப்பத்தை உண்டு பண்ணத்தக்க யோக்கியதையை அடையாமற் போகலாம்; அல்லது வேறுவியாதியின் காரணத்தாலும் தாருட்யத்தின் தத்துவம் குறைந்து போகலாம். இப்படிப்பட்ட தாதுவிழந்த புருஷர்கள் தக்க வைத்தியரிடம் பரிகாரம் தேடிக்கொள்ளல் வேண்டும்*.

* ஆட்டின் விதை, பெட்டைக்கோழி, சிறு மீன்கள், வீட்டின் இறப்பிலுள்ள அடைக்கலக் குருவிகள் முதலியவற்றை நெய்யில் பொரித்துத் தின்றுல் தாதுபுஷ்டி யுண்டாகும். இப்படிப்பட்ட தாதுபுஷ்டிக் காகத்தான் எம்மிடமுள்ள வாலாஜா மாத்திரை மிகக் கைகண்ட மருந்தாய்க் காணப்படுகிறது. இத்தகைய மருந்தைக் கொண்டுதான் காலஞ்சென்ற கர்னுட்டிக் நபாப் வாலாஜா சாஹிப்

இவ்வாறே ஸ்திரீகளுக்கும் அவர்களுடைய ஜனனேந்திரியக் கோளாறுகளினால் மலட்டுத்தனம் இயற்கையாகவே உண்டாய் விடக்கூடும் : சில பெண்களுக்குச் சினைப்பையானது பிறவியிலேயே இல்லாமலிருக்கலாம்: அல்லது அஃது அறைகுறையாக விருத்தியடைந் திருக்கலாம்; அல்லது சினைப்பையானது ஸ்தான பேதமாக அமைக்கப் பட்டிருக்கலாம். நாதக் குழல்களின் அமைப்பில் வித்தியாசம் ஏற்பட்டு அதனாலும் மலட்டுத்தன முண்டாகலாம். கருப்பையானது சில சமயங்களில் கோணலாகவோ கோளாறாகவோ அமைந்துவிட்டால் அப்பொழுதும் மலட்டுத்தனம் காணப்படும். இப்படிப்பட்ட இன்னும் பலவிதமான உதரக் கோளாறுகளினாலெல்லாம் பெண்களுக்கு மலடுண்டாகும். பெண்களுடைய தேகத்திலுள்ள உதிரம் குறையுமாயின் அப்பொழுதும் அவர்களிடத்தில் சினையுண்டாக மாட்டாது. சில சமயங்களில் கருப்பையானது செம்மையாயிருக்கும்போதும் அது தான் செய்யவேண்டிய தொழிலில் குறைவுபட்டிருக்கலாம்; அல்லது கருப்பையின் வாயானது சிலருக்கு மிகக் குறுகலாயிருக்கும். அப்பொழுதும் அவர்களுக்குக் கருத்தரிப்பது கஷ்டமாயிருக்கலாம்.

ஆண் மலடாயிருக்கும் பக்ஷத்தில் அதை வைத்திய முறையால் நிவர்த்திசெய்து கொள்ளலாம். ஆனால் பெண் மலடுகளுள் பெரும்பான்மையன ஹஸ்த முறையாலேயே திருந்திவிடும். அப்படிப்பட்ட பெண்களுக்கு அன்னாரின்

பல மனைவியரை மணந்துகொண்டு அனேகங் குழந்தைகளை ஈன்றெடுத்தார். அந்த நபாபின் முறையைக் கொண்டே இந்தமாத்திரைகள் அவருடைய குடும்ப வைத்திய சந்ததியாரால் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

கணவன்மாரே கைவைத்தியரா யிருப்பார். இவர்கள் தக்க வைத்தியர்களிடம் அப்போதைக்கப்போது ஆலோசனை கேட்டுக்கொள்வது அத்தியாவசிய மாகும். வைத்தியரின் அபிப்பிராயத்தின் மேல் சிற்சில ஸ்திரீகள் இல்வாழ்க்கையின் காலத்துக்கு மூன்று, நான்கு தினம் முன்முதல் தங்களுடைய மலத்தைப் போக்காமல் அடக்கிக் கொண்டிருந்து பிறகு மணவாழ்க்கையை யடையலாம்; அந்த 3, 4 தினத்திலும் அரிசிச் சோறும் கோழி முட்டைகளும் அதிகம் சாப்பிடவேண்டும்; கூடுமானால் ஒவ்வொரு மாலையிலும் அபின் மாத்திரை* சாப்பிட்டு வரவும் வேண்டும். இப்படிச் செய்வதால் சிலருடைய மலடு நீங்கிக் கர்ப்பமுண்டாகும். இன்னும் சில மலட்டுப் பெண்கள் மணவாழ்க்கையின் காலத்துக்கு முன் ஐந்து அல்லது ஆறுமணி நேரம் வரையில் சிறுநீரை அடக்கிக்கொண் டிருப்பதனால் அவர்களுக்கு அவ்வியாதி நீங்கிக் கருப் பையில் கருக்கூடலாம். இப்படிப்பட்ட மேற்கூறிய விதங்களினாலெல்லாம் இல்வாழ்க்கை நடத்திப்பார்த்தும் மலட்டுத்தனம் நீங்காவிடின் பிறகு வைத்திய நிபுணர்களிடமே அந்த ஸ்திரீகளைக் காட்ட வேண்டும்.

மனிதவர்க்கத்தாருக்கு இறைவனால் அமைக்கப்பட்டிருக்கும் அவயவங்களுள் ஜனனேந்திரியங்களே மிகத் தாமதமாக விருத்தியடையக் கூடியவையா யிருக்கின்றன. ஆனால் அவைதாம் அதி சீக்கிரம் வியாதிகளுக் குட்படக் கூடியவையாயு மிருக்கின்றன. ஆதலின் ஆடவரும் பெண்டிரும் தங்களுடைய ஜனனேந்திரியக் கருவிகள் சம்மந்த

---

* டாக்டர்களைக் கேட்டால் அவர்கள் இந்த அபின் மாத்திரையின் அளவைச் சொல்வர். அவர்களின் ஆலோசனையின்றி அதை ஒருபோதும் உட்கொண்டு விடாதீர்கள்.

மாய்ப் போதுமான வரையில் கவலை யெடுத்துக் கொள்ளா விடின் அவை அதி எளிதில் ஆபத்துக் குள்ளாய்விடும். இதற்காகத்தான் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் மண் வாழ்க்கையின் மர்மம் இன்னதென்பதைக் குறித்துப் போதிய வயதில் பெரியார் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசிய மென்று வைத்திய சாஸ்திரம் அறைகின்றது. பால்யர்களும் பால்யைகளும் எவ்வளவுக் கெவ்வளவு தங்களுடைய சரீராரோக்கியத்தைத் தமது இளம்பிராயத்தில் அதி ஜாக்ரதையுடன் காப்பாற்றிக் கொள்ளுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுடைய ஜனனேந்திரியங்களும் முழுச்சுகமான வலிமையுற்ற நிலைமையிலிருக்கும். பெண்கள் அடிக்கடி பிள்ளைகளைப் பெறவேண்டி யிருப்பதனால் அவர்களுக்கு அதன் சம்மந்தமான ஞானத்தை யூட்டவேண்டுவது ஒவ்வொரு தாய்மாருக்கும் மகா அத்தியாவசியமான முக்கிய முதற் கடமையன்றோ? இவ்வுலகில் பலர் தம்முடைய உடல்பொருள் ஆவியை யெல்லாம் தத்தம் செய்து மனிதகோடிகளின் க்ஷேமத்தின் பொருட்டு அல்லும் பகலும் அனவரதமும் ஓயாமல் உழைத்து வருவதாகப் பெருமை பாராட்டிக் கொள்ளுகின்றனர். எந்த எந்த விஷயத்தைப்பற்றி மாந்தர் அதிக ஜாக்ரதையாயிருக்க வேண்டுமோ, அந்த அந்த விஷயத்திலேதான் சாதாரணமாய் அவர்கள் கவனஞ் செலுத்தாது காலங் கழிக்கின்றனர். ஆனால் பெண்களுக்கு வேண்டிய அறிவை யூட்டி அவர்களுக்கிருக்கும் அனாவசியமான திகிலை ஒழிப்பதற்கு ஒருவரும் முன்வரக்காணோம். கோடிக்கணக்கான பெண்கள் தங்களுடைய பருவமென்பது இன்னதென்றும் சூதகமென்பது இன்னதென்றும் பிள்ளைப் பேறென்பது இன்னதென்றும் சற்றும் தெரிந்துகொள்ளாமலே பல

பிள்ளைகளுக்குத் தாயாய்ப் போய்விடுகின்றனர். இஃ தென்னே அறியாமை! பெண்கள் விவாகம் செய்து கொண்ட பின்னர்ப் பிள்ளைகளைப் பெறமாட்டோமென்று சொல்வது முடியாது. குடும்ப விருத்திக்கும் அதன் சார் பாய் உலக விருத்திக்கும் குழந்தைப் பேருனது ஆவசியக மாய்க் காணப்படுகிறது. ஆதலின் குடும்ப வாழ்க்கைக்கு வேண்டிய உண்மைத் தன்மைகளை யெல்லாம் ஒவ்வொரு தாயும் தன் மக்களுக்கு அறிவித்தல் அத்தியாவசியமா யிருக்கின்றது. பறவைகளிடத்திலும் மிருகங்களிடத்திலும் காணப்படும் உதாகரணங்களைக் கொண்டு சிறு பெண்க ளுக்கு அவர் தாய்மார் புத்தி புகட்டல் வேண்டும். ஆனல் மிருகங்களிடத்தும் பறவைகளிடத்தும் நாம் காட்டும் கருணைகூட நம்முடைய மக்களிடத்துக் காட்டுவதில்லை.

இவ்வுலகத்திலுள்ள எல்லா ஜீவப் பிராணிகளிடத்தி லும் இப்படிப்பட்ட வம்ச விருத்திக்குரிய ஆண்பெண் தன்மையானது காணப்படுவதுடன் புல் பூண்டு மரம் செடி கொடி முதலிய தாவர வஸ்துக்களிலும் இத்தகைய சக்தி யானது இயற்கையாகவே காணப்படுகின்றது. ஸ்திரீ புரு ஷர்களுக்குரிய ஜனனேந்திரியம் போன்ற சிருஷ்டிக் கருவி கள் ஒவ்வொரு தாவர வஸ்துவிலும் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. செடி கொடிகளிலுண்டாகும் புஷ்பங் களைக் கவனிக்குமளவில் அவற்றிலிருந்து பிஞ்சும் காயும் எவ்வாறு உற்பத்தியாகின்றன வென்று தெரிந்துகொள்ளு வீர்கள். இவ்வண்டத்தில் காணப்படும் எல்லாத் தாவரவஸ் துக்களிலும் மற்றுமுள்ள ஜீவப்பிராணிக ளிடத்திலும் இயற்கையா யமைந்திருக்கும் சிருஷ்டி சக்திதான் மனித வர்க்கத்திலும் காணப்படுகின்றது. இப்படிப்பட்ட இயற்கை யமைப்பின் பிரகாரந்தான் மனிதப் பெண்களுக்கும் கருத்

தரிக்கின்றது. கருத்தரிக்கும் வரையில்தான் கணவன்மாரின் கவலை; அதன்பின் அதைப் பத்திரப் படுத்திக் காப்பாற்றவேண்டிய பொறுப்பானது மனைவியைச் சார்ந்ததாயிருக்கிறது. மணவாழ்க்கையின் காலத்தில் ஸ்திரீ புருஷர்களுக்கிருக்கும் தேகமனோ விகாரங்களும், அவர்கள்பால் மிகுத்துத் தோன்றும் தீக்குணங்களும் நற்குணங்களுமாகிய எல்லாம் அப்பொழுதுண்டாகும் குழந்தையிடத்தில் காணப்படும். ஆனால் கருத்தரித்த விநாடிமுதல் தந்தையின் குணாதிசயங்கள் அக் கருவைத் தொடர்வதில்லை. ஆனால் அப்பொழுதும் கணவன்மார் அந்தச் சூல் கொண்ட மனைவியரைச் சும்மாவிடாமல் பலகாலும் மணவாழ்க்கைக்கு விழைவதுண்டு. தாவர வஸ்துவிலும் ஜீவப் பிராணிகளுள்ளும் இப்படிப்பட்ட செய்கை காணப்படவில்லை. ஒரு முறை பெட்டை மிருகம் சூல்கொண்டுவிட்டால் புருஷமிருகம் அதன்கிட்ட மறுபடியும் நெருங்குவதில்லை; காட்டு மிருகாண்டிகளும் இவ்வாறே நடந்துவருகிறார்கள். ஆனால் நாகரிக மனிதன்மட்டும், கருக்கொண்ட பின்னரும் தம் மனைவியரைச் சும்மா விடுவதில்லை. சில மிருகப் பிராயமான மனிதர்கள் பிரசவகாலம் வரையில் பெண்களிடம் நெருங்கிக்கொண்டே யிருக்கின்றனர்; இது மகா முட்டாள்தனமான காரியமாயிருக்கிறது. குறைந்த பக்ஷம் ஒருகர்ப்பகாலத்தின் கணக்கு 280* தினத்தில் 180 தினமாவது (அஃதாவது ஆறுமாதகாலமாவது) பெண்களு

* கர்ப்பிணிகளின் பிரசவகாலத்தைக் கணக்கிட வேண்டுமாயின் கர்ப்பமுண்டானதற்கு முன்தோன்றிய சூதகத்தின் முதல் தினத்துடன் 9 மாதங்களைச் சேர்த்து அதனுடன் 10 தினத்தைக் கூட்டினால் பிரஸவகாலம் இன்னதென்பது சுமாராகத் தெரியவரும். இப்படிப்பட்ட பிரசவதினம் டிஸம்பர்மீ 31உயாயிருந்தால் அதற்கு

க்கு ஓய்வு கொடுத்துவிடல்வேண்டும். கருப்பைக்குள் பிண்டத்தைக்கடவுளின் அதிவிசித்திரமான செய்கைகள் அதிக பத்திரமாய் எவ்வளவுதான் காப்பாற்றிவந்த போதிலும் கருத்தரித்த தினமுதற்கொண்டே புருஷர்கள் மணவாழ்க்கையை முற்றிலும் ஒழித்துவிட வேண்டுமென்று வேறு சிலர் அபிப்பிராயங் கூறுகின்றனர். சூல்கொண்ட பெண்களைச் சுகாதார விதிப்படி காப்பாற்றவேண்டியதும் ஒவ்வொரு கணவனுக்கும் முதற்கடமையாகும். இல்லற வேட்கை மேன்மேலும் வளர்ந்தோங்கா வண்ணம் கர்ப்பஸ்திரீயானவள் தன் படுக்கையை வேருகப் பிரித்துக்கொண்டு அதிக தூரம் அகன்று துயிலவேண்டும்.

ஒரு கன்னிகைக்கு அவள் தாயாரேனும் தோழியேனும் தக்க பருவத்தில் புத்திபுகட்ட ஆரம்பிப்பாராயின் அவளுக்குத் தன்னுடைய நிலைமை இன்னதென்னும் இயற்கை யறிவானது தானே உதயமாகும். கன்னிகைப் பருவத்தில் அவள் தன்னுடைய தேகஸ்திதியை எப்படிக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்றும், பிறகு பருவமடைந்த பின்னரும், விவாகமான பின்னரும், கர்ப்பமடைந்த பின்னரும் இன்ன இன்ன விதமாய் நடந்துகொள்ள வேண்டுமென்றும் செம்மையாய்க் கற்றுக்கொடுத்தல் வேண்டும். குடும்ப வாழ்க்கை சம்மந்தமான உண்மை ஞானத்தை உள்ளபடியே உணர்ந்துகொள்ள முடியாமற் போவதனுலும், அவ்விஷயத்தின் சார்பாகத் தவருன ஞானத்தை அடைந்து விடுவதனுலும் அளவிறந்த தீமைகளெல்லாம் வந்து மூண்டுவிடுதல் கூடும். பருவமடையுங் காலத்தில்

முன்னுள்ள ஐந்தின்மாதமுடிவுடன் இல்லம் நுழைவதை நிறுத்திவிட வேண்டும். அதற்குமேல் நெருங்கினுல் கர்ப்பிணிகளின் சரீரசுகம் பாதிக்கப்படும்.

வெளியாகக்கூடிய உதிரமானது சாதாரணமாய் வெளியாகக்கூடியதுதானென்றும், அதனால் ஒன்றும் தீமையில்லையென்றும் இவ்வளவு ஞானங்கூட இல்லாமல் அனேகங் கன்னிகைகள் இவ்வுலகி லிருந்துவருகின்றனர். இவர்கள் தங்களுக்கு முதன் முறையுண்டாகும் உதிர ஓட்டத்தைக் கண்டு மிகுதியும் அச்சங் கொண்டு விடுவர். நம் இந்திய நாட்டில் இப்பொழுதிருக்கும் தாய்மார்களெல்லாம் இதன் சம்மந்தமான முழுஞானத்தையும் அடைந்திருப்பாராயின் அவர்களுடைய நிலைமையானது இப்பொழுதிருப்பதைக் காட்டினும் முற்றிலும் வேறுவிதமா யிருந்திருக்கும். அவர்கள் பருவமடையவேண்டி யிருந்தகாலத்தில் இந்தப் புத்தகம் போன்ற ஒரு நூல் அவர்களுடைய கையில் கிடைத்திருக்குமாயின் அதனால் அவர்களுக்கு எவ்வளவு அளவற்ற பிரயோஜன முண்டாயிருக்கக்கூடு மென்பதை யாரால் கணித்துச் சொல்லமுடியும்? வயதான பிறகு எந்த விதத்தில் நடக்கவேண்டு மென்று நினைத்து அதற்கேற்றவாறு நம் சிறுர்களைப் பழக்குகிறோமோ அவ்வண்ணமே அவர்கள் தங்களுடைய ஆயுள் முழுதும் நடந்து வருவார்கள். ஒவ்வொருவரும் தத்தம்முடைய தேகசுகம் ஆரோக்கியமாயும் அழகாயும் தேஜஸ் உள்ளதாயும் இருக்கவேண்டுமென்று ஆர்வங் கொள்வதில்லையா? இயற்கையின் நியதி முறையை அறிந்து அதன்வழியே ஒழுகுவாராயின் ஒவ்வொருவரும் அவரவர் எண்ணியபடியே ஆவார். ஆனால் மணவாழ்க்கை சம்மந்தமான மர்மங்களை யெல்லாம் மணம் முடிப்பதற்கு முன் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் கற்றுக்கொடுப்போமாயின் அதனால் அதிகம் தீங்குகளெல்லாம் விளைதல் கூடு மென்று சிலர் ஆக்ஷேபிப்பதுண்டு; இது சரியான சமாதானமாக மாட்டாது. விஷய ஞானம் தெரியாமையால்

மணவாழ்க்கையில் எத்துணைவிதமான தீமைகளெல்லாம் இப்பொழுது விளைகின்றனவோ அத்துணை விதமான நன்மைகள் அதன் ஞானத்தால் நமக்குக் கிட்டக்கூடும்.

நல்ல பிள்ளைகளைப் பெறுவதற்கு நல்ல தேகம் வேண்டும். பெண்களின் தேகஸ்திதியானது எவ்வளவுக் கெவ்வளவு நல்ல ஸ்திதியிலிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு நல்ல திடதேக முள்ள குழந்தைகளும் உற்பத்தியாகும். "தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சேலை" என்னும் பழமொழியானது இவ்விஷயத்தில் மிகவும் உண்மையான முதுமொழியென்றே கூறல்வேண்டும். குழந்தையின் சுகாதாரமானது தாயின் சுகாதாரத்தைச் சார்ந்திருப்பதால் கர்ப்பிணிகளின் தேகாரோக்கியத்தையும் மனோநிலைமையையும் மிகுதியும் கவனித்துவரல் வேண்டும். தாயின் சுகதுக்கமானது அவளுக்கு எவ்வளவு பாத்தியமுள்ள தாய்க் காணப்படுகிறதோ அவ்வளவு பாத்தியமாகத்தா னிருக்கிறது அவளுக்கு அவளுடைய சரீராரோக்கியமும். உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் திடகாத்திரத்துடன் தேக பலத்தையும் ஒருங்கே பெறுதற்குப் பாத்தியப்பட் டிருக்கிறது. எனவே குழந்தையின் பெற்றோர் திடதேகமுள்ள குழவியைப் பெறும் மார்க்கங்களைத் தெரிந்து அனுஷ்டித்துவரின் அஃது எவ்வளவு நன்றாயிருக்கும்? பிராணனும் சுதந்தரமும் சுகாதாரமும் ஒவ்வொருவருக்கும் சொந்தமாகவே அமைந்திருக்கின்றன; இம்மூன்றிலும் ஒருவர்மீது மற்றொருவருக்குப் பாத்தியமில்லை. இம்மூன்றும் ஒருவருக்கு இல்லாமற் போய்விடின் இவ்வுலக வாழ்வே பயனற்றதாய் முடியும். குழந்தைகளைப் பெறவேண்டியதும் அவர்களை வளர்க்க வேண்டியதும் பெண்களின் கடமையாயிருப்பதால் அவர்களுக்குப் போதுமான தேகபலமும் சுதந்தரமும் கொடுக்

கப்படல் வேண்டும். ஏனெனின் கர்ப்பமுற் றிருக்கும் போது தாயின் தேகத்தி லுண்டாகும் வியாதிகளெல்லாம் குழந்தையின் தேகத்திலும் காணப்படும். இவ் விரண் டோடு அவர்களுக்கு அதிகமான அறிவும் வேண்டும். அறி வும் ஆற்றலுமில்லாப் பெண்கள் அடிமைப் பிள்ளைகளையே பெறுவர். பிள்ளையைப்பெறும் தாய்மார் எவ்வளவு அதிக மான அறிவையும் தேகபலத்தையும் உடையவராய் இருக் கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுடைய குழந் தைகளுக்கும் அவர்கள் நல்லறிவையும் ஞானபலத்தையும் ஊட்டி வளர்ப்பார்கள். ஆதலின் நல்ல சக்தியுடனும் உயர்ந்த ஞானத்துடனும் கூடிய குழந்தைகளைப் பெற விரும்புவோர் கர்ப்பமா யிருக்கும்போதே அனுசரிக்க வேண்டிய விதிகள் சிலவாம். பிண்டம் கர்ப்பத்திலிருக்கும் போதே அதனுடைய அறிவையும் குணத்தையும் உயர்ந் தோங்கும்படி அதன் தாயார் செய்யும் முயற்சிக ளனைத் தும் அக்குழந்தை பிறந்த பின்னர் அதற்காகச் செய்யும் ஆயிரக்கணக்கான முயற்சிகளைக் காட்டினும் பன்மடங்கு மேலான பயனைத் தருதல் கூடும். கர்ப்பத்தி லிருக்கும் குழந்தையின் ஞாபகசக்தியையும் ஞானத்தையும் விருத்தி யடையச்செய்யும் சாதனைகளுக்குக் கர்ப்பத்தின் ஐந்தா வது மாதம்தான் ஏற்ற தருணமென்று கூறுவர். இதற் காகவே ஐந்தாவது மாதம் முதல் கர்ப்பஸ்திரீ தன் மனோ சக்தியை உயர்த்தக்கூடிய நல்ல நூல்களைப் படித்தல் வேண்டும். தன் குழந்தைக்கு வேண்டிய வித்தைகளை ஒரு தாய் தானே கற்கவேண்டும். ஏனெனின் கர்ப்பமா யிருக்கும் தறுவாயில் ஒரு ஸ்திரீ எண்ணியவாறும் பழகிய வாறும் அவளுடைய குழந்தை உதிப்பது பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகின்றது.

கர்ப்ப மடைந்த ஸ்திரீகளுடைய சுகாதாரத்தைக் காப்பாற்றுவதற்கு முக்கிய முதற்காரணமாயிருப்பதுநல்ல காற்ருகும். நம்முடைய இந்திய மாதர்கள் போதுமான நல்லகாற்றை அனுபவிக்காமல் எப்பொழுதும் அவர்களை இருட்டு வீட்டுக்குள்ளேயே குருட்டு மாடுபோல் அடைத்து வைத்திருக்கிருேம். நம் இந்திய நாட்டினர் ஹிந்துக்களாயினும் முஸ்லிம்களாயினும், கிராமவாசிகளாயினும் நகரவாசிகளாயினும் தம்முடைய பெண்களைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டுவதுபோல் பூட்டி வைக்கின்றனர். அதிலும் கர்ப்பமடைந்துவிட்டால் அப்பெண்களுக்குக்கொடுக்கப்படும் சிறைக் காவலானது மிகக் கேவலமா யிருக்கும். பெண்களுக்குப் போதுமான நல்ல காற்றுக் கிடைக்கும்படியான வசதிகளை உண்டுபண்ணிக் கொடுப்பதில்லை; வெளியில் தாராளமாய்ச் சென்று நல்ல காற்றை உட்கொள்ளும்படியும் அனுமதி கொடுப்பதில்லை. திறந்த வெளியில் எதேச்சையான இடங்களுக்குச் சென்ருலல்லவோ நம் ஸ்திரீகளுக்கு நல்ல காற்றை அனுபவிக்கும்படியான பாக்கியம் கிடைக்கப் போகின்றது? இவ்வுலகத்தின் இதர நாடுகளிலுள்ள ஸ்திரீகளுடன் நம் இந்திய மாதர்களை ஒப்பு நோக்குவோமாயின் அவர்களைப் போல் அவ்வளவு நல்லகாற்றை இவர்கள் உட்கொள்வதில்லை யென்றே கூறலாம். நம்முடைய வீட்டில் எப்பொழுதும் அடுப்பங்கரையில் உழன்றுகொண்டு கிடக்கும் ஸ்திரீகளுக்குப் போதுமான நல்ல காற்றுக்கிடைக்கும்படியான வசதிகளைச் செய்துகொடுப்பது நமது கடமையன்ருே? பொதுவாக எல்லா மகளிர்க்குமே நல்லகாற்றுக் கிடைக்கும்படி செய்வதோடு கர்ப்பிணிகளுக்கு முக்கியமாக அப்படிப்பட்ட அசுத்தமற்ற ஆரோக்கிய முள்ள

தென்றற்காற்று அதிகம் கிடைக்கும்படி செய்தல் வேண்டும். சூல்கொண்ட மாதர் அதிகம் சுறுசுறுப்புடன் நல்ல காற்றில் உலாவித்திரிவது அவசியமாகும். நல்லகாற்றும் சுறுசுறுப்பான தேகப் பயிற்சியும் அவர்களுடைய தேகஸ்திதிக்கு அத்தியாவசியமா யிருக்கும். கர்ப்பிணிகள் அதிகமான நல்லகாற்றை உட்கொள்ளாமலும் சோம்பலுடனும் இருப்பார்களாயின் அவர்களுடைய பிரசவகாலத்தில் அதிகம் கஷ்டமுண்டாதல் கூடும். இதனாற்றான் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கும் சோம்பேறித்தனமுள்ள பணக்காரர் வீட்டுப்பெண்களைக்காட்டிலும் வெளியில் அதிகம் உலாவித் திரியக்கூடிய ஏழைப் பெண்கள் அதிசீக்கிரம் மிகக் கஷ்டமில்லாமல் பிரசவித்து விடுகிறார்கள்.

இன்னும் கர்ப்பஸ்திரீகள் கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயமுமுண்டு: இந்நாட்டிலுள்ள சில கர்ப்பிணிகள் தங்களுடைய இடுப்பிலுள்ள ஆடையை மிக இறுக்கமாகக் கட்டிக்கொள்வது வழக்கம். இது முற்றிலும் தவறான காரியமாகும். கர்ப்ப ஸ்திரீகள் தங்களுடைய அடிவயிறு சிறிதும் நசுங்காமல் அதிலேசாக ஆடை யணிந்து கொள்ளல் வேண்டும். ஆடையை இறுகமுடிவதால் அவர்களுடைய கர்ப்பத்துக்குச் சிறிது கஷ்ட முண்டாகும். இடுப்புத்துணியை இறுக முடிவதால்தான் கர்ப்பிணிகளுக்குக் காலை வேளைகளில் வாந்தியுண்டாகிறது ; இடுப்பு வஸ்திரம் தளர்ச்சியா யிருந்தால் இந்த விதமான "மசக்கை" யுண்டாகாது. ஆயினும் ஐரோப்பிய மாதர்களைப்போல் அவ்வளவு மோசமாக நம் இந்திய மாதர்கள் உடை உடுத்துவதில்லை. மேல் நாடுகளில் வைத்திய நிபுணர்களும் அதிகம்தான் ; அங்கே வைத்திய சாஸ்திரத்துக்கு மாறாக நடக்கும் கர்ப்பிணிகளும் அதிகம்தான். ஆனால் கர்ப்ப

ஸ்திரீகள் தங்களுடைய இடுப்பில் சிறிதும் நோவுண்டாகா வண்ணம் அவ்வளவு மென்மையாகவே வஸ்திரம் அணிய வேண்டும். சில பெண்கள் தங்களுடைய இடுப்பாடையை

கர்ப்பந்தரித்து 8 அல்லது 9 வாரம் சென்ற பிண்டம். இதன் நீளம் மூன்றரை அங்குலமிருக்கும்; இதன் நிறை இரண்டரை ஔன்ஸாகும்.

எப்பொழுதும் அதிக இறுக்கமாகவே கட்டிக் கொள்ளு வது வழக்கம். இஃது அறவே கூடாத காரியமாகும்; இதனால் இரத்த ஓட்டம் தடைப்படும். ஆணுயினும் பெண்ணுயினும் தம்முடைய இடுப்பாடையை ஒருபோ தும் இறுகக்கட்டுவது கூடாது; இவ்வா றிருக்கும்போது கர்ப்பஸ்திரீகள் இவ் விஷயத்தில் அதிஜாக்ரதையா யிருந் துகொள்ளல் வேண்டும். அவர்கள் மல்லிகைப் பூப்போல் அவ்வளவு மென்மையாய் ஆடை யணிதல் வேண்டும்.

கர்ப்பஸ்திரீகளுக்கு உயரமான படுக்கை ஒருபோதும் கூடாது; ஆனுல் அகலமான ஒன்று இருக்கலாம். படுக்கை யில் விரிக்கப்படும் வஸ்திரங்கள் சுத்தமாயும் வெளுப்பாயும் இருத்தல் வேண்டும்; அடிக்கடி அவற்றை மாற்றிச் சுத்தம் செய்யவேண்டும். கர்ப்ப ஸ்திரீகள் உயர்ந்த இடங்களில் ஏறுவது கூடாது; இவ்வாறே பள்ளத்தில் தாழக் குதிப் பதும் கூடாது. வேகமாய் நடத்தல், ஆத்திரத்துடன் சண் டையிடல், காலே நீட்டிக்கொண்டு காரமும் உஷ்ணமு முள்ளவைகளைத் தின்னல் முதலியவற்றை நீக்கவேண்டும். பகற்றூக்கம், இராக்கண் விழிப்பு, முழந்தாள்மீது உட் காரல் முதலியவைகளைக் கர்ப்பஸ்திரீகள் முற்றிலும் விலக் கிவிட வேண்டும். ஆதலின் கருத்தரித்த தினம் முதற் கொண்டே தாயானவள் மிகவும் சுத்தமாயும் சாந்தமாயும் இருக்கவேண்டும். கர்ப்பகால முழுதும் சுத்தமான வஸ் திரங்களையே அவள் உடுத்தவேண்டும். அழகில்லாததாயும் குரூரமுள்ளதாயும், நொண்டியாயும் ஊமையாயும் இருந் துவரும் மனிதர்களையும் பொருள்களையும் தியானிப்பதும் தொடுவதும் கூடா. தீயநாற்றமுள்ள வஸ்துக்களை முகரு வது தாகாது. மனத்தின் கண் பயமும் சங்கையும் உண்டா கக்கூடிய வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்பது கூடாது;

அப்படிப்பட்ட தோற்றங்களைப் பார்ப்பதும் நினைப்பதும் கூடா. ஏனெனின் கர்ப்பஸ்திரீயின் மனத்திலுதிக்கும் சங்கையும் பயமும் அவளுடைய குழந்தையிடத்தும் தோன்றிவிடும். அஞ்சாத் துணிவுள்ள தைரியக் குழந்தையைப் பெறவிரும்பும் தாய் தன் கர்ப்பகாலத்திலும் அவ்வாறே இருத்தல் வேண்டும். அழுகியும் "ஜில்லிட்டு"ம் புளித்துமுள்ள பதார்த்தங்களை ஒருபோதும் புசிக்கக்கூடாது. அதிகமான துன்பம் வந்தவிடத்தும் ஆத்திரத்தால் வியசனப்படாமல் சமாதானத்துடன் இருக்கவேண்டும். அதிக காரமும் புளிப்புமான பண்டங்களை ஒதுக்குவதுடன் கொய்னு என்னும் ஜுர மருந்தையும் அடியோடு விட்டுவிடவேண்டும். கர்ப்பகாலத்தில் கொய்னு மருந்தை உட்கொண்டால் குழந்தையின் செவி மந்தப்படும்; அல்லது காதில் வியாதியுண்டாகும்.

இந்தியாவில் சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் சிறு வயதிலேயே அனுவசியமான பயமென்ப தொன்றை உண்டுபண்ணி விடுகிறார்கள். கர்ப்பிணிகள் ஏதேனுமொன்றைக் கண்டு பயந்துவிடுவார்க ளாயின் அக் குழந்தையின் ஆயுளானது அற்பமானதா யிருக்கும். ஒருகால் ஆயுள் நீடித்திருப்பினும் அக் குழந்தை முட்டாளா யிருக்கும். தாய்தந்தைய ரிருவரும் நோயற்றவர்களாயும் பலமுள்ளவர்களாயும் இருப்பார்களாயின் அவர்களுடைய குழந்தையும் அவ்வாறே தாருட்ய திடகாத்திரமுள்ளதா யிருக்கும். நோயுள்ள தாய்தந்தையருக்குப் பிறக்கும் குழந்தை அவ்வாறே நோயுள்ளதாயும் ஆயுள்பல மில்லாததாயும் இருக்கும். பெற்றோர்கள் விடர்களைப் போன்ற காமிகளா யிருப்பின் குழந்தையும் அவ் வேட்கையில் மூழ்கியதாகவே யிருக்கும். மதுபானிகளின் குழந்தைகளுக்கு அப்படிப்

பட்ட பானங்களைப் பருகும்படி வேறெவரும் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை. சோம்பேறிகளின் குழந்தைகள் சோம்பேறிகளாகவே தோன்றும். சுருங்கச் சொல்லுமிடத்து, பெற்றோர்களின் வியாதிகள் பெறப்பட்ட குழந்தைகளினிடத்தும் வெளிப்படையாய்த் தோன்றுமென்பது வைத்திய சாஸ்திரக் கொள்கையாகும்.

அத்தியாயம்—9

சந்தான விருத்தி

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.—(குறள்)

மணமகனுடைய தாருட்யத்திலுள்ள ஒரு சிறு கிருமியும் மணமகளுடைய அடிவயிற்றில் உற்பத்தியாகும் ஒரு சிறு சினையும் அவளுடைய கருப்பையிலேனும், அல்லது நாதக் குழலிலேனும் ஒன்றாக லயித்துப் போமாயின் அப்பொழுது உடனே கர்ப்பமுண்டாகுமென்றும், அவ்வாறு உருக்கொண்ட பிண்டமானது பிறகு 280 தினம் சென்று ஒரு குழந்தையாக வெளிப்படுமென்றும் நாம் முன் அத்தியாயத்தில் செவ்வனே தெரிந்துகொண்டோம். மனமொத்த மாப்பிள்ளையும் பெண்ணும் தம்முள் இனமொத்திருக்கும் போது அவர்கள் ஒருவரையொருவர் அன்புடன் நேசித்து அழகுபெற மணவாழ்க்கையுள் நுழைவார்களாயின் அவர்

களுக்குள் ளுண்டாகும் இல்லற இன்பமானது உடம் போடு உடம்பொட்டும் வெறுங் குடும்பக் கூட்டுறவென்று மட்டும் எண்ணிவிட வேண்டாம். கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் கருத்தொருமித்து ஆவியோடு ஆவியொட்டி அவர்களுக்குள் அத்தியந்த ஆதரவு ஏற்படும்போது அவர்களுடைய ஆனந்த பரவசமுற்ற ஆத்ம மின்சார சக்தியினின்றும் இவ்வுலகில் மற்ருேர் அபூர்வமான ஆவி உதயமாகின்றது. இதுதான் இறைவனுல் அருளப்பட்ட அவர்களுடைய குழந்தையாய் அவதரிக்கின்றது. புருஷன் மனைவியருடைய இல்லற இன்பத்தில் பல்வகையான தத்துவங்கள் பொதிந்திருந்த போதிலும் அவற்றுள் ளெல்லாம் மகா முக்கியமானது புத்திரப்பேருகும். கணவனும் மனைவியும் கருத்தொருமித்து லயிக்கும்போதுதான் அதினின்றும் ஒருபுதிய ஆவி உதயமாகின்றது. இவ்வாறுபுதிய ஆவிகள் அடிக்கடி இவ்வுலகில் உதயமாவதனுல்தான் மனித கோடிகள் இடையில் அற்றுப்போகாமல் தொடர்ச்சியாக வந்துகொண்டேயிருக்கின்றனர். இப்படிப்பட்ட தொன்று தொட்ட தொடர்ச்சியால்தான் நாம் நம்முடைய செல்வத்தின் சேமிப்பையெல்லாம் நம்முடைய சந்ததியாரிடம் விட்டுப் போகின்ருேம். இத்தன்மைத்தாகிய பரிசுத்தமான வேலைக்காகத்தான் நாம் விவாகம் செய்துகொள்ளுகிருேமென்னும் தத்துவத்தை உணர்ந்துகொண்டவர்களுடைய ஹிருதயத்தில் மட்டுந்தான் உண்மையான காதல் இப்படிப்பட்டதென்னும் இரகசிய ஜோதியானது தன்னுடைய சுயப் பிரகாசத்துடன் சுடர்விட்டெரியும்.

புத்துயிராகிய ஓர் அருமைக் குழந்தையை இவ்வுலகில் கொண்டுவர வேண்டுமென்னும் ஆர்வமானது நம்முள் ஒவ்வொருவ ருடைய அந்தக் காணத்திலும் அழுந்திக்

கிடந்தபோதிலும் அதற்காக நாம் எவ்வளவு தேக பலத்தை யிழக்கவேண்டியிருக்கிறதென்று நம்முள் பெரும் பான்மையோர் ஒரு சிறிதும் உணர்ந்துகொண்டார்க ளில்லை. மனிதனல்லாத மற்றைப் பிராணிக ளிடத்தில் ஒவ்வொரு ஜீவப்பிராணியும் உதிப்பதற்காக எத்தனையோ எண்ணத் தொலையாத கோடிக்கணக்கான ஜீவன்களையெல் லாம் பலிகொடுத்தல் வேண்டியிருக்கின்றது. இவ்வாறே மனிதகோடிகளுள்ளும் சந்தான விருத்திக்காக எத்தனைக் கர்ப்பக்கிருமிகளும் பெண் சினைகளும் அவசியம் வேண் டுமோ, அவற்றைக் காட்டினும் அளவற்ற அதிகமான கிருமிகளும் சினைகளும் ஒவ்வொரு வினாடியும் உற்பத்தி செய்யப்பட்டு அழிக்கப்படுகின்றன. கருத் தரிக்காமல் வீணே கழிந்துபோவது தெரிந்திருந்தும் கோடிக்கணக் கான கிருமிகளும் நூற்றுக்கணக்கான சினைகளும் விருதா வாய்ப்போகப் படைக்கப்பட்டுக் கொண்டே யிருக்கின் றன. கருத் தரிப்பதற்கு உபயோகமா யிருக்கக்கூடிய அந்த அதிருஷ்டமுள்ள சினையும் கிருமியும் எவ்வளவு கவலையுடன் உற்பத்தியாகின்றனவோ அவ்வளவு கவலை யுடனும் பிடிவாதத்துடனுமே வீணாய்ப்போகும் வேறுபல கிருமிகளும் சினைகளும் தாமே உற்பத்தியாய்க்கொண்டே யிருக்கின்றன. ஆணும் பெண்ணும் கல்யாணம் செய்து கொண்டு கூட்டுறவின் வாழ்க்கையை அனுபவித்தபோதி லும், இன்றேல் விவாகமின்றிச் சும்மா இருப்பினும் அத் துணைக் கர்ப்பக் கிருமிகளும் ஸ்திரீகளின் சினைகளும் உற் பத்தியாகாம லிருப்பதில்லை. "ஜீவகாருண்யம்", "ஜீவகா ருண்யம்," என்று சில கோஷ்டியார் வீண்கோஷம் செய்து வந்த போதிலும், நம்முடைய சரீரமானது தற்போது அமைக்கப்பட்டிருக்கும் உடற்கூற்றுத் தன்மையை உற்று

நோக்குவோமாயின் ஒரு பிள்ளையை உயிருடன் பெறுவதற்காக அனேகங்கோடி கர்ப்பக்கிருமிகளையும் பல நூற்றுக் கணக்கான பெண் சினைகளையும் வதை செய்யாமல் முடியாதென்பதைச் செவ்வனே தெரிந்துகொள்வோம். "ஜீவகாருண்ய"த்தில் முழுதும் ஈடுபட்ட ஒரு சித்தாந்தச் சன்னியாசிக்கு ஒரு முறை சொப்பன ஸ்கலிதமாய் விட்டால் அதில் அறுபதுகோடி ஜீவப்பிராணிகள், அவருக்குத் தெரியாமலே, அவருடைய கக்ஷிக்கு முரணாக அழிக்கப்பட்டு விடுகின்றன. இவ்வாறே இவ்வுலகிலுள்ள அத்தனை மாதர்களும் ஒவ்வொரு மாதமும் எத்தனையோ சினைகளைத் தமது மாதப் போக்கால் வீணாக்கி விடுகின்றனர். இவையெல்லாம் எத்தனை ஜீவன்களாகின்றன வென்று நினைக்கின்றீர்கள்?

கர்ப்பக் கிருமிகளும் ஸ்திரீகளின் சினைகளும் ஒருவருடைய அனுமதியுமில்லாமலேகோடிக்கணக்காய் ஒவ்வொரு விநாடியும் இவ்வுலகில் வதையுண்டு சிதைவுறுகின்றன. ஒவ்வொரு குழந்தையைப் பெறுவதற்கும் ஒவ்வொருகணவன் மனைவியும் ஒவ்வொருமுறைதான் வீடுகூடவேண்டுமென்று ஓர் அழுத்தமான சட்டம் ஏற்படுத்தியபோதிலும் அப்பொழுதும் அனேகங்கோடிக் கிருமிகளும் முட்டைகளும் விருதாவாகவே அழிவடைந்து கொண்டிருக்கும். இதைத் தடுப்பது எவராலும் ஆகாது. ஒவ்வொரு கர்ப்பமும் கருக்கூடுமுன் இத்தனைக்கோடிக் கிருமிகளும் சினைகளும் சிதைவுறவேண்டு மென்பது தெய்வத்தின் சட்டமாகும்; இதில் "ஜீவகாருண்ய" கக்ஷியாருக்கும் ஒன்றும் அதிகாரம் செல்லமாட்டாது. "ஜீவகாருண்ய" கோஷ்டியார் எவ்வளவு கோபத்துடன் கோஷம் செய்து மனஸ்தாபப் பட்டுக்கொண்ட போதிலும் அவர்களுடைய விருப்பத்துக்கு நேர்மாற்றமாகவே இத்தனைக் கோடி கர்ப்பக்கிரு

மிகளெல்லாம் நம்முடைய ஆயுளில் விருதாவாய்ப் போய்க் கொண் டிருக்கும்பொழுது, நமக்குத் திடமான சந்தான விருத்தி வேண்டுமாயின் ஏன் நமக்கு வேண்டிய மகா சௌ கரியமான வேளையில் அந்தக் கிருமிகளைக் கருக்கூட்டுவ தற்கு உபயோகித்துக் கொள்ளக் கூடாதென்று வைத்திய சாஸ்திரம் கேட்கின்றது. நாம் ஒவ்வொருவரும் நல்ல பிள் ளையையே பெறவேண்டுமென்று நன்றாக விரும்புவதால் நமக்கு உசிதமான வேளையில் நல்ல வலுவுள்ள கிருமிகளை உபயோகிப்பதில் ஒன்றும் ஆக்ஷேபமிருக்கக் காரணமில்லை. நல்ல விதைகளைக்கொண்டு நல்ல பயிர் செய்யலா மென் னும் இரகசியத்தை அறிந்துகொள்ளாத அனேகம் பெண் மாப்பிள்ளைகள் விவாகமாய்ப் பத்தாம் மாதத்தில் பிஞ்சில் பழுத்த ஒரு பதுமையை ஈன்றெடுத்து விடுகின்றனர். பள்ளியறைக்குச் சென்ற முதல் தினத்திலேயே பெண் தேகத்துக்குள் பொறை குத்தப்படுகிறது; பிறகு 280-வது தினத்தில் பிரசவமாய் விடுகிறது. இப்படிப்பட்ட அவசரப் பிரசவத்தால் பெண்களின் தேகம் கட்டுவிட்டுப் போவது நிச்சயம். பிறக்கும் குழந்தையும் பலஹீனமுற்றிருக்கும். பள்ளியறைக்குள் சென்று அரை, அல்லது ஒரு வருஷத் துக்குப் பின் சூல்கொண்டால் மட்டுந்தான் பெண்களின் சரீராரோக்கியம் மிகச் சுகமான நிலையிலிருக்கும். புத்தி மான்கள் விவாகமான மறு வருஷமே பிள்ளை வேண்டு மென்று வரன் கேட்கார். பெண்கள் பருவமடைந்தவுடன் பள்ளியறையுட் புகுதவேண்டுமென்றும், பள்ளியறையுட் புகுந்தவுடன் பிள்ளைவேண்டு மென்றும் நினைப்பது மகா மதியீனமாகும். பெண்களுடைய தேகமானது பிள்ளை யைப் பெறுதற்குறிய வலுவை யடையுமுன் பிரசவிக் கச்செய்வது அவளுடைய சரீரசுகத்தை அதிகம் பாதிக்கும்.

தாயின் சுகத்துக்காகவும் பிறக்கப்போகும் பிள்ளையின் சுகத்துக்காகவும் விவாகமானபின் பல மாதங்கள் சென்று சூல் கொள்வதே மெத்த சிலாக்கியமா யிருக்கும் தாயின் தேகசுகமானது கர்ப்பகாலத்தில் எவ்வளவுக் கெவ்வளவு நல்ல நிலைமையி லிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு குழந்தையின் சுகமும் நல்ல பலத்துடன் இருக்குமென்று நீங்கள் முன் அத்தியாயத்திலேயே தெரிந்துகொண் டிருக்கிறீர்கள். பெண்கள் சும்மா இருந்துவிட்டுப் பள்ளியறைக்குட் சென்றவுடன் புருஷன்மாருடன் ஒருவித நூதன வாழ்க்கையை அடைய ஆரம்பிக்கின்றனர்; அந்த வாழ்க்கையில் அவர்கள் பழக்கப்பட்டு முதிர்ச்சி யடையுமுன் சூல்கொண்டு விட்டால் அதனால் அவர்களுடைய சரீர சுகம் அதிகம் பாதிக்கப்படும். தாமதப்பட்ட சூலினால் பெண் மாப்பிள்ளைகளின் தேகாரோக்கியம் திடமடைவதுடன் பிறக்கப்போகும் பிள்ளையின் சுகமும் மெத்த நல்ல நிலைமையி லிருக்கும். நூதன மணமகனும் மணமகளுமா யிருப்பவர்கள் தங்களுடைய மணவாழ்க்கை அனுபவங்களில் சிறிது தெகிட்டலை அடையுமுன் கர்ப்ப முண்டாய் விட்டால் அந்தக் காப்பத்தின்மீதும், அப்பால் பிரசவமாய்விட்டால் பிறகு குழந்தை பால் குடிக்கும்போதும் அந்த மணமகன் தன்மணமகளை அடிக்கடி நெருங்கிக்கொண்டே யிருக்க விரும்புவான். இதனால் தாய் தகப்பனுக்கும் குழந்தைக்கும் அதிகம் சுகக்கேடுண்டாகும். கர்ப்பகாலத்திலாவது, அல்லது அதற்குப்பின் குழந்தை பால் குடிக்கும்போதாவது மனைவியரைப் பலவந்தம் செய்யும் புருஷர்களைப்பற்றி ஒரு பெரியார் பின்வருமாறு குறை கூறுகின்றார்: "அவன் தன் மனைவியை ஏககாலத்தில் இரண்டு மூன்று தொழிலை மேற்கொள்ளும்படி செய்துவிடுகிறான்:

ஓரே சமயத்தில் அவளைத் தனக்கொரு வைப்பாகவும், குழந்தைக்கொரு பாற்காரியாகவும், பார்ப்போருக்கொரு பதுமையாகவும் செய்துவிடுகிறுன்." கர்ப்பகாலத்தில் வீடு கூடுவதால் துர்ப்பலமுள்ளதாயும் அழகில்லாததாயு முள்ள குழந்தைகளே பிறக்கும். இம்மட்டோ! சில வேளைகளில் குறைப் பிரசவமும் உண்டாகிறது. ஸ்திரீகளின் ஜனனேந்திரியக் கருவிகள் வியாதி யடைகின்றன. அவர்களும் தேகவலி குன்றுகிறுர்கள். இதனுல் பிறக்கும் குழந்தை தன்னுடைய மனத்தையும் இந்திரியங்களையும் ஒருவழி நிறுத்தி அடக்கியாளச் சக்தியற்றதாய்ப் போகின்றது. இவ்வாறில்லாமல் அந்தக் கணவனும் மனைவியும் மணவாழ்க்கையுள் சென்று சில மாதங்களுக்குப் பின், மனைவியின் கர்ப்பத்தாலும் பிறகுண்டாகும் பிரசவத்தாலும் ஒன்று அல்லது ஒன்றரை வருடம் மட்டும் ஒருவரை யொருவர் நெருங்காமல் பிரிந்திருப்பா ராயின் அதனுலும் அவர்களுடைய தேக சுகமானது மிகுதியும் பாதிக்கப்படுதல் கூடும். இப்படிப்பட்ட பல காரணங்களாலும் விவாகமான பின் ஒரு வருஷம் வரையில் புதுப்பெண்கள் சூல் கொள்ளாமலிருப்பதே மெத்த சிலாக்கியமாகும்.

இவ்வாறு விவாகமாய்ச் சில மாதங்கள் சென்றபின் மனைவியர் கர்ப்பமடைந்து விட்டால் அப்பொழுது அவர்களுடன் எவ்வளவு காலம் வரையில் புருடர்கள் சமீபிக்கலாமென்னும் விஷயத்தில் பலபேர் பல விதமான அபிப்பிராயம் கூறுகின்றனர். இதைப்பற்றி வைத்திய நிபுணர்களே இன்னும் தமக்குள் ஒருவிதமான முடிபுக்கு வரவில்லை. சிலர் கர்ப்பகால முழுதும் இருவரும் தனித்திருந்தே வாழவேண்டுமென்று கூறுநிற்பர். இஃது எல்லோராலும் அனுஷ்டிப்பதற்கு முடியாததாயிருக்கலாம். ஆனுல்

இவ்விஷயத்தைக் குறித்த உசிதா உசிதங்களையெல்லாம் நன்கு நோட்டமிட்டுப் பார்க்குமளவில் நாம் முன் அத்தியாயத்தில் கூறியதேபோல் கர்ப்பிணிகளிடம் பிரசவத்துக்கு ஆறுமாதம் முன்முதலேனும் நெருங்காமலிருந்துவிடுவதுதான் மகா சிலாக்கியமாகக் காணப்படுகிறது. பெரும்பான்மையான பெண்களுக்கு அவர்களுடைய கர்ப்பம் முதிர முதிரப் புருஷ இச்சையில் வெறுப்புண்டாகும்; ஆனல் சில பெண்களுக்கு அவர்களுடைய கர்ப்பத்தின் போது அப்படிப்பட்ட ஆர்வமானது அதிகமா யிருக்குமென்று வைத்தியசாஸ்திரம் கூறுகின்றது. இப்படிப்பட்ட ஸ்திரீகளை என்செய்வதென்று சிலர் கேட்கக்கூடும். கர்ப்ப ஸ்திரீகள் இச்சித்ததை யெல்லாம் அவர்களுக்குக் கொடுத்து ஆத்மதிருப்தி செய்துவைக்க வேண்டுமென்னும் ஒரு நம்பிக்கையானது இந்நாட்டில் இருந்து வருகிறது. இதற்கேற்ப அவர்களுக்கிருக்கும் புருஷ நேசத்தையும் பூர்த்திசெய்து வைக்கவேண்டியது கணவனுடைய பொறுப்புத்தானே யென்று அவர்கள் சிந்தித்தல் கூடும். இது வாஸ்தவந்தான். இப்படிப்பட்ட வேட்கையானது அதிகமாய் உண்டாகும்போது புருஷன், மனைவி, பிறக்கும் குழந்தை இம்மூவருடைய திருப்திக்காகவும் எப்பொழுதாவது ஒருமுறை அபூர்வமாய் மணவாழ்க்கையுள் புகுதலாம். ஆனல் அப்படிப்பட்ட கர்ப்பகாலத்தில் அளவுக்கு மீறிய ஆர்வமானது அவள்பால் காணப்பட்டால் அதை வைத்திய நிபுணர்களிடம் சொல்லித் தக்க பரிகாரம் செய்துகொள்ளல் வேண்டும். "அளவுக்கு மிஞ்சினல் அமிர்தமும் நஞ்சாம்" என்னும் பழமொழியானது நன்ருக நம்முடைய மனத்தில் பதிந்திருத்தல் வேண்டும். மேலும் முதிர்ந்த கர்ப்பத்தையுடைய ஸ்திரீகளிடம் அவர்கள் புருஷன்மார்

நெருங்குவது அறவே கூடாது. எப்பொழுதேனும் சூல் கொண்ட மாதரோடு நெருங்க நேர்ந்தால் அவர்களுடைய கர்ப்பத்துக்குச் சிறிதும் நோவுண்டாகாமல் அதிஜாக்ரதையாய் நடந்துகொள்ளல் வேண்டும்.

மனைவியானவள் தன் ஆருயிர்த் துணைவனுடைய ஆதரவால் தன்னுதரத்துள் ஓர் அரிய கர்ப்பத்தை அடைந்து விடுவா ளாயின் பிறகு அந்தக் கர்ப்பமானது முதிர்ச்சியடையுமட்டும் தன்னுடைய கணவனானவன் தன்னருகிலேயே இருக்கவேண்டு மென்றும் அதிகம் விருப்ப முறுகிறாள். தன் வயிற்றிலிருக்கும் குழந்தையின் நன்மைக்காகவும் இப்படி அவள் ஆசைப்படுகிறாள். இப்படி அவள் விருப்பப்படுவதானது அவளுடைய மனத்திலுண்டாகும் வீண் ஆசையென் றெண்ணவேண்டாம். அவனுக்கும் அவளுக்கும் தேகஸ்பரிச முண்டான காலத்தில் அவனுடைய சரீரத்திலிருந்தும் மனத்திலிருந்தும் அவளுடைய கருப்பைக்குள் நுழைந்திருக்கும் ஒருவகை மின்சார சக்தியால் தான் இப்படிப்பட்ட எண்ணம் அவளுடைய மனத்தில் உதயமாகின்றது. பெரும்பான்மையான கர்ப்பிணிகளுக்குச் சாதாரணமாய் எப்பொழுதும் கணவன்மார் தம் சமீபத்திலிருக்கவேண்டுமென்று மட்டும் ஒரு மனப்பூர்வமான ஆர்வமுண்டாகிற தல்லாமல் அவர்களுடன் மணவாழ்க்கை இன்பம் அனுபவிக்க வேண்டுமென்னும் எண்ணம் ஒரு சிறிதும் உண்டாவதில்லை. ஆனால் அப்படிப்பட்ட வேளைகளில் புருஷர்களுக்குமட்டும் மனைவியரை நெருங்கவேண்டுமென்னும் எண்ணம் ஒரு சிறிதும் தணிவதில்லை; அச்சமயம் அப்பெண்கள் மட்டும் பணிவுள்ள பக்ஷம் மறவாத புத்திசாலிக் குடும்ப ஸ்திரீகளாயிருப்பின் தங்களுடைய கணவன்மாருக் குண்டாயிருக்கும் இயற்கையான வேட்கை

யைத் தணிப்பதற்கு ஏதேனுமோர் உசிதமான உபாயம் செய்வர்.

> "மணமக னுடம்பு போற்ற வல்லவண்
> மனைவி யேயென்
> றுணர்வினர் மொழியு மாற்ற முவள்செய
> னோக்கிப் போலுந்
> தணவறு மன்பு சாந்தத் தன்மையு
> நன்மை யான
> குணமுமோ ருருவங் கொண்டோர்
> குடிப்பிறந் தனைய நீராள்,"

என்றார் ஒரு மகா வித்துவானும். மணமகனுக்கும் மணமகளுக்கும் இயற்கையான மணவாழ்க்கையா லுண்டாகக் கூடிய இன்பசுகம் இன்னதென்னும் இரகசியத்தை யுணர்ந்துகொண்ட உண்மைக் காதலியாகிய அந்தக் கர்ப்பிணி தன்னுடைய காதலனுக் குண்டாயிருக்கும் கடுமையான ஆர்வத்தின் தன்மைக் கேற்றவாறு அதை நிவர்த்திப்பதற்குத் தக்க பரிகாரத்தைச் செய்யும்போது அவனுடைய ஆர்வமும் ஒருவாறு தணிந்து அவள்மீது பூர்ண அன்பும் ஆதரவும் உள்ளவனாய் என்றென்றைக்கும் நன்றி யறிதலுடன் நடந்துகொள்ளுவான். மனைவியரின் கர்ப்பகாலத்தில்தான் பல மாப்பிள்ளைமார்கள் தம்முடைய ஆர்வத்தை அடக்கிக்கொள்ள முடியாமல் பரத்தையர் வலைக்குள் பாய்ந்து விடுகின்றனர். இவ்வழியில் இறங்கவிடாமல் தம் கணவன்மாரைக் காப்பாற்ற வேண்டுவது கர்ப்பிணிகளின் பொறுப்பாகும். பிருஷர்களும் அச்சமயம் அதிகம் அவசரப்பட லாகாது.

இவ்வாறு முதற்பேறான முத்துப்பிள்ளை பிறந்தவுடன் மறுபிள்ளைக்கு ஒருவரும் உடனே ஆசைப்படலாகாது.

எக்காரணத்தை முன்னிட்டும் முதற்பிள்ளையின் பிரசவத்துக்குப்பின் ஒருவருஷகாலத்துக்குள் இரண்டாவது முறை கருக்கொள்வது கூடாது; ஆதலின் முதற்பிரசவ காலத்துக்கும் மறுபிரசவ காலத்துக்கும் இடையில் குறைந்தபக்ஷம் சாதாரணமாய் இரண்டு வருஷம் கழிதல் வேண்டும். இரண்டு குழந்தைகளுக் கிடையில் மூன்று வருஷம் கழிய வேண்டு மென்றும், ஐந்து வருஷம் கழியவேண்டுமென்றும் சில வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். ஈதெல்லாம் தாயின் சுகத்தையும் குழந்தையின் க்ஷேமத்தையுங் கருதியே கூறுகின்றனர். ஸ்திரீகளுக்கு விருப்பமில்லாத காலங்களில் அவர்களைப் பலவந்தம் செய்து அடுத்தடுத்துப் பிரசவம் புரியும்படி செய்வதைக் காட்டினும் இவ்வுலகில் மகா கேவலமான கொடிய அடிமைத்தனமானது மற்றொன்று மில்லை. புருஷனுடைய சுமையைச் சுமக்கும் கர்ப்பிணிகளுக்கு அவர்களுடைய கர்ப்பத்தைக் காட்டினும் கௌரவமான வேறொரு சுமையும் இவ்வுலகிலில்லை. இவ்வாறிருக்கும்போது, மடியிலொரு குழந்தையுடனும் வயிற்றிலொரு சிசுவுடனும் யாதொரு ஸ்திரீயும் வெளியில் வரமுடியாமல் அவ்வளவு வெட்கப்படும்படியான நிலைமையில் அடுத்தடுத்துப் பிரசவிப்பது கூடாது. சரியான காலத்தில் சரியானவிதத்தில் குழந்தைகளைப் பெறும் தாய்மார் இவ்வாறு வெட்கப்படக் காரணமில்லை. எதுவரையில் இந்திய மாதர்கள் தங்களுடைய பிரசவத்தைக் கணக்குடன் மட்டுப்படுத்திக் கொள்ளாமல் கண்ட கண்டபடி யெல்லாம் கணக்கில்லாமல் பிரசவித்துக்கொண்டே போகிறார்களோ அதுவரையில் இப்பொழுதிருப்பது போன்ற பலஹீனமான பிள்ளைகளும்* சுகவீனமான தாய்

* பிள்ளைப்பேற்றின் விஷயமாய் இந்தியமக்கள் தக்க முறை

களுமே இத்தேசத்தில் மலிந்து கிடப்பர். இப்படிப்பட்ட கட்டுப்பாடற்ற முறையால் பிரஜாவுற்பத்திமட்டும் அதிகமாக ஆகுமல்லாது அவர்களைப் போஷிப்பவர் அருகிவிடுவார். அப்பொழுது வாஸ்தவமாகவே இந்நரஜன்மம் நரகஜன்ம மாகத்தான் மாறிவிடும். ஐரோப்பாவிலுள்ள உலாந்தா தேசத்தில் பெண்களுக்குக் கருத்தரிக்க வேண்டிய விஷயமாய்ச் சில கடுமையான விதிகளுண்டு; ஒருவரும் அந்நாட்டில் வேண்டாத வேளைகளில் சூல்கொள்வது கூடாது. இதனுல் அந்த உலாந்தா தேசத்தில் பிறக்கும் குழந்தைகளெல்லாம் அதிகமான தேகதிடமும் சரீராரோக்கியமும் உள்ளவரா யிருக்கின்றனர்; இக்காரணத்தால் அந்நாட்டில் குழந்தைகளின் மரணவிகிதமும் அதிகமாய்க் குறைந்திருக்கிறது; இவ்வளவு குறைவான மரணவிகிதம் வேறுநாடுகளில் எங்கும் காணப்படவில்லை. உலாந்தாக்காரரின் ஜனத்தொகையும் நாளுக்கு நாள் அதிகப்பட்டுக் கொண்டே யிருக்கிறது. இத்தனைக்கும் காரணம் அவர்களுடைய அரசாங்கத்தில் ஸ்திரீகளின் சூலைப்பற்றி எடுத்துக் கொள்ளும் ஏற்பாடுதான்.

களை அனுஷ்டிக்காம லிருப்பதனுலேயே இந்நாட்டில் பிரசவமாகும் சிசுக்களுள் நான்கில் ஒருபங்கு முதல்வயதிலேயே பரிதபிக்கத் தகுந்த ஆபத்துக்களுக்கும், பிணிகட்கும், அந்தியத்திற்கும் ஆளாகச் சம்பவிக்கின்றன. இதற்கு இடனில்லாமல் தப்பிக்கொள்ள விரும்புவோர் தங்களின் மணவாழ்க்கைக் காலத்தை ஒரு கட்டுக் குட்படுத்திக் கிரமமான—ஆரோக்கியமான, புஷ்டிகரமான சந்தானங்களைப் பெற்றுக்கொள்ள ஆரம்பத்திலேயே மனத்தை அடக்கிப் பகவத் பிரீதியாய் வாழ்க்கைத் தருமத்தை நடத்த முற்படல் வேண்டும். இதுவே மணவாழ்க்கையின் பெரிய இரகசியமும், தெரிந்துகொள்ள வேண்டிய பெரியதோர் படிப்பினையுமாகும்.

ஆனால் இந்நாட்டில் பல பண்டிதர்களும் மகாத்மாக்களும் வைத்திய நிபுணர்களுங்கூட, மனிதர்கள் தங்கள் தங்களுடைய கர்ப்ப விஷயங்களைக் கணக்குடன் கட்டுப் படுத்துவது கூடாதென்கின்றனர். அறிவு நூல்களில் ஆழ்ந்த ஞான முடையவர்களாயிருந்தும் வேண்டாத காலங்களில் அனாவசியமான கருவை 'அடைவது கூடாதென்று சொன்னவுடன் அவர்களுக்குப் பற்பலவிதமான திகில் கொண்ட ஆக்ஷேபமெல்லாம் தோன்றுவது சகஜம். விவாகமான ஸ்திரீபுருஷர்களுக்குள் எதேச்சையாய் உண்டாகக் கூடிய கருவைத் தடுப்பது ஒரு தகாத செய்கை யென்பது அன்னாரின் அபிப்பிராயமாகும். ஆனால் அவர்கள் மனிதர்களின் சரீரசாஸ்திர உண்மையைமட்டும் சற்று நிதானத்துடன் ஆரா ச்சி செய்து பார்ப்பார்க ளாயின் ஆண் பெண் இரு பாலாருடைய தேகத்தினின்றும், அவர்கள் விவாகமானவர்க ளாயின் அல்லாதவர்க ளாயினும், அடிக்கடி எத்தனைக் கோடிக்கணக்கான கிருமிகளும் சினைகளும் விருதாவாய்ப் போகின்றன வென்பதை நன்கு தெரிந்து கொள்வார்கள்; இப்படிப்பட்ட கர்ப்பக்கிருமி ஒவ்வொன்றும் ஸ்திரீகளின் ஒவ்வொரு சினையையும் கருக்கொள்ளச் செய்யமாட்டாதா? இப்படிக் கருக்கொண்ட ஒவ்வொரு சினையும் ஒவ்வொரு குழந்தையாக ஆயிருக்கமாட்டாதா? இவ்வாறிருந்தும் எத்தனைக்கிருமிகளும் சினைகளும் வீணே நாசமாய்ப் போகின்றன? எத்தனையோ கோடிக்கணக்கான கர்ப்பக் கிருமிகள் அனாவசியமாய் அழிவடையும் போது அவற்றுள் ஏதேனுமொன்று எப்பொழுதாவது கருக்கூடக் கூடுமென்று எண்ணிக்கொண்டு அதை நாம் தடுப்பது கூடாதென்று வாதித்து அடுத்தடுத்து அடுக்கடுக்காய் வேண்டாத வேளைகளிலெல்லாம சவலைப்பிள்ளை

களை மிகுதம் பெறும்படி அனுமதி கொடுத்து விடுகின்றனர். இப்படிப் பிறக்கும் அவசரப்பிள்ளைகளையெல்லாம் கணக்குப்படி சரியான கால அளவுடன் பெற்றிருந்தால் அதனுல் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் எவ்வளவு சுகமுண்டா யிருக்குமென்று எண்ணுகிறீர்கள்? வேண்டிய காலத்தில் வேண்டிய வண்ணமாய் வீரபுருஷர்களைப் பெறுவதைக் காட்டினும் ஏன் வேண்டாத வேளைகளில் வேண்டாத விதமாய்ச் சோணிச் சவலைகளைப் பெறவேண்டும்?

பிறப்பதற்கு நெடுங்கால முன்னரே—இல்லை, கருக்கூடுவதற்கு முன்னேயே, அக் குழந்தைகளிடத்து இவ்வளவு அபிமானம் பாராட்டக்கூடிய அவர்கள் தங்களுக்குப் பிரத்தியக்ஷமா யிருந்துவருகின்ற தமது ஆருயிர்த் துணைவிகளிடம் மட்டும் ஏன் அபிமானம் பாராட்டுவதில்லை? குழந்தைகள் பிறக்குமுன் புருஷன்மார்களுக்கு அவர்களுடைய மனைவியரிடத்தி லல்லாமல் வேறுயாரிடத்தில் அன்பும் ஆதரவும் காட்டுவதற்கு விருப்பமுண்டாகும்? அப்படிப் பட்ட மனைவியரின் தேகாரோக்கியத்தையும் கவனிக்க வேண்டியது அன்னுரின் கணவன்மாருடைய கவலையல்லவா? இப்படிப்பட்ட பொறுப்பு வாய்ந்த புருஷர்கள் தங்களுடைய மனைவியரை வருஷமொருமுறை பிரசவிக்கும்படி நிர்ப்பந்தம் செய்வது நியாயமாகுமா? அடுத்தடுத்து இவ்வாறு குழந்தைமேல் குழந்தையாகப் பெறுவதென்றுல் அந்த ஸ்திரீ ரத்னங்களுடைய தேகத்திலுள்ள ஆவியெல்லாம் அடியோடு வறண்டு வற்றிப்போகாதா? இதனுல் ஒவ்வொரு குழந்தைக்கும் துர்ப்பலமென்பது அதிகம் ஏற்பட்டு விடாதா? இதைக் காட்டினும் அந்தத் தாய்மார்களைத் தண்ணீரில்லாக் காட்டில் கொண்டுபோய்த் தனியே கொலை செய்வது அதிக பாபமான காரியமென்று

நினைக்கின்றீர்கள்? இப்படிப்பட்ட குழந்தைகள் பெற்றோருக்கு நீங்காத துன்பத்தை விளைவிப்பதுமன்றிப் பின்னால் வரும் தலைமுறைகளுக்கும் தீமையைச் செய்கின்றன. துர்ப்பலமும் வியாதியும் நிறைந்தகுழந்தைகள் உலகத்தின்கேட்டுக்காகவே உதிக்கின்றனவன்றி நன்மைக்காகவல்ல. வயிருற உண்டுகொண்டு நல்ல தேகக்கட்டுடனிருக்கக்கூடிய ஸ்திரீகளுக்கே வருஷமொரு குழந்தை பெறுவதென்றால் அவர்களுடைய சரீரத்தின் சாறெல்லாம் அதிகமாக வடிந்து போகும். இவ்வாறிருக்கும்போது நம் இந்தியநாட்டில் எத்தனை மாதர்கள் தினமொன்றுக்கு ஒருவேளை ஆகாரமும் வயிறு நிரம்ப உண்ண முடியாதிருக்குங் காலையில் காலைப் பிடித்துக்கொண்டு ஒரு குழந்தை கதறவும், கணவன் தோள்மீதுமற்றொரு குழந்தை குந்திக் கத்தவும், தம்முடைய இடுப்பிலொரு குழந்தை இருந்தழவும், வயிற்றிலொரு குழந்தை மேய்ந் தலையவுமாய் இருக்க இடமில்லாமலும் உடுக்க உடையில்லாமலும் படுக்கப்பாயில்லாமலும் அலைந்து திரிகின்றன ரென்று நினைக்கின்றீர்கள்? ஒவ்வொரு ஸ்திரீயும் வருஷத்துக் கொருமுறையேனும் பிரசவிக்கலாம்; இவ்வாறு கணக்கிட்டால் அவளுடைய ஆயுளுக்குள் சுமார் 20 அல்லது 25 குழந்தைகளைப் பெற்றெடுக்கலாம். இவ்வண்ணம் அடுத்தடுத்துப்பலபிள்ளைகள் பிறப்பதால்கடைசியில் செல்லச்செல்லக் கடைப்பிள்ளைகள் முதற்பிள்ளைகளைக் காட்டினும் தேகபலத்தில் அதிகம் குறைவுள்ளவராகவே காணப்படுவர். முதலில் பிறந்த குழந்தையான தமையன் தேக ஆகிருதியில் பெருத்தும், அவனுடைய அதேவயதுக்கு அவன் தம்பி வந்தபோதுங்கூடத் தமையனுடைய தேக ஆகிருதியைக் காட்டினும் சிறுத்தும், இவ்விதமே படிப்படியாகக் கடைசித்தம்பி வரையில் ஒருவருக் கொரு

வர் இளைத்தும் போவதைக் காண்கின்றோம். இந்த அம்சம் ‘அவன் உன் தம்பியா?’ என்று சாதாரணமாக உலக வழக்கில் கேட்கப்படுவதினின்றும் ஊகித்துக்கொள்ளப் படலாம். எங்கோ அபூர்வமாகத்தான் இதற்கு எதிரிடையாக ஏமாற்றங்கள் நேர்வதுண்டு. அவ்வாறானபோது, அதிசயப்பட்ட வார்த்தைகள் எழுப்பப்படவும் செய்கின்றன. “அவன் உன் தம்பியா? உன் தமயன் என்றல்லவோ நினைத்தேன், உன்னைக்காட்டினும் அவன் பெருத்துக் காண்கிறானே! இது அபூர்வம்தான்,” என்று பேசிக்கொள்வதையும் சாதாரணமாய்க் கேட்டிருக்கலாம். இதிலிருந்தும் ஏற்படுவது யாதெனின், குழந்தைகள் அதிகமாகப் பிறப்பதற்கேற்றபடி அவற்றின் கடைசி ஈற்றுக் குழந்தையின் தேக ஆகிருதியும், சத்தும், ஸக்தித்துவமும் குறைந்து அகால மரணங்களும் பெருகக் கூடுமென்பதே. எனவே இதனால் பிறப்பட்ட குழந்தைகளின் மரணவிகிதம் மிக அதிகமாகலாம். தாய்மார் திடதேகிகளா யிருக்கும்போது அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளே அதிபலசாலிகளாயிருப்பார்களென்று சொல்லவும் வேண்டுமோ? பல பல பிள்ளைகளைப் பெறுவது இயற்கையின் தருமத்துக்கும் முற்றிலும் மாறாகும். இவ்வாறு ஜனத்தொகை அதிகமாய்க் கணக்கில்லாமல் விருத்தியாதல் நாட்டுக்கும் தீமை விளைக்கும். ஆகார பதார்த்தங்களும் போதாமற்போகும்; ஆதலின் பஞ்சம் கொள்ளை நோய் முதலியன நாள்தோறும் பரவும். மேலும் ஜனசங்கியை அதிகமில்லாக் குடும்பத்தின் நன்மைகளும் பலவாகும்.

பிறக்கும் குழந்தைகள் அதிகமாயிருந்தால் அப்படிப்பட்ட பெரிய குடும்பத்தில் சாவும் அதிகமாகவே இருக்கும். ஒரு குழந்தை தூர்ப்பலமா யிருக்கும்; மற்றொன்று

சரியான போஷணை யில்லாமல் தானே மாண்டுவிடும்; வெறென்று போதுமான ஊட்டம் பெறாமல் உயிர்துறந்து விடும். இறுதியில் ஏதேனும் இரண்டொன்றுதான் மிகுந்திருக்கும். உலாந்தா தேசத்தில் செய்யும் முறைமைபோல் இந்நாட்டில் ஜனனப் பழக்கத்தை ஒருவகைக் கணக்கின் கீழ் வைக்கப் பிரயத்தனப்பட்டால் அப்பொழுது சிறிது நன்மை உண்டாகலாம். ஜனனவிருத்தியின் எதிரிகள் சிலர் குழந்தைகளைப் பெற்றுப் போஷிக்கமாட்டாதவ ரனை வரும் கல்யாணம் செய்துகொள்ளாம லிருக்கவேண்டுமென்கின்றனர். ஜனனவிருத்தியைக் குறைப்பதற்காகப் பிரமசரியத்தை அனுஷ்டிப்பது சரியெனத் தோன்றவில்லை. அப்படிச் செய்வது தலைவலி போய்த் திருவலி வந்ததே போலாகும்.

வைத்திய சாஸ்திர முறைப்படி இதுவரையில்கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் சரியான முறைகளெல்லாம் ஒரு முறை கருக்கூடிய உருவப்பிண்டத்தைக் கருப்பையி லிருந்து அழித்து வெளிப்படுத்துவதற்கு ஒன்றும் பரிகாரம் சொல்லத்துணியா. கருப்பையில் உருப்பட்ட பிண்டத்தைக் கலைத்து வெளிப்படுத்துவது மகாபாபமான காரியமாகும்; அஃதொரு பாதகமான குற்றமுமாகும். ஆனால் சில வைத்திய நிபுணர்களின் முறையானது கர்ப்பக்கிருமியும் அதற்குரிய சினையும் ஒன்றுசேர்ந்து லயிக்கும்படி செய்யாமல் அவற்றைத் தடுத்துவிடுகின்றது ; கருப்பையின் வாய்க்குள் கர்ப்பக்கிருமியொன்றும் நுழையாமல் செய்துவிடலாம்; அல்லது ஆண்கிருமிகள் அறுபது கோடியும் யாதொரு சினையையும் கருக்கூட்ட வொட்டாமல் அவற்றின் ஆண்மையைப் போக்கிவிடலாம். ஒருமுறை ஒரு ஸ்திரீக்குக் கர்ப்ப முண்டாகும்படி செய்யுங்காலையிலும் அந்த 60 கோடிக் கிருமிக

ளுள் ஒன்றுதவிர மற்றையவெல்லாம் அழிந்தே போகின்றன. ஆனால் அம்முறையில் சூல் கொள்ளாவிடின் அந்த ஒரு கிருமியும் சேர்ந்து மொத்தம் 60 கோடியும் அழிந்தே போயிருக்கும். இவ்வாறே ஒவ்வொரு மணவாழ்க்கையிலும் இத்தனைக்கோடிக் கிருமிகள் விகிதம் நாசமடைந்து கொண்டே போகின்றன. உண்மை இவ்வாறிருக்கும்போது நமக்குக் கர்ப்பம் வேண்டாத காலங்களில் சாஸ்திரோக்தமான முறையில் நம்முடைய கர்ப்பக் கிருமிகளின் ஆண்மையைப் போக்கியோ, அல்லது அவை யொன்றும் பெண் சினையுடன் சந்திப்பைப் பெறாமல் அவற்றைத் தடுத்தோ வெற்றி பெறுவோமாயின் அதனாலொன்றும் தீமை விளையமாட்டாது ; இதிலொன்றும் பாபமுமில்லை, பாதகமுமில்லை. ஆனால் இயற்கையா யுண்டாகக்கூடிய கருவின் உற்பத்தியை நம்முடைய சொந்த அறிவைக்கொண்டு தடுப்பது கூடாதென்று சிலர் சொல்வாராயின், இவ்வுலகில் இக்காலத்தில் இந்நிலைமையில் காணப்படும் நாகரிகத்தில் எந்தக் காரியத்தில் நம்முடைய சொந்த அறிவை உபயோகிக்காமலிருக்கிறோமென்று யாம் கேட்கின்றோம். இயற்கைப் பொருள்களில் நம் செயற்கையறிவை உபயோகிப்பதனால்தான் இவ்வுலகம் இப்பொழுது இந்நிலையிலிருக்கிறது. நம்முடைய இகலோக சௌகரியங்களுக்காக இவ்வளவு அறிவையெல்லாம் செலவுசெய்யும்போது அந்தச் சௌகரியங்களை அனுபவிப்பதற்காக நமக்குப் பிறக்கும் பிள்ளைகளைக் கர்ப்பத்தில் கொள்ளும் விஷயத்தில் மட்டும் ஏன் நாம் நம்முடைய சொந்த அறிவைச் சுயமே உபயோகிப்பது கூடாது?

குழந்தைகளின் காட்சி சாலையில்
நூறு பவுன் சன்மானம் பெற்ற குழந்தை

அத்தியாயம்—10

திடமான சூல் கொள்ளல்

கூழைவிழு தைப்பெற்ற ஆல்போலே யாகும்
ஏழைமக வைப்பெற்ற இல்.

இவ்வுலகில் நூதன விவாகம் செய்துகொள்ளும் ஒவ்வொரு ஸ்ரீமானும் ஸ்ரீமாட்டியும் அழகும் குணமுமுள்ள அனேகங் குழந்தைகளையே பெறவேண்டுமென்று ஆசிப்பதுண்டு; அழகும் குணமும் அமைந்திருப்பதோடு வலுவான தேக திடமும் தம் குழந்தைக்குப் பொருந்தியிருக்க வேண்டுமென்றும் அத் தாய்தந்தையர் அதிகம் விரும்புகின்றனர். திடதேக மில்லாத குழந்தைகள் தமக்குப் பிறக்கவேண்டுமென்று இவ்வுலகில் யாதொரு மணமகனேனும் மணமகளேனும் எள்ளளவும் விரும்புவதில்லை. அவரவரும் தத்தமக் கியன்றமட்டும் திடதேகமுள்ள பிள்ளைகளையே பெறவேண்டு மென்றுதான் அதிகமாக ஆசைப்படுகின்றனர். ஆனால் திடதேகமான பிள்ளைகளைப் பெற விரும்பும் தாய்தந்தையரும் தங்களுடைய தேகத்தை மட்டும் மிகத் திடமான நிலைமையில் வைத்துக்கொள்வதோடு அப்படிப்பட்ட தேகவன்மையுள்ள குழந்தைகளை எந்த முறையில் பெறவேண்டுமென்னும் நியதியையும் ஒழுங்காகத் தெரிந்து கொள்வது அத்தியாவசியமாகும். இவ்விஷயத்தில் புருஷன் மனைவி இருவரும் ஒருமனப்பட் டுழைக்கவேண்டும்.

இந்த இந்திய நாட்டுத் தாய்தந்தையர் எல்லோரும் திட தேகமுள்ள குழந்தைகளையே பெறவேண்டு மென்பது அத்தியாவசியமாயின் அதற்கு இக்காலத்தைத்தவிர வேறோர் அவசியமான காலமும் இல்லையென்றே கூறலாம். இந்தியாவிலுள்ள ஸ்திரீ புருஷர்க ளனைவரும் திடதேகமுள்ளவ ராகவே யிருக்க வேண்டுவது அத்தியாவசியமென்பதை இப்பொழுது யார்தான் மறுத்துரைப்பார்? இப்படிப்பட்ட பெருங் காரியத்தைச் சாதிப்பதற்குத் தரையும்விரையும் செம்மையா யிருப்பதோடு பயிர் செய்ய வேண்டிய காலமும் ஒத்திருக்கவேண்டும்; இம்மூன்றனுள் ஒன்றேனும் ஒத்தில்லாவிடின் பிறக்கும் குழந்தைக்குப் பின்னமே யுண்டாகும். ஆதலின் ஒவ்வொரு தாய் தந்தையரும் அறிவிலும் ஆற்றலிலும் மற்றுமுள்ள சன்மார்க்க நெறியுலும் அதி தீவிரமா யிருப்பதோடு தங்களுடைய கர்ப்பத்துக்குரிய காலத்திலும் அதிகம் ஞாபகம் வைத்தவரா யிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு மணமகளும் தன்னுடைய வயிற்றிலுதிக்கும் குழந்தைகளிடம் தன்னுடைய மணமகனுடைய தேகபலமும் அவனுடைய அறிவும் ஆற்றலும் பிரதிபலிக்க வேண்டுமென்று அதிகமாக ஆசைப்படுகிறாள்; இவ்வாறே அவளுடைய கணவனும் தன்னுடைய பிள்ளைகளிடம் அவளது அழகும் குணமும் அமையவேண்டுமென்று விரும்புகிறான். கணவனும் மனைவியும் தம்முள் கருத்தொருமித்து விசுவசிக்கும்போது தங்களுடைய குழந்தைகளிடம் இருவருடைய அறிவும் ஆற்றலும் அழகும் குணமும் அதிகமாகப் பிரதிபலிக்க வேண்டுமென்பதே எல்லா மணமகனும் மணமகளும் விரும்பும் விருப்பமாகும். இதற்காகத்தான் அவரவரும் தத்தமக்குள் ஆணும் பெண்ணுமான

ஜோடி ஜோடியாக வாழத் தலைப்படுகின்றனர். இஃது இயற்கையா யுண்டாகக்கூடிய ஓர் வேட்கையாகும். இந்த வேட்கையின் பிரகாரமே அவர்களுக்கு விவாகமாய்ச் சில காலத்துக்குள் பல குழந்தைகள் உற்பத்தியாகின்றன. ஆனால் எத்தனைக் குழந்தைகள் போதுமென்றும், எந்த முறைப்படி பெறவேண்டுமென்றும் ஒருவரும் ஒருசிறிதும் சிந்திப்பதில்லை. ஆண்டவனால் கொடுக்கப்படுவது அத்தனையும் அமிர்தமென்றே சமாதானம் செய்துகொள்ளுகின்றனர். ஆனால் இப்படிப்பட்ட நிலையில் பரம ஏழைகளாயிருப்பவருக்கே பத்துப் பன்னிரண்டு பிள்ளைகள் அடுக்கடுக்காய்ப் பிறப்பது வழக்கம். இதனால் தகப்பனுக்கும் அதிக தாரித்திரிய முண்டாவதுடன் தாயும் தேவாங்கைப்போல் ஆகிக் குழந்தைகளும் தேரைகளைப்போல் சுகவீன மடைந்து விடுகின்றனர். ஆதலின் அறிவாளிகளான ஆண் பெண்கள் இயற்கை விதியின் ஸூக்ஷ்மத்தைச் சிறிது தெரிந்துகொண்டு தங்களுடைய வருவாயின் சக்திக்கும், தேகசுகத்தின் நிலைமைக்கும், உத்சாகத்தின் அளவுக்கும் தக்கவாறு தங்களுடைய சூல்களை நிதானப் படுத்திக்கொள்வர். தாய் தந்தையரின் தன சகாயத்துக்கும் அன்னாரின் தேகபலத்துக்கும் தக்கவாறாக மட்டுமே சூல்கொள்வதெப்படியென்னும் ஸூக்ஷ்மத்தைச் சொல்லிக் கொடுப்பதுதான் அறிவு நூலின் கடமையாகும். ஆனால் தற்போது சிந்திக்கக்கூடிய ஞானமுடையவர்களும் ஆழ்ந்து நோக்கக்கூடிய அறிவுள்ளவர்களும் தங்களுடைய காதலிக்குக் காலமல்லாத காலத்தில் கருத்தரித்தல் கூடாதென்னும் நல்லெண்ணத்துடன் அதைப் பிற்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஏதேனுமொரு சூழ்ச்சியைப் பின் பற்றியே ஒழுகுகின்றனரென்பதை ஒருவராலும் மறுப்பது முடியாது. ஆனால்

அவர்களுள் எத்தனைபேர் அறிவு நூன் முறைகளை அனுஷ்டித்து வருகிறார்களென்பதுதான் இப்பொழுது சந்தேகம்.

காலமல்லாத காலத்தில் சூல் கொள்வது கூடுமா, கூடாதா வென்பதைப்பற்றி இக்காலத்தில் ஒருவரும் தர்க்கிப்பதில்லை. ஏனெனின், அவரவரும் தம்மாலியன்ற மட்டும் அகாலத்தி லுண்டாகக்கூடிய சூலைத் தடுத்துக்கொள்ளவே பாடுபட்டு வருகின்றனர்; ஆதலின் அவரவரும் அனுஷ்டித்து வரும் முறையைப் பற்றி மட்டுமே இப்பொழுது ஆராய்ச்சி செய்வதே போதுமானதா யிருக்கும். இக்காலத்தில் உபயோகிக்கப்பட்டு வரும் முறைகளெல்லாம் பூர்ண திருப்திகரமானவை யல்ல வென்பதே பெரும்பான்மையான வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயமாகும். ஆனால் அந்த வைத்திய நிபுணர்கள்தாம் இது வரையில் ஏதேனும் முழுத்திருப்திகரமான ஒரு நல்ல முறையைக் கண்டுபிடித் திருக்கிறார்களோ வெனின் அதுவுமில்லை. ஆதலின் அறிவு நூல் வல்லாரும் இன்னதுதான் மற்றெல்லா வற்றைக் காட்டினும் மகா சிலாக்கியமான முறையென்று கூறாமல், இது வரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் முறைகளுள் ளெல்லாம் இதுதான் மிகுதமான தீமையற்றதென்று மட்டுமே கூறத்துணிவர். வேண்டும் போது ஒரு சூலைக் கொள்ளவும் வேண்டாதபோது அதை அடியோடு விலக்கிக்கொள்ளவும் போதுமான அவ்வளவு பூர்ண திருப்திகரத்தை யுடைய யாதொரு நிச்சயமான முறையும் இன்றளவும் கண்டுபிடிக்கப் படவில்லை. இன்றளவும் பற்பல மனிதர்கள் தங்களுக்குத் தெரிந்த பற்பல விதமான முறைகளை அனுஷ்டித்துக் கொண்டே வருகின்றனர். இப்பொழுதிருக்கும் பற்பல விதமான முறைகளுள் சிலாக்கியமானவற்றை யேனும் அவர்கள் செவ்வனே

தெரிந்து கொள்ளாவிடின் பலர் பலவிதமான தவறிய வழி களிலெல்லாம் சென்று தம்முடைய சரீர சுகத்தையும் வீணே கெடுத்துக் கொள்ளுவர். வீழ்வார்க்கு வீழ்வார் துணையென்பதே போல் ஒருவரைக்கேட் டொருவராக ஒவ்வொரு விவாகமான ஸ்திரீபுருஷனும் ஏதோ ஒருவித மான முறையை மட்டும் தெரிந்து கொள்ளாமலில்லை. ஆனால் அவரவரும் தத்தமக்குத் தெரிந்த முறையின் குண தோஷம்இன்னதென்பதைமட்டும்தெரிந்துகொள்வதில்லை; மேலும் தமக்குத் தெரிந்ததைக் காட்டினும் வேறு சிலாக் கியமான முறையொன்று உண்டோவென்று தெரிந்து கொள்ளவும் ஒருவரும் பிரயத்தனப் படுவதில்லை. ஆனால் சரீர மர்ம சாஸ்திரமும் வைத்திய சாஸ்திரமும் இதுவரை யில் ஒரு முழுத் திருப்திகரமான முறையைக் கண்டுபிடிக் காம லிருப்பது மிகவும் வியசனிக்கத்தக்க விஷயம்தான். ஆயினும் இப்பொழுது அனுஷ்டானத்தி லிருந்துவரும் பற்பல விதமான முறைகளுள், சர்வசாதாரண மானதும், அதிகம் செலவில்லாததும், தேக சுகத்தை மிகுதம் பாதிக் காததும், எல்லோரும் எளிதில் செய்துகொள்ளக் கூடிய துமே அனைவர்க்கும் அளவுகடந்த நன்மையைப்பயக்கும்.

மணமகனும் மணமகளும் குழந்தைவேண்டாத கால ங்களில் ஒருவருடன் ஒருவர் நெருங்காமல் இருவரும் தனித்திருப்பதுதான் மகா சிலாக்கியமான வழியென்று சில சமயவாதிகள் கூறுவதுண்டு. காளைப் பருவத்தை யுடைய கட்டழகுள்ள இளம் பெண்ணுக்கும் மாப்பிள் ளைக்கும் இப்படிப்பட்ட தனைத்தல் முறையானது அனுஷ் டிப்பதற்கு அதிகம் சிரமத்தை யுண்டுபண்ணுவதோடு அவர் களுடைய தேகசுகத்தையும் அதிகம் பாதிக்கும். மிதமிஞ் சிய வாழ்க்கையால் எத்தனைக் கேடுகளெல்லாம் இவ்வுல

இல் உண்டாகக் கூடுமோ அதைக் காட்டினும் மிகுதியான தீமையே அதிக காலம் பிரிந்திருப்பதால் விளைதல் கூடும். அனல் காய்பவன் அதன் சமீபத்தில் அதிகம் நெருங்கி விடாமலும், அல்லது அதன் உஷ்ணத்துக் கஞ்சி அதிக தூரம் விலகி விடாமலும் நடுமையமான நிலைமையி லிருப் பதேபோல்* கௌமார தசையை யடைந்த ஆணும் பெண்ணும் தங்களுடைய தேகசுகத்துக்கும், உற்சாகத் துக்கும், உள்ளன்புக்கும் ஏற்றவாறு மிக நிதானமான வாழ்க்கையையே அடைந்துகொண் டிருத்தல் வேண்டும். ஆனால் சில முறையால் சூல்கொள்ளாமல் விலக்கிக் கொள் ளலாமென்னும் அசட்டுத் தைரியத்தால் எவரேனும் மித மிஞ்சிய வாழ்க்கையுள் மூழ்கிவிடுவாராயின் அவருடைய கதி அதோ கதிதா னாய்விடும். வேண்டாத காலங்களிலுண் டாகும் சூலை வேண்டும்போது வரும்படி நிர்ணயம் செய்து கொள்வதால் ஸ்திரீகளின் தேக பலமும் குழந்தைகளின் சரீர சுகமும் விருத்தியாக வேண்டு மென்பதுதான் வைத்திய சாஸ்திரத்தின் நோக்கமல்லாமல் கர்ப்பத்தைத் தடுத்துக் கொள்வதால் அவரவரும் ஆடுமாடுகளைப் போல் ஒருவித வரைதுறையுமில்லாமல் அலையலா மென்பதற்கு அனுமதி கொடுப்பதன்று. எவரொருவர் மிதமிஞ்சிய வாழ் க்கையுள் மூழ்கின்றாரோ அவருக்கு ஆரோக்கியக் குறை வுண்டாவதல்லாமல் ஆயுள் விருத்தியும் அதிகம் குன்றும். ஒவ்வொரு முறை மணவாழ்க்கை புரிவதாலும் உங்களு டைய உடம்பிலிருந்து ஐந்து ஒளன்ஸ் அருமையான இரத் தம் வடிவதனா லுண்டாகக்கூடிய அவ்வளவு தேகபலம் குறைகின்ற தென்பதை மட்டும் நன்றாக ஞாபகத்தில்

* "அகலா தணுகாது தீக்காய்வார் போல
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்."—குறள்.

வைத்துக் கொள்ளுங்கள். மணவாழ்க்கையில் எவ்வளவுக் கெவ்வளவு மிதத்துடன் நடந்துகொள்ளுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு ஆயுள் விருத்தியும், ஆனந்தப் பெருக்கும், சரீரசுகமும், சௌகரிய வாழ்க்கையும் அதிகம் கிடைக்கும். இவ்விஷயத்தில் தன்னடக்கமற்ற புருஷர்கள் மிகுதியும் கவனம் செலுத்துவாராக.

ஸ்திரீ புருஷர்களின் குடும்ப வாழ்க்கையில் மணமகளைக் காட்டினும் மணமகனே அதிகம் கவனிக்கவேண்டியிருக்கிறது. தன்னுடைய தேக சுகத்துக்கும் தன் மனைவியின் சுகாதாரத்துக்கும் அவனே ஜவாப்தாரியா யிருப்பதனால் தங்களிருவருக்கும் சம்பூர்ணமான சுகானந்தமும் சாசுவதமான சுகாதாரமும் எப்பொழுதும் கிடைக்கும்படி செய்ய அவன் கடமைப்பட் டிருக்கிறான். மனிதர்கள் தங்களிடமுள்ள குதிரைகளுக்கும் நாய்களுக்கும் மாடுகளுக்கும் நல்லவிதமான பலாட்டிய முள்ள குட்டிகளும் கன்றுகளும் வேண்டு மென்று அதிகமான பிரயத்தனம் செய்கிறார்கள். பலமுள்ள குட்டிகளைப் பெறுவதற்குப் பலமுள்ள ஆண் பெண் மிருகங்களை ஜோடி சேர்க்க விரும்புகிறார்கள். ஆனால் தாங்கள் மட்டும் பலமுள்ள குழந்தைகளைப் பெறுவதற்கு ஒன்றும் பிரயத்தனம் செய்யாமலிருப்பது என்ன மதியீனம்! பருவமடைந்த குமாரர்களையும் குமாரிகளையும் மணஞ் செய்து வைக்கப் பிரியப்படும் பெற்றோர்கள் இவ்விஷயத்தில் அதிக கவலையுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். தேகாரோக்கியமுள்ள மாப்பிள்ளைக்குத் திடதேகமுள்ள கன்னிகையையே தேடி முடித்தல் வேண்டும். சரியான ஆரோக்கிய ஸ்திதியி லில்லாத ஆண்களுக்கும் பெண்களுக்கும் தக்க ஔஷத முறைகளால் அவர்களுடைய தாருட்யத்தை விருத்தி செய்தல் வேண்

டும். பலஹீனமுள்ள சதிபதிகள் பலஹீனமுள்ள உயிர்ப் பிணங்களைப் பெறுவதனால்தான் இந்தியசமூகம் இவ்வளவு தாழ்மையுற் றிருக்கிறது. இக் காரியத்தில் உண்மையான ஜயம் பெறவேண்டுமாயின் பலஹீனமுள்ள பெண்மாப் பிள்ளைகளுக்குக் கல்யாணத்தால் நேரிடும் தீமைகளையும் அவர்களுக்குப் பிறக்கப்போகும் குழந்தைகளின் கஷ்டங் களையும் நாம் நன்றாக ஆலோசனை செய்யவேண்டும்.

இந்திய நாட்டின் நன்மையைக் கருதியும் இந்திய மக்களின் முன்னேற்றத்தைக் கருதியும் ஒவ்வொரு கண வனும் இவ்வாறு செய்யக் கட்டுப்பட் டிருக்கிறான். இத்த கைய அரியகாரியத்தைச் சாதிக்கவேண்டுமாயின் எல்லோ ரும் தங்களுடைய மனத்துக்கும் தேகத்துக்கும் உண்மை யிலேயே அதிக கௌரவத்தையும் வன்மையையும் கொடுக் கக்கூடிய தன்னடக்கத்தை மிகுதியும் அனுஷ்டித்து வரு வாராக. தன்னடக்க மின்றேல் தாணி பாழாகும். சிறிதும் தன்னடக்க மில்லாமல் மிருகங்களைப்போல் வாழக்கூடிய சிலகீழ்த்தரமாக்களும் இவ்வுலகில் சூல்கொள்ளாமல் தடுத் துக்கொள்ளக் கூடிய சில சூழ்ச்சிகளைக் கைக்கொண்டிருக் கலாம். இப்படிப்பட்ட அதமர்களும் தன்னடக்கத் துடன் சாஸ்திரோக்தமான நல்ல வழிகளில் நடந்துவரு வார்களாயின் அதிசீக்கிரம் முன்னுக்கு வந்து விடுவார்கள். கேவலம் மிருகப்பிராயமான ஸ்தூலவாழ்க்கையில் ஒன்றும் புண்ணியமு மில்லை, புருஷார்த்தமு மில்லை. ஆனால் கருக் கொண்ட பிறகு கர்ப்பங் கரைப்பதற்காகச் சில கீழ்ஜாதி மாக்கள் உபயோகிக்கும் முறையைப்பற்றி யாம் ஒன்றும் ஈண்டுக் கூறத் தேவையில்லை; அவர்களுடைய மடமைத் தனமும் முறைமைக்கேடும் காண்பவருக்கும் கேட்பவருக் கும் மகா மானக்கேட்டையும் மனவருத்தத்தையும் உண்டு

பண்ணத் தக்கனவா யிருக்கும்; அவற்றைக்குறித்து நாம் எவ்வளவுக் கெவ்வளவு பிரஸ்தாபிக்காம லிருக்கிறேமோ அவ்வளவுக் கவ்வளவு எல்லோருக்கும் அது கௌரவமா யிருக்கும். அந்த நாட்டுப்புற மாக்களின் அடாத அக்கிரமச் செய்கைக் கெல்லாம் ஆண்டவனே தக்க கூலி கொடுப்பா ஞகை. அவர்களுடைய துணிவான சில மூடச் செய்கை களால் அனேகம் ஸ்திரீகளுடைய அருமையான ஆவியா னது எமலோகம் செல்வதுண்டு; எமலோகவாயில் வரையில் சென்ற சில ஆவி தப்பிப்பிழைத்தபோதிலும் அந்த மாதர் களுடைய தேகசுகமானது மிகுதியும் பாதிக்கப்பட்டு விடு கிறது. கருக்கூடியபின் கர்ப்பத்தை அழிப்பதானது மகா பாதகமான தொழிலாகவும், சட்ட விரோதமான ஒரு கேவல முள்ள காரியமாகவும் காணப்படுகிறது.

வேண்டாத காலங்களில் விருப்ப மில்லாம லுண்டா கும் சூலைத் தடைசெய்து கொள்வதுதான் தாய் தந்தைய ருக்கும் பிறக்கப்போகும் குழந்தைகளுக்கும் சுகவாழ்க்கை யைத்தந்தருளும். இம்மூவருடைய நன்மையைக் கருதியே வைத்திய சாஸ்திரமானது சில தடைமுறைகளைக் கண்டு பிடித்திருக்கிறது. தேசத்தின் நன்மைக்காகவும் அதிகமான சவலைப்பிள்ளைகள் உற்பத்தியாவது கூடாது. இப்படிப்பட்ட வைத்திய சாஸ்திர முறையைக் கைக்கொண்டிருந்தால் தாய் தந்தையரும் சரியான சரீரசுகத்துடன் இருப்ப தோடு தங்களுடைய குழந்தைக்கும் போதுமான தேகா ரோக்கியத்தைக் கொடுத்திருப்பார்கள். அடிக்கடி அடுக் கடுக்காய்ப் பிறந்துவரும் சவலைக் குழந்தைகளால் இந்நாட் டில் குழந்தை மரணவிகிதமும் அதிகரிப்பதுடன் பலஹீன முள்ள ஸ்திரீ புருஷர்களும் அளவுக்குமேல் அதிகமாக அபிவிருத்தியாய்க்கொண்டே போகின்றனர். இத்தேசத்

தில் வறுமையும் வியாதியும் ஒருபுறமும் துன்புறுத்த மற்றொருபுறம் "சோணி"ப் பிள்ளைகளும் அதிக பலஹீனத்துடன் பிறந்துகொண்டே போகின்றன. தாய் தந்தையர் தங்களுடைய சரீர சுகத்துக்கும் வருவாய்க்குந் தக்கவாறு திடதேகமான சில குழந்தைகளைப் பெறுவதை விட்டுப் பலஹீனமுள்ள ஏழைப்பிள்ளைகள் பல பேரைப் பெறுவதால் அவர்களாலேற்படும் அதிகச்சுமையையெல்லாம் நம்முடைய ஏற்கனவே ஏழ்மையுற்ற நாடுதான் தாங்கவேண்டியிருக்கிறது; இதனால் நாட்டின் வறுமையானது அதிகரித்துக்கொண்டே வரும். ஆனால் புத்திமான்களாயிருப்பவர் இவ்வாறு தேசத்தின் தாரித்திரியத்தை விருத்தி செய்ய மனந் துணியார். சாதாரண மனிதர்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஏழ்மைத்தனத்துடன் இருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமான குழந்தைகளைப் பெற்றுக்கொண்டே போவது வழக்கம். ஆனால் சில ஏழைகள் இதற்கஞ்சிக்கொண்டு பல மாதங்கள் வரையில் ஸ்திரீ புருஷ இல்லற வாழ்க்கையுள் நுழையாமலேயிருந்து விடுகின்றனர். இதுவும் மிகப் பரிதாபகரமான விஷயமாகவே காணப்படுகிறது. இதனால் அவர்களுடைய தேக சுகமும் மன உல்லாசமும் அதிகம் பாதிக்கப்படும். இன்னும் இப்படிப்பட்ட கஷ்டமான முறையை எல்லோரும் எளிதில் அனுஷ்டிப்பது முடியாது. அவரவருக்கும் சாஸ்திரோக்தமான நல்ல முறைகள் தெரியும் பக்ஷத்தில் யாருக்கும் கஷ்டமில்லாமல் எல்லோரும் சுகானந்தத்தையே சதாசர்வகாலமும் அனுபவித்துக் கொண்டேயிருக்கலாம்.

தாய் தந்தையரின் க்ஷேமத்தையும் தேசத்தின் க்ஷேமத்தையும் கோருபவர்கள் பற்பல விதமான கார

ணங்களை முன்னிட்டு அடிக்கடி சவலைப்பிள்ளைகளைப் பெறு வது கூடாத காரியமாகும். மணமகனும் மணமகளும் முதன் முதல் பள்ளியறைக்குள் சென்றவுடன் மறுதினமே சூல்கொள்வதுகூடாது. அவர்களுடைய நூதன வாழ்க்கையில் அன்னாரின் சரீரம் பழக்கமடையுமுன் அம் மணமகள் கர்ப்பமடைந்து விட்டால் அதனால் அவளுடைய தேக சுகம் அதிகம் பாதிக்கப்படும். மேலும் குழந்தை வேண்டு மென்று ஸ்திரீ புருஷர்களுக்கு வேணவா தோன்றிய பின்னரே கர்ப்பங் கொள்வதுதான் சர்வ சிலாக்கியமாகும். விவாகமானவுடன் வயிற்றில் கர்ப்ப முண்டாக வேண்டு மென்று பலர் அறியாமையால் அவசரப் படுகின்றனர்; இது முழு அறியாமையே யாகும். பள்ளியறைக்குட் சென்றபின் சாவகாசமாய் ஒருவருஷம் சென்றபிறகுதான் முதற் குழந்தையைப் பெறுதல் வேண்டும். அதன் பின்னர் மறுசூல் கொள்ளுமுன் ஒரு வருஷமேனும் இடையில் கழிதல்வேண்டும். தாயின் உடைந்ததேகம் க்ஷேமத்துக்கு வரும் பொருட்டும் முதற்பேறான குழந்தையின் தன்மையும் நல்ல ஸ்திதிக்குவரும் பொருட்டும் இரண்டு பிரசவத்துக் கிடையில் இரண்டு வருஷம் கழிதல் நலமாகும். மூன்று, நான்கு வருஷம் கழிதல் மெத்த சிலாக்கியமென்று சில வைத்தியர் கூறுவர். ஸ்திரீ புருஷர் இருவருள் ஒருவருக்குப் பைத்திய மிருக்கும் போதும் குழந்தைகளைப் பெறுவது கூடாத காரியமாகும்; ஏனெனின் உன்மத்தனுக்குப் பிறக்கும் குழந்தை உன்மத்தனாகவேயிருக்கும்; இன்னும் ஊமையருக்கு ஊமைக் குழந்தைகளும், செவிடருக்குச் செவிட்டுக் குழந்தைகளும், குருடருக்குக் குருட்டுக் குழந்தைகளும் தோன்றுவதைப் பார்க்கிறோம். மது பானப் பழக்கமுள்ள வருக்கும் கர்ப்ப

முண்டாவது கூடாதென்பதுதான் வைத்திய சாஸ்திரக் கொள்கை. பெண்ணுக்கேனும் புருஷனுக்கேனும் ஜன னேந்திரியத்தில் ஏதேனும் வியாதியிருக்கும்போதும் பிள்ளைகளைப் பெறுவது தகாத காரியமாகும்; இப்படிப் பட்ட வியாதி யுள்ளவர்கள் மணவாழ்க்கையை விரும்பு வதே அறவே கூடாத காரியமென்று வைத்திய சாஸ்திரம் அதிகம் கடுமையாகக் கண்டிக்கிறது. பெண்மாப்பிள்ளை களின் வியாதி மணஞ்செய்துகொள்வதன்முன் சொஸ்த மாய்ப் போகாததேபோல் தோன்றுமாயின் அவர்களுக் குக் கல்யாணம் செய்விப்பது கூடாத காரியமாகும். மேலும் முதற்பேறுனகுழந்தைகளெல்லாம்பிறவியிலேயே துர்ப்பலமுள்ள "சோணி"ப்பிள்ளைகளா யிருக்கும்போது மேலும் மேலும் மீண்டும் மீண்டும் குழந்தைகளைப் பெறு வது கூடாத காரியமாகும். ஏற்கனவே பெற்ற குழந்தை களுக்கே வயிருற உண்ண உணவில்லாத வேளையில் அதிக மான குழந்தைகளைப் பெற்று அலைய விடுவதில் யாதும் பயனில்லை. சாதாரணமான ஸ்திரீகள் ஆறு குழந்தை களுக்குமேல் அதிகம் பெறுவதும் கூடாது. அளவுக்கு மிஞ்சிய தேகவன்மையும் அதிகமான ஆரோக்கியமும் இருந்தாலொழிய எந்த ஸ்திரீயும் ஆறு குழந்தைகளுக்கு மேல் அதிகமான பிள்ளைகளைப் பெறுவது தகாது. சாதா ரணமான எந்த ஸ்திரீயும் தன்னுடைய ஆயுளுக்குள் சுமார் இருபது குழந்தைகள்மட்டும் பெறலாமென்னும் காரணத் தினல் அத்துணையும் அவள் பெறத்தான் வேண்டுமென் னும் நியதி ஒன்றுமில்லை.

துர்ப்பலமுள்ள பல குழந்தைகளைப் பெறுவதைக் காட்டினும் நல்ல தேகஸ்திதியை யுடைய சில குழந்தை களைப் பெறுவதுதான் அதிசிலாக்கியமான மெச்சத்தக்க

காரியமாகும். அடிக்கடி குழந்தைகளைப் பெறுவதால் தாய்மாரின் தேகத்திலுள்ள தாருட்யமெல்லாம் பிழியப்பட்டுப் போவதுடன் பெறப்படும் குழந்தைகளின் தேகஸ்திதியும் அதிகம் துர்ப்பலப்பட்டுப் போகின்றது. இதனால் தாயின் தேகமும் கட்டுவிட்டுப் போவதோடு குழந்தைகளின் மரண விகிதமும் அதிகப்படும். எவ்வளவுக்கெவ்வளவு சிறு குழந்தைகளின் தேகவன்மையானது திடமான ஸ்திதியிலிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுடைய மரண விகிதம் அதிகம் குறையும். அதிகமான குழந்தைகளைப் பெறுவதால் தேசத்தின் நன்மையும் அதற்கேற்றவாறு அதிகப்படுமென்று நம்புவது தவறான அபிப்பிராயமாகும். தேகவன்மையுள்ள சில குழந்தைகளைக் காட்டிலும் துர்ப்பலமான பல குழந்தைகள் அதி சீக்கிரம் மரிப்பது சகஜம்தானே! இக் காரணத்தால் தான் இந்தியாவிலுள்ள குழந்தைகளின் மரணவிகிதம் இவ் வுலகின் ஏனை நாடுகளைக் காட்டிலும் அதிகமாயிருக்கின்றது*. இன்னும், இந்தியாவி லிருப்பதே

*இந்தியாவில் ஆண்குழந்தைகளுள் ஆயிரத்துக்கு 274-ம், பெண் குழந்தைகளுள் ஆயிரத்துக்கு 260ம் மரிக்கின்றன. மற்றத் தேசங்களின் சிசுமரண விகிதம் இவ்வாறில்லை. சர்க்கார் மதிப்பின் பிரகாரமே இந்தியாவில் பிறக்கும் குழந்தைகளின் மொத்தத்துள் சற்றேறக்குறைய நான்கிலொருபாகம் குழந்தைகள் ஓராண்டுக்குள் இறந்துபோகின்றன. இவ்வண்ணமாக வருஷந்தோறும் இருபது லக்ஷம் குழந்தைகள் இந்நாட்டிலே மடிகின்றன. இந்தியாவின் மகோன்னதமான சிறப்புக்களுள் இஃதொன்றாகும். ஆண் பெண் சராசரி ஆயிரம் பிறவியில் ஜப்பானில் 156ம் இத்தாலியில் 153ம் பிரான்ஸில் 126ம் அமெரிக்க ஐக்ய மாகாணங்களில் 124ம் இங்கிலாந்தில் 117மே சாகின்றன.

போல் இதரநாடுகளில் இத்தனை ஏழைத்தனமுள்ள பிச்சைக்காரக் குழந்தைகளும் காணக்கிடைப்பதில்லை. இந்தப் புண்ணிய பூமியென்று சொல்லப்படுகின்ற நமது பரதகண்டத்திலோ பிச்சை வாங்குவதென்பது பலருக்கும் பரம்பரையான ஒரு தொழிலாக இருந்து வருகின்றது. இந்திய மக்களுக்கே தானதர்மம் செய்வதென்பது ஒரு ஜன்மப் பழக்கமாதலின் இந்நாட்டில் யாசகரென்பவரும் அதிகமாகவே காணப்படுகின்றனர். இதைப்பற்றிக் காருண்ய அரசாங்கத்தாரும் ஒன்றும் கவனிப்பதில்லை. இப்படிப்பட்ட யாசகக் குழந்தைகளை எண்ணிக்கை யில்லாமல் பெறுவதால் தேசத்தின் க்ஷேமம் அதிகம் பாதிக்கப் படுவதில்லையா? ஆனால் நாம் முன்னமே சொன்னது போல் உலாந்தா தேசத்தில் மட்டும் பெண்கள் சூல் கொள்ள வேண்டிய விஷய சம்மந்தமாய்ச் சில கடுமையான சட்ட மிருப்பதால் அத்தேசத்தில் அதிகம் கொஞ்சமான குழந்தைகளே பிறந்தபோதிலும் அவர்க ளெல்லாம் அதிக திடதேகத்துடன் நல்ல பலசாலி களாக ஆகின்றனர். அத்தேசத்தின் மரண விகிதமும் மற்றெல்லாத் தேசங்களின் மரண விகிதத்தைக் காட்டினும் மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. ஆனால் நம் இந்திய நாட்டில் ஒவ்வோர் ஆண்டிலும் வைசூரியாலும், வாந்திபேதியாலும், பிளேக்கினாலும், பிற நோய்களாலும் எத்தனைக் குழந்தைகள் எமலோகம் செல்கின்றனவென்று சிறிதும் நீங்கள் சிந்தித்துப் பார்த்த துண்டா? இந்தியாவில் ஜனனமாகும் ஒவ்வொரு குழந்தைக்கும் இத்தனை ரூபாய் வரிகொடுக்க வேண்டுமென்று இத்தேசத்து அரசாங்கத்தார் ஒரு கடுமையானசட்டம் செய்யக் கூடுமாயின் அதன் பிறகேனும் ஒருவாறு உபயோகமற்ற குழந்தைகளின் ஜனனவிகிதம் குறையுமென்று எதிர்பாக்க இடமிருக்கிறது.

ஆனால் ஆண்டவனால் அளிக்கப்படும் அழகான சூலை வேண்டாமென்று தடைசெய்வதற்கு ஒன்றும் நியாயமில்லை யென்று சிலர் வாதிப்பதுண்டு. கணக்கில்லாமல் கண்டபடியெல்லாம் கருக்கொள்வதைக் காட்டினும் கணக்குடன் கால அளவுப்படி சூல்கொள்வதில் என்ன குற்றமிருக்கிறது? இதிலுள்ள பாபமும் இன்னதென்று எமக்கு விளங்கவில்லை. ஒருவன் தனக்குக் குழந்தைகள் வேண்டாமென்று விவாகமே செய்துகொள்ளாமலிருப்பானாயின் அதிலென்ன தோஷமிருக்கிறது? இஃதேபோல் ஒருவன் தன்னுடைய கர்ப்பக்கிருமியானது பிண்டச் சினையுடன் சேராமல் செய்துவிடுவானாயின் அதிலும் என்ன பாதகமிருக்கிறது? ஒவ்வொரு முறையும் புருஷ தாருட்யம் வெளிப்படும்போது அதில் சுமார் 20 கோடிமுதல் 60 கோடிவரையில் கர்ப்பக்கிருமிகள் வெளியாகின்றன. இந்த 20 முதல் 60 கோடிவரையிலுள்ள அத்தனைக் கிருமிகளும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சினைவிகிதம் 20 கோடிமுதல் 60 கோடி முட்டைகளைச் சூல்கொள்ளும்படி செய்தல் கூடும். இவ்வாறிருந்தும் எல்லாக்கிருமிகளும் ஒரு கருக்கூடும் தொழிலில் உபயோகிக்கப் படுவதில்லை; இப்படியிருந்தும் ஒவ்வொரு மணவாழ்க்கையிலும் ஒவ்வொரு சினைவிகிதமும் கருக்கொள்வதில்லை. சாதாரணமாய் ஒரு சினை கருக்கூட வேண்டுமாயின் நூறு அல்லது இருநூறுமுறை மணவாழ்க்கையுள் நுழைதல் வேண்டியிருக்கிறது. அஃதாவது, சாதாரணமான ஒரு சூலுக்காக ஆறாயிரம் முதல் பன்னீராயிரம் கோடிவரையில் கர்ப்பக் கிருமிகள் பலிகொடுக்கப்பட வேண்டி யிருக்கின்றன. இப்படிப்பட்ட எண்ணத்தொலையாத கிருமிகளுள் ஏதோவொன்று ஏதோ வொருசமயம் தானே கருக்கூடுவதைத் தடுத்து நமக்குச் சௌகரியமான

மற்ெறாரு சமயத்தில் திடதேகமுள்ள நல்ல கிருமியொன்றைத் தேகபலமுள்ள வேளையில் ஒரு பக்குவமுள்ள நல்ல சினையுடன் கருக்கூடும்படி செய்வதில் பாபமென்ன இருத்தல்கூடும்? கோடிக்கணக்கான கர்ப்பக்கிருமிகளுள் ஏதோவொன்று எப்பொழுதோ வொருசமயம் தானே ஒரு சினையுடன் தற்செயலாய் லயிப்பதை நாம் நம்முடைய பகுத்தறிவைச் செவ்வனே உபயோகப்படுத்தி ஓர் உசிதமான காலத்தில் தாய்க்கும் பிண்டத்துக்கும் தகப்பனுக்கும் தேசத்துக்கும் சௌகரியமா யிருக்கும் வேளையில் சந்திக்கும்படி செய்தால் அதிலென்ன தோஷமிருக்கிறது?

தாய்மாரின் தேகசுகத்தைக் காப்பாற்றும் பொருட்டும், அன்னாரின் உதரத்திலுதிக்கும் குழந்தைகளின் க்ஷேமத்தின் பொருட்டும், கருக்கூடிய பிண்டத்தைக் கலைப்பதைக் காட்டினும் அந்தக் கருவைக் கூடுமுன்னே தடுத்துக் கொள்வதில் ஒன்றும் தோஷமில்லையென்று இப்பொழுது நன்கு தெரிந்துகொண்டோம். முன்னொரு சமயம்நெப்போலியனுடைய மனையாள் மேரீலூயி என்பவளுக்குக் கஷ்டமான பிரசவம் நேரிட்டபோது அவளுக்குச் சிகிச்சை செய்துகொண்டிருந்த டுப்வாய் என்னும் வைத்திய சாஸ்திரியானவர் நெப்போலியனை நோக்கி, "இப்பொழுதுள்ள பிரசவத்தின் கஷ்டத்தில் ஏதேனும் நஷ்டம் நேரிடக் கூடுமாயின் தாயின் உயிரைக் காப்பாற்றவேண்டுமா? அல்லது சிசுவின் உயிரைக் காப்பாற்றவேண்டுமா?" என்று வினவியபோது தன்னுடைய பட்டத்துக்கொரு ஆண் குழந்தை வேண்டுமென்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அந்த நெப்போலியன், "தாயைக் காப்பாற்றி விடுவீராக; அஃது அவளுடைய சுதந்தரமாகும்," என்று விடைபகர்ந்த விஷயத்தை நாம் ஈண்டு ஞாபகப்படுத்திக் கொள்ளல்

வேண்டும். ஆனால் ஆண்டவனால் அளிக்கப்பட்ட சிசுவைச் சிலர் முறைகேடான வழியில் அழிப்பது வழக்கமென்று முன்னரே யாம் கூறினோம். இப்படிப்பட்ட பாதகத்தொழிலால் ஸ்திரீகளின் தேகமும் கெட்டு அவர்களுடைய மூளையின் சம்மந்தமான நரம்புக்கருவிகளும் மிகுதியும் துர்ப்பலமடையும். இவ்வாறின்றிச் சூல் கொள்ளுமுன்னே கருக்கூடாமல் தடைசெய்வதில் பலர் பலவிதமான பாமரச் செய்கைகளையெல்லாம் அனுஷ்டிப்ப துண்டு. இவற்றாலும் பல தீமைகள் விளைவதுண்டு. ஸ்திரீ புருஷர்களுடைய தேகப்பரபரப்பும் நரம்புத்துடிதுடிப்பும் அதிகமாயெழுந்து அவர்களுடைய இல்வாழ்க்கையும் இஷ்ட பூர்த்தியாகும் போது இடையில் யாதொன்றும் இடையூறுண்டாகுமாயின் அதனால் அவர்களுடைய வாழ்க்கையின் முழு இன்பமும் செவ்வனே பூர்த்தியாகாமல் அவர்களுடைய நரம்புக் கருவிகளுக்கும் அதிகம் சோர்வுண்டாகும். ஸ்திரீ புருஷ மணவாழ்க்கையால் பூரணச் சுகமுண்டாகுமாயின் அதனால் அவர்களுடைய மனதுக்கும் தேகத்துக்கும் மிகுந்த ஆனந்தமுண்டாகும். சம்பூர்ணமான மணவாழ்க்கையால் புருஷ தேகத்திலிருந்து வெளியாகும் கர்ப்பக் கிருமிகள் பெண்தேகத்துள் தாராளமாய் ஊர்ந்து விளையாடும்படியான சௌகரியம் வாய்க்குமாயின் அப்பொழுது ஸ்திரீகளுக்கு ஒருவித ஆனந்தபரவச முண்டாகும். ஆனால் இதற்கிடமில்லாமல் அவர்களுக்குண்டாகக் கூடிய அவ்வளவு முழுச் சுகானந்தமும் இல்லாமற் போய்விடலாம். இதனால்தான் சூலைத் தடுப்பதற்குரிய எல்லா வழிகளும் சிலாக்கியமானவை யென்று சொல்வதற்கில்லை.

அத்தியாயம்—11

சில தகாத முறைகள்

பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லா(து)
இகழ்ந்தவை காமுறூஉம் ஈப்போல்—இழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினார்க் கென்னுகுந் தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றற்சொல் தேர்வு.—(நாலடி)

புருஷர்களுடைய தாருட்யத்திலுள்ள கர்ப்பக்கிருமிகளைக் கர்ப்பச் சினையுடன் சந்திக்காமலிருக்கும்படி தடுத்து விடுவோமாயின் அப்பொழுது கருக்கூட மாட்டாதென்று இப்பொழுது நன்கு தெரிந்துகொண்டோம். ஆனால் அக்கிருமியும் அச்சினையும் ஒன்றோடொன்று சந்திக்காமல் தடை செய்வதற்கு இன்றளவும் பற்பலவிதமான முறைகளெல்லாம் இவ்வுலகில் இருந்து வருகின்றனவென்று கூறுநிற்பர்; அவற்றுள் இன்னதுதான் சரியான முறையென்று எவராலும் ஊர்ஜிதமாய்க் கூறமுடிவதில்லை. ஆயினும் குடும்பத்துக்கு வேண்டாத காலங்களில் தானே உண்டாகக் கூடிய கருவைத் தடுத்துக்கொள்ள வேண்டுமென்று பலர் பல வழியாலும் பிரயத்தனம் செய்கின்றனர்: சிலர் மணவாழ்க்கையின்போது தம்முடையதேகத்திலிருந்து தாருட்யமே விரயமாகாமல் அவ்வளவு தூரம் தம்முடைய மனஸைக் கட்டுப்படுத்தி விடலாமென்று கூறுகின்றனர்; உறுதியான மனோ சக்தியையுடைய சில

மனிதர்கள் இவ்வாறு மனஸை அடக்கிக்கொள்ளுகின்றன ராம். மனோ வசியப் பழக்கத்தால் இதை எல்லோரும் அப்பியசிக்கக் கூடுமாயினும் சாமான்ய மக்கள் இதில் ஒரு சிறிதும் வெற்றி பெறுதல் முடியாது; மனோ வேகத்தை அடக்கக் கற்றுக்கொண்ட ஒருசிலருக்குத்தாம் இது சாத்தியமாகும். மேலும் இப்படிப்பட்ட இல்லற வாழ்க்கையால் ஸ்திரீகளுக்குக் கிடைக்கக் கூடிய தேகசுகமும் ஆத்மானந்தமும் இல்லாமற் போய்விடும். மேலும் இல்லற வாழ்க்கையில் விருப்பமில்லாமல் வெறுப்புடன் பெண்பாலார் ஒழுகிவருவார்களாயின் அப்பொழுதும் கருக்கூடுவது கஷ்ட சாத்தியமென்று சிலர் கூறுவர்; காதலிருவரும் கருத்தொருமித்து ஆதரவு பூணுவதுதான் ஆனந்த வாழ்க்கையாகும். மேலும் கர்ப்பக்கிருமியும் கர்ப்பச் சினையும் ஒருவாரம் வரையில் உடம்புக்குள் உயிருடனிருக்கக் கூடுமாதலின் சதியின் அலட்சியத்தால் மட்டும் அவை நிவர்த்தியாய் விடுமென்று எண்ணுவது முடியாது.

மற்றும் சிலர் மாத வெளியீட்டின் காலத்தில் மணவாழ்க்கையுள் நுழைகின்றார்கள். அக்காலத்தில் பெரும்பாலும் கருக்கூடுவது கிடையாது; ஆனால் சில சமயங்களில் அப்படிப்பட்ட அனுசார வாழ்க்கையின் பயனாகவும் சூலுண்டாவது உண்டு. ஆனால் சூதக காலத்தில் மனையை நெருங்குவது, புருஷருக்குப் பற்பல விதமான வியாதிகளை உற்பத்தி செய்தலோடு மனஸுக்கும் அனுசாரமான ஒருவகை அருவருப்பை உண்டு பண்ணுகிறது. ஆனால் குழந்தை வேண்டிய காலத்தில் மட்டுமே இல்லற ஒழுக்கத்தை நடத்தலாமென்றும் மற்றைக் காலங்களிலெல்லாம் சதிபதிகளிருவரும் தனித்திருத்தல் வேண்டுமென்றும் பலர் நம்புவதுண்டு; ஆனால் ஒவ்வொருவ

ராலும் இவ்வாறு தனித்திரும்பது முடியாது. கேவலம் குழந்தைகளைப் பெறுதற்காக மட்டுமே இவ்வுலகில் ஆணும் பெண்ணும் மணமுடித்துக் கொள்வதில்லை; தேகத்துக்கும் மனத்துக்கும் சுகானந்தத்தை உண்டு பண்ணத் தக்க பேரானந்தத்தைப் பெறுதற்காகவும் ஸ்திரீ புருஷர்கள் விவாக விலங்கினுள் வலிய நுழைகின்றனர். குழந்தை வேண்டாத காலங்களில் தனித்திருப்பதே தகுதியென்போமாயின் இப்படிப்பட்ட இன்ப சுகம் எய்துவது முடியாது. மேலும் கௌமார தசையையுடைய சதிபதிகள் இவ்வாறு தன்னடக்கப் பழக்கம் செய்து வருவாராயின் அவர்களுடைய தேகபலமும் சுகமும் அதிகம் பாதிக்கப்படும்; மிதமிஞ்சிய மணவாழ்க்கையால் எத்துணைக் கேடுகள் விளைகின்றனவோ அவற்றைக் காட்டினும் அதிகமான தீமைகள் இப்படிப்பட்ட தணத்தல் முறையால் சம்பவிக்கலாம். இன்னும் சிலர் இல்லற வாழ்க்கையில் தாருட்யத்தை வெளியில் விரயம் செய்து விடுவர்; ஆனால் இப்படிப்பட்ட வீண் விரயத்தால் இல்லக் கிழவர் இருவருக்கும் தேக அசக்தமும் நரம்புத்தளர்ச்சியும் உண்டாகும். மேலும் இவர்களுடைய இல்லற வாழ்க்கையில் ஒன்றும் சுகமுண்டாவதில்லை. கல்யாணம் பண்ணியும் சன்னியாசி என்பதேபோல் இருவருக்கும் பெருநஷ்டத்துடன் தாருட்யத்தை விரயம் செய்வதில் யாதொரு பயனுமில்லை.

வேறுசிலர் மணவாழ்க்கையின்போது தம்முடைய தாருட்யம் வெளியாகாமல் வேறு பல அசுகாதார முறைகளையும் அனுஷ்டிப்பதுண்டாம்; இதனல் ஸ்திரீகளுக்குச் சுகானந்தமில்லாமற் போவதுடன் புமான்களுக்கும் அதிகமான நரம்புத் தளர்ச்சியும் ஜனனேந்திரியத் தீங்கும் உண்

டாகுமென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. இன்னும் சிலர் இல்லறவாழ்க்கைக்குப் பின் அடிவயிற்றை அழுத்திப் பிடித்துக்கொண்டு தும்முவதாலும் இருமுவதாலும், உயரத்திலிருந்து தாழக் குதிப்பதாலும் சவலைப் பிள்ளைகளைத் தடுத்துக்கொள்ளலாமென்று எண்ணுகின்றனர்; இவ்வாறு செய்வதால் அடியோடு தடை செய்வது ஒருபோதும் முடியாது. கர்ப்பக்கிருமிகள் 60 கோடியுள் ஒன்றேனும் கருப்பைக்குள் நுழைந்துவிடுமாயின் அஃதொன்றே போதுமானதாயிருக்கும். வேறு சிலர் அதற்கென்று ஏற்பட்டிருக்கும் ரப்பர் கவசத்தை ஆடவர் அணிந்து கொண்டால் சூலுண்டாக மாட்டாதென்று கருதுகின்றனர். இப்படிப்பட்ட பொல்லாக் கவசத்தினால் இல்லக்கிழவர் இருவருடைய ஜனனேந்திரியங்களிலும் பற்பல விதமான நோய்கள் உண்டாகின்றனவென்று பல வைத்திய நிபுணர்கள் பறை யறைகின்றனர். இருவருக்கும் இல்லச்சுகமென்பது இல்லாமற்போவது ஒருபுற மிருக்கட்டும்; அவர்களுடைய ஜனனேந்திரியக் கருவிகளேனும் ஒருவாறு வியாதியில்லாமல் ஒழிகின்றனவோ வென்று பார்க்கப் புகுமிடத்தும் அதற்கொன்றும் திருப்திகரமான முடிவு தோன்றவில்லை. எனவே இப்படிப்பட்ட ரப்பர் கவசங்களால் உண்டாகும் தீமைகளுக்கு அளவே இல்லாமற் போகின்றது.

பெண்களுக்குரிய "பத்திரமான காலங்களில்" மணவாழ்க்கை புரிய நேர்ந்தால் அப்பொழுது கருக்கொள்வது அறவே இல்லை என்று பல படித்த பண்டிதர்களும் அபிப்பிராயப் படுகின்றனர். ஒவ்வொரு மாத வெளியீட்டின் போதும் ஒவ்வொரு சினை வெடித்து நாதக்குழல் வழியே கருப்பைக்குள் கொண்டுவரப் படுகிறது. அங்கிருந்து அது 8 முதல் 14 தினங்களில் வெளியாக்கப்படுவது வழக்கம்.

ஆதலின் இரண்டு மாதங்களின் இடையிட்ட காலம் 28 தினத்தில் ஒரு பதினான்கு நாளையில் கருப்பையானது காலியாய் இருக்கும்; அப்பொழுது மணவாழ்க்கையுள் புகுந்தால் கருக்கூடுவது கிடையாதென்று வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். ஆனால் ஸ்னானம் செய்து 17-வது தினம் முதல் 24-வது தினம் வரையில் இருப்பது தான் மகா நிச்சயமான காலமென்று வேறு பல வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இம்முறையானது பல சமயங்களிலும் ஏமாற்றத்தையே விளைவிக்குமல்லாமல் ஒருபோதும் நிச்சயமான ஜயத்தைக் கொடுப்பதில்லை. ஜனனேந்திரியங்களின் அமைப்பையும் கருக்கூடுவதன் காரணத்தையும் கவனித்து வந்தவர்களுக்கு இம்முறையின் பயனற்ற தன்மையானது இனிது விளங்கும். கர்ப்பக் கிருமிகள் பெண்களின் ஜனனேந்திரியத்தில் எட்டு அல்லது பத்து நாள் வரையில் உயிருடனிருக்கும். இவ்வாறு உயிருடனிருக்கும் கிருமியொன்று பிறகு எப்பொழுதேனும் ஒரு கர்ப்பச்சினையைச் சந்தித்து விடுமாயின் உடனே இரண்டும் லயித்துச் சூலை உண்டுபண்ணும். ஆதலின் எப்படிப்பட்ட வேளையிலும் கர்ப்ப முண்டாவதில்லை யென்று கூறுவது முடியாது. மேலும் பெண்களுக்கு வேட்கையில்லா வேளைகளில் அவர்களைச் சமீபிக்க நினைப்பது ஒரு சுகமற்ற வீண் காரியமே யாகும்.

குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் காலங்களில் இல்லற வொழுக்கம் நடாத்துவதால் ஒருபோதும் கருக்கூடுவதில்லை யென்று பல வைத்தியர்களும் மருத்துவிச்சிகளும் வேறு பல சாதாரண மனிதர்களும் கூறுவதுண்டு. சாதாரணமாய்க் குழந்தைகளுக்குப் பால்கொடுக்குங் காலத்தில் ஸ்திரீகளின் தாருட்ய விருத்திக்குரிய சக்தி முழுதும்

அவர்களுடைய நெஞ்சில் பாலை விருத்தி செய்யும் பொருட்டு அதிகம் செலவழிந்துவிடுவதால் அவர்களுடைய மாத வெளியீடானது ஒழுங்காக வெளியாவதில்லை; ஆதலின் அப்படிப்பட்ட வேளையில் சினைப்பையிலுள்ள ஒவ்வொரு சினையும் எப்பொழுது வெடித்து வெளியாகுமென்று யாராலும் நிச்சயமாய்ச் சொல்வது முடியாது; அதனால் அக்காலத்தில் கருக்கூடுவதில்லையென்று சொல்வர். சாதாரணமாய் அப்படிப்பட்ட வேளைகளில் கருக்கூடாமற் போயினும் சில பெண்களுக்கு முதற்பிள்ளைக்காக அறையிலிருக்கும் பொழுதே மறு சூல் உண்டாய் விடுவதுண்டு; எத்தனையோ மாதர்கள் முதற்பிள்ளை யீன்ற மறுமாதமே மறுபிள்ளைக்கு வேண்டிய அஸ்திவாரத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றனர். ஆதலின் குழந்தைகளுக்குப் பால்கொடுக்குங் காலத்தில் கர்ப்பந் தரிப்பதில்லை யென்று கருதுவது தவறாகும். இதில் இன்னுமொரு குற்றமும் இருக்கிறது: குழந்தையானது பால் குடிக்கும் காலம்·வரையில் மறு சூல் உண்டாகாதென்னும் நம்பிக்கையால் பல அறியாத மாதர்கள் அதைத் தடுத்துக்கொள்ள வேண்டுமென்னும் ஆர்வத்தை வைத்துக் கொண்டு, தங்களுடைய பாலானது குழந்தைகளுக்குப் போஷணை செய்யமுடியாமல் அவ்வளவு பலஹீனமடைந்த பின்னரும் சில வருஷங்கள் வரையில் பால் கொடுத்துக் கொண்டே போகின்றனர்; எப்படிப்பட்ட குழந்தைக்கும் பிறந்தபின் ஒன்பது மாதங்களுக்குமேல் தாயின் பாலைக் கொடுப்பதுகூடாது; ஏனெனின் அதற்குமேல் அக்குழந்தையைப் போஷிப்பதற்குப் போதுமான ஜீவசக்தி முழுதும் அப்பாலில் இருப்பதில்லை. கணக்கில்லாமல் பால் கொடுப்பதனால் தாயின் சுகமும் குழந்தையின் பலமும் குன்றத் தலைப்படும். எவ்வளவுகாலம் குழந்தை பால் குடித்தபோதி

லும் அவ்வளவும் அதற்குப் பலந்தானென்று சில தாய்மார் கருதுவதுண்டு; இதனால்தான் சிலர் ஐந்து அல்லது ஆறு வயதாகு மட்டும் குழந்தைகளுக்குப் பால் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். இது முற்றிலும் தவறான பழக்கமாகும். இப்படிப்பட்ட நீடித்த பழக்கத்தால் குழந்தைக்கோ பயனொன்றுமில்லை; ஆனால் தாயின் தேகவன்மை மட்டும் அனாவசியமாய் வற்றிக்கொண்டே போகின்றது. தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளுக்குச் சிறிது காலம் பால் கொடுத்தபோதிலும், அதிக நீண்ட காலம் அப்படிச் செய்தபோதிலும், அந்தப் பால்கொடுக்குங் காலத்தில் பிண்டோற்பத்தி உண்டாக மாட்டாதென்று எண்ணுவது ஒருபோதும் உண்மையாக மாட்டாது.

மணவாழ்க்கைக்குப்பின் உடனே ஜனனேந்திரியங்களைக் குளிர்ந்த ஜலங்கொண்டு சுத்தம் செய்துகொண்டால் கர்ப்பக்கிருமியும் கர்ப்பச்சினையும் தொடர்வது முடியாதென்று பலர் எண்ணுகின்றனர். இவ்வாறு சுத்தம் செய்வதற்கு முன்னரே ஏதேனுமொரு கர்ப்பக்கிருமி கருப்பைக்குள் நுழைந்துவிடுமாயின் அதனாலும் கருக்கூடுதல் உண்டாகலாம்; இல்லறவொழுக்கத்துக்குப்பின் எவ்வளவு துரிதமாகத் தண்ணீரைக் கொண்டு பரிசுத்தம் செய்ய ஆரம்பித்தபோதிலும் அதற்குமுன் ஒரு கிருமி அதிவேகமாகக் கருப்பைக்குள் நுழைந்து விடுதல் கூடும்; இஃதொன்றே ஒரு கர்ப்பத்துக்குப் போதும். பிறகு சுத்தம் செய்வதால் ஒன்றும் புண்ணியமுண்டாவதில்லை. அதிகமான ஜலத்தினால் கர்ப்பக்கிருமிகள் அலசப்படுவதாலும், அதிக குளிர்ந்த ஜலத்தில் அந்தக்கிருமிகள் உயிருடனிருக்க முடியாமையாலும் கருக்கூடுவது கடினமென்று பலர் அபிப்பிராயப்பட்டபோதிலும் நாம் மேலே கூறியதேபோல்

ஏதேனுமொரு கிருமி தப்பித் தவறிக் கருப் பைக்குள் புகுந்துவிடுமாயின் அப்பொழுதுண்டாகும் சூலை யாராலும் தடுப்பது முடியாது. மேலும் இப்படிப்பட்ட செய்கையினுல் இல்லக்கிழவர் இருவருக்கும் இல்லறச் சுகானந்தம் முற்றுப்பெற உண்டாவதில்லை. இதனுல் நாளடைவில் அவர்களுக்குத் தங்களுடைய குடும்ப வாழ்க்கையிலேயே வெறுப்புண்டாய் விடுதல் கூடும்.

மேலும் தேகமானது அதிகமான கொதிப்பை அடைந்திருக்கும் காலத்தில் குளிர்ந்த ஜலத்தை உபயோகிப்பதால் வறட்சியை அடைந்திருக்கும் நரம்புக் கருவிகளும் உஷ்ணத்தால் மழுங்கி விடுகின்றன; நாளடைவில் ஜனனேந்திரியக் கருவிகளும் உணர்ச்சி இழக்கின்றன. இவ்வாறு சுத்தம் செய்து கொள்வதற்கு மேல் நாட்டினர் ஜலத்தில் சேர்க்கக்கூடிய பற்பல விதமான மருந்துகளையும் கண்டுபிடித்திருக்கின்றனர்; இப்படிப்பட்ட மருந்துகளினுல் மனிதர்களுக்குப் பலவகையான தீமைகளே உண்டாகின்றன; மேலும் ஜனனேந்திரியக் கருவிகளின் இயற்கையான தன்மையையும் அம்மருந்துகள் கெடுத்து விடுகின்றன. இப்படிப்பட்ட மருந்துகளை உபயோகிப்பதால் பெண்களின் தேகசுகம் பொதுவாகப் பாதிக்கப்படுகின்றது. சாதாரணமான ஸ்திரீகள் எப்பொழுதும் யாதொரு விதமான மருந்தையும் உபயோகிப்பதுகூடாது; ஆனுல் ஜனனேந்திரிய சம்மந்தமான சில வியாதிகளையுடைய ஸ்திரீகள்மட்டும் தக்க வைத்தியர்களிடம் பரியாலோசனை செய்து அதற்கேற்ற மருந்துகளை உபயோகித்தல் வேண்டும். பொதுவாக மருந்துகளால் எவ்வளவு நன்மை விளையுமென்று நம்புகிறேமோ அதைக் காட்டினும் அதிகமான தீமையே அவற்ருல் விளைதல் கூடும்.

மேல் நாட்டினரின் சிற்சில மருந்துகள் ரணத்தையும் உண்டாக்கிவிடும். ஆனால் ஜலத்துடன் சாதாரண உப்பைச் சிறிது கலந்துகொண்டால் அபாயமொன்றும் விளைவதில்லை. ஆயினும் பொதுவாக நோக்குமிடத்து இவ்வாறு குளிர்ந்த ஜலத்தால் பரிசுத்தம் செய்வதிலிருந்தே திருப்திகரமான முடிவு ஏற்பட்டுவிடுமென்று கூறுவது முடியாது.

மேற்கூறியவை யல்லாமல் வேறொரு விதமாகவும் வேண்டாத காலங்களில் சவலைகளைத் தடைசெய்துகொள்ளலாமென்று வேறு சிலர் கூறுநிற்பர். கருப்பைக்குள் கர்ப்பக் கிருமியானது நுழையாவண்ணம் தடை செய்வதற்கு மேல் நாடுகளில் இம்மாதிரியான ஒருவகை ரப்பர் கருவியை உண்டு பண்ணுகிறார்கள். இதைப் பெண்பாலார் பூண்டு



கொள்வதால் பெரும்பாலும் கர்ப்பத்தை விலக்கிக் கொள்ளலாமென்று பெரும்பான்மையோர் அபிப்பிராயப் படுகின்றனர். இதனால் ஸ்திரீகளின் தேகத்துக்கேனும் மனத்துக்கேனும் சிறிதும் அபாயம் விளைவதில்லை யென்றும், கூடியமட்டும் கர்ப்பக்கிருமியைச் சூல்கொள்ளுமிடத்திற்குள் செல்ல வொட்டாமல் தடைசெய்து விடுகிறதென்றும், இதனால் இல்வாழ்க்கையின் இன்பத்துக்கொன்றும் இடையூறில்லை யென்றும் அன்னவர் கூறுநிற்பர். இதுதான் சரியானமுறை யென்று பற்பல வைத்தியர்கள் பற்பல விதமாய்ப் புகழ்ந்துரைப்பர். ஆனால் இந்தக் கருவியை ஸ்திரீகள் அணிந்துகொள்வதற்குச் சாதாரணமாய் உடன்படுவாரென்று எதிர்பார்ப்பது முடியாது; மேலும்

இப்படிப்பட்ட கருவியானது கருப் பையின் வாயை எப்பொழுதும் நன்ருக இறுக மூடிக்கொண்டிருக்குமென்றும் கூறுவது முடியாது. எத்துணையோ எண்ணத்தொலையாத கர்ப்பக் கிருமிகளுள் ஒன்றேனும் உட்சென்று கர்ப்பச் சினையுடன் கலந்துவிடுமாயின் உடனே சூலுண்டாய்விடும். எத்துணை இறுக்கமா யிருந்தபோதிலும் இல்லறவாழ்க்கையில் அக் கருவி நழுவி விடாதென்று சொல்வதும் முடியாது. மேலும் பத்மினியாயிருக்கும் பதிவிரதைமார் இப்படிப்பட்ட மேல்நாட்டு ரப்பர்களை அணிந்துகொள்ளவும் அருவருப்புக் கொள்வார். எனவே இம் முறையாலும் முழுதும் திருப்திகரமான முடிவைப் பெறலாமென்பது முடியாத காரியமே யாகும். ஆயினும் இவ்வழியால் இல்லக்கிழவர் இருவருக்கும் யாதொரு விதமான தீங்கும் இல்லையென்றே சில வைத்தியர்கள் அபிப்பிராயங் கூறுவர்.

எனவே, இதுகாறும் வைத்திய சாஸ்திரமானது இவ் விஷயத்தில் ஒரு முழுத் திருப்திகரமான முடிபையும் கண்டு பிடிக்கவில்லை. எதுவரையில் இப்படிப்பட்ட அதிருப்திகரமான நிலைமையானது இருந்துவருகிறதோ அதுவரையில் அளவில்லாமல் ஜனத்தொகையும் பெருகிக் கொண்டே வரும்; இதனுல் பலமற்ற மனிதர்களே அதிகமாக உற்பத்தியாவார்கள். தேசத்தின் வலுவின்மையானது அதிகப்படுவதுடன் நாளுக்கு நாள் க்ஷாமமும் தாரித்திரியமும் இந்நாட்டில் மிகுந்துகொண்டுதா னிருக்கும். அடுக்கடுக்காய்க் குழந்தைகள் பிறந்து அன்னையரின் தேகவன்மை குன்றும்போது இதற்கொரு திருப்திகரமான பரிகார மில்லாம லிருப்பதுதான் மகா பரிதாபகரமா யிருக்கிறது. ஆனுல் முதலில் டாக்டர்களைக் கலந்து தக்க ஆலோசனை புரிந்துகொண்டு ஸ்திரீரத்னம் அணியக்கூடிய ரப்பரை

யேனும் அந்த டாக்ட்டரின் முழு அபிப்பிராயத்தின் பிரகாரம் அணிந்து கொள்ளலாம். ஆனால் கருக் கூடியபின் அக்கருவை ஒழிக்கப்பார்ப்பது பாபமும் பாதகமுமாகும். இப்படிப்பட்ட நிலைமையில் எத்தனையோ நல்ல ஸ்திரீகள் யார் யாரோ சொன்ன தவறான முறையைக்கொண்டு தம்முடைய சவலைக்கருவை ஒழிக்கப் பிரயத்தனப்பட்டுத் தம்முடைய அருமையான உயிரையும் தியாகம் செய்கின்றனர். இதுதான் அறவே கூடாத காரியமாகும். ஆனால் அவரவரும் தக்க சமயத்தில் நல்ல டாக்ட்டர்களைக் கலந்து கொண்டு அன்னவரின் அறிவுறுத்தலை மேற்கொண்டு அதன்படி ஒழுகுவது சர்வ சிலாக்கியமாகும்.

நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.—(குறள்)

அத்தியாயம்—12

சில தவறான ஒழுக்கங்கள்

பன்றிக்கூழ்ப் பத்தரில் தேமா வடித்தற்றால்
நன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்
குன்றின்மேல் கொட்டுந் தறிபோல் தலைதகர்ந்து
சென்றிசையா வாகும் செவிக்கு.—(நாலடி)

இப்பூவுலகம் தோன்றியநாள் முதல் எல்லாத் தேசங்களிலு முள்ள எல்லா ஜாதியார்களுள்ளும் சிற்சில மனிதர்கள் எப்பொ

ழுதும் சில தவறான ஒழுக்கங்களிலேயே பிரவர்த்திக்காமல் இருந்ததில்லை. மனிதர்களிடத்தில் மட்டுமல்லாமல் மற்று முள்ள எல்லா ஜீவப்பிராணிகளிடத்திலும் இப்படிப்பட்ட குணதோஷமானது அடிக்கடி காணப்படுவதுண்டு. ஆண் களும் பெண்களும் தெய்வ நியதியால் ஒழுங்கான முறை யில் இல்லற வாழ்க்கையை நடாத்தி வருங்கால் அவர் களுள் சிலர் துஷ்டர்களின் சேர்க்கை வாசனையால் இளம் பிராயத்திலேயே சொல்லொணு அனுசாரமான துர் அப் பியாசங்களுக்கு ஆளாய் விடுகின்றனர். சிலர் தம் அறி வீனத்தாலும் தீய சேர்க்கையினாலும் தம்முடைய ஆர் வத்தை அசாதாரணமான வழிகளால் அடக்கக் கருதி இயற்கைக்கு மாறான வழியில் இறங்கி விடுகின்றனர். எல் லாத் தேசங்களிலுமுள்ள வாலிபர்களுள்ளும் இப்படிப் பட்ட வழக்கம் காணப்படக் கூடியதாதலின் வாலைப் பரு வத்தில் நாம் நம்முடைய சிறுவர்களையும் சிறுமிகளையும் எப்படிப்பட்ட தீய ஒழுக்க எமன் வாயிலும் வீழாமல் அதி ஜாக்ரதையாகக் காப்பாற்றி வருதல் வேண்டும். இவ்வகை யான இயற்கைக்கு மாறுயுள்ள தன்மைதான், அஃதாவது ஆடவரை ஆடவரும், பெண்டிரைப் பெண்டிரும் விழையும் படி செய்வதுதான் சிருஷ்டிகர்த்தாவின் கட்டளைகளுக்கு முற்றிலும் எதிரிடையாயும் மகா நீசத்துவமாயும் காணப் படுகிறது. தெய்வத்துக்கும் மானுஷீகப் பிறவிக்கும் முழு தும் முரண்பாடா யுள்ளது இப்படிப்பட்ட வெட்கக் கேடான செய்கைதான்.

இப்படிப்பட்ட தீயவழக்கத்தில் விருப்பங்கொண்ட புருஷர்களுக்குப் பெண்களிடம் விருப்ப முண்டாவதில்லை; ஆனல் அவர்களிடம் அடிக்கடி வெறுப்புண்டாகும். இஃதே போல் பெண்வாழ்க்கையில் விருப்பங்கொண்ட

ஸ்திரீகளுக்கு ஆண்களிடம் அவா உண்டாவதில்லை. ஆனால் அவர்களிடம் வெறுப் புண்டாவதுண்டு. தீயபழக்கமுள்ள புருஷர்கள் எப்பொழுதும் பெண் தன்மையையே மேற்கொள்ள விரும்புவர்; இவ்வாறே பெண் வாழ்க்கையில் பிரியமுள்ள ஸ்திரீகள் எப்பொழுதும் ஆண் தன்மையையே மேற்கொள்ள விரும்புவர். இப்படிப்பட்ட புருஷர்கள் சமயம் வாய்க்கும் போதெல்லாம் பெண்களைப் போலவே உடுத்தவும் நடிக்கவும் பிரியப்படுவர்; இப்படிப்பட்ட ஸ்திரீகளும் சமயம் நேரும் போதெல்லாம் ஆண்களைப்போலவே உடுத்தவும் நடிக்கவும் பிரியப்படுவர். இந்தப் பழக்கமுள்ள ஆண்கள் எப்பொழுதும் தங்களைப் போன்ற ஆண்களிடத்தே அன்பு கொள்வர்; இஃதேபோல் இந்தப் பழக்கமுள்ள பெண்களும் எப்பொழுதும் தங்களைப் போன்ற பெண்களிடத்தே நேசங்கொள்வது வழக்கம். பிறவியிலேயே இப்படிப்பட்ட துரப்பியாசத்தையுடையமனிதர்களைத் திருத்துவதென்றால் அஃதொரு போதும் முடியாத காரியமாகும். மேலும் சிறைவாசம் செய்பவர்களுக்குள் காணப்படும் இப்படிப்பட்ட கொடிய வழக்கமும் அவர்கள் விடுதலை யடைந்தா லொழிய விடுபட மாட்டாது. ஆனால் மற்றோரிடத்தில் காணப்படும் இத்தகைய கெட்ட செய்கையை ஒருவாறு போக்கிவிடலாம். வேத பாடசாலைகளிலும் வேறு பல சாதாரணக் கலாசாலைகளிலும் இப்படிப்பட்ட தீயவொழுக்கம் மாணவர்களுள்ளும் மாணவிகளுள்ளும் சில சமயங்கள் மிகுதியும் பயிராய் விடுவதுண்டென்று கூறுகின்றனர். ஆதலின் நம் சிறுவர்களையும் சிறுமிகளையும் பன்னிரண்டு வயது முதல் பத்தொன்பது வயது வரை அதிஜாக்ரதையாக மேற்பார்வை செய்து கொண்டு வரவேண்டும். இப்படிப்பட்டவர்களுக்குள்ள

சகவாச தோஷங்களை யெல்லாம் அடியோடு மாற்றி அவர்களை நல்ல சேர்க்கை யுள்ளவருடன் பழகும்படி செய்து அவர்களுக்கு இத்தகைய தீய வழக்கத்தா லுண்டாகும் தீமைகள் இன்னின்னவை யென்று அதிகம் போதித்தல் வேண்டும். தன்னடக்கமும் தானே தெரிந்துகொள்ளும் விஷய ஞான விளக்கமுமே இப்படிப்பட்ட ஆண் பெண்களுக்கு இனியில்லா நல்ல பயிற்சியைக் கொடுத்தருளுமென்பது சான்ருேர் அபிப்பிராயமாகும். இக்காரணத்தால்தான் "சான்ருேரினத்திரு" என்று சான்ருேரும் சாக்ஷியம் பகர்கின்றனர்.

மேற்கூறிய துர்வழக்கமல்லாமல் ஹஸ்தப் பிரயோகம் என்று சொல்லக்கூடிய ஒருவகைக் கொடிய பழக்கமும் சிற்சில மனிதர்களிடத்தில் இவ்வுலகில் காணப்படுவதுண்டு. இப்படிப்பட்ட வழக்கமானது ஆண்பிள்ளைக ளிடத்தில் மட்டுந்தாம் காணப்படுகிற தென்று கருதவேண்டாம். ஆனல் பெரியமனிதர்க ளிடத்திலும் பெண்களிடத்திலும் காணப்படுவதைக் காட்டினும் பால்யர்க ளிடத்திலேயே இப்படிப்பட்ட தீயவழக்கம் அதிகமாய்க் காணப்படுகிற தென்று பல வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். பள்ளிக்கூடங்களும் சகவாச தோஷங்களுமே இத்தகைய கொடிய பழக்கத்துக்கு மெத்த சௌகரியமாயிருக்கின்றனவாம். அதிக நாகரிகமுள்ள இடங்களென்று கருதப்படும் பெரிய நகரங்களில்தாம் இப்படிப்பட்ட கெட்ட வழக்கம் மிகுதியும் காணப்படுவது வழக்கம். இஃது ஒருகாலத்துக்கு மட்டும் ஒரு தேசத்துக்கு மட்டும் உரிய துர்வழக்கமென் றெண்ணவேண்டாம்; எல்லாத் தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் இப்படிப்பட்ட பழக்கம் இருந்துவருகின்றதாம். உலகத்திலுள்ள தீய

வழக்கங்கள் எல்லாவற்றுள்ளும் இதைக் காட்டினும் தாழ்ந்ததும் அருவருக்கத் தக்கதுமான துரப்பியாசம் வேறொன்றிலும் அறவேயில்லை. இவ்வுலகில் நாகரிகம் முதிரமுதிர அதற்கேற்றவாறு குடும்ப வாழ்க்கைக்குரிய விஷயஞான மும் அதிகரிக்காமல் போவதனுற்றான் சிறுவர்களிடத்தில் இத்தகைய வழக்கமும் விஷப்பூண்டுபோல் பயிராகி வருகின்றது. இப்படிப்பட்ட துஷ்பிரயோகத்தால் வீரியத்தை வெளியாக்கும் சிறுவர்கள் தங்களுடைய மனோபாவத்தில் பெண்களுடைய எல்லாவிதமான அழகையும் அந்தஸ்தையும் மனனம் பண்ணிக்கொள்ளவேண்டி யிருக்கிறது. இவ்விதமான கெட்ட வழக்கமானது சிறுவர்களுடைய மனத்தில் அதிபால்யத்திலேயே சிற்றின்பத்துக்குரிய மிகவிகாரமான எண்ணங்களை உண்டுபண்ணி விடுகின்றது; இவ்விஷயத்தினுலுண்டாகக்கூடிய முதற்றீங்கு இதுதான். மேலும் இந்தச் சிறுவர்களுடைய சரீரத்தின் தாருட்யமானது பிஞ்சிலேயே அதிகம் கழிந்து விடுவதால் எல்லோரும் இன்பசுகம் அனுபவிக்கக்கூடிய நல்ல வயதில் நபுஞ்சகராய்ப் போய்விடுகின்றனர். இப்படிப்பட்டவர்களுடைய அதோகதி இன்னவிதமா யிருக்குமென்று, ஐயோ! அவர்களை நேரில் கண்டவர்களுக்குத்தாம் நன்றாகத் தெரியும். இயற்கை வழியினின்றும் சற்றே விலகிவிட்டால் பயங்கரமான ரோகங்கள் தேகத்தைத் தாக்குகின்றன. இவ்வாறு துன்பமடையும் உறுப்புக்களுள் முக்கியமானவை ஜனனேந்திரியங்களேயாகும். இவற்றைப் பற்றிய விவரத்தை மனிதர்கள் இன்னும் செம்மையாய்த் தெரிந்துகொள்ளவில்லை.

இப்படிப்பட்ட ஹஸ்தமுறையை அடிக்கடி அனுஷ்டித்துவரும் ஸ்திரீகள் பெண்களுக்குரிய மடம், நாணம்,

அச்சம், பயிர்ப்பு என்னும் சற்குணமற்ற ஆண்மாரிகளைப் போல் காணப்படுவர். இதற்கு வசப்பட்ட அனேகம் பெண்டிர் தங்கள் கர்வத்துக்கு ஆதிகாரணமாயிருந்த அழகையும் இளமையையும் தேகதேஜஸையும் அதிகம் இழந்துவிடுகின்றனர். ஆனால் அப்படிப்பட்ட ஆண்பிள்ளைகள் மகா வெட்கமுள்ளவர்களாகவும் தனித்திருக்கும் சுபாவமுள்ளவராகவும் காணப்படுவர். இக்கொடிய பழக்கத்துக்கு ஒருவன் ஆளாய் விடுவானாயின் அவனுடைய சிவந்த சதைப்பற்றுள்ள ரோஜாக்கன்னங்கள் சிறிது நாட்களுக்குள் சுட்டுச் சுரண்டியதேபோல் வெளுத்து வறண்டு போகின்றன; ஆண்மையும் குன்றுகின்றது. இத்தகைய துர்க்குணத்தையுடைய ஆணுக்கும் பெண்ணுக்கும் தன் மதிப்பென்பது சிறிதும் காணப்பட மாட்டாது; ஆனால் அவர்களுக்கு அகங்காரமும் மமகாரமும் மட்டும் அளவுக்கு மிஞ்சியே யிருக்கும். சில சமயங்களில் சில புருஷர்கள் தங்களுடைய ஆர்வத்தைத் தணித்துக் கொள்வதற்கு யாதொரு விதமான வழியும் அகப்படாத வேளையில் தங்களுடைய ஹஸ்தப்பிரயோகத்தாலேயே தமது விருப்பத்தைப் போக்கிக்கொள்ள முயன்று இப்படிப்பட்ட ஈனத்தொழிலில் இறங்கிவிடுகின்றனர்; ஆரம்பத்தில் விளையாட்டாக ஆரம்பித்துப் பிறகு காலக்கிரமத்தில் கேவலமென்னும் லஜ்ஜையற்ற பாதாளத்துள் வீழ்ந்து விடுகின்றனர். அந்தோ பரிதாபம்! இப்படிப்பட்ட கெட்ட வழக்கமானது மனிதவர்க்கத்தில் மட்டுந்தான் உண்டென்று ஒருபோதும் எண்ணவேண்டாம்*. மிருகங்களும்

*இக்கொடிய வழக்கம் எல்லா ஜாதியிலும் சிறுவர்களிடத்து மின்னற் கொடியின் வேகம்போல் பரவி வருகின்றதென்று வைத்திய சாஸ்திரிகள் முறையிடுகின்றனர்.

தனித்திருக்கும்போது தங்களுடைய விருப்பத்தைச் சுயமே சிலவேளைகளில் தணித்துக்கொள்ளுகின்றன. ஆண் குதிரைகள் தங்களுடைய ராஜகருவியை அடிவயிற்றில் மோதிக்கொள்வதால் அடிக்கடி வீரியத்தை வெளியாக்குவதைச் சிலர் சில சமயங்களில் பார்த்திருக்கலாம். காளைமாடுகளும் ஆடுகளும் தங்களுடைய முன்னங் கால்களுக்கிடையில் தமது குறியைச் செலுத்துவதால் வீரியத்தை வெளியாக்குகின்றன. பசுமாடுகளுக்கும் உஷ்ணம் உண்டாய்விடும் பக்ஷத்தில் அவை ஒன்றன்மீது ஒன்று தாவுவதுண்டு. பெட்டைக் குதிரைகள் தமக்கு ஆர்வம் அதிகப்படும் வேளையில் கூர்மையான வஸ்துக்களில் தேய்த்துக்கொள்வது வழக்கம். மான்கள் தங்களுடைய குறிகளை மரத்தில் தேய்த்துத் தமது வெப்பத்தை நீக்கிக்கொள்ளுகின்றன. இவ்வாறே பெட்டையாடுகளும் ஒட்டகங்களும் தங்களுக்குச் சௌகரியமான வஸ்துக்களுடன் தேய்த்துத் தமது சூட்டைத் தணித்துக்கொள்வது வழக்கம். யானைகளும் கரடிகளும் தம்முடைய ஆயுதத்தைப் பின்னங்கால்களுக் கிடையில் வைத்து அழுத்துவதால் வீரியத்தை வெளிப் படுத்துகின்றன. நாய்களும், பூனைகளுங்கூடத் தமக்குரிய வழியில் இக்காரியத்தை முடித்துக் கொள்ளுகின்றன. குரங்குகளோ மனிதர்களைப்போல் கையை உபயோகித்து மணியை வெளிப்படுத்துவது வழக்கம். ஆண் கிளிகளும் தம்முடைய மர்மஸ்தானத்தை வேறோரிடத்தில் தேய்ப்பதனுல் மணியைக் கக்குவது சகஜமா யிருக்கிறது. இவற்றுள் ஏதேனுமொன்றன் தொழிலைக் கண்டு பக்குவமடையாச் சிறுவர்களும் சிறுமிகளும் இக்கொடிய பாதக ஒழுக்கத்துள் இறங்கி விடுகின்றனர். அந்தோ பரிதாபம்! அழகு போயிற்று!! இழவு மேவிற்று!!!

ஹஸ்தப்பிரயோகத்தில் மூழ்கினவர்கள், அவர்கள் ஆதியில் எவ்வளவு கட்டழகுள்ள பால்யர்களா யிருப்பி னும் சிறிது காலத்துக்குள் தேகம் மெலிந்து தேஜஸ் குறைந்து பாண்டுரோகங் கொண்டவரைப்போல் உடம்பி லுள்ள உதிரம் சுண்டி உள்ளமட்டும் சிடுசிடுப்புள்ளவ ராகவே ஆய்விடுவர்; அவர்களுடைய அழகிய முகாரவிந்த மும் ஒட்டியுலர்ந்து கண்களும் உள்ளே குழி விழுந்து விடும். இதனுடன் மன உல்லாசமும் மழுங்கிவிடுகிறது. அவர்கள் எப்பொழுதும் தலை கவிழ்ந்தவராகவே கோட் டானைப் போல் மௌனஞ் சாதித் திருப்பர். உயிர்வாழ வேண்டுமென்னும் அவா அவர்களிடத்தில் இல்லாமல் ஒழி கிறது. அவர்களுடைய உள்ளங்கை யிரண்டும் நுனிவிரல் கள் உட்பட "ஜில்லென்று" குளிர்ந்து ஈரமாகவும் கரு நிறமாகவும் காணப்படும்; இதுதான் அவர்களுடைய தேகத்திலுள்ள ஆவியின் சாரமெல்லாம் அடியோடு வற் றிப் போய்விட்டதென்பதற்கொரு நிரந்தரமான சாக்ஷி யமாயிருக்கிறது. இவ்வாறு அவர்களுடைய உடம்பின் தாதுவெல்லாம் வடிந்துவிட்டதன் காரணமாகத் தூக்கமும் மிகக் குறைந்துவிடும். இக்கொடிய வழக்கத்தினின்றும் அவர்கள் சீக்கிரம் மீளாவிடின் பிறகு நாளடைவில் அவர் களுடைய தேகமும் மனமும் ஒன்றும் சத்தில்லாமல் பீர்க் கங்காய் போல வெறுங் கூடாக வற்றிப்போம். தேக வன்மை வரவர க்ஷீணித்துச் சாதாரணமான மணவாழ்க் கையும் கூட எவ்வகை இன்பத்தையும் கொடுக்கக்கூடாத தாகின்றது. இதனுல் பலவிதமான நரம்பு சம்மந்தமுள்ள வியாதிகளெல்லாம் உற்பத்தியாகும். குணம் மந்தமடை யும்; மணிக்கட்டிலும் மற்றைப் பூட்டுக்களிலும் வாத நோய் தங்கும்; கையும் காலும் சோர்வடையும்; நடப்

பதற்கும் நகர்வதற்கும் மனம் துணியாது. இப்படிப்பட்ட ஹஸ்தப் பிரயோகத்தால் சிறுவர்களின் ஞாபக சக்தியும் அதிகம் குறையும்; நாளடைவில் ஒருகால் ஞாபகசக்தி அடியோடு இல்லாமலும் போய்விடும். இதனால் மனச்சோர்வடைந்து முகமும் கோட்டானைப்போல் வாட்டமடைந்துவிடும். இந்த மானக்கேடான கொடிய பழக்கத்துக்குத் துர்ச்சகவாசமே குருவாகும்; அடிக்கடி கீழ் மக்களான தீயோர் நன்மை தீமையைப் பகுத்துணரச் சக்தியற்ற நல்ல சிறுவர்களைக் கெடுத்துவிடுகிறார்கள். இத் தீயவழக்கத்தின் கொடுமைகள் இத்தன்மையவென அவர்களுக்கு எடுத்துரைப்பார் எவருமிலர். இவர்களை யெல்லாம் அவர்களுடைய துஷ்ட சகவாசத்தினின்றும் விலக்கி நல்லினஞ் சேரும்படி செய்தால் அப்பொழுதுதான் அதிகமான நன்மை விளைதல் கூடும். இப்படிப்பட்ட துர்வழக்கமுள்ளவர்களுக்குச் செய்யத்தக்க மற்றொரு செம்மையான சிகிச்சையுமுண்டு. அவர்களை மெஸ்மரிஸத் தூக்கத்தில் வைத்து மந்திர உச்சாரணத்தையுடைய மானஸத் தெலிபதியால் (Mental telepathy by suggestion) அதிசீக்கிரம் நல்வழிக்குத் திருப்பலாம். தூங்கப்போகும் காலத்தில் மர்மஸ்தானத்தில் குளிர்ந்த ஜலத்தை வார்த்துக்கொண்டால் அதனாலும் அந்த வியாதி குணமடையும். இப்படிப்பட்ட துர்வழக்க முள்ளவர்கள் அதிகநேரம் தூங்குவது கூடாது. அதிக மிருதுவான படுக்கையின் மீதும் உறங்குவதும் கூடாது; மிருதுவான படுக்கையில் படுப்பதனால் ஜனனேந்திரியங்களுக்கு ஒருவித விகார உணர்ச்சியுண்டாகும். இன்னும், விருத்த சேதனம்* செய்துகொள்வதாலும் ஹஸ்

* விருத்தசேதனம் செய்துகொள்வதால் ஜனனேந்திரியக்கருவிகள் சம்மந்தமான வியாதி யொன்றும் அணுகாமலிருப்பதோடு

தப்பிரயோகம் ஒழியும். விருத்தசேதனம் இல்லாமலிருக்கும்போது சாதாரணமாய் ஜனனேந்திரியத்தின் நுனிமலரில் அதிகமான உணர்ச்சி யுண்டாவது வழக்கம். ஆனால் விருத்த சேதனத்தால் மேற்றோல் நீக்கப்பட்டு உள்ளிருக்கும் மலரின் கூரிய உணர்ச்சியானது சிறிது மழுங்கிவிடுவதால் அப்பொழுது அடிக்கடி சிற்றின்ப சம்மந்தமான உணர்ச்சி யுண்டாவதில்லை. இன்னும், 2 டிராம் Ext. Pulsatilla Liq. (இந்தப் பல்ஸேட்டில்லாவின் சாரம் மருந்து ஷாப்புகளில் கிடைக்கும்) என்னும் மருந்தை மூன்றே முக்கால் ஔன்ஸ் சுத்த ஜலத்துடன் சேர்த்து, தினமொன்றுக்கு 4 வேளை, வேளை யொன்றுக்கு ஒரு தேக்காண்டி விகிதம் சாப்பிட்டுவந்தால் ஹஸ்தப்பிரயோகம், அதிகமான வீரிய இழிவு ஆகிய பல்வகை வியாதிகளும் நீங்கும்.

இத்தகைய தீத்தொழிலை மேற்கொண்டொழுகுவோரின் மனத்தின்கண் இயற்கையாய் எழும் இல்லற இச்சையும் முற்றிலும் பூர்த்தி யடையாத தாகின்றது; ஏனெனின் அவர்களுடைய தாருட்யம் இயற்கைக்கு விரோதமாய்ப் பலவந்தத்தினால் வெளிப்படுத்தப் படுகின்றது. வாலிபதசையை அடைந்ததுமுதல் இத்தீய ஒழுக்கத்தில் இறங்கிவிடுவாராயின் இதனால் அவர்களுடைய தேகத்துக்கும் மனத்துக்கும் உண்டாகக்கூடிய கொடிய தீமைகள் அனந்தம்; ஏனெனின் இளம்பிராயத்தில் தாருட்யம் அதிகமாய் உற்பத்தியாவதுமில்லை; சேமித்து வைக்கப்படுவதுமில்லை. இதனால்தான் பெரும்பாலும் இளம்பிராயத்தில்

இயற்கைக்கு மாற்றமான சேர்க்கையாசையும் ஹஸ்தப்பிரயோக எண்ணமும் அதிகம் ஜனிக்கா. விருத்த சேதனத்தால் மணவாழ்க்கைக்குரிய காலமும் அதிகம் நீடிக்கும் என்று வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

வீரியம் வெளிப்படுவதில்லை. அப்படிப்பட்ட காலத்தில் சுபாவவிரோதமான மார்க்கத்தால் அதை வெளிப்படுத்த முயலுங்கால் அவ்வாலிப தேகத்துக்கே ஒரு பெரிய அதிர்ச்சி உண்டாகிறது. ஜனனேந்திரியங்களும் நரம்புத்தளர்ச்சியால் தசைப் பற்றற்று வன்மை குன்றிப் போகின்றன. இப்படிப்பட்ட தீய ஒழுக்கத்தால் தேகத்தில் அதிகமாய் உண்டாகும் தாருட்யத்தை நிறுத்திவைத்துக் கொள்ளக் கூடிய சக்தியும் குறைகின்றது. இதனால் வயது வந்தபோது யாதொரு முயற்சியு மில்லாமலும் தாருட்யம் தடிப்படையாமலும் வீணே வெளியாகின்றது. சில வேளைகளில் சிறுநீரோடுங் கலந்து வீரியம் வெளியாகின்றது. எரிந்துகொண்டிருக்கும் நெருப்பில் எண்ணெயைச் சொரிவதேபோல் நங்கையரை நினைத்த மாத்திரத்தில் இப்படிப்பட்டவரின் தேக பலங் குன்றித் தாருட்ய ஓட்டமும் வெளியாகின்றது.*

மானிடவர்க்கத்தை விருத்தி செய்யும் விஷயத்தில் ஆண்களைக்காட்டிலும் பெண்களே அதிகம் பொறுப்பு வாய்ந்தவர்களாயிருக்கிறார்கள். ஸ்திரீகளின் குணநிசயமும் அறிவும் ஆற்றலும் எவ்வளவுக் கெவ்வளவு மேன்மையுற்றனவா யிருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் வயிற்றி லுதிக்கும் பிள்ளைகளும் "நல்ல பிள்ளைகளா" யிருப்பார்கள். இதனால்தான் நம் நாட்டுப் பெண்களுக்கு நாகரிகமும் நல்லறிவும் அதிகம்புகட்டவேண்டியது

* வீரிய நாசத்தாலும் இதா துஷ்டத்தனம் முதலிய வேறு பல வியாதிகளாலும் வலுவழிந்திருக்கும் தாருட்யத்தைப் பூர்வஸ்திதிக்குக் கொண்டுவருவதற்கு எங்களிடமுள்ள "பிரின்ஸ் முபர்ரா" என்னும் யூனனி மருந்தானது நிகரற்ற ஔஷதமா யிருக்கும். ஒரு பாட்டில் மருந்தை உபயோகித்துப் பார்த்தால் இதன் குணம் உங்களுக்குத் தெரியவரும்.

அத்தியாவசியமாயிருக்கிறது. அடிப்படையில் அளறடித்து விடுமாயின் அதன்மேல் கட்டப்படும் கட்டிடமும் தூர்ப் பல முள்ளதாகவே இருக்குமென்பதில் ஐயமுண்டோ? மாதர்களின் ஜீவதாதுவே மக்களுக்குள் மிகுதியும் புகுது கின்றது; இந்நியதியின்படி ஆடவரின் சத்தைக்காட்டினும் பெண்டிரின் சத்தே குழந்தைகளின் தேகத்தில் அதிகம் பிரதிபலிக்கின்றது. எனவே வீர புருஷர்களை ஈனப் பிரிய முள்ளோர் வீரத் தாய்மார்களாகவேயிருத்தல் வேண்டும். ஆதலின் ஸ்திரீ ரத்னங்களை எவ்வளவுக் கெவ்வளவு நாம் பதிவிரதா தன்மைக்குரிய பரிசுத்தமான உயர்ந்த நிலை மையில் வைத்திருக்கிருேமோ அவ்வளவுக் கவ்வளவு குழந் தைகளின் குணதிசயமும் சிறப்புடைத்தாயிருக்கும். இக் காரணத்தாலேயே மாதர்களையெல்லாம் மகா பரிசுத்தமாக வைத்திருக்கவேண்டுமென்று வைத்திய சாஸ்திரம் மிகக்கண் டிப்பாய் வலியுறுத்துகின்றது. ஆனல் இதற்கு மாருக இவ்வுலகில் ஒவ்வொரு தேசத்திலும் சிற்சில மாதர்கள் தம்முடைய பரிசுத்தத் தன்மையை யிழந்து பல புருஷர் களிடத்தும் தம்முடைய மானத்தை விற்கக்கூடிய பரத் தையராய்க் காணப்படுகின்றனர். அந்தோ! அறியாமை யின் அந்தகாரத்தாலும் தாரித்திரியத்தின் கொடுமையா லுமே அவர்கள் இப்படிப்பட்ட ஈனத்தனமுள்ள பரத்த மைத் தொழிலைப் பயின்று வருகின்றனர். அஞ்ஞான அந்த காரத்தின் கொடிய இருளினல் அப்படிப்பட்ட விலைமாத ருக்கு நல்லது இன்னதென்றும் கெட்டது இன்னதென் றும் ஒன்றும் வேற்றுமை புலப்படுவதில்லை.

"ஏமாந்த போழ்தின் இனியார்போன் றின்னாய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடாம்—மாணேக்கின்
தந்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே,"

என்ருர் நாலடியிலும். புருஷருக்கு மனேவியர் அடிமைக ளென்றும், ஆண்பிள்ளேயின் ஆர்வத்தைத்தணித்துக்கொள் வதற்காகவேதான் பெண்பிள்ளே சிருஷ்டிக்கப்பட் டிருக் கிருளென்றும் எதுவரையில் நாமெல்லாம் கருதியிருக்கி ருேமோ அதுவரையில் நாம் சுயேச்சையான திடசக்தி யுள்ள நல்ல பிள்ளேகளேப் பெருமல் ஆண்மைத்தனமற்ற அடிமைப்பிள்ளேகளேயே எப்பொழுதும் பெற்றுக்கொண்டு வருவோம். தரையும் விரையும் அடிமைத்தனத்தை விட்டு மீளாமலிருக்கும்போது அங்கிருந்து உற்பத்தியாகும் முதல் மட்டும் எவ்வாறு சுயேச்சை பெற்றதாயிருத்தல் முடியும்? விலேமகளிருள் சிலர் தாம் தமக்குத்தெரிந்திருந்தும் வேண்டு மென்று அந்த ஈனத்தொழிலில் ஈடுபடுகின்றனர்; ஆனல் பெரும்பான்மையான பொதுமகளிர் பரம்பரையான பழக் கத்திஞல் தங்களுடைய வேசித்தனத்தை ஒரு கௌரவ மான உத்தியோகமென்று கருதியிருக்கின்றனர். இவர்க ளெல்லாம் தங்களுடைய தொழிலே ஒரு லஜ்ஜையான செய்கையென்று சிறிதும் கருதியிருப்பார்களாயின் முன் னமே அந்தக் கேவலமான பிழைப்பைக் கைவிட்டு நல்ல நிலேமைக்கு வந்திருப்பார்.

இவ்வுலகிலுள்ள சில நாடுகளில் இப்படிப்பட்ட பரத் தையர் தொழிலே ஒழிக்கக் கருதி அங்கெல்லாம் பீனல் கோடு சட்டங்களும் பொலீஸ் கட்டுப்பாடுகளும் லேஸென்ஸ் வாங்கும் வழக்கங்களும் ஏற்படுத்தி யிருக்கின் றனர். சென்ற தொண்ணூறு, நூறு வருஷங்களாகவே இப்படிப்பட்ட பீனல் சட்டதிட்டங்க ளெல்லாம் இவ்வுல கில் காணப்படுகின்றன. இதனுலெல்லாம், இப்படிப்பட்ட வேசித்தொழிலானது ஒரு சிறிதும் தணிந்தபாடில்லே. பொதுமகளிர்க்கு லேஸென்ஸ் கொடுக்கும் வழக்கம் எவ்

வளவுக் கெவ்வளவு இவ்வுலகில் அதிகரிக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அந்த வேசித்தொழிலும் விருத்தியாய்க் கொண்டே போகிறது. இவ்வுலகில் மானிடவர்க்கம் தோன்றியகால முதலே பொதுமகளிரும் உடன் தோன்றியிருக்கின்றனர். இப்படிப்பட்ட புராதனக் கொடிய வழக்கத்தை இவ்வுலகை விட்டு வேரறுப்பாய் அறுக்கவேண்டுமாயின் அதை மேற் கூறிய இப்படிப்பட்ட முறைகளாலெல்லாம் ஒன்றும் செய்வது முடியாது. வேசித்தொழிலை ஒழிப்பதற்கு வேதக் கட்டளை அவசியம் வேண்டும். சில சமயவாதிகள் இப்படிப்பட்ட விலைமாதரைத் தேவரடியாளென்றும் தேவதாசி யென்றும் கௌரவித்துத் தேவாலயங்களிலும் கண்ணியப்படுத்துவது வழக்கம். இப்படிப்பட்ட கெட்ட வழக்கம் இவ்வுலகி லிருக்குமட்டும் எவ்வாறு விலைமாதர் ஒழியப் போகின்றனர்? விலைமாதர் இருப்பதுதான் தேவர்களுக்கும் கௌரவமாயிருக்கிறதென்று அம் மதவாதிகள் எண்ணியிருக்கும்போது வேறு சாதாரண மனிதர்கள் எங்ஙனம் அந்த வேசித்தொழிலை ஒரு கேவலமான காரியமெனக் கருதப்போகின்றனர்? ஆனல் வே று சில சமய வாதிகள் வேசித்தொழிலை ஒரு மகாபாதகத் தொழிலெனக் கண்டித் தொழிக்கின்றனர். வேதக்கட்டளையை வைத்துக்கொண்டு இந்த வேசித் தொழிலை ஒழிக்க முடியுமல்லாமல் வேறுவகைச் சூழ்ச்சியால் இதை வேரறுப்பது முடியாது. இதற்கு மாருக லைஸென்ஸ் கொடுக்கும் வழக்கத்தை உண்டு பண்ணுவதாலேயே பொதுமகளிரை மட்டுப் படுத்தி விடலாமென்று எண்ணினதால்தான் இப்பொழுது பெரிய நகரங்களி லெல்லாம் நாகரிகமென்னும் முகமூடியின்கீழ் நூற்றுக்கு 50 முதல் 80 வரையில் அந்த நகரவாசிகளெல்லாம் "பெண்

பிள்ளை வியாதி"யால் நரக வாசிகளாய் வேதனையை அடைந்து வருகின்றனர். இப்படிப்பட்ட ஆண் பெண்களின் நிலைமையானது மிகவும் வருந்தத் தக்கதாயிருந்து வருகிறது.

நல்ல மரத்தில் புல்லுருவிச்செடி பாய்வதே போல் நல்ல மனிதர்களின் ஆவியையும் ஆஸ்தியையும் கொள்ளை கொள்வதற்கே இந்த விலைமாதர்கள் தோன்றியிருக்கிறார்கள். இவர்களால் தேசத்துக்கு யாதொரு விதமான நன்மையும் விளையாமற்போயினும் தீமை மட்டும் அதிகம் உண்டாகாமற் போவதில்லை. முக்கியமான பெரிய பட்டணங்களில் இவர்களால் அதிகம்பேர் வியாதிக்கு ஆளாவதல்லாமல் இப்படிப்பட்ட பொதுமகளிரால் புண்ணியமொன்றும் உண்டாவதில்லை. இவர் அடிக்கடி அதிகம் பேர்களிடத்தில் சினேகம் செய்வதால் இவர்களுடைய ஜனனேந்திரியங்களெல்லாம் மிகுதியும் தேய்வுண்டு சந்தான விருத்தியும் ஒன்றும் ஆவது கிடையாது. எழிலக்ஷம் ஜனத்தொகையை யுடைய லண்டன் மாநகரில் மட்டும் இப்பொழுது ஓரிலக்ஷத்துக்கு மேற்பட்ட வியபிசாரிகள் வாழ்ந்து வருகின்றனர். கல்கத்தா நகரிலும் 8,877 வியபிசாரிகளும் அவர்களைச் சார்ந்த 1,330 பாந்தி முதலிய வேலைக்காரர்களும் இருந்து வருகின்றனர். இஃதேபோல் இவ்வுலகிலுள்ள இதர நகரங்களிலும் எத்தனை விலைமாதர் இருக்கக் கூடுமென்று எண்ணுகின்றீர்கள்? இப்படிப்பட்ட விலைமாதரிடம் சினேகம் செய்வதால் மனிதத்தன்மைக்கு எவ்வளவு கேவலமுண்டாகிறதென்று நீங்கள் தெரிந்துகொண்டிருக்கிறீர்களா? எவ்வளவு பெருந் தனிகர்களாயினும் அவர்கள் பொது மகளிர் விடுதிக்குள் புகும்போது தம்முடைய சுயமதிப்பை யிழந்து மானத்தையும் மறைத்துத்

தலையைக் குனிந்துகொண்டு முக்காடிட்ட முகத்துடன் மூலைக்குள் சென்று ஒளித்துக் கொள்ளுகின்றனர். சிலர் தலைக்கடையின் வழியே தாசி வீட்டுக்குள் நுழைய வெட்கப்பட்டுக்கொண்டு புழைக்கடையின் வாயில் வழியே உள்ளே போய் வெளியே வருகின்றனர். அவர்கள் இவ்வாறு திருட்டுத் தனமாய்த் தன்மதிப்பை யிழந்து லஜ்ஜையில்லாமல் வேசியர் வீடுகளில் சென்றலையும்போது அவர்களுடைய மனமானது என்ன பாடு படாதென்று எண்ணுகின்றீர்கள்? இப்படிப்பட்ட வேசிக் கள்ளர்களுக்கும் ஸ்திரீ ரத்னங்களென்று அழைக்கத்தக்க தாய்மார்களுண்டா? பதிவிரதா தன்மையுள்ள பிரியமான சகோதரிகளுண்டா? இன்னும் பிறமுகம் பாராத தம்முடைய பத்தினிமார்களுண்டா? மனிதத்தன்மையானது இவ்வாறெல்லாம் பெண்பாலாருடன் பௌவியப்பட்டிருக்கும் போது ஏன் சிலர் பிறர் தாரத்திடமும் பொதுமகளிரிடத்தும் சினேகம் செய்துகொள்ளுகின்றனர்? இவர்களுடைய செய்கையானது மனிதத்தன்மைக்குக் கேவலத்தை யுண்டு பண்ணுவதல்லாமல் அவர்களுடைய தேகத்துக்கும் எவ்வளவு நஷ்டமுண்டாகிறதென்றுவது அவர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்களா? விலைமாதருள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதின்மர் பலவிதமான அபாயமுள்ள வியாதிக்குள்ளாகாதவர்களா யிருப்பதில்லை யென்பதையும் அந்த வேசிக்கள்ளர்கள் ஒருசிறிதும் உணர்ந்துகொண்டார்களில்லைபோலும். இப்படிப்பட்ட வியாதியஸ்தர்களுள் நூற்றுக்கு எழுபது ஸ்திரீகளின் தேகத்தில் "கள்ளிப்பூக் கிரந்திக்" குரிய விஷமானது வேரூன்றி யிருக்கிறதென்பதும் அவர்களுக்குத் தெரியுமா? இந்தக் கொடிய "கிரந்தி" வியாதியானது ஒருமுறை ஒருவருடைய தேகத்

தில் ஒட்டிக்கொள்ளுமாயின் பிறகு பிள்ளைப் பிள்ளைத் தலை முறை வரையில் விந்து வழியே பாய்ந்துகொண்டே போகும். பெற்றோர்களின் தேகநிலைமையும் மனோநிலை மையும் மாத்திரமேயன்றி அவ்வம்சத்தில் முன்னேயிருந்த மூதாதைகளின் குணங்களும் தேகக் கூறுபாடுகளும் ஒரு குழந்தையிடத்து வெளிப்படுவதுண்டு. மூதாதைகளின் குணமும் செய்கையும் அவ்வழியில் பிறக்கும் குழந்தைகளை யும் தாவுகின்றன. இதனால்தான் குழந்தைகளைப் பெற் றோரின் பிம்பம் என்று சொல்வது வழக்கம்.

இப்படிப்பட்ட கொடிய வியாதிகளுக்கெல்லாம் ஆளா கக்கூடிய வியபிசாரம், இயற்கைக்கு மாற்றம், ஹஸ்தப்பிர யோகம் முதலிய அபசாரங்களுக் கெல்லாம் நம் நாட்டுச் சிறுவர்களும் சிறுமிகளும் உடந்தைப் படாமலிருக்கவேண் டுமாயின் அவர்களுக்கு இப்படிப்பட்ட சேஷ்டைகளால் விளையக்கூடிய அபாயம் இன்னதென்பதைச் செவ்வனே எடுத்துரைத்தல் வேண்டும். பகுத்தறிவில்லாப் பருவத்தி லேயே இக்கொடிய பழக்கங்களெல்லாம் சிறுவர்களைத் தாவிப் பிடிப்பதுதான் வியாகுலத்துக்குரிய விஷயமாயிருக் கிறது. இக்கொடிய பழக்கம் சிறுவர் சிறுமிகளைத் தாவிப் பற்றுமலிருக்கும் பொருட்டு அவர்களுக்கு இத்தகைய தீத்தொழிலின் கேடுகளை உடனே உறுத்திக் கூறவேண் டும். எவ்வாற்றாலேனும் இளம்பிராயத்தினர் இப்படிப் பட்ட தீத்தொழிலில் விழாமலிருக்கும்படி காப்பாற்ற வேண்டுவது முதியோரின் கடமையாகும். விவாகத்தின் பரிசுத்தம் இப்படிப்பட்ட மகிமையை யுடையதென்பதை நாம் ஒவ்வொரு நூதன மணமகனுக்கும் மணமகளுக்கும் நன்கு அறிவித்தல் அத்தியாவசியமா யிருக்கிறது. கல்விச் சாலைகளிலும் இப்படிப்பட்ட விஷய ஞானம் பரிசுத்த

மாகப் புகட்டப்படுதல் அவசியமாகும். சரீரசம்மந்தமான அமைப்பும், ஜனனேந்திரியக் கருவிகளின் சம்மந்தமான பரிசுத்தத் தன்மை இன்னதென்பதும் ஒவ்வொரு சிறுவனுக்கும் சிறுமிக்கும் நன்கு அறிவிக்கப்படல் வேண்டும். இதிலொன்றும் மூடுமந்திரம் செய்யாமல் விஷயத்தின் இரகசியத்தை மிக வெளிப்படையாக விரித்துரைத்தல் வேண்டும். இதை வெளியிட்டுச் சொல்லக்கூடாதென்னும் வீண் சம்பிரதாயத்தை வேறே ஒதுக்கிவைத்து விட்டு விஷயத்தின் ஞானத்தை ஒருவாறு விளக்கிக் காட்டல் வேண்டும். இல் வாழ்க்கை இன்னதென்றும், சூல்கொள்ளல் இப்படியென்றும் தெரிந்துகொள்ளாமலே இவ்வுலகில் இலக்ஷக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் உயிர் வாழ்க்கை செய்துவருகின்றனர். ஜனனேந்திரிய சம்மந்தமான உத்தமக் கருவிகளைப் பரிசுத்தக் குறைவான கெட்ட வழிகளில் உபயோகப் படுத்திஞல் அதஞலெல்லாம் எப்படிப்பட்ட தீமைகள் விளையுமென்பதை ஒவ்வொருவரும் மிகச் செம்மையாய்த் தெரிந்துகொள்ளல் வேண்டும். ஜனனேந்திரியக் கருவிகளின் துர்வின்யோகத்தால் தேகத்துக்கும் மூளைக்கும் விளையக்கூடிய வியாதிகள் இன்ன இன்னவையென்று அவர்கள் நன்ருக அறிந்திருத்தல் வேண்டும். ஆதலின் பெற்ருேர்கள் தங்கள் குழந்தைகளை ஸர்வ ஜாக்ரதையுடன் கவனித்துவந்து இந்நூலில் கூறிய ஸூக்ஷ்மங்களைக்கொண்டு, ஏதேனும் கொடிய மார்க்கம் அவர்கள் அப்பியாசத்தில் இருப்பதாய்த் தெரிந்த மாத்திரத்தில் நல்ல புத்திமதியாலும் இனிய வார்த்தைகளாலும் அவர்களை நல்வழிக்குக் கொண்டுவர எல்லாப் பிரயத்தனமும் எடுத்தல் வேண்டும். விஷய ஞானம் சூன்யமாயிருப்பதஞல்தான் பல சிறுவர்களும் சிறுமிகளும் சில தவருன வழி

களிலெல்லாம் பிரவர்த்தித்து விடுகின்றனர். பள்ளியிலுள்ள ஆசிரியர்க ளல்லாமல் அவரவருடைய தாய் தந்தையரும் தத்தம்முடைய குழந்தைகளுக்குப் புத்தி புகட்டுவார்க ளாக. மானிட மர்ம மென்னும் மணவாழ்க்கை சம்மந்த மான கல்வியறிவு முழுதும் செம்மையாகச் சொல்லிக் கொடுக்கப் படாமையால்தான் இப்படிப்பட்ட அறியாமை யெல்லாம் அதிகம் தழைத்தோங்க ஆரம்பிக்கின்றது. அறி வில்லாவிடின் அந்தகாரத்தில்தான் எல்லோரும் அலைய நேரிடும்; அறிவினாலல்லாமல் மானிடர்களின் அந்தக்கர ணம் பரிசுத்த மடைய மாட்டாது. எதுவரையில் மனிதர் களின் அந்தக்கரணம் பரிசுத்தமடைய வில்லையோ அது வரையில் அவர்களுடைய வெளிவேஷ மெல்லாம் வெறு மையாய்த்தான் வெளுத்துப் போகும். உண்மையான ஞானமுடையவரே உயரிய ஒழுக்கமுள்ளவ ராவார். ஆத லின் நாமெல்லாம் நம்முடைய ஒழுக்கத்தை ஒழுங்கு செய்துகொள்ள வேண்டுமாயின் நல்லறிவுச் சுடரைப் பெறுதல் வேண்டும். இதனாற்றான் "கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்ற துணை" என்றார் ஒரு பெரியாரும்.

"பிரின்ஸ் மூபர்ரா" என்பது ஒரு தேவாமிர்த மென்றே செப்பலாம். தேகக் கட்டுடைவு, நரம்புத்தளர்ச்சி முதலிய தாருட்ய சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் நிகரற்ற ஒளடதம். முக்கிய மாய் அரசிளங் குமரர்களுக்கென்றே ஏற்பட்டது. ஏழைகளின் நிலைமையை உத்தேசித்தே இதன் விலை இறக்கமாக வைக்கப்பட் டிருக்கிறது. நவாப் வாலாஜாவின் வீரியவிருத்தி முழுமைக்கும் இம் மருந்தே மூல காரணமாகும். இது தகுந்த யூனானி முறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. வாக்களித்தபடி பயனளிக்கு மென்பதில் சந்தேகமே வேண்டாம்.



அத்தியாயம்—13

விவாக விளக்கம்

சற்றே பருத்த தனமே குலுங்கத் தரளவடந்
துற்றே யசையக் குழையூச லாடத் துவர்கொள்செவ்வாய்
நற்றே னொழுக நடனசிங் கார நடையழகின்
பொற்றே ரிருக்கத் தலையலங் காரம் புறப்பட்டதே.

விவாக **மென்பது** பெண் மாப்பிள்ளைகளுக்கிடையிலுண்டாகும் ஒரு பரிசுத்தமான பிரியமுள்ள பிணைப்பைக் காண்பிக்கின்றது. இகத்துக்கும் பரத்துக்கும் உரிய லௌகிக வைதிகக் கட்டுப்பாடானது ஸ்திரீ புருஷர்களுக்கிடையில் இந்த விவாகத்தில்தான் அமைந்திருக்கிறது. விவாக காலத்தில் போடப்படும் முடிச்சானது பிறகு எப்பொழுதும் மரண பரியந்தம் அந்த ஸ்திரீ புருஷர்களைப் பிரிக்காமல் ஒன்றாகவே பிணைத்து வைக்கின்றது. ஆதலின் இப்படிப்பட்ட விவாக பந்தமானது இவ்வுலகில் காணப்படும் ஒவ்வொரு நாகரிக முள்ள வர்க்கத்தாரிடமும் தொன்றுதொட்டு வழக்கத்திலிருந்து வருகிறது. ஆனால் விவாகமென்பது வைதிக கோஷ்டியாரால் போடப்படும் ஒரு வெறும் முடிச்சென்று மட்டும் எண்ணிவிட வேண்டாம். மனம் ஒன்றுபட்டால் மட்டுமே மணமகனுக்கும் மணமகளுக்கும் இடையிலுள்ள ஸௌஜன்யமானது ஒழுங்குள்ளதாயிருக்கும்; இன்றேல் இருவரும் கீரியும் பாம்பும் போல்தான் இல்லறம் நடாத்துவர். ஆனால் மணமக

னிடத்துக் காணப்படும் குணதோஷங்களே மணமகளி டத்தும் காணப்பட்டால் அப்பொழுது அவ்விருவரும் சந் தோஷமாகவே சிறிதுபோழ்து காலங்கழிக்க இடமுண் டென்று கூறலாம். உள்ளன்புள்ள உண்மையான மனைவி யானவள் தன்னுடைய மணமகனுடைய காளைப்பருவத் தில் ஓர் உயரிய நாயகியாகவும், நடுப் பிராயத்தில் ஓர் அழ கிய தோழியாகவும், வயோதிகத்தில் ஓர் உத்தம மித்திரி யாகவும் இருந்து வருவாள்.

" அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்,"

என்றார் பெரியாரும். இப்படிப்பட்ட இல்லக்கிழத்தியைப் பெறுவதுதான் இந்த விவாகத்தின் முக்கிய நோக்கமாகும். ஆதலின் எல்லா விஷயத்திலும் இணை பிரியாத ஒருமனப் பட்ட கணவனுக்கும் மனைவிக்கும் இவ்வுலக இன்பமானது ஒரு சுவர்க்கானந்தம் போலிருக்கும்; இவர்கள்தாம் இவ் வுலகில் முற்ற முற்ற முழு இன்பத்தையும் ஆண்டு அனுப விப்பர். இவ்வுலக யாத்திரைக்கே மனைவியை ஓர் அத்தி யாவசியமான ஆருயிர்த் துணைவியாகக் கருதாமல் அவளை ஒரு சிற்றின்பத்துக்குரிய மெஷின் என்று மட்டும் கருதும் கணவனானவன் அந்த விவாகத்தின் உயரிய உத்தம நோக் கத்தை ஒரு சிறிதும் உணர்ந்துகொள்ளாதவனே யாவன். மனிதன் அடையக்கூடிய பொருள்களுள் ளெல்லாம் குண சீலியான நல்ல ஒரு நங்கையைப் பெறுவதுதான் மகா அதிருஷ்டவசமாய்க் காணப்படுகிறது. நற்குண நற்செய் கைகளையுடைய ஒரு மடந்தையிடத்து உலக வாழ்க்கையா லடையக்கூடிய அறம், பொருள், இன்பம் என்னும் முதல்

மூன்று புருஷார்த்தங்களையும் பெறலாம். இவன் தன்னுடைய கேவல புத்திக்காக இவ்விகலோகத்தில் தக்க தண்டனையை யடையாமற் போகான். எவனொருவன் தெய்வத்தின் பரிசுத்தமான சட்டத்தை முறிக்கப் பிரயத்தனப் படுகிறானோ அவன் அவசியம் அதனாலுண்டாகக்கூடிய கொடிய தண்டனையை அடைந்தே தீருவான்.

மெல்லியாரின் மென்மையான தன்மையை நோக்கும் போதே அவர்களுக்கொரு ஆருயிர்த்துணைவன் வேண்டுமென்பது அவசியமாய்க் காணப்படுகிறது. பெண்பாலார் தன்னந் தனியே இவ்வுலகில் உயிர் வாழ்க்கை செய்தற் குரியவரல்லர்; அவர்களை ஆதரிப்பதற்கும் அன்பு பாராட்டுவதற்கும், அதன்பின் போற்றுவதற்கும் புகழ்வதற்கும் புருஷர்கள் அவசியம் வேண்டும். மேலும் புருஷர்களுடைய மனமானது இயற்கையாகவே அழகை விரும்புகின்றது; இப்படிப்பட்ட அழகையும் ஆர்வத்தையும் ஆடவரெல்லாம் பெண்டிரிடத்தே அடைதல் கூடும். அந்த மனைவியரிடத்துத்தாம் இந்தப் புருஷர்களுக்கு வேண்டிய நட்புரிமையும் காணப்படும். புருஷனும் மனைவியும் தம்முள் மனமொத்த தோழர்களாக அமைந்துவிடின் அப்பால் அவர்களிருவரும் அரசனும் அமைச்சனும் போலவே தம்முடைய சம்சார வாழ்க்கையைச் செவ்வனே நடத்திவருவர். இப்படிப்பட்ட இன்பமயமான இல்லற முறையை எய்தும் பொருட்டே இவ்வுலகில் ஸ்திரீ புருஷர்கள் ஒருவரையொருவர் விவாகம் செய்து கொள்ளுகின்றனர். ஆனால் இந்நாட்டிலுள்ள எத்தனை ஸ்திரீ புருஷர்கள் இப்படிப்பட்ட இன்ப சுகத்தை அனுபவிக்கிறார்களென்பதுதான் சந்தேகம். இந் நாட்டில் பெண் மாப்பிள்ளைகள் தங்களுடைய பெருமை இன்னதென்பதை அவரவரும் அறிந்து

கொண்டு அப்பால் மணமுடித்துக் கொள்வதில்லை; ஆனால் பெற்றோரின் திருப்தியைப் பூர்த்திசெய்வதற்காகவும் மற்றோரின் ஆசையை நிறைவேற்றுவதற்காகவுமே பெரும்பாலும் மங்கள காரியங்கள் நிறைவேற்றப் படுகின்றன வல்லாமல் பெண் மாப்பிள்ளைகளின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதற்காகவல்ல. மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் இஷ்ட மிருப்பினும் இல்லாமற் போயினும் சம்மந்தியும் சம்மந்தியும் வரதக்ஷிணை விஷயத்தில் தமக்குள் ஒப்பந்தத்தை முடித்துக் கொள்வாராயின் உடனே விவாகம் முடிவடைந்து விடுகிறது. இக்காலத்தில் இந்நாட்டில் நடக்கும் விவாகமானது பணத்தையும் படிப்பையும் (ஆங்கிலத்தில் எத்தனைக் கிளாஸ் ஏறினனென்பதையும்) சார்ந்ததாயிருக்கிறதல்லாமல் பெண் மாப்பிள்ளைகள் ஒருவருக்கொருவர் எவ்வளவு தூரம் தக்க ஜோடியா யிருக்கிறார்க ளென்றும், அவர்கள் ஒருவரை யொருவர் எவ்வளவு தூரம் உண்மையாய் விசுவசிக்கிறார்களென்றும் ஒருவரும் ஒரு சிறிதும் கவனிப்பதில்லை. ஆடு மாடுகளை வாங்கும்போதும் இவ்விஷயங்களை யெல்லாம் ஒரு குடும்பத்தலைவன் கவனிப்பதில்லையா? ஆனால் அவன் தன்னுடைய பெண்ணுக்கும் பிள்ளைக்கும் விவாகம் செய்ய எத்தனிக்கும்போது இவற்றைப்பற்றிச் சற்றும் எண்ணாமற் போவது எத்துணை வியசனிக்கத்தக்க காரியமா யிருக்கிறது!

ஆனால் ஐரோப்பிய நாடுகளில் நடப்பதேபோல் இந்நாட்டில் இப்பொழுது காந்தர்வ விவாகம் செய்துகொள்ளுதற்கும் நம் தேசத்தினர் பக்குவமடையவில்லை. மனித வர்க்கம் இன்னும் பரிபூர்ணமான பக்குவத்தை யடையாமலிருப்பதனால் அவர்களுக்குள் காந்தர்வ விவாக வழக்கத்தை இப்பொழுது புகுதவிட்டால் அதனால் அனந்த

மனந்தம் தீமைகளே விளேதல் கூடும். இப்படிப்பட்ட எதேச்சையான காந்தர்வப் பழக்கத்தால் தான் ஐரோப்பிய மேல்நாடுகளி லெல்லாம் அளவிடற்கரிய அனுசார ஆபாசங்கள் காணப்படுகின்றன. ஆனுல் நம் இந்திய நாட்டில் பெற்ருேரும் மற்ருேருமே விவாகத்தைத் திட்டம் செய்த போதிலும் பெண் மாப்பிள்ளேகளின் பூர்த்தியான விருப்பத்தையும் விவாகத்துக்கு முன்னரே நன்கு தெரிந்துகொள்ளல் வேண்டும். மாப்பிள்ளேயின் விஷயத்தைப் பெண்ணுக்கு நன்ருக எடுத்துச் சொல்லியும், பெண்ணின் விஷயத்தை மாப்பிள்ளேக்கு நன்ருக எடுத்துச் சொல்லியும் ஒருவருக்கொருவர் அன்னியோன்னியமான ஆதரவு ஏற்பட்ட பின்னரே அதை நன்கு தெரிந்துகொண்டு அப்பால் மணமுடிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும். இப்படி மணமுடிக்கும்போதும் பால்ய விவாகம் செய்வது அறவே கூடாது. நெருங்கிய பந்துக்களும் ஒருவரையொருவர் விவாகம் செய்துகொள்வது விரும்பத் தக்கதன்று. இரத்த சம்மந்த முள்ளவர்களுள் விவாக சம்மந்தம் ஏற்படுமாயின் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் செவிடாகவேனும் ஊமையாகவேனும் மந்தபுத்தி யுள்ளவையாகவேனும் துர்ப்பல முள்ளவையாக வேனும் இருக்குமென்று வைத்திய சாஸ்திரம் கூறுகின்றது. இவ்வாறே பெண் மாப்பிள்ளேகளுக் கிடையில் அதிகமான வயது வித்தியாசம் இருப்பதும் தகாது. எக்காரணத்தை முன்னிட்டும் வயதில் முதிர்ந்த பெண்ணுக்கு அவளேக் காட்டினும் இளேய மாப்பிள்ளேயுடன் கல்யாணம் செய்து வைப்பது அறவே கூடாது. பெண் மாப்பிள்ளேகளின் சரீர அமைப்பும் ஒன்றுக்கொன்று அதிக வேறுபாடுள்ளதா யிருத்தலும் ஆகாது. திடகாத்திரனேடு துர்ப்பலமான ஸ்திரீயைப் பிணே

த்துவைப்பதால் அவ்விருவருடைய வாழ்நாள்களெல்லாம் துன்பமாகவே முடியும். பெருத்த தேகமுள்ள ஒரு மாப் பிள்ளைக்குச் சிறுத்த உருவமுள்ள ஒரு பெண்ணையும், தடித்த சரீரமுள்ள ஒரு பெண்ணுக்கு மெலிந்த தோற்ற முள்ள ஒரு மாப்பிள்ளையையும் பிணைத்துவைப்பது ஒருமகா தவருன காரியமென்றே கூறலாம். இவ்வாறே மிகுதம் படித்த ஒருவனுக்கு மட்டித்தனமான மூடச்சியொருத் தியையும், கல்வியில் படித்துத் தேறிய பெண்ணொருத் திக்கு ஒன்றுந் தெரியாத ஒரு வெறும் மாப்பிள்ளையையும் சேர்த்துவைப்பது மகா மூடத்தனமான செய்கையாயிருக் கிறது. இஃதேபோல் வெவ்வேறு விதமான குணாதிசயங் களையுடைய ஸ்திரீ புருஷர்களையும் ஒன்ருகச் சேர்த்துவைப் பதும் தவருகும். ஆதலின் பெண் மாப்பிள்ளைகளின் குண குணங்களையும் மற்றும் பல விஷயங்களையும் கவனித்து விவாகம் முடிக்கவேண்டும்.

விவாக காலத்தில் வதூவரர்களுடைய தேக நிலைமை யையும் மனே நிலைமையையும் நன்ருக ஆராய்ந்து பார்த் தல் வேண்டும். மதுபானி ஒருவனை மணந்துகொண்ட மடந்தையின் இல்லறவாழ்க்கையானது மாகொடிய புல்லற வாழ்க்கையாகவே முடியும். மேலும் துன்மார்க்கத்தன முள்ள எந்தப் புருஷனும் கணவனுகத்தகுந்த யோக்கிய தையைப் பெறமாட்டான். வியாதியுள்ளவர்களையும் அஃ தில்லாதவர்களையும் ஒன்றுசேர்த்து வைப்பதால் உலகத் தில் துர்ப்பலமுள்ள குழந்தைகளே உற்பத்தியாவதற்குக் காரணமாகும். மிகச் சிறிதாகக் குறுகியுள்ள வயிற்றை யுடைய பெண்மக்களும் நன்மக்களைப் பெறமாட்டார்கள். குடித்தனக் காரியங்களையும் கணவரிடத்தில் நேசத்துடன் நடப்பதையும் குழந்தைகளை நன்ருய்க் காப்பாற்றுவதை

யும் பெரியாருக்குப் பணிவுசெய்வதையும் விருந்தினருக்கு உபசாரம் புரிவதையும் கற்றுக்கொள்ளாத பெண்களைக் கல்யாணம்செய்துகொள்வது கூடாது.

"மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந் துவப்ப வூட்டும்
நேசமிக் குடையாள்கொண்க னிணைப்பறிந் தொழுகுநீராள்
தேசுறு வாய்மை யுள்ளாள் சினந்திட லென்று மில்லாள்
பேசுதிண்கற்பு வாய்த்தாள் பெற்றதேகொண்டு வப்பாள்"

என்றார் ஒரு மகாவித்வானும். குடும்பக் காரியங்களைக் கவனியாது அண்டை அயல் வீடுகளுக்கு அலைந்து திரியும் பெண்கள் குலத்தைக் கெடுக்கப்பிறந்த கோடாரிக் காம்புகளாவர். கற்புக்கரசியானகற்றறிந்த மடமாதோதன்சாமர்த்தியத்தாலும் சுஞ்ஞானத்தாலும் பிறர் மெச்சத் தன் குடித்தனத்தை நடத்துவாள்; இப்படிப்பட்ட ஸ்திரீரத்னம் ஒரு மதிப்பில்லா மாணிக்கம்போலாவாள். இவள் எங்கே இருந்தபோதிலும் அங்கெல்லாம் சீலமும் மேன்மையும் சிறகை விரித்தாடும். அழகுங்குணமும் உள்ளவள் நல்ல ஜோடியென்று ஒரு பெரியார் கூறியுள்ளார்; ஆயினும் அவ்விரண்டோடு திரடகாத்திரமும் அவசியம் பொருந்தியிருத்தல் வேண்டும். அழகுங்குணமு முள்ளவள் முருங்கைக்கட்டையால்செய்த பதுமை போலிருப்பின் பலாட்டியமான குழந்தைகளைப் பெற அவள் எம்மட்டும் உதவி புரிவாள்!

அங்கங் குறைந்த பெண்களும் அதிகமான அங்கங்களையுடைய பெண்களும் விவாகத்துக்கு அருகர்களல்லவாம். கொடிய வியாதியால் வருந்தும் பெண்ணும், அங்கமுழுதும் ஆடவரைப்போல் உரோமம் நிறைந்த பெண்ணும், உரோமமே தலையிலும் இல்லாத பெண்ணும் மண

வரைக்கு யோக்கியர்க ளல்லவாம். இன்பமான நாமத்தை யுடைய பெண்களும் நடையில் அன்னத்தைப் போலவும் * பிடியைப்போலவும் ("எள்ளிளம் பூவென இலங்கு நாசி யாள், பிள்ளைவெள் ளனமென நடக்கும் பெற்றியாள்," என்றார் அதிவீரராம பாண்டியரும்.) நடக்கும் பெண் களும் எவரிடத்தும் பிரிய வசனம் பேசுபவரும் ரூபலா வண்யத்தில் சிறந்தவர்களும் தலை நிறைய மிருதுவான கருங்கூந்தலை யுடையவர்களும், முத்துப்போன்ற அழ கான பல் வரிசை யுடையவர்களுமே விவாகத்துக்கு விரும் பக் கூடியவர்களாம். புருஷனைக் காட்டினும் வயதில் முதிர்ந்த ஒரு கன்னிகையை, மேற்கூறிய எல்லா இலக்ஷ ணங்களும் பொருந்தி யிருந்தபோதிலும் அவளை வரிப்பது கூடாது. தேகதிடமும் ஒன்றுபட்ட மன நிலையும் உடை யவனா யிருக்கும் ஒருவன் இல்வாழ்க்கையையே இன்ப நுகர்ச்சியாகக் கொண்ட ஒரு மடந்தையை மணந்து கொண்டால் அவன் அதி சீக்கிரம் நாசமாய்ப் போய்விடு வான். அவளுடன் ஒருமித்து வாழ்வதால் தன்னுடைய பலத்தையும் அறிவையும் அவன் இழந்துவிடுகிறான். இவ் விதம் ஏககாலத்தில் இழந்த சக்தியானது பிறகு என்ன தான் முயன்றாலும் அவனுக்குத் திரும்பி வருவதில்லை.

சதிபதி இருவருடைய தேகமும் மனமும் சரியான பக்குவ தசையில் இல்லாமலிருப்பின் அவர்களுக்குப் பிறக் கும் குழந்தைகளின் மனமும் தேகமும் அவ்வாறே இருப் பது சகஜம். பண்டைச் சரித்திரங்களில் கூறப்பட்டிருக் கும் வீரர்களின் கதைகளைப் படித்தால் அவர்கள் அனை வரும் பரிபக்குவமடைந்த பருவத்து ஸ்திரீ புருஷர்களால் உண்டானவ ரென்பதைத் தெரிந்துகொள்வோம். நம்ம

* பிடி - பெண் யானை.

வரின் குடும்பங்களில் இறுதியில் பிறந்த கடைப்பெண்ணை யும் பிள்ளையையும் அதிக அருமையாய் வளர்க்கிறார்கள். இதற்குக் காரணம், தேகமும் மனமும் தளர்வடைந்த காலத்தில் பிறக்கும் குழந்தைகளாதலால் அவைகளும் அவ்வாறே தளர்வுற்றிருக்குமென் றெண்ணி மற்றைக் குழந்தைகளைக் காட்டினும் அதிகமான செல்வாக்கு அக் கடைப்பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படுகின்றதென்று செப் பலாம். அதிக இளமையிலும் முதிர்ந்த விருத்தாப்பியத் திலும் பிறந்த குழந்தைகள் பலமுள்ளவையாயும் நல்ல தேஜஸை உடையவையாயு மிருப்பதில்லை. ஏனெனின் இளமைப்பருவத்துள்ள வீரமற்ற தாருட்யமும் முதுமைப் பருவத்துள்ள முறிந்துபோன தாருட்யமும் நல்ல குழந் தைகளை உண்டுபண்ணச் சக்திபெற் றிருப்பதில்லை.

பெண் மாப்பிள்ளைகள் ஒருவரையொருவர் உண்மை யில் நேசிக்கிறார்களா வென்று கண்டுபிடிப்பதற்குப் பால்ய விவாகமானது ஒரு பெருந் தடையா யிருப்பதோடு அப் படிப்பட்ட அதி பால்ய விவாகத்தினால் இன்னும் அனந்தம் தீமைகளும் விளைதல் கூடும். ஒருவனை நேசித்து விவாகம் முடிப்பதைக் காட்டினும் விவாக முடித்தபின் அவனை நேசிப்பதே சரியான பாதிவிருத்திய மென்று பால்ய விவா கக் கக்ஷிக்காரர் கூறும் கக்ஷியானது சற்றும் பொருத்த மற்றதாகவே காணப்படுகிறது. பால்ய விவாக மானது தடுக்க முடியாத ஓர் அத்தியாவசியமான காரியமன்று ; ஆனால் இதனால் வைத்திய சாஸ்திர முறைப்படியும் தேசா சார முறைப்படியும் அளவுகடந்த கேடுகளெல்லாம் மட் டும் விளையாமற் போவதில்லை. சிறுவர்களுக்கும் சிறுமி களுக்கும் நாம் செய்யவேண்டிய முதற் கடமையானது பால்ய விவாகமன்று ; இஃது அவர்கள் செய்யவேண்டிய

பல லௌகிக காரியங்களையும் குந்தகப்படுத்தி விடுகிறது. ஆதலின் அந்தச் சிறுவனும் சிறுமியும் தங்களுடைய அறிவிலும் ஆற்றலிலும் உரம்பெற்று வன்மை யடைவதை விடுத்துப் பல்வகையான ஆபத்துக்களுக் கெல்லாம் ஆளாகின்றனர். மனிதர்களல்லாமல் இவ்வுலகில் மற்றெந்தப் பிராணியும் தன்னுடைய பருவ காலத்துக்குமுன் இனப் பெருக்கு இச்சையில் ஈடுபடுவதில்லை. ஆனால் மனித தேகமானது 25 வயதுக்குப் பின்னரே சம்பூர்ணமான தேக வளர்ச்சியை அடையக்கூடியதா யிருந்தும் அதற்குப் பல ஆண்டுகள் முன்னரே பல பல குழந்தைகளை ஈன்றெடுத்து விடுகின்றனர் நம் நாட்டுச் சிறுமிகள். பெண்கள் ருதுவானவுடனே அவர்கள் மணவாழ்க்கை புரிந்து பிள்ளைகளைப் பெறும்படியான யோக்கியதையை அடைந்துவிட்டதாகப் பலர் தவறாக எண்ணுகின்றனர். இது முழு மூடத்தனமாகும். இவ்வாறு கருதுவதானது, பால் குடிக்கும் குழந்தைகளுக்குப் பல் முளைக்கத் தொடங்கியவுடன் அக் குழந்தைகளுக்கு மிகக் கெட்டியான பதார்த்தங்களை யெல்லாம் ஜீரணிக்கக்கூடிய சர்வ சக்தியும் வந்துவிட்டதென்று கருதுவது போலாகும். பால்ய விவாகம் செய்து பள்ளியறைக்குள் அனுப்புவதால் பருவத்துக்கு முன்னரே பல பெண்கள் ருதுவாகி விடுகின்றனர்; இதனால் பிள்ளைப் பேறும் அதி சீக்கிரம் உற்பத்தியாகின்றது. இதனால் தாய் தந்தையருக்கும், பிறக்கும் குழந்தைகளுக்கும் பற்பலவிதமான தடுக்கமுடியாத கேடுகளெல்லாம் விளைதல் கூடும்.

பால்ய விவாகத்தினால் பதுமைத் தாய்மார்களுக்கும் பிள்ளைப் பேற்றின் கஷ்டம் அதிக கடினமா யிருக்கும். பெரும்பாலும் சிறுமிகள் தங்களுடைய கர்ப்பத்தின் வேதனையைத் தாங்கமுடியாமற் போவதனால் அவர்களுடைய

சிறு வயிற்றி லிருக்கும் சிசுக்கள் முழு முதிர்ச்சியையும் அடையாமல் அறைகுறையான மாதங்களிலேயே வெளி யாய் விடுகின்றன. ஆனல் சில சிறுமிகள் தங்களுடைய கர்ப்பத்தைச் சேதமில்லாமல் உருவாக்கிவிட்டபோதிலும் அவர்களுக்கு அந்தப் பிரசவத்தினுலும் பிறகு பால் கொடுப் பதனுலும் எவ்வளவோ தேகவன்மை குன்றிவிடும். பிர சவ காலத்தில் எவ்வளவு உதிரம் வெளிப்படுகிறதென்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயமே. இஃதேபோல் பிள்ளைக்குப் பால் கொடுப்பதனுலும் அதிகமான தேகபலம் குன்றும். இதனல் குழந்தையும் தேரையைப் போலாகித் தாயும் தேவாங்கைப்போ லாய்விடுகிருள். ஆனல் முதற் பிரசவத்தில் ஒருவாறு தேறிக்கொண்டபோதிலும் அடுத்த பிரசவத்தில் அச் சிறுமிகள் தம்முடைய தேகபலத்தை முழுதும் இழந்துவிடுகிருர்கள். சில பெண்கள் அதனுடன் தம்முடைய ஆருயிரையும் துறந்துவிடும்படியான அவ்வ ளவு துர்ப்பலமான ஸ்திதிக்கு வந்துவிடுகிருர்கள். ஜன னேந்திரியக் கருவிகள் சம்மந்தமான வியாதியும், கிராணி, அதிசாரம் முதலிய வயிற்ருேட்டங்களும் கைகால் குடைச் சலும் ஆகிய இப்படிப்பட்ட வியாதிகளெல்லாம் இத்த கைய பெண்களுக்கு அடிக்கடி உண்டாய் விடுகின்றன. இவையன்றி இன்னும் எண்ணத்தொலையாத எத்தனையோ வியாதிகளுக்கெல்லாம் அவர்கள் ஆளாகி அவஸ்தைப் படு வதுண்டு. இன்னும், இப்படிப்பட்ட இளம் பெண்கள் பால்யப் பிரசவம் செய்வதால் அவர்களுடைய சிறு வயிற் றுக்குள்ளிருந்து அதிக கஷ்டத்துடன் பிரசவமாக முடி யாத சிசுக்கள் வெளிப்படுமுன்னே மரித்துப்போகின்றன; ஒருகால் பிறக்கும்போது மரணமடையாமல் பிறந்துவிட்ட போதிலும் பிறகு சில நிமிஷங்களுக்குள்ளோ அல்லது சில

மணிகளுக்குள்ளோ கொட்டாவி விட்டுவிடுகின்றன*. அல்லது அந்தச் சிசு சிலவேளைகளில் தாய்முலையைச் சப்ப முடியாமல் அவ்வளவு துர்ப்பலமுள்ளதா யிருக்கிறது. இளங்கன்னிகைகளின் சிறிய கருப் பையில் உருவாகும் சிசுக்கள் வேறு எவ்விதம் இருத்தல் முடியும்? இப்படிப் பட்ட குழந்தை ஒருகால் பிழைத் தெழுந்த போதிலும் பிறகு நாளடைவில் அது தேரையைப்போல் தேய்ந்து விடுகிறது. மறுபடியும் மனிதனுன பின்னரும் தேகத்தில் திடமில்லாத ஒரு கேவல புருஷனுகவே எலும்பு மனித னுக ஆய்விடுகிறுன்.

மனிதர்களுடைய அங்கத்தில் அமைக்கப்பட்டிருக் கும் ஒவ்வோர் அவயவமும் அதனதன் தொழிலைச் செம் மையாக அதனதன் அளவின் பிரகாரம் செய்து தீரவேண் டும். அது அதற்கேற்ற அளவுக்குக் குறைந்தேனும் அதி கப்பட்டேனும் யாதோர் அவயவமேனும் தொழில் செய் யுமாயின் உடனே அந்த அவயவத்துக்குத் தீங்கு நேரும். கண் காது வாய் வயிறு முதலிய அவயவங்களெல்லாம் இப்படிப்பட்ட இயற்கை விதிக்குக் கட்டுப்பட்டே நடக் கின்றன. இத்தகைய இயற்கை விதிக்கு மனிதர்களுடைய ஜனனேந்திரியம் மட்டும் கட்டுப்பட்டவை யல்ல வென்று ஒரு சிறிதும் கருதிவிட வேண்டாம். ஆனுல் தேகத்தின் உறுப்புக்களுக் குள்ளெல்லாம் ஜனனேந்திரியக் கருவி களே அதிசீக்கிரத்தில் வியாதிகளுக் குள்ளாகின்றன வென்று வைத்திய சாஸ்திரமானது முறையிடுகின்றது. ஆதலின் நம்முடைய ஜனனேந்திரியக் கருவிகளை எவ்வள

*இப்படிப்பட்ட பால்ய விவாகத்தால் சிறுவர்களுக்கு இளம் பிள்ளைகள் பிறப்பதனுலேயே இந்நாட்டில் சிசுக்களின் மரணவிகி தம் மிகு அதிகமா யிருக்கிறது.

வுக் கெவ்வளவு மிதமாக உபயோகப் படுத்துகிறேமோ அவ்வளவுக்கவ்வளவு நம்முடைய சரீர சுகமும் சௌக்கிய மான நிலையிலிருக்கும். அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சாகும். ஸ்திரீ புருஷ மணவாழ்க்கைக்குரிய சுகபோக மானது மிதபோகமாக இருக்கும் பக்ஷத்தில் அவர்களிரு வருடைய ஆயுள் விருத்தியும் அதிகமாய், ஆனந்த வாரி யும் அளவு கடந்து விளங்கும். ஒருமுறை ஒரு கல்கத்தா டாக்ட்டரிடம் ஒரு யௌவன பிரஞ்சுக்காரர் வந்து தமது ஹிருதயத்தில் நோயுண்டா யிருப்பதாகக் கூறினுர். அதற்கு அந்த டாக்ட்டர் அவரை நோக்கி, "நீர் மிதமிஞ் சிய இல்வாழ்க்கையுள் ஆழ்ந்திருந்த துண்டோ?" என்று வினவினுர். உடனே பிரஞ்சுக்காரர் ஆச்சரியப்பட்டு, "ஆ டாக்ட்டர்! நானு மிதமிஞ்சிய இல்வாழ்க்கையுள் ஆழ்ந்திருந்தேனென்று சந்தேகப்படுகின்றீர்? மிதமிஞ் சிய இல்வாழ்க்கை என்பதென்ன? ஐயா, எனக்கு விவாக மாய் இரண்டரை வருஷமாகிறது. இந்த இரண்டரை வருஷ காலத்தில் தினமொன்றுக்கு (இராப்பகல் இருபத்து நான்கு மணிநேரத்தில்) எட்டுத்தடவைக்கு மேற்படாம லும் மூன்று முறைக்குக் குறையாமலும் யானும் என் மனைவியும் எங்களுடைய தேகமும் மனமும் தெகிட்டலை அடையும் வரையில் நன்ருகச் சுகானந்தம் அனுபவித் தோம். இதுதானு மிதமிஞ்சிய வாழ்க்கை?" என்று விடை பகர்ந்தார். இவ்வாறு ஒருவர் செய்துவிட்டாராயின் எல் லாராலும் அப்படிச் செய்வது கிஞ்சித்தும் முடியாது. அவரவரும் தத்தம்முடைய தேக சுகத்துக்குப் பாதகமில் லாமல் கூடியவரையில் மிதமான வாழ்க்கையையே ஸ்திரீ புருஷர் இருவருக்கும் உத்சாகமிருக்கும் வேளையில் அதி ஜாக்ரதையாக அனுபவித்தல் வேண்டும்.

ஜனனேந்திரியக் கருவிகளெல்லாம் சந்தான விருத்திக்காகவும் சுகானந்த நன்மைக் காகவுந்தான் ஆண்டவனால் அமைக்கப்பட்டிருக்கின்றன வல்லாமல் அவற்றால் நாம் ஒவ்வொருவரும் வேதனையடைய வேண்டுமென்பது அவ் விறைவனுடைய நோக்கமன்று. மிதமிஞ்சிய இல்வாழ்க்கையால் தசைநார்களுக்கும் நரம்புக்கருவிகளுக்கும் பலஹீன முண்டாவ தல்லாமல் அளவு கடந்த தாது நஷ்டத்தால் நாளடைவில் ஆயுளுக்கும் ஆபத்துண்டாகும். புருஷர்களுடைய வீரியமானது வீண் விரய மாகாமல் அவர்களுடைய தேகத்துக்குள்ளேயே சுவறிவிடுமாயின் அதனால் தேகத்திலுள்ள நரம்புகளெல்லாம் நன்றாக முறுக்கேறி வலுவடைவதுடன் மூளைக்கும் பலம் அதிகமா யுண்டாகிறது. இக்காரணத்தால்தான் அதிகமான வீரிய நஷ்டத்தையுடைய மனிதர்களுக்குத் தேகத் தளர்ச்சியுடன் நரம்புத் தளர்ச்சியும் உண்டாவதல்லாமல் மூளையிலும் ஞாபகசக்தி அதிகம் குறைகின்றது. சந்தான விருத்திக்கும் சுகானந்தத்துக்கும் வேண்டிய இந்திரியம் போக மிகுதியெல்லாம் தேகத்தின் வன்மைக்காகவே உண்டாக்கப் படுகின்றது; உண்மை இவ்வா றிருக்கும்போது உடம்பின் நன்மைக்காக உற்பத்தியாகும் தாருட்யம் முழுதையும் நாம் இயற்கைக்கு முரணான வழியில் செலவு செய்து விடுவோமாயின் அதனால் நம்முடைய தேகத்துக்கும் மூளைக்கும் நஷ்ட முண்டாகாமல் வேறென்னதான் நிகழக்கூடும்? ஆண்டவனுடைய இயற்கைச் சட்டத்தை மீறினவர்கள் அதற்குரிய தண்டனையை அடையாமல் ஒரு சிறிதும் தப்ப முடியாது. இது தெய்வ நியதி. மனிதர்கள் தங்களுடைய மனத்தைக் கடிவாளமற்ற குதிரைபோல் விட்டுவிடுவார்க ளாயின் அதனால் அனந்தம் கேடுகள்

விளைதல் கூடுமென்றே ஆண்டவன் அவர்களுக் கொரு இயற்கையான பாதுகாப்பையும் ஏற்படுத்தி யிருக்கிறான்: ஒரு முறை மணவாழ்க்கை முடிந்தவுடன் நமக்கெல்லாம் ஒருவித அயர்ச்சியும், நரம்புத் தளர்ச்சியும் உண்டாவதுடன் மனத்துக்கும் ஒருவகையான ஆயாச முண்டாய் விடுகிறது; அவ்வேளையில் உடம்பிலும் மனத்திலுமுள்ள அசதியால் அதன்பின் மணவாழ்க்கையிலும் ஒருவித உபசாந்தியான சிறு வெறுப்புண்டாவது வழக்கம். ஈதெல்லாம் அடிக்கடி நாம் மணவாழ்க்கையில் மூழ்கிவிடாம லிருக்கும் அழகிய பாதுகாப்பாகும்.

ஆனால் காட்டு மிருகாண்டியான மகா அநாகரிகமுள்ள மனிதர்கள் தங்களுக்குள் ஒருவிதமான நீக்கு விலக்குமின்றி மிருகங்களைக் காட்டினும் மகாகேவலமாக நடந்து கொள்வர். அவர்களுக்குள் விவாகமென்பதே ஒரு தெய்வ நியதியாகக் கருதப் படுவதில்லை. தன் தார மென்பதும் பிறர் தார மென்பதும் அவர்களுக்கு ஒன்றும் வேற்றுமை கிடையாது. அவர்கள் தங்களுடைய மணவாழ்க்கையை ஒரு மகா கேவலமான செய்கையாகச் செய்து விடுகின்றனர். தங்களுடைய சந்தான விருத்தியையும் ஆடுமாடுகள் குட்டிபோடுவதைக் காட்டினும் ஒரு தாழ்ந்த வேலையாகக் கருதுகின்றனர். இவ்வாறு அவர்கள் செய்வது முழு மூடத்தனமான ஓர் அறியாமையே யாகும். ஆனால் விவாகமென்பது ஓர் ஆணையும் பெண்ணையும் ஆயுள்பரியந்தம் ஒருவரோ டொருவர் இணைத்து வைக்கக்கூடிய ஒரு மகா பரிசுத்தமான பிணைப்பா யிருக்கிறது. மணமகனையும் மணமகளையும் தேகத்தோடு தேகம் நெருங்கும்படி இணைத்துவைக்கும் வெறும் லௌகிகப் பொருத்தமென்று மட்டும் விவாகத்தை நினைக்க வேண்டாம்; அஃது அவர்களிரு

வருடைய மனத்தையும் ஒன்ருேடொன்று என்றென்றைக்கும் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு பந்தமா யிருக்கிறது. நாம் ஏற்கனவே இதன் முதல் அத்தியாயத்தில் கூறியதே போல் ஆணும் பெண்ணும் ஒருவரோடொருவர் பரிபூர்ணமடைவதற்காகவே மணமுடித்துக் கொள்ளுகின்றனர். ஒருவருடைய குறையை மற்ருெருவர் பூர்த்திசெய்யவும் இருவருடைய அந்தரங்கமும் ஒருவருக்கொருவர் நன்கு தெரியவும் இவ்விவாகமானது ஒரு தக்க சாதனமா யிருக்கிறது. இவ்வாறு நமக்குள் ஒன்றித்து ஒருவரோடொருவர் இன்ப சுகத்தை அனுபவிப்பதல்லாமல் நாம் ஒழுங்காகக் குடித்தன முறையையும் நடத்தி வருவோமாயின் மற்றவர்களும் நம்மைப் பார்த்துத் தத்தம்முடைய குடித்தன முறையைப் பேணிக் கொள்வதற்கும் நாம் ஒரு லக்ஷியமாக இருந்துவருவோ மென்பதில் ஐயமில்லை. ஸ்திரீ புருஷர்கள் இருவரும் ஒருவருடைய மானத்தை மற்ருெருவர் காப்பாற்றிக்கொண்டு பரஸ்பரம் அன்னியோன்னியமான ஸௌஜன்யத்துடன் பரமானந்தத்தை அனுபவித்துக்கொண்டு சந்தான விருத்தியை அடையவேண்டுமென்பதுதான் தெய்வ நியதியான விவாகத்தின் முக்கிய நோக்கமா யிருந்துவருகிற தென்பதை ஒருவரும் மறுத்தற்கு முடியாது.

விவாகபந்த மென்பது வேதபாரங்கதர்களால் முடியப்படும் வெறுந் தாலி முடிச்சென்று மட்டும் கருதுவது கூடாது. தாலி கட்டுவதென்பதும், முண்டு மாற்றுவ தென்பதும் லௌகிக பந்தத்தைக் காட்டக்கூடிய ஓர் அடையாள மாகுமல்லாமல் இந்த அடையாளமே விவாகமாய்விட மாட்டாது. அவரவரும் தத்தமக்குரிய கணவனையும் மனைவியையும் பூர்ணமான மனத்திருப்தியுடன் பரஸ்

பரம் விசுவசிக்க வேண்டியதுதான் விவாகத்தின் முக்கிய நோக்கமா யிருக்கிறது. பரஸ்பர விசுவாசமில்லாமல் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் வெறுக்க ஆரம்பிப்பார்களாயின் அ நக் காட்டினும் நரக வேதனை மற்றொன்று மிராதென்றே கூறலாம். பரஸ்பர விசுவாச மில்லாமையால்தான் இவ்வுலகின் பல குடும்பங்களில் துயரக் கடலும் துக்கசாகரமும் சதா பொங்கிக்கொண்டே யிருக்கின்றன. ஆதலின் ஒரு நல்ல கணவனுக்குக் கெட்ட மனைவியும், ஒரு நல்ல மனைவிக்குக் கெட்ட கணவனும் கிடைப்பதைக் காட்டினும் கொடிய தௌர்ப்பாக்கியம் இவ் வுலகில் வேறொன்றுமில்லை யென்றே கூறலாம்.

"இருந்தங் கிதம்பேசி ஈரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப—எழுந்தவள்
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்."

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாயின்
கூறாமற் சன்யாசம் கொள்,"

என்றார் ஔவையாரும். ஸ்திரீ புருஷர்களுக் கிடையில் ஸௌஜன்யமான வாழ்க்கை யில்லாவிடின் அதைக்காட்டினும் வேறென்ன நரகவேதனை வேண்டும்? இதனால்தான் புத்திமான்களா யிருப்பவர்கள் பெண் மாப்பிள்ளைகளின் ஐசுவரியத்தையும் அவர்களுடைய சுற்றத்தாரின் ஆஸ்தியையுங் கவனியாமல் அவர்களுடைய குணப் பொருத்தத்தையே நன்கு நிதானித்துப் பார்ப்பார்கள். மணமகனுக்கும் மணமகளுக்கும் மற்றெல்லா விஷயங்களைக் காட்டினும்

குணப் பொருத்தந்தான் சுகப் பொருத்தமா யிருத்தல் வேண்டும்.

சதிபதிகளின் தேகாரோக்கியக் குறைவால் உண்டாகக் கூடிய பிண்டங்களின் குறைகளைப்பற்றி மேலே பலவாறு கூறியிருந்தபோதிலும் அவற்றைக் காட்டினும் மிகவும் கேவலமான மற்றொரு கொடிய வியாதியைச் சொல்லாம லிருப்பது பெரிய தோஷமாகும். வாலிபர்களுள் சிலர் லிங்கவிரணம் என்று சொல்லப்படும் கிரந்தி (Syphilis) என்னும் கொடிய வியாதிக்கு ஆளாய்விடுகின்றனர். பால்ய வியபிசாரத்தாலும், கிரந்தி ஸ்திரீகளுடன் சம்மந்தம் வைத்துக்கொள்வதாலும் வேறு துன்மார்க்கத்தாலும் இவ்வியாதி இளைஞர்களைப் பற்றிக்கொண்டு செப்பமுடியாத கெடுதிகளையெல்லாம் விளைவிக்கின்றது.* முதன் முதலில் இதன் குறிகள் ஜனனேந்திரியத்தில் காணப்படுகின்றன; பிறகு இவ்வியாதி இரத்தத்தைக் கெடுத்து அங்கமுழுதும் பரவுகின்றது. பின்னர் இதன் கொடுமைகள் ஒவ்வொன்றாய்த் தோன்றி மனிதனையே கொன்று விடுகின்றன. இதற்குச் சமமான கொடிய வியாதி இவ்வுலகில் வேறொன்றுமில்லை. மற்ற வியாதிகளின் தீக்குணங்க ளெல்லாம் ஒன்றுசேர்ந்தும் இக்கிரந்தி நோய்க்குமுன் பரமாணுவாய்க் குன்றிவிடும். கிரந்தியினால் அவஸ்தைப்படுகிறவன் உடனே மரணித்துவிடாமற் போயினும் தன் வாழ்நாள் முழுதும் மரணாவஸ்தையிலேயே இருக்கிறான். இவ்வியாதியின் கொடுமை ஒருவன் தலையோ டொழியாமல் பின்வரும் எழு தலைமுறைகளையும் கெடுக்கின்றது. இவ்வியாதியால் சில நாட்களுக்குள் சரீரத்தின் அழகும் குன்றிக் கண்

---

* இப்படிப்பட்ட பயங்கரமான வியாதிக்கும் எம்மிடமுள்ள "பிரின்ஸ் முபர்ரா"வானது இணையற்ற ஔடதமாகும்.

களின் ஒளியும் மழுங்கிக் குருடாய் விடுகின்றது. சரீர முழுதும் ரணமுண்டாகிறது. வைத்திய நிபுணரும் கூட இதைக் கண்டிக்க முடியாமல் சிற்சில வேளைகளில் தயங்கு கின்றனர். மருந்தின் சக்தியினால் இது பரவாம லிருக்க லாம். ஆனால் முழுதும் சொஸ்தமாய் விடுமென்பது சொல்லக்கூடிய காரியமன்று. நீறு பூத்த நெருப்பேபோல் இவ் வியாதி உள்ளுக்குள்ளிருந்தே தீமையை விளைக்கும். இதைத் தெரிந்துகொள்ளாமல் தங்கள் வியாதி குண மடைந்து விட்டதெனக் கருதி அவர்கள் மணவாழ்க்கை புரிய ஆரம்பிக்கின்றனர். விஷப்பாம்பின் வளையில் கையை வைத்ததேபோல் அறியாமல் நோயடைந்து கஷ்டப்பட வேண்டிய பெண்மணியின் கதியைப் பற்றியும் சொல்ல வேண்டுமோ? இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் இவ்வியாதிக்குள் சிக்காமலிருப்பதில்லை. சில வேளைகளில் மனைவிக்கு இவ்வியாதி தாவாம விருந்தபோதிலும் குழந் தைகளின் இரத்தத்துள் இது கலந்துவிடும். இப்படிப் பட்ட குழந்தைக்குப் பால் கொடுக்கும் செவிலிக்கும் இவ் வியாதி உண்டாகலாம். செவிலியின்பால் காணப்படும் கிரந்தியும் குழந்தையினிடம் தாவிச் செல்லலாம். கிரந்தி வியாதியானது ஒரு மகா கொடிய தொத்து வியாதியா யிருக்கிறது. இதனால் அன்னவரிடம் நெருங்கும்போது அதி ஜாக்ரதையா யிருத்தல் வேண்டும்.

திடதேகமுள்ள ஒரு பெண்மணிக்கு வேறொரு கார ணமுமின்றிக் கர்ப்பம் கலங்கிப் போய்விடுமாயின் கருப் பைக்குள் ளிருக்கும் பிண்டம் இவ்வியாதியால் பீடிக்கப் பட்டிருக்க வேண்டுமென்று நன்கு நிதானித்துக் கொள்ள லாம். சிலவேளைகளில் உயிருடன் குழந்தை பிறந்தபோதி லும் நாளடைவில் பலங்குறைந்து இறுதியில் உயிர் துறந்து

விடும். ஆதலின் ஸ்திரீ புருஷர் எவருக்கேனும் இவ்வியாதி காணப்படுமாயின் அவர்களுக்குள் இல்வாழ்க்கை யென்பது அறவே கூடாது. அவ்வாறிருந்தால் கிரந்திக் குழந்தைகளைப்பெற்று அதனால் மன்பதைக்கும் ஆண்டவனுக்கும் பாபத்தை இழைத்தவராவார். பிறந்த குழந்தையினிடத்தில் தாய் தந்தையின் கிரந்தி நோய் வெளிப்படையாகக் காணப்படாமற் போயினும் அஃது உள்ளுக்குள்ளிருந்தே வேலை செய்யும். இதனால் வருந்தும் சிறுவர்கள் பெரும்பாலும் க்ஷை ரோகம், கண்டமாலை, ஜுரம் முதலிய வியாதிகளுக் குள்ளாவார்கள். அனேக ஸ்திரீகளின் கர்ப்பாசயம் கெட்டுப்போவதற்கும் மாத வெளியீடு சரியான காலத்தில் தோன்றாம லிருப்பதற்கும் இந்த மேகவிரண நோய்தான் காரணமாகும். ஸ்திரீ புருஷர்களுக் கிடையில் ஒருவருக் கொருவர் குற்றங் குறை காணப்படுங் காலங்களிலும் ஒருவர் மற்றொருவ ரிடத்திலுள்ள தோஷத்தைக் கவனியாமல் அவர்பாலுள்ள குணத்தை மட்டும் பாராட்டுவாராயின் இதனால் அவர்களுக் கிடையிலுள்ள பெரும்பான்மையான பிணக்குக்களெல்லாம் ஒழிந்து பரஸ்பர நல்நம்பிக்கையும் விசுவாசமும் உண்டாகும். ஸ்திரீ புருஷர் இருவரும் இவ் விஷயத்தில் அதிஜாக்ரதையா யிருத்தல்வேண்டும்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம், கடுத்தது காட்டு முகம்," என்பதேபோல் ஸ்திரீகளின் உள்ளத்தில் ஒளிரும் உயரிய நோக்கமானது அவர்களுடைய முகாரவிந்தத்தில்தான் முழுதும் பிரதிபலிக்கும்; அப்பொழுது அவர்களுடைய அழகிய ஆபரண மென்னும் கற்புநிலையும் உடன் வெளியாகும். ஆதலின் அப்படிப்பட்ட பதிவிரதைகளைப் பார்த்து, அவர்களுடைய தாய்தந்தையரும் ஒழுங்குள்ளவர்களா யிருந்தால் அந்தக் கன்னிகைகளையே அவர்

களது குணவிசேஷத்துக்காக மணமுடித்துக் கொள்ளல் வேண்டும். அப்படிப்பட்ட மனைவியரை நமது ஆருயிரைக் காட்டினும் அதிசிரேஷ்டமாக நேசிக்கவேண்டும். அவர்களுக்கு அருமையாகப் "புத்திமதி" கூறவேண்டும்; சிலசமயங்களில் மிக அபூர்வமாக அவசியமிருக்குமாயின் சிறிது வாயால் கண்டிக்கலாம்; ஆனால் அம் மெல்லியாளை ஒருபோதும் அடிப்பது அறவே கூடாது. இப்படிப்பட்ட இளம்பெண்களுடன் அனுபவிக்கும் இன்பந்தான் இகலோக சுவர்க்க மென்னப்படுவது. அவர்களிடத்தில் அவரது கணவன்மார் தம்முடைய குடும்பவிஷயங்களை யெல்லாம் ஒப்புக்கொடுப்பதுடன் தமது அந்தரங்க எண்ணங்களையும் அவர்களிடம் மனமொப்பிச் சொல்லிவிடுவர். கணவன் தன்னுடைய உக்கிராணத்தின் சாவியுடன் உள்ளத்தின் திறவுகோலையும் தன்னுடைய மனமொத்த மனைவியரிடம் ஒப்படைத்து விடுகிறான். ஆனால் சில கணவன்மார் தங்களுடைய உள்ளத்தின் இரகசியத்தை மனைவியருக்குத்தெரியாமல் ஒளிப்பதுடன் உக்கிராணத்தின் சாவியையும் தம்முடைய மடியிலேயே வைத்துக்கொள்வது வழக்கம். இப்படிப்பட்ட ஸ்திரீ புருஷர்களுக் கிடையில் எவ்வளவு பரஸ்பரமான ஸௌஜன்ய மிருக்குமென்று நீங்களே நன்கு நிதானித்துக் கொள்ளுங்கள். ஆனால் சத்புருஷர்களின் உழைப்பில் அவர்களுடைய பதிவிரதையான ஸ்திரீகள் பாகமெடுத்துக் கொள்வதுண்டு. புருஷர்களுடைய சொத்தைப் பெண்சாதிமார்களே பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளார்; பெண்டுகளின் மானத்தையும் புருஷர்களே காப்பாற்றவேண்டும். இருவரும் ஒருவருக்கொருவர் அரையிலுடுத்தும் ஆடைபோ லிருக்கிறார்கள். கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உள்ளொன்றும் புறமொன்றுமா

யிராமல் ஒருவரிடம் மற்ருெருவர் பூர்ணமான நம்பிக்கை யுடையவராய் மெய்யையே பேசி மெய்யாகவே நடந்து வருவார்களாயின் அப்பொழுது அவர்களுடைய குடும்ப வாழ்க்கையானது ஒரு சரியான வாழ்க்கையா யிருக்கு மென்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

ஏ நூதனவிவாகம் செய்து கொண்டிருக்கும் சகோதரிகாள்! நம்முடைய சுகபோக வாழ்க்கைக் குரிய சில அரிய விஷயங்களை மட்டும் இந்நூலில் எடுத்தோதினேம். இதில் கூறியவற்றைக்கொண்டு கூறுத விஷயங்களையும் கூர்ந்து நோக்கி உங்களுடைய சுயமான பகுத்தறிவைச் செவ்வனே செலவுசெய்து சமயோசிதம் போல் உங்கள் சுகானந்த வாரிதியை அதிகமாகப் பெருக்கிக் கொள்வீர்களாக. குடும்பவாழ்க்கையின் சுகானுபவத்துக்குரிய இரகசியமெல்லாம் இன்னதென் றறியாமையினுலேயே இந்நாட்டிலுள்ள நம்முடைய பல சகோதர சகோதரிகளும் தங்களுடைய அருமையான இல்லற இன்பத்தை அடியோடிழந்து விடுகிருர்கள். இவர்களின் நன்மையின் பொருட்டே இச்சிறு நூலானது எழுதப்பட்டிருக்கிறது. இல்லற முறையானது மகாசிக்கலான விஷயமா யிருப்பதனுல் அதன் தொல்லைகளையெல்லாம் கணக்கிட்டு அவற்றிற்கெல்லாம் பரிகாரம் சொல்வதென்ருல் அது யாராலும் முடியக்கூடிய காரியமன்று. குடும்பவாழ்க்கையில் காணப்படும் பெரும்பான்மையான குறைகளுக்கு முறை சொல்லும்பக்ஷத்தில் அவற்றைக்கொண்டே அறிவாளிகள் தங்களுடைய இல்லறமுறையை இன்பமுறையாகச் செய்து கொள்வார்கள். கொஞ்சங் கூறியபோதிலும் புத்திமான்களுக்குப்போதும்; ஆனுல் அறிவீனர்களுக்கு எவ்வளவு எடுத்தோதியபோதிலும் அவர்கள் தங்களுடைய குடும்

பத்தில் நாயும் பூனையும் போலவே நாட்கழித்து வருவார்கள். அறிவுள்ள ஆணும் பெண்ணும் இந்நூலின் உதவியைக்கொண்டே தங்களுடைய வாழ்நாளை யெல்லாம் வீணாகச் செய்யாமல் இவ் விகலோகத்திலேயே அப்பரலோகத்துக் குரிய பிரம்மானந்தத்தை அடைவார்கள்.

ஏ இனி விவாகம் செய்துகொள்ளப் போகும் இளைஞர்காள்! நுங்களுக்கொரு வார்த்தை நுவலவேண்டி யிருக்கிறது. நீவிர் விவாகம் செய்துகொண்ட பின்னர் ஒழுங்குடன் உங்களுடைய குடும்பவாழ்க்கையை நடத்திக் கொள்ளுதற்கு வேண்டிய முறையே இந்நூலில் கூறப்பட்டிருப்பதால் நீங்கள் விவாகமாகுமுன் விஷப்பரீக்ஷை செய்ய ஆரம்பிப்பீர்களேல் அதனால் பல அபாயங்கள் நேரிடக்கூடும். பால்ய சேஷ்டையால் பலர் தம்முடைய சுகத்தையும் இழந்து அருமையான அழகிய உயிரையும் அலறிவிட்டிருக்கின்றனர். உயிர் போகாமற் போயினும் சிறு நீர் விடும்போதும், தூக்கத்தின் கனவிலும், ஸ்திரீகளுடன் செய்யும் சம்பாஷணையிலும் வீரியஸ்கலிதமாகின்றதென்று மனம் வருந்தி முறையிடும் வாலிபர் பலர் இருக்கின்றனர். இதற்கு முதற்காரணம் ஜனனேந்திரியத் துர்வின்யோகமாகும். இரண்டாவது காரணம் மிதமிஞ்சிய இல்வாழ்க்கையாகும். மேலும் மணவாழ்க்கையின் காலத்திலும் அதிக இன்பமில்லாமலே வீரியம் வெளியாகின்றது. அல்லது அவ் வாழ்க்கையில் ஒருவகை வெறுப்புண்டாகிறது. மிதமிஞ்சிய துர்வின்யோகத்தால் வீரியம் நீர்த்துப் போய் அதிலுள்ள கர்ப்பக்கிருமிகள் அழிந்துவிடுகின்றன*. ஆதலின், விவாக மானவர்களும் விவாக மாகாதவர்

* இப்படிப்பட்ட இந்திரிய வியாதிகளுக்கும் நரம்புத் தளர்ச்சியான சகல .வியாதிகளுக்கும் பொதுவாகத் தேகக்கட்டு உடைந்

களுமாகிய இளம்பால்யர்களும்பால்யைகளுமாகிய எனது ஆருயிரன்ன அருமைச் சோதர சோதரிகள் அனைவரும் தங்களுடைய பகுத்தறிவைச் செவ்வனே செலவுசெய்து இந்நூலில் நுவலியதைக்கொண்டு நுவலாததையும் அறிந்துகொண்டு தங்களுடைய இல்லற இன்பத்தை இனிமை மிக்க நல்லறமாகச் செய்துகொண்டு நெடுநாள்மட்டும் இவ்வுலகில் இனிது வாழ்ந்து பெரிய சுகம் பெறுவார்களாக.

சுபம்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன் ?

மைக்கணே யான விழிக்கணே கொண்டு
மருட்டி யிருட்டறையில்
பொய்க்கள வாகப் போனது முண்டு
புணர்ந்தது மில்லையடா
கைக்கள வான குறுந்தடி கொண்டு
கழுத்தை நெரிக்கவரும்
சக்கள வாவென் தங்கைய டாநின்
தாரம டாவிடடா.

திருப்பதற்கும் ''பிரின்ஸ் முபர்ரா'' வானது கைகண்ட மருந்தாகும். 20 நாள் மருந்து பாட்டில் ஒன்றுக்கு ரூபா 10/— இதை உபயோகித்துப் பார்த்துப் பயனடைந்தோர் பலபேராவர். உங்களுக்கும் பயன் தருமென்பதில் சந்தேகமில்லை.

131

அனுபந்தம்

தாருட்யம் கெடுவதற்கும் ஆண்மை குன்றுவதற்குமுள்ள முக்கிய காரணங்கள்.

ஆண்மை குன்றுவதற்கும் தாருட்யம் கெடுவதற்குமுள்ள முக்கிய காரணங்களை இதன் கீழ்க் கூறுகின்றோம். இவற்றைப்பற்றி மாந்தர் அனைவரும் அதிக ஜாக்ரதையாயிருத்தல் வேண்டும்:—

1. பால்யதசையில் ஜனனேந்திரியக் கருவிகளைத் துன்மார்க்கத்தில் பிரவர்த்திக்கச்செய்து பலவந்தத்தினால் வீரியத்தை வெளியாக்கல்.

2. காளைப்பருவத்தில் இல்வாழ்க்கையை வெறுத்திருத்தல்.

3. கூடத் தகாதவருடன் கூடி அப்பியசிக்கப்படும் கெட்ட வழக்கங்களால் வீரியம் அதிகமாக வெளிப்படுதல்.

4. மிதமிஞ்சிய மணவாழ்க்கை புரிதல்.

5. மாதவெளியீட்டின்போது பெண்பாலாரிடம் நெருங்கல்.

6. காலையிலும் மாலையிலும் இரவிலும் பகலிலும் எப்போதும் இல்லம் புகுதல்.

7. ஆண்களோடும் தாழ்ந்த பிராணிகளோடும் சங்கமம் வைத்துக்கொள்ளுதல்.

8. உண்பதும் உறங்குவதுமான காரியங்களையே தினந்தோறும் செய்து வருதல்.

9. அதிக சிரமத்தைக் கொடுக்கக்கூடிய தேகஉழைப்பும் மன உழைப்பும் செய்தல்.

10. புளிப்பாயும் காரமாயும் உள்ள உணவுகளை அதிகமாகப் புசித்தல்.

11. ஓயாக் கவலையும் ஓழியா விசாரமும்.

12. அடிக்கடி வருத்துகின்ற தேகவியாதி.

13. பயங்கொள்ளித்தனமும் திடுமெனக் கோபித்துக் கொள்ளக்கூடிய சுபாவமும்.

இவைபோன்ற பற்பல விதமான காரணங்களைக் கொண்டும் வீரியம் வெளிப்படும்போது ஜனனேந்திரியக் கருவியின் நுனியில் ஒருவகை எரிச்சலுண்டாகும். தாருட்யம் கெட்டவுடன் அதைப் பக்குவப்படுத்த உடனே முயற்சி எடுத்துக்கொள்ளாமற் போய்விடுவோமாயின் சில சமயங்களில் உதிரமும் வீரியத்துடன் கலந்து வெளியாகும். தாருட்யம் கெட்டுவிடுமாயின் ஆண் தன்மை குன்றி விடும். அதன்பின் ஆடவருக்கு ஸ்திரீகளின் வாழ்க்கையில் வேட்கை யென்பதே பூர்த்தியடையாமற் போகின்றது. நெடுநாட்களுக்குப்பின் அதிக அபூர்வமாய் ஒரே முறையே மணவாழ்க்கையில் புகுத வல்லவனாகிறான். மணவாழ்க்கை யின்போது மூச்சுத் திணறுதல், அதிகமான வியர்வை நீர் பொழிதல், வீரியம் வெளியானவுடன் முற்றிலும் தேகமும் மனமும் தளர்ந்துபோதல் முதலிய குறிகளெல்லாம் மனிதனுடைய ஆண்மை குன்றிய நிலைமையைக் காட்டுகின்றன. எனவே இப்படிப்பட்ட குறிகளைக் கண்டவுடன் அவரவரும் தக்க முறைகளைக்கொண்டு தங்களுடைய தாருட்யத்தைப் பலப்படுத்திக் கொள்ளல்வேண்டும். முதலில் அலக்ஷியமா யிருப்போமாயின் பிறகு அளவுகடந்து வருந்தும்படி நேரிடும். பணச் செலவுடன் வைத்தியம் செய்தும் போன பலம் திரும்புவது அசாத்தியமாய் விடும்.

“மரணம் பிந்து பாதேன
ஜீவனம் பிந்து தாரணாத்.”

இனும்! 100ஹும் காலேண்டரும் கேட்லாக்தும் இனும்!!

ஆனந்த ராமாயணம்

இதுவும் ஸ்ரீவால்மீகி மஹரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டது. இதைத் தமிழில் மொழிபெயர்க்கச்செய்து வெளியிட்டிருக்கின்றோம். அதில் ஸ்ரீவால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன. ஸ்ரீ ராம லக்ஷ்மண பரத சத்ருக்னர்களுடைய ஜனனமும், வளர்ப்பும், சீதாதேவியினுடைய ஜனனமும், அத் தேவிக்குப் பலபெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கியிருப்பதுடன் படிப்பதற்கு வெகு இனிமையாகவுமிருக்கும். ஆநந்தராமாயணம் என்ற இதன் பெயருக்கேற்றபடி படிப்போர்கள் மனத்திற்கு உற்சாகமும் ஆநந்தமும் உண்டாக்குமென்பதில் தடையில்லை. இதுவரையில் இந்நூல் தமிழில் வெளிவராதது. ஆகையால், நமது தமிழ் அபிமானிகள் ஒவ்வொருவரும் இந்நூலை வாங்கி வாசித்துப் பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப் புத்தகம் ஒன்பது காண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் அடங்கிய காண்டங்களின் விபரம்:— 1. ஸார காண்டம், 2. யாத்ரா காண்டம், 3. யாக காண்டம், 4. விலாச காண்டம், 5. ஜன்ம காண்டம், 6. விவாஹ காண்டம், 7. ராஜ்ய காண்டம், 1 - 2 பாகங்கள், 8. மனோஹர காண்டம், 9. பூர்ண காண்டம்.

இதன் விலை உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு ஆர்ட் பேப்பரில் அச்சிட்ட 13 உயர்ந்த ஆப்டோன் படத்துடன் தங்க கிலிட்டு பயிண்டுடன் விலை ரூபா **6.**

ஸ்வாமி விவேகாநந்தர்	ரூ.	அ.
கர்மயோகம்	1	0
ராஜயோகமும் பதஞ்சலியோக ஸூத்ரமும்	2	4
ஞானயோக ரஹஸ்யம்	2	4
வேதாந்த ரகசியம்	2	0
தற்கால இந்தியா	0	10
ஞான ரத்னவளி	1	8
1004 உபதேசமொழிகள்	2	0
அருள்மொழிகள்	1	8

இராமதீர்த்த விஜயம் 1,	ரூ.	அ.
2-ம் பாகம்	5	0
சச்சிதாநந்த சிவம்	1	2
மோக்ஷசாதனரகசியம்	4	0
கந்தரந்தாதி மூலம் உரை	0	12
திருமுருகாற்றுப்படை ,,	0	8
கந்தரநுபூதி உரை	0	8
கந்தர்சஷ்டி கவசம் உரை	0	8
கந்தர் அலங்காரம் உரை	0	8
மாதர்நீதி 5-ம் பதிப்பு	1	0

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,
நெ. 4-34, நயினியப்ப நாயக்கன் வீதி, P. T., (ம) சென்னை.

சரோஜனி

தமிழ் உலகமே பிரமித்து வியப்படையும் ஓர் அதியற்புத சிங்காரமான காதல் ததும்பும் துப்பறியும் தமிழ் நாவல்.

அழகே ஓர் உருவமாய் அமைந்த பத்துச் சித்திரப் படங்கள் அடங்கியது.

"பகற் கொள்ளை! பகற்கொள்ளை!! கௌரவமான வியாபாரி கொள்ளைக்காரனாக மாறினான்!!!" என்று இக்கதையின் முதல் அத்தியாயத்தில் அலங்காரமாக ஆரம்பிக்கப்பட்ட இந் நாவலைக் கையிலெடுத்து வாசிக்க ஆரம்பித்து விட்டால் வேறெவ்விதமான அவசர வேலைகளிருப்பினும் அவைகளை மறந்து இந்த நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசிய மாக்கப்பட்டு வாசித்து முடிவெய்திய பின்னரே அவைகளைக் கவனிக்கும்படி செய்யுமென்பது நிச்சயம். அதிகமாய்ப் புகழாமல் ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், அது இன்னமுது, கனி, பாகு, கற்கண்டு, சீனி, தேன் முதலியவைகளைவிட அதிகமாக உருசிப்பது இந்த நாவல்தான்.

புஸ்தகம் அச்சிட்டு வெளிவந்த பத்து நாட்களுக்குள் சுமார் 1500 பிரதிகள் செலவாய்விட்டன வென்பது தமிழ் நாட்டில் இதுவரையிலும் கேட்டறியாத ஆச்சரியமல்லா?

இருபத்திரண்டு அழகிய அத்தியாயங்களைக் கொண்ட இவ் வற்புத நாவலின் ஒவ்வொரு அத்தியாயமும் மெஸ்மரிஸம் போல் மனதைக் கவருமென்பது நிச்சயம்.

தமிழ் நாட்டில் இதைப்போன்ற அபூர்வமான நாவல் வெளிவந்ததில்லை யென்று ஆயிரக்கணக்கான ஜனங்கள் சொல்லுகின்றனர்.

ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் 'சரோஜனி'யைப் பற்றிய பேச்சாகவே இருக்கிறது.

இந்தியாவிலுள்ள எல்லாப் பத்திரிகைகளும் 'சரோஜனி'யைப் பற்றிப் புகழ்கின்றன.

இப்படிப்பட்ட புகழ்வதற்குரிய மகோன்னத நாவலிற்கு மிகச் சொற்பமாக ஏற்பட்ட விலை

ரூபா இரண்டே

சுத்தமான கடிதம், நேர்த்தியான அச்சு, 400 பக்கங்கள். இப்பொழுது கைவசம் இருப்பவை கொஞ்சம் பிரதிகளே! ஆகையால் மறந்து விடுமுன் இன்றே ஒன்று வரவழைத்துப் படித்து அதனிலுள்ள இன்பத்தைக்கண்டு களி கூருங்கள்!

எம். எஸ். ராமுலு அண்டு கம்பெனி,
புத்தக வியாபாரிகள், இராயபுரம், மதராஸ்.

17288